N.C.G.E 2nd BATCH 80's ReUNION

JAFFNA COLLEGE CEYLON 1823 1872

JESUS CHRIST THE LIGHT OF LIFE

SPRING OF MEMORIES

# நினைவூற்று

யாழ்ப்பாணக் கல்லூரி மாணவர் (1968-1980) நினைவுத் தொகுப்பு

A COLLECTION OF CHERISHED MEMORIES - JAFFNA COLLEGE STUDENTS (1968 - 1980)

18 SEPTEMBER 2021

# நினைவூற்று

## SPRING OF MEMORIES

யாழ்ப்பாணக் கல்லூரி மாணவர் (1968-1980) நினைவுத்தொகுப்பு

**A COLLECTION OF CHERISHED MEMORIES - JAFFNA COLLEGE STUDENTS (1968-1980)**

Published on 31th of August 2022 - Annecy, France

# நிகழ்ந்ததும் பகிர்ந்ததும்

2020ம் ஆண்டின் நடுப்பகுதியில் உலகின் பெரும்பாலானோர் கொரோனா நுண்கிருமியின் அச்சத்தில் அமிழ்ந்திருந்த வேளையில் யாழ்ப்பாணக் கல்லூரியின் 1980ஆம் வருட அணியை சேர்ந்த பழைய மாணவ நண்பர்கள் சிலரிடையே ஓர் எண்ணம் மனதில் மேலெழுந்து வந்தது. கல்லூரி வாழ்வில் நாம் கடந்து வந்த காலத்தை மீள நினைத்துப் பார்த்துப் பதிவுசெய்ய சக நண்பர்களுக்கு ஒரு வாய்ப்பை வழங்குவதே அந்த எண்ணம். நினைவுப் பகிர்வுகளை எழுத்துருவில் தொகுத்து ஒரு நினைவு மலர் வெளியிடுவது என்றும் அந்த நண்பர்கள் ஆசைப்பட்டனர்.

ஏற்கனவே 2019 டிசம்பர் மாதத்திலிருந்து WhatsApp குழுமத்தில் இணைந்திருந்த நாற்பதுக்கு மேற்பட்ட நண்பர்கள் அப்போது இந்த மின்னூடகத்தில் உரையாடிக்கொண்டிருந்த அந்த நாட்களில் WhatsApp குழும நிர்வாகிகளான சுகல்ஜனும், பதுமநிதியும் மேற்சொன்ன எண்ணத்தை செயற்படுத்த எண்ணினர். அவர்களின் வழிகாட்டலுடன் என்னுடன் இணைந்து இந்த பணியில் தாமாக முன்வந்து வேலை செய்ய நிதிராஜ், யமுனா, கல்யாணி, இந்துமதி ஆகியோர் ஆர்வம் தெரிவித்தனர்.

ஆனால் அந்த நாட்களில் மலர் வெளியீட்டுக் குழுவாக இதை செயலாக்க எம்மிடமிருந்த ஆற்றல்களைப் பற்றி எதுவும் தெரியாததால் ஆரம்பத்தில் எமக்கு தயக்கம் இருந்தது. அத்துடன் இந்த வேலையின் கால அளவு பற்றியும் எமக்கு தெரிந்திருக்கவில்லை. இந்த மலரை 1980 ஆம் வருட அணி நண்பர்கள் நேரில் சந்திக்கும்போது அச்சிட்டு வெளியிடுவது என்று மட்டுமே அப்போது தெரிந்திருந்தது. ஆனால் நாட் செல்ல செல்ல எம்மிடையே இருக்கும் ஆர்வமும், திறமையும் இந்த வேலையில் மிகுந்த நம்பிக்கையை அளித்தது. எம்மில் பலருடைய ஆற்றல்களை அறியும் வாய்ப்பும் எமக்கு கிடைத்தது.

இந்த மலர் வெளியீட்டுக்கு குழுவின் உறுப்பினர்கள் உலகப் பந்தில் பாரிய தூர-நேர வேறுபாடுகள் கொண்ட பல்வேறு நாடுகளில் சிதறி வாழ்ந்து வந்த போதிலும் அதிஷ்டவசமாக யாவரையும் ஒன்றிணைப்பதற்கு நவீன தகவல் தொழில்நுட்பம் கை கொடுத்தது. இதில் பங்கு கொண்டு உழைத்த நண்பர்கள் அனைவருமே தங்கள் நேரத்தில் பல மணித் துளிகளை செலவிட்டதுடன், சோர்வின்றி இந்த வேலையை செய்து முடிப்பதற்கு ஒருவருக்கொருவர் பேருதவியாகவும் இருந்ததை நினைக்கும் போது எமது கல்லூரி இந்த நல்ல பண்புகளையும் எம்மில் விதைத்திருக்கிறது என்பதும் எமக்கு தெரிந்தது.

நண்பர்களிடையே கட்டுரை, கவிதைகளை சேகரித்தது மட்டுமன்றி, ஆசிரியர்களையும் தொடர்பு கொண்டு அவர்களது எண்ணப் பகிர்வுகளையும் இதில் பதிவுசெய்ய இந்த மலர்க்குழு கடுமையாக உழைத்தது. உண்மையை சொல்லப் போனால் இந்தக் குழுவிலுள்ள பலர் தங்கள் குடும்ப மற்றும் வேலை பொறுப்புகளுக்கு மத்தியிலும் இந்த கடமையை அதிக சிரத்தையுடன் செய்துமுடித்துள்ளனர் என்பதை இங்கே குறிப்பிட்டாக வேண்டும். இந்த குழுவிலுள்ள அவர்கள் ஒவ்வொருவருக்கும், மற்றும் மலர் வெளியீட்டுக் குழுவுக்கு வெளியேயிருந்து உதவிகள் புரிந்த பலருக்கும் இத்தருணத்தில் நன்றி கூறுகிறோம்.

இதைவிட இன்று நீங்கள் காணும் இந்த அழகிய நினைவு மலரின் வடிவமைப்பை செய்தவரும் இந்தக் மலர் வெளியீட்டுக் குழுவிலுள்ள நண்பர் நிதிராஜ் என்பதையும் மகிழ்வுடன் சொல்லிக் கொள்ள விரும்புகிறோம். அவரது பல மணி நேரங்களை இதில் செலவிட்டு அச்சிடுவதற்கு முன்பாக தற்காலிகமாக இதை ஒரு மின்னூல் வடிவத்தில் அழகுற வடிவமைத்திருக்கிறார்.

இதில் ஆக்கங்களையும், வாழ்த்து செய்திகளையும் அனுப்பிய எமது அதிபர்கள், ஆசிரியர்கள், மற்றும் நண்பர்களுக்கும் நன்றி கூறுவதுடன் எங்கள் அனைவரின் நினைவுகளிலும் நிறைந்திருக்கும் கல்லூரித் தாய்க்கு நன்றியுடன் வணக்கத்தையும் சொல்லிக்கொண்டு கடைசியாக **'இந்த மலரில் எழுதப்பட்டவை யாவும் அவரவர் சொந்தக் கருத்துக்களே'** என்ற ஒரு வரியையும் எழுதி முடிக்கிறோம்.

**யோகானந்தன்**
(மலர் வெளியீட்டுக் குழு சார்பாக)



# Messages from JC 80 Batch WhatsApp Group Administrators

*It is an honour and a privilege being the joint administrator for the Global 1980 batch almost 40 years later. It is with great pleasure that I connect you all on one platform through WhatsApp to share our daily messages, rare childhood photos, jokes and other entertaining informations.*

*Over the past few years, I have been discussing with a few friends reuniting all of our JC classmates through the latest technology, but this dream was realised only when Pathumanithy visited London in December 2019. During Pathu's London visit, we managed to arrange a meet up between seven of our classmates and their families. This was the first London class reunion with their families, which took place in South Harrow Restaurant, London. The next day Raveendran, Sivaseelan, Pathumanithy and I met to further discuss forming the online class reunion, the type of technology available, protocol, feasibility and so on. Thereafter, seven of us connected through WhatsApp and named the group"Jaffna College 80 Re-Union". A few months before this happened, I contacted Yamuna for the first time via Facebook to inform her that we were thinking about forming a group for our classmates and she was delighted and welcomed the idea. The next batch of classmates: Yamuna, Kalyani, Sivamalar, Swendraraj and Anandharajah joined gradually and through word of mouth we were able to trace most of our childhood friends from various other countries. I am proud to say that currently sixty former class members have joined us in this virtual journey.*

*The members of this group consist of those who studied with us either at primary, secondary or A/L. Those who left JC in primary or secondary school are now back with us via this group chat,which is an unbelievable delight for all of us. We are so glad to welcome our childhood mates who had left JC but are now reunited with us.*

*We decided to create a souvenir for the JC 80 Reunion batch by compiling and making accessible photos of our childhood memories and events a vital asset for future reference since most of us lost our college photo albums due to the civil war and ensuing displacement. We appreciate all of your support and contribution towards making the souvenir, with a special thankyou to our current JC Principal Dr. Rev. Solomon and all the other retired Principals and teachers of JC for their wishes and contribution. Hats off to the coordinator - Yogananthan, and the designer - Nithiraj, for their talent and skilled work on the memento. I wish to thank the team of active members for their sincere contribution towards this project. There was an abundance of team spirit and our group members' proven contribution and support on different tasks.*

*The feedback from most of our group members summarised that the formation of this group occurred at the right time due to the COVID lockdown in February 2020 onwards. We have been relying on this group for moral support, health information, fun and good laughs. We managed to organise successful get-togethers in few countries, namely Canada, France, London, and Australia. We also have a plan to hold a reunion in another country soon, subject to the national COVID restrictions.*

*Once again, thank you to all of our members for being a part of this group. It is incredible to connect with you all from locations across the globe, whether that be the Sri Lanka, UK, Canada, Australia, France, New Zealand, USA, India, UAE, Qatar and Austria.*

***"May our Alma Mater continue to shine as the crown jewel in our land".***

***S. Sugaljan***

# Foreword from Administrator:

*I was staring into the grey sky. It was cold outside. Narrow alleyways paved with stone connected the orange church spires. I was starting to miss the late Spring sun of New Zealand. Suddenly my phone buzzed. I had got a message. My children looked at me with disappointment, assuming my work was once again trying to contact me during our European retreat.*

*“Appa, ignore it – we need to go now” my son told me.*

*But as usual, I ignored his plea and looked at my phone. To my surprise, it was a Whatsapp from Swen. He had tracked down Kathirraj in London and wanted to give him my number. I looked at my diary. We would get to London in a few weeks. Excited, I told Swen that I was on my way to London for the first time after 21 years and that I will contact Kathir when I arrive.*

*I arrived in London in early December 2019, and immediately messaged Kathir. I then pulled out a big red phone book that had been well managed by my wife Vathy for the last 26 years. I found Ravi’s old contact details. Hesitantly, I called that number, unsure if it was still correct, and left a message. To my surprise, both Kathir and Ravi called me the next day.*

*Little did I know, this would mark a new chapter in my life.*

***

*The following day, Sugaljan and Ravi visited me. We were so excited to see each other after 21 years and it felt like our old school days. Riding on this excitement, we decided that we should have a small reunion with some classmates living in London.*

*A week later, the three of us met with Sivaseelan, Kandapu, Prem and Kathir with our partners and children in a restaurant. It was a fantastic night of food, music, and dance that we all thoroughly enjoyed.*

*During the party, Sugaljan consulted my opinion about bringing the whole JC A Level class of 1980 together. I was hesitant at first because it would be such a monumental task to find all our classmates. Making no promises, I said that I will sleep on it. The next day, Ravi, Sugaljan and I met again, and they convinced me that using today's modern technology it would be an easy job, and I finally agreed.*

*On the 30th of December, I created a Whatsapp group called ‘JC 80 batch’. It consisted of the seven of us who attended the small get-together and we shared our photos and memories of that night.*

*18 months later, we have finally brought Sugaljan’s dream to a reality with this small, happy community consisting of friends from all over the world. Some of us were at JC from Kindergarten to graduation, while others jumped on and off the train at various points along my 13 year journey. Despite the challenges of 2020, we have united and come together as a happy family.*

எல்லோருக்கும் அன்பார்ந்த வணக்கம்
ம. பதுமநிதி
***(M. Pathumanithy)***



**From left to right : Ravindran, Sivakandapoo, Sugaljan, Sivaseelan, Pathumanithy, Kathirraj, Premkumar**

# Tributes to the GREAT LEADERS of our time

## Mr. A. Rajan Kadirgamar



Mr. Arasaratnam Rajan Kadirgamar was the third and longest-serving Principal of Jaffna College and served in that capacity for 20 years (1968-1988).

He was born in Sri Lanka, and when he was 10 years old the family moved to Malaysia in 1938. Later his family shifted to Ceylon due to the second world war. They settled at Vaddukoddai, where his father was a priest.

The principal was an old boy of Jaffna College. During his school days, he was a sportsman excelling in cricket and athletics. Following his further education, he joined the college as a member of staff in 1954. He was appointed as Vice-Principal to Mr. S.V. Balasingham in 1964. After the untimely death of Mr. Balasingham, Mr. Kadirgamar became principal. He was a very fair-minded and liberal disciplinarian and a gentleman to boot. A devoted Christian, after his retirement, worked in Maruthanamadam Christian seminary for a number of years before choosing to emigrate to Canada. He passed away in 2011.

Mr. Kadirgamar hails from a very influential Jaffna family. A number of his relatives held high positions in politics and the church and contributed greatly to shape Sri Lanka.

During his time as principal, the whole family got involved in college life as all the children studied at Jaffna College. He was a kind and generous man, supporting families who had fallen on hard times by visiting and supporting them, opening the library late in the evening to support their education, and granting financial support and scholarships. He had an exceptional memory for names and during his various visits to Alumni functions, he would chat effortlessly as though we had only met recently. He had the ability to discuss any subject with ease. Those days, he used to walk into classes void of teaching staff and will conduct classes in almost any subject.

Mr. Kadirgamar was also pragmatic as well as a reformer. An example of this is to permit us to conduct Saraswathy Pooja at a Hindu Temple called மூன்றாம் பனை வைரவர் கோயில் for the first time in 1977. He also encouraged us to help the less fortunate, initiating a project to develop the area known as Kanavakkai which is situated behind the Jaffna College Technical Institute.

During the twenty years of his leadership, the college faced many challenges from all directions including government and other external challenges, Mr. Kadirgamar handled them expertly guiding the students and teachers through some tumultuous times.

## Mr. A. Rajasingham



Alvapillai Rajasingham, was born in Puloly, Jaffna in 1926. Both his parents were teachers, and he was the eldest in the family of five children. His early education was at Puloly Boys' Methodist mission school, then Hartley college and finally at Jaffna College. He graduated from Colombo University with a degree in Mathematics. After his graduation in 1948, he returned to Jaffna as a teacher. Teaching at Central and Hartley Colleges and later joined the Jaffna College Undergraduate section of the Math Department. In 1967, he was appointed as a Vice Principal of Jaffna College.

His Partnership with Principal Rajan Kadirgamar was remarkable, even though the period of crisis in 1974, when the government took over the college to turn into a campus for Jaffna University.

He got married to Mahila, an accomplished woman with a deep love of literature and music both western and Carnatic. He had four daughters who all studied at Jaffna College.

Rajasingam master's peculiar and unique style of teaching Mathematics earned respect within students who can follow his way of solving Mathematical problems. He wouldn't write step by step solutions on the board instead he would only write a few key equations and ask the students to understand and solve the problems themselves.

He didn't like his students going to the tuition classes. We remember he would ask us to come to his residence to get extra help for Maths if needed. He voluntarily taught outside his working hours and helped many students to get good results in Mathematics.

Rajasingham Master was a very talented math teacher. We were fortunate to have studied under him. He passed away in 2016.

## Miss Mary Elias



Following in her father's footsteps, Miss Mary Elias joined the staff of Jaffna College in 1953 and served 35 years until 1988. She was entirely educated at Jaffna College and got her degree from the Undergraduate Department of Jaffna College.

We learned that she could speak and write in five languages including Pali, Sanskrit, English, Tamil, and Malayalam. Being an active, dedicated, and enthusiastic person, Miss Elias played many roles in extracurricular activities at the college. She took the main role in the girls' guides, sports, music, and drama. She was also the warden of the women's hostel and the first female to serve as the supervisor of the Junior School.

Ms Elias's passion to Tamil literature is well known. We can illustrate this with an event while she was taking a Tamil lesson to our class since our regular Tamil teacher was absent on that day. The lesson was about the Tamil epic மணிமேகலை written by the Tamil poet சீத்தலைச் சாத்தனார் . She explained why few Tamil academics interpreted the name of the poet was derived from its original name சீழ்த்தலைச் சாத்தனார். They said that the poet often punch his head with a metallic pen that he used to write poems on the palm leaves whenever he hears someone incorrectly reciting the poems thus created wounds on his head. Ms Elias was always motivate the students by interacting with them in her class by telling interesting stories like this.

At first, Miss Elias seems to be a strict supervisor, but she is a kind-hearted person someone who always cares about her students. During her period, she led the school very successfully. She was respected by the parents, teachers, and students. We were fortunate to study under her. Miss Elias retired after 35 years of service.



## எம்மை விட்டுப் பிரிந்த நண்பர்களின் நினைவாக...

# அஞ்சலிக்கிறோம் அமரர்களே !



நேசமுடன் கூடி நின்று
பாசமுடன் பயின்றோமே
நாமின்று கூடியுள்ளோம்
நண்பர்கள் சிலரில்லை
இறையடி சேர்ந்துவிட்ட
இனிய எம் அமரர்கள்
இன்றும் என்றுமெமை
இனிது வாழ ஆசிப்பார்

முரளி எம்
மூளாய் நண்பனவன்
விளையாட்டில் தடம்பதித்து
வீரனாக உலவி நின்றான்
தனியனாய் தலை நிமிர்ந்து
தமிழிற்காய் தனையீந்தான்

பண்பு மிக்க பகீரதனும்
பலவிதமாய் சிந்தித்தான்
பாரில் நாம் நிமிர்ந்து நிற்க
பலம் கொள்ள வைக்க
பதித்த கால் தடத்தால்
பரமனடி சென்றிட்டான்

காரைநகர் ஈன்று தந்த
காளையவன் அரியதீபன்
காலமெல்லாம் கலகலப்பான்
களிப்புடனே நம்பிவிட்டோம்
புகையிரதம் பகையாகி
புண்பட்டுப் போனோமே

அருளுடன் வீற்றிருப்பாள்
அருள்மேரி என்று நாம்
விருப்புடனே காத்திருக்க
விதி வந்து கொண்டோட
புற்று நோய் தானடைக்க
பற்றின்றிப் பரமனடி சென்றாயோ?

எம் கல்லூரிக் கிளையாம்
நல் தொழில்நுட்பக் கல்லூரியிலே
நல்ல சேவை செய்து ரமேஷ்
நலமுடனே பழகியமை
பலமிழக்கச் செய்து நீ
பரலோகம் சென்று விட்டாய்

பழகி விட்டுப் பாதியிலே
பிரிந்து விட்ட நண்பர்களே
இறையடியில் இளைப்பாறி
இனிய துயில் கொள்வீரே
ஆத்மாக்கள் சாந்தியுற
ஆண்டவனைத் தொழுவோமே

- திருமதி சுந்தரபாரதி சிவமலர்



# GREETINGS TO THE JAFFNA COLLEGE 1980 BATCH

## FROM THE PRINCIPAL, REV DR. D.S SOLOMON

I extend my warmest greetings and those of current staff and students, to former students of Jaffna College on the occasion of your 1980 batch re-union.

Forty years ago, when you graduated from Jaffna College, Sri Lanka was experiencing great upheaval and troubles, which led to so many of our brightest and best young people leaving this country to seek careers and build new lives in other countries. So many, both overseas and in Sri Lanka, have achieved great success in their studies and their careers. It is very gratifying that Jaffna College was able to assist these students in these endeavors by building a firm academic foundation. We give thanks that you continue to hold our college fondly in your hearts in remembering your student days here.

In your 40th anniversary year of graduating, it is fitting that a book be written to remember these times and to honour and celebrate the achievements of these students. At a date yet to be fixed due to Covid-19 pandemic restrictions, a traditional re-union celebration for the 1980 batch will be organized.

I wish all our 1980 batch students much success with the book. I pray that all people, no matter where they live, will soon have access to a safe and effective vaccine. A vaccine will enable our current students to continue studies uninterrupted and also allow our Alumni to again visit the beautiful country of Sri Lanka. We look forward to that time when we may see you again at your alma mater.

**Rev. Dr. D.S Solomon**
Principal, Jaffna College

# தேசத்தின் மகுடம்

# எம் யாழ்ப்பாணக் கல்லூரி

சிவமலர்

யாழ்ப்பாணக் கல்லூரி
யாமிங்கு கற்றிட்டோம்
நாட்டிலெங்கும் உள்ளோரும்
நாடியிங்கு வந்திட்டார்
விடுதியிலும் தங்கி நின்று
விரும்பியவர் கற்றிட்டார்
தேசமெங்கும் புகழ் பரப்பி
நேசமுடன் நெஞ்சு நிறையும்

ஆலமரம் வாசலிருந்து
ஆவலுடன் வரவேற்கும்
ஆறுதல் தந்தெம்மை
ஆறியிருக்க வைத்திடும்
கோணற்புளியதனை
கோணாமல் வெட்டியங்கு
கோலமுறு வேலியமைத்து
கோடி பசுமை தருமெமக்கு

பசுமை நிறை பெரு மரங்கள்
பழமை மிகு கட்டடங்கள்
பார்வையிலே சோலையகம்
பதிந்திட்ட நினைவு சுகம்
பல்கலைக்கழகமதும்
பங்கு கொள்ள வந்ததுண்டு
பல்கலையும் கற்றுத் தந்த
பாரிலுயர் கல்லூரியிது

வெண் களியில் பலவுருவம்
விரும்பியங்கு செய்திடுவோம்
தும்பு கொண்டு பல ஆக்கம்
தெம்புடன் ஆக்கிவிட்டோம்
ஒட்லி என்னும் மண்டபத்தில்
ஒருங்கு கூடிப் பல நிகழ்வு
ஒன்றாய் அமர்ந்திருந்து
ஒற்றுமையாய் விருந்துண்டோம்.

பாடங்களில் திறமை கண்டு
பரிசு தரும் நாளதனில்
பட்டமுறு கோலவுடையில்
படிப்பிக்கும் ஆசிரியர்கள்
இருவரிசை அணியாக
ஏற்பர் இருக்கும் எம்மவரை
நாமும் இந்தக் கோலவுடை
நன்கு தரிப்போம்
நாளையென்றே
நலமாக உறுதி கொண்டோம்
நன்றாகப் படித்திட்டோம்.



விளையாட்டில் விண்ணரும்
வியந்து பலர் பாராட்ட
விண்ணளவும் கைதட்டல்
வீறு கொண்டு பரிசு கொள்வர்
தமிழறிவு கொண்டதற்காய்
தந்து நின்ற சொர்ணம் நாகநாதர்
தங்கு மனநிறை நினைவுப் பரிசு
தனையடியேன் பெற்ற தருணம்
தருமின்பம் இன்று வரை

விளையாட்டுப் போட்டியதில்
வென்று விடும் சிறப்பு இல்லம்
வெள்ளை இல்லம் எனது என்றும்
வெகுவாகக் கடைசி வரும்
தாக்கமது தந்திட்டாலும்
ஊக்கமுடன் பங்கு கொள்வோம்
பவிலியனில் வந்திருந்து
பல போட்டி கண்டிடுவோம்

பௌதீகவியல் விரிவுரை அறையதில்
படிப்படியாய்க் கதிரை போட்டு
பக்குவமாய்ப் படித்த காலம்

முன்வரிசை பின் வரிசை
முந்தியங்கு இடம் பிடிப்போம்
நூலகம் சென்று நாம்
நூல் பலவும் வாசிப்போம்
கன்ரீனில் பல்லுணவு
காசு கொண்டு வாங்கிடுவோம்

வருடங்கள் பல கற்று
வந்தபடி சென்று விட்டோம்
பிரியமான நண்பர்களை
பிரிந்து நாமும் வாழ்ந்திட்டோம்
இவ்வருடம் இனிய வேளை
இரு நண்பர் இயக்கத்தாலே
சுக்லஜனுடன் பதுமநிதி
சுகந்த சேதி தந்திட்டார்
இனிய நண்பர் பலருடனே
இருக்கும் உணர்வு பெற்றிட்டோம்
இன்றிலாது என்றும் நாம்
இனிதாய்க் கலந்து
வாழ்ந்திடுவோம்.



## Our Music Teacher

# Mrs. Dhanaranjini Mithirathasan

Many students give a gift to appreciate the work done by their teachers, however there is nothing more valuable than a few words about my Music teacher Mrs.Dhanaranjini Mithirathasan. Dhanaranjini teacher joined Jaffna College as the Music Teacher in 1970, when JC80 group was in Grade 3. Her passion and love for music invested the seeds of music within me and many of my fellow classmates which we cherish till today. During our primary school days she made Western music class very interesting that we looked forward for music period. Dhanaranjini teacher promoted the joy of singing at our young age.



She started the school band and trained students to play Melodica, Piano Accordion, Tambourine, Cymbals, Drums. She would spend countless hours training the Band and Choir so we performed well and show case our talents at Parents Day, Sports meet, Prize Giving, Carol Service and Chapel worship.

As the Choir director at Jaffna College, she not only inspired us to sing but instilled in us the desire to be in awe of what can be accomplished in a group when the voices and hearts are aligned with one another.

I had the previledge of taking Piano lessons from Dhanaranjini teacher. She encouraged me to reach my potential and taught me hard work pays off when you practice. She taught me that simple fractions were a part of music too, with quarters, eighths and sixteenth notes I could sight read and make music.

Teachers play such an important part in shaping and guiding….I am thankful to my dear teacher for opening my eyes to see the wonderful world of MUSIC.

*- Inthumathy*





# முன்னாள் அதிபருடன் ஓர் உரையாடல்



**எம்முடன் உரையாடுபவர்:**

**திரு. ஜி. இராஜநாயகம் அவர்கள்**

**ஆசிரியர் 1967 -1993, அதிபர் 1993 - 2000)**

**நீங்கள் ஆசிரியராக விரும்பியதன் காரணம் அல்லது அதற்குத் தூண்டுதலாக யாராவது இருந்தார்களா? இதை பற்றி சொல்லுங்களேன்.**

நான் பட்டதாரிப் பரீட்சை எழுதி முடித்தவுடன் அப்போது யாழ்ப்பாணக் கல்லூரியின் அதிபர் K.A. செல்லையா என்னை கல்லூரிக்கு அழைத்து ஆசிரியராக என்னை நியமனம் செய்ய விரும்புவதாகக் கூறினார். நான் உதைபந்தாட்ட விளையாட்டில் சிறந்து விளங்கியமையாலும், கிறீஸ்தவ சமய பிரசங்கங்கள் செய்வதில் ஈடுபாடுடையவனாக இருந்தமையினாலுமே இதனை அவர் செய்திருக்கவேண்டும். இதே நேரத்தில் Dr. S.K Bunker என்னை இறையியல் படிப்புக்காக அமெரிக்கா அனுப்புவதற்கு விரும்பியிருந்தார். ஆனால் எனது தாயாரின் உடல் நிலை காரணமாக அவரை விட்டு விட்டு அமெரிக்கா செல்ல நான் விரும்பாததால் ஆசிரியப் பணியையே தேர்ந்தெடுத்தேன். இது நிகழ்ந்தது 1967-ம் ஆண்டு. அந்த ஆண்டிலிருந்து கல்லூரியில் 26 ஆண்டுகள் ஆசிரியப் பணியையும், பின்னர் 7 ஆண்டுகள் அதிபராகவும் எல்லாமாக 33 ஆண்டுகள் இந்த வரலாற்றுப் புகழ்மிக்க கல்லூரியில் என் பணியைச் செய்திருக்கிறேன்.

**நீங்கள் யாழ்ப்பாணக் கல்லூரியில் பணியாற்றியபோது நிகழ்ந்த இன்றும் நினைவுகூரும் சில ஞாபகங்களைப் பகிர்ந்து கொள்வீர்களா?**

முதலாவது நான் செல்லையா விடுதி (Howland Hall) மாணவர்களுக்கு Warden ஆகவிருந்தபோது நிகழ்ந்தது. அப்போது 102 மாணவர்கள் அங்கே தங்கியிருந்தனர். ஒரு பகுதியில் சிரேஷ்ட மாணவர்களும், மறு பகுதியில் கனிஷ்ட பிரிவு மாணவர்களும் தங்கியிருந்து படிக்கும் வண்ணம் ஒரு 'H' வடிவத்தில் அந்த விடுதி கட்டப்பட்டிருந்தது.

ஒருநாள் இரவு 10 மணியாகியும் மாணவர்கள் நித்திரைக்குப் போகாமல் கும்மாளமிட்டுக் கொண்டிருந்தனர். நித்திரைக்குப் போகும்படி எல்லாருக்கும் நான் உத்தரவு போட்டேன். அவர்களும் பதிலுக்கு அன்று எனக்கு ஒரு பொறிவைத்தார்கள். ஆனால் நான் அதிஷ்டவசமாக தப்பிப் பிழைத்தேன்.

இரண்டாவது நினைவு நான் அதிபராகவிருந்த காலத்தில் நிகழ்ந்தது. யுத்த காலத்தில் வட்டுக்கோட்டைப் பகுதியில் வான் தாக்குதல்கள் மோசமாக இடம்பெற்றுக்கொண்டிருந்த வேளை அது. எதிர்பாராவிதமாக வட்டுக்கோட்டைச் சந்தியை நோக்கி

விமான குண்டுத் தாக்குதல் நிகழ்த்தப்பட்டபோது கல்லூரி ஆசிரியர்கள் மூவரை இத்தாக்குதல்களிலிருந்து பாதுகாப் பாக வைத்திருக்க நான் எடுத்த முயற்சியில் எனக்கும் முதுகில் காயம் ஏற்பட்டது. ஆனால் துரதிஷ்டவசமாக காயப்பட்ட ஆசிரி யர் ஒருவர் இறந்து விட்டார்.

**நீங்கள் கல்லூரி அதிபராக பதவிக்காலத்தில் சாதித்தவற்றில் குறிப்பிடத்தக்கவையாக எவற்றைக் கருதுகிறீர்கள்?**

நான் அதிபராக இருந்த காலகட்டத்தில் குறிப்பாக 1993 -2000 காலப்பகுதியில் நாட்டில் இனப்பிரச்சினை கோரத்தாண்டவ மாடியது. அப்பொழுது மாணவர்களைப் பாதுகாத்து பெற்றோ ருக்கும், பிள்ளைகளுக்கும் நல்ல உறவை ஏற்படுத்திப் பிள் ளைகளை கல்வியிலும், குறிப்பாகப் பரீட்சைகளிலும் கவனம் செலுத்துவதற்கு என்னாலான பல முயற்சிகளை எடுத்தேன்.

1998 இல் நான் அதிபராகவிருந்த காலத்திலேயே யாழ்ப்பா ணக் கல்லூரிக்கு 175 வயதாகியது. 1998-ன் மாதம் முழுவ துமே இதை வெகு விமரிசையாகக் கொண்டாடுவதற்காக ஒதுக்கினோம். குடாநாடு தழுவிய பல்வேறு விளையாட்டுப் போட்டிகளையும், கண்காட்சிகளையும், கலை நிகழ்ச்சிகளை யும் ஒழுங்குசெய்திருந்தோம். இவை எல்லாவற்றுக்கும் முத் தாய்ப்பு வைத்தாற்போல Primary School-இன் புதிய கட்டிடத் தொகுதி ஜூன் 26 அன்று திறந்துவைக்கப்பட்டது. இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டவர் கல்லூரியின் 7வது அதிப ராகவிருந்த Rev J. Bicknell அவர்களுடைய புதல்வர் Dr. J.W . Bicknell. அவர் அமெரிக்காவிலிருந்து வந்து கலந்துகொண்டது எமக்கெல்லாம் பெருமையாகவிருந்தது.

**ஓய்வு பெற்ற பின்னர் கல்லூரியுடனான உங்கள் தொடர்புகள் மற்றும் உங்கள் செயற்பாடுகள் எப்படி இருக்கின்றன?**

நான் யாழ்ப்பாணக் கல்லூரியிலிருந்து ஓய்வுபெற்ற பின்னர் 2002ம் ஆண்டில் தென்னிந்தியத் திருச்சபையின் (C.S.I) திட்டமிடல் அலுவலகராக (Project Officer) பணி புரிந்தேன். இந்தக் காலத்திலேயே குறிப்பாக முறிகண்டி, மாங்குளம் பகுதியில் யுத்தத்தினால் சிதைந்து போயிருந்த பல தேவால யங்களைப் புனர்நிர்மாணம் செய்யும் சந்தர்ப்பம் எனக்கு கிடைத்தது. அதன் பின்னர் சமயக் கல்விச் சபையின் (R.E.B) நிர்வாக அதிகாரியாகவும் (Managing Director) இருந்தேன். அதன் பிறகு வசதி குறைந்த வறிய மாணவர்களுக்கு சுகாதா ரம், போசாக்கு, கல்வி என்று பல வழிகளிலும் உதவி செய்த C.C.F.C (Christian Children Fund of Canada) எனும் தொண்டர் அமைப்பின் அலுவலகராகவும் பணியாற்றினேன். இறுதியாக மானிப்பாய் கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலை (Green Memorial Hospital), அதன் பின்பு இணுவில் மக்லியோட் வைத்தியசாலை (McLeod Hospital) ஆகியவற்றில் முகாமைத் துவ நிர்வாகியாகவும் (Hospital Manager) ஏழு வருடங்கள் கடமையாற்றினேன். இதன் பின்னரே நான் என் பணிகளி லிருந்து முழுமையாக ஓய்வு பெற்றேன்.

# School days, worth remembering



I would like to share my wonderful memories from my school life back home. I started from Grade 2 and finished A-Level by 1980. I remember in junior school we used to ask the teacher if we could drink water but sneak out and try to pick Nelli fruit and come back into class as the happiest kids like we achieved something.

I remember trying to be involved in all the sports events from junior school, loved the competitions, and won many prizes. It was something that we look forward to every year hoping to be the winning team. When starting senior school, I joined the netball team for the school and it was a lovely experience to be able to play in a team and represent our school, something I remember to this day. I also tried to involve myself in other sport events like Javelin, Discus Throw, Relay, Long Jump and won 1st and 2nd place. It is safe to say that we really enjoyed the sports day events during school days, where we all enjoyed and had fun.

Besides the sports I remember simple things that we did as kids, in the Chemistry lab me and Rahini used to turn on the gas as we loved the smell of it. Life was so much fun back in the days, where simple things used to make us happy.

Once, when I was in year 10, I went home for lunch and on my way back, it was raining heavily I was completely wet and couldn't attend afternoon classes. I had to go to the principal's office to get permission to go home, but instead he sent me to Principal's bungalow where Mrs. Kathirgamar gave me their daughter's dress, offered me tea and let me go back to class.

Mr & Mrs. Kathirgamar treated me like their own daughter, and I was very grateful to have that friendly relationship with them. I am so proud to have studied at Jaffna college to share my school life experience with such lovely friends and teachers, something that will forever be in my memories.

Thanks

**Gnana**

# Jaffna College Reflections with our Vice-Principal/Teacher

**(Mr.W. Dharman Kulatungam, from 1960 - 1992)**

**To:** The G.C.E Advanced Level Class Batch of Students of Jaffna College at their Reunion

I am happy you all are having a reunion of your batchmates of 1980 now scattered around the world.

**"The Tie That Binds" our beloved college.**

At the request of one of your organizers, I am answering the questions given to me as one of your teachers. It is with the same feeling you would have had when I enjoyed handing out my question papers for your term exams - feelings of trepidation, anxiety and confusion!! Anyway I'll try my best to oblige. Happy Reunion - God Bless you all.

Thank you

W. Dharman Kulatungam
Peterborough, ON



**Why did you choose teaching as a career? Is there someone who inspired you?**

I was amused at this question, because you may be surprised that I did not want to be a teacher! And my interests were in other areas not very much in vogue at the time of my graduation in 1960. But at the same time I had the greatest regard and admiration of some of my teachers, to name a few – Mr. K.A. Selliah (Principal), Dr. W. Luther Jeyasingam (Geography), Mr. T. J. Koshy (Botany), Prof K. D. Arudpragasam (Zoology), Mr. S. Selliah (Librarian) and specially my father Mr. Lyman Kulathungam (Vice Principal) all of them now predeceased.

When I graduated with a Bachelor of Science degree (University of London England), my principal Mr. Selliah called me to his office and offered me a position to teach at college, and told me that this comes with his own observations and the high recommendations by Dr. W. L. Jeyasingam. He was rather taken a back when I politely refused this great offer, and when asked for the reason, I told him that I was more interested in pursuing a career in interior decoration, and also that my father was the Vice Principal and my elder brother was too on the staff and I didn't want the community to comment if this was a family run institution. Mr. Selliah was a bit taken a back and with a hint of a smile, rubbed his hand on his head and told me that he was well aware of my talents and to follow it as a pastime, but to be a fulltime teacher. He also reminded me that I am an individual of my own and not joining as a son or brother on the staff! He closed the interview with his best wishes and smilingly handed me my time-table and told me to get going to the Classes!! And I did and worked for the next 32 years (1960 – 1992) as a teacher and later as Vice-Principal for 8 years. Now if I am given a second chance I would not hesitate to be a teacher at Jaffna College. [By the way, I've continued to be a high school teacher in Peterborough where I live, since my arrival in Canada in 1992.]

**What was the school environment like when you started teaching, especially with regards to the principal, teachers, students, parents and community?**

I was a student of Jaffna College from Grade 4 up to my graduation and I enjoyed it making many life long friendships. At the time of my joining the staff, college was at its glory with the primary, secondary and collegiate departments all in the same campus with defined boundaries, administrators, and teachers and different levels of discipline fitting each department. Everything functioned smoothly, and there was

great cordiality among all of its staff since they all came under the same umbrella, the "Round Table" or staff guild.

I was fulltime teacher of the secondary department and also did part-time work with collegiate department degree classes, where some of the students were older than me! But it was fun though. The principal was Mr. K. A. Selliah, my father was Sr. V.P and Mr. K.C. Thurairatnam the Jr V.P. There were senior teachers who had taught me and junior ones too. I admired the good relationship and understanding that prevailed and the advice and help they gave me. I used to be surprised attending staff meetings which sometimes had heated arguments on topics discussed. But at the end of the meeting one could find the most vociferous opponents walking out with the principal sometimes with their hands on his shoulder like friends amidst acute differences of views and opinions but everything focussed on the best interest of the community at large. Jaffna College was a co-educational residential school as well, with students from many parts of the country. It was a joy to teach and move with them. The students were able to approach the staff and voice their opinions and concerns much to the envy of other schools. The parents and community were very supportive and I was able to forge many a close friendship some of which still exist even today many years after my moving to Canada.

**How did you handle personality differences between students? Also how did you approach students who were challenging?**

As a teacher, warden, patron of associations, faculty advisor, house-master, and Vice-Principal I had to often deal with personality differences between students at different levels - pre-teens, teens, and adults. There were occasions where situations were rather challenging. I was aware and accepted that there are varying shades of opinions and it was important to understand them. I fashioned my approach which I learnt from my father, which was often based on the spirit of the Law influenced always by human considerations. Meeting with a single student or a group of them with the problem, I never dealt with it in the presence of others who were not involved. Unless it was absolutely essential I hardly discussed their affairs with my colleagues, or took it up to the administrators. The students under stress understood and appreciated the confidentiality I kept. Many a situation was able to be defused or settled without much difficulty. Sometimes students have got a little hot under their sleeves but have realized that I was even ready to be their Punch Bag! I was careful not to lose my temper as that will be a victory for the student and also learnt to be patient. Many a time a student in class not quite attentive would catch my wink, slight shake of my head or raising my eyebrow and settle down. I would thank the student at the end of class and he/she would tell me 'Sir your eyes, ears and nose are very sharp, only you don't know enough Tamil to scold!'

I was able to build a good relationship with them and it gladdens my heart when a student I hardly expect calls me from near or far to inquire how I was and to thank me for my advice or even one word of encouragement which I had given which was responsible for his/her doing well in life. What a joy it gives me.

**Is there any memorable memory of your teaching years?**

I should say that all of 32 years of my teaching career has been a memorable one which I would treasure till the end of my days. I am hesitant to pinpoint any special memory, except to mention the following:

a) When 4 students discovered a chemical we were researching in a Halophytic Plant at our Thondaimannar Science Centre in the middle of the night. All 4 are now in the medical field and appreciate my encouraging them in research.

b) When a batch of students (I am sure they were in the 1980 batch) who extracted oil from a plant otherwise poisonous which I had directed them to research! This was at our College Cum Lions Club exhibition.





# Sharing few memories

## Ms. S. P. Gulasingham, First Female Vice-Principal at Jaffna College

(Teacher/ Administrator, from 1963 -1999)

It is my great pleasure to write for your souvenir on my memories about the students at Jaffna College. I am so glad that you have all maintained your network of alumni even more than 40 years after your graduation from Jaffna College. My whole life revolved around Jaffna College—first, as a student, then as a teacher, head of the science department, and finally as an administrator. In addition to these I was involved in so many extra-curricular activities, such as Hitchcock house teacher, netball coach and patron of SCM.

Upon graduating from University of Colombo, I started my career as a substitute teacher at Jaffna College. At that time, I didn't expect that I would spend my entire career teaching. The teacher who I substituted for retired and then the Administration offered me a permanent position. I enjoyed teaching so much that I continued to be a teacher. Before I retired, I was promoted to co-vice principal.

In any school, being an administrator is very challenging, but I never felt it at Jaffna College because there is always a cordial relationship between students and teachers. Students were very cooperative with the teachers and administrators. The uniqueness about the Jaffna College is that students are given ample opportunities to raise their concerns and express their opinions at various spaces such as the student council. On some occasions, students disagree with the teachers and administration but when we justify our stance, students accept it at one point. I have noticed that students were very grateful for the freedom that they had at Jaffna College.


An interesting challenge that we had as a coeducation institution was the boys-girls relationship. It was a very sensitive issue for an administrator to handle. We received information about these issues, and we approached it as a teenage issue rather than a cultural issue. For the most part, the issues resolved themselves with very little intervention from the administration.

Students are talkative and misbehave sometimes between classes. However, when the teacher entered the classroom, they went quiet and became respectful.

The students at Jaffna College were very sportive. Once I was a netball coach and we had a very tough game that ended in a draw. We were given 5 minutes of extra time and came to a draw again and the extra time was repeated and finally, we lost the game. It was so heartbreaking for the players and me. However, we quickly recovered from the disappointment and accepted it as part of the game and life.

Teachers live very close to the school premise and even after school, they spend their time there running extracurricular activities. I am not sure if that is the case for the teachers now. Now it is more competitive, and teachers must do private tutoring after school for their betterment. Therefore, they cannot spend much time on extracurricular activities. We had a sense of community and a sense of belonging at Jaffna College and we had a good role to play for the betterment of our students.

Whatever happens Jaffna College will shine with God's guidance.






# Looking back with our Teacher

## (Mr. R. Kanagaratnam, from 1949 - 1990)

**What was the school environment like when you started teaching, especially with regards to the principal, teachers, students, parents, and wider community?**

Jaffna College in September 1949

The environment at Jaffna College in late September 1949 was at its best, it could not have been better. The landscape was beautiful, and the atmosphere was serene and peaceful. Jaffna College, under the competent and efficient administration of Principal Mr. K. A. Selliah, an able physics and maths teacher, was a leading educational institution in the country. He had the unstinted support of his loyal, dedicated and well qualified teachers. Teacher demeanor was good, there was decorum.

Teacher student relationships were friendly. The students were disciplined and well-focused. The college boasted an excellent library, which provided proper facilities for studying. Literary associations, such as the Academy, Brotherhood, Forum and Lyceum helped students develop their intellectual potential. The Student Council helped the administration maintain student discipline.

Cricket, soccer, netball, and other outdoor sports enabled students to develop important skills such as team spirit and sportsmanship. Student academic and sports achievements were high. The Senior, Junior and Women's hostels provided a home-like environment to students from distant places; Boarders Day was an annual event.

Parents expressed ideas and opinions freely at Parent-Teacher meetings. They participated fully at the school's public functions, like the Prize Giving, and the Inter-House Athletic Meet and were delightfully co-operative. The community held Jaffna College in high esteem, and were proud of the College. They could not have wished for a more idealistic teaching institution.

I am thankful to students from the first batch onwards, some of whom are still in touch with me. Salutations to the great and the good that served Jaffna College.

**Describe your most memorable event at Jaffna College.**

Event: The 'Battle of the Golds': Jaffna College vs St. Patricks College soccer match, 1950.

Venue: Bicknell Field, Jaffna College, Vaddukoddai.

Seven decades ago, a massive crowd - supporters of both teams, lined the sidelines of the field, there was no Pavilion.

Amid loud cheers, both teams entered the field, the home team with high expectations. They had won the earlier matches, including St. Johns, with a strong, formidable team. Excitement ran high with the first whistle. A corner kick swerved the ball into the goal, giving St. Patricks College an early lead. However, Jaffna College equalized and the game became even more exhilarating. Both sides made good moves and shortly before half time St. Patricks scored a second goal.

The game began again with Jaffna College on the offensive with vigour. The defence was solid and almost impenetrable. Minutes went by. Moments before the end, captain Ramachandran crisscrossed the half line with the ball, broke through the defense and beat the goal keeper with a brilliant goal, split seconds before the last whistle.

The match was drawn, 2-2 and the grand finale of an unbeaten season was attributed to the coach, Mr S.T Jeevaratnam, a senior Chemistry Teacher and Head of the Science Department.

Father Long declared a holiday for Jaffna College, and jubilant Principal, Mr K.A. Selliah reciprocated with a holiday for St. Patricks College.

The game is not over until the last whistle.

# நினைவழியாக் காலம்

கல்யாணி



பச்சைப் பசேலென்ற நெல்வயல்கள் ஒருபுறம்... பொன்னாலைக் கடல் தாண்டிய சோழகக் காற்று நெற்கதிர் தொட்டு குளிரைக் காவி வகுப்பறைக்குள் நுழையும் குளிர்ச்சி மறுபுறம்... நெடிதுயர்ந்த ஆலும், மகோகனியும், மதுரமும் நிலமெங்கும் நிழல் பரப்பும். எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியிலும் சருகுகள் சரசரக்கும்....

இயற்கையாகவே பதனிட்ட காற்று நிரம்பிய வகுப்பறைக்குள் நாங்கள்....

அமெரிக்க மிசனரிகளின் தொலைநோக்கு நூற்றாண்டுகள் தாண்டியும் நிலை நிற்கும் யாழ்ப்பாணக்கல்லூரி.

இப்பெருமை மிகுந்த கல்லூரியில் மாணவியாக கழித்த நாட்களின் நினைவுகள் எழுத்தில் வடிக்கமுடியாதன. அந்த இனிமையான, இளமையான, துடினமான வாழ்க்கை நினைவுகள் என்றுமே எனது மனதின் ஒரு மூலையில் உறங்கிக் கிடந்தன. ஆழ் மனத் திரையில் ஆழமாகப் பதிவாகிய அந்த அருமையான நினைவலைகளை இன்று எம் வாட்ஸ்அப் குழு மீட்டிப் பார்க்க வைத்துள்ளது.

அன்று, முதல் நாள் பாலர் பாடசாலையில், என் பெற்றோர் என்னை கொண்டு சேர்த்த பொழுது நான் வடித்த கண்ணீரும், பன்னிரண்டாம் வகுப்பு முடித்து வெளியேறிய நேரம், எனது நண்பர்களை, ஆசிரியர்களை, அந்தப் பாடசாலையை விட்டு கனத்த இதயத்தோடும், கலங்கிய கண்களுடனும் வெளியேறியதும் என்றும் நெஞ்சில் நினைவழியா நாட்களாய்...


யாழ்ப்பாணக் கல்லூரி எமக்கு பாடத்திட்டங்களை மட்டும் புகட்டவில்லை. வாழ்க்கையில் ஏற்படும் சவால்களை கையாண்டு, மனித நேயத்துடனும், நட்பு உணர்வுடனும் வாழ்வதற்கான ஆற்றலையும் அது கற்பித்தது. எங்களில் பன்முக ஆளுமையை வளர்த்தது. ஒவ்வொரு ஆசிரியரும் ஒவ்வொரு விதமான வழியில் நம்மில் மாற்றங்களையும் வளர்ச்சியையும் கொண்டு வந்தார்கள். இன்னமும் விரிவாகக் கூறினால் சில ஆசிரியர்கள் வகுப்பறையிலும், காலை பிரார்த்தனைக் கூட்டத்திலும் கூறிய கதைகள் நமது மனதில் இன்றும் நிலைத்து நிற்கின்றன. அவற்றில் ஒரு சில .......

பொன்னம்பலம் மாஸ்டர் கூறிய மகாபாரத, ராமாயண கதைகளின் ஒவ்வொரு காட்சியும் அவர் வர்ணிக்கும் போது எம் கண் முன் தோன்றும். ஆறாம் வகுப்பில் தனரஞ்சினி டீச்சர் முதன் முதலாக விஞ்ஞானம் கற்பித்தார். அவரே எழுதித் தயாரித்த பாடத்திட்டத்தை, அவர் படிப்பிக்கும் விதம் எமக்கு அப்பாடத்தில் விருப்பைக் கொண்டு வந்தது. இன்றும் இத்தனை வருடங்களின் பின்னரும் அவ்வகுப்பில் படித்தவை நினைவில் நிற்கின்றன. என்னை மிகவும் கவர்ந்த ஆசிரியர்களுள் ஒருவர் அவர். என்னை மட்டுமல்ல, மாணவர்கள் எல்லோரையும் கவர்ந்த ஒரு ஆசிரியர். சிறுவயதில் நான் வீட்டில் என்னை தனரஞ்சனி டீச்சராக பாவனை செய்து அம்மாவின் சேலையை அணிந்து பாவைப் பிள்ளைகளுக்கு பாடம் கற்பித்தது இன்றும் நினைவில் உள்ளது. இன்னும் ஒரு ஆசிரியர், புஸ்பராணி டீச்சர். அவர் மாணவர்களை ஆங்கில பேச்சுப்போட்டிகளுக்கு பயிற்றுவிப்பார். அப்போது அவரின் குரலில் இருக்கும் கணீரென்ற ஒலியும் அந்த ஆளுமையும் என்னை மிகவும் கவர்ந்தன. ஒவ்வொரு ஆசிரியர்களை பற்றியும் பல நல்ல கதைகளாகக் கூறலாம். ஆனால் எழுதுவதற்கு பக்கங்கள் போதாது.

பாடசாலையில் படிக்கும்போது நடந்த பல நிகழ்ச்சிகள் இன்றும் பசுமையாக நினைவில்... படித்த பாடல்கள், ஆடிய நடனங்கள், நடித்த நாடகங்கள்... அவற்றுள் ஒன்று ஜீவா டீச்சர் சமையலறைப் பாத்திரங்களைக் கொண்டு பழக்கிய Band நிகழ்ச்சி. அந்த நிகழ்வில் பங்கு பற்றியபோது மாணவர்களாகிய எமக்கு ஒரு புதிய, சுவாரசியமான அனுபவம் கிடைத்தது. என்னுள் இன்றும் நிலைக்கும் நினைவுகளில் மற்றொன்று இல்ல விளையாட்டுப்போட்டிகள். நான் ஒரு விளையாட்டு வீராங்கனையாக இல்லாத போதிலும் அந்த விளையாட்டுப் போட்டிகளில் பலவித பணிகளில் என்னை ஈடுபடுத்திக் கொண்டு பெருமகிழ்ச்சி அடைந்தேன். விளையாட்டுப் போட்டிக்கெனச் செய்யும் ஆயத்தங்கள், மாணவர்கள் கூடியிருந்து Rosette செய்வது, கேக் அடிப்பது, குளிர்பானம் செய்வது, இல்லங்களை அலங்கரிப்பது என பல விடயங்கள் மகிழ்ச்சிக்குரியவை. அது மட்டும் அல்லாமல், விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற இல்லத்தின் ஆசிரியரை மாண

வர்கள் தூக்கிச் சென்று வெற்றிப் பீடத்தில் ஏற்றுவதும், அதனை முன்கூட்டியே அறிந்து அந்த ஆசிரியர்கள் ஓடி ஒழிவதும் வேறு எந்தப் பாடசாலையிலும் காண முடியாத ஒன்று. இது ஆசிரியர் மாணவர்களுக்கு இடையான நல்லுறவை வெளிப்படுத்தும் பல நிகழ்வுகளில் ஒன்று.

எனது கல்லூரி வாழ்க்கையில் மறக்க முடியாத மற்றுமொரு நினைவு மாணவர் குழுவில் (School Council) அங்கத்தவ ராக தொடர்ந்து நான்கு வருடங்கள் இருந்த அனுபவம். இவ் அனுபவம் என் ஆளுமையைச் செழுமைப்படுத்த உதவியது. இக்குழுவில் என்னுடன் சேர்ந்து சுகல்ஜன், விக்கினேஸ் வரன், யோகானந்தன், முத்துலிங்கம், ஜெயரஞ்சன், பதுமநிதி குமுதினி, ராகினி ஆகியோர் வெவ்வேறு வருடங்களில் இடம் பெற்றிருந்தார்கள். யாழ்ப்பாணக் கல்லூரியில் மாணவர் குழுவை தெரிவு செய்யும் முறை தனித்துவமானது. இந்த தேர்வு இரு மட்டங்களில் சனநாயக முறையில் நடைபெறும். ஆசிரியர் குழுவொன்று மாணவர்களின் பெயர்களை தெரிவு செய்து கொடுக்க, மாணவர்கள் வாக்களிப்பு மூலம் மாணவர் தலைவர்களைத் தெரிவு செய்வார்கள். வருடத்தில் ஒரு முறை உயர் பாடசாலை மாணவர்கள் ஒன்றாக பாடசாலை மண்ட பத்தில் கூடியிருக்க இந்த தேர்தல் நடைபெறும். யாருடைய பெயர் ஆசிரியர்களால் பிரேரிக்கப்பட்டுள்ளது என்பது மாண வர்களுக்குத் தெரியாது. அந்தச் சூழல் பரபரப்பானது. ஊகங்க ளுக்கும், எதிர்வுகூறல்களுக்கும் மத்தியில் அந்த தேர்தலே அன்றைய நாளின் பேசுபொருளாகும். ஆசிரியரொருவர் ஆசிரியர்குழுவால் தெரிவுசெய்யப்பட்ட பெயர்களை கரும் பலகையில் எழுதுவார். பின்னர் மாணவர்கள் வாக்குச்சீட்டில் தாம் தெரிவுசெய்த மாணவர் தலைவர்களின் பெயர்களை எழுதுவார்கள். தேர்தல் முடிவு அறிவிக்கும் வரை மாணவர் மத்தியிலிருக்கும் பரபரப்பு அளவிடமுடியாத ஒன்று. தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட பின்னர் அப்போதுள்ள மாணவர் தலைவர், புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட மாணவர் தலை வரை மேடைக்கு அழைத்துச் சென்று அறிமுகப்படுத்துவார். பின்னர் புதிதாகத் தெரிவுசெய்யப்பட்ட மாணவர் குழுவின் உறுப்பினர்கள் அனைவரும் மேடைக்கு அழைக்கப்பட்டு அதிபரினால் Concilor batch அணிவிக்கப்பட்டு கௌரவிக் கப்படுவார்கள். அதன் பின்னர் வரும் வாரங்களில் மாணவர் குழுவிற்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் தமது வகுப்பு மாணவர்களை அழைத்து விருந்துபசாரம் செய்வார்கள். இது பல விதங்களில் நடைபெறும். இவற்றுள் பரமேஸ்வரனின் சிற்றுண்டிச்சாலையில் வழங்கும் தேனீர் விருந்து அல்லது மாணவர்களை சில ஆசிரியர்களின் மேற்பார்வையுடன் சினிமாவிற்கு அழைத்துச் செல்லுதல் போன்றவை அடங்கும். அது மட்டுமன்றி அதிபர் அவரது இல்லத்திற்கு மாணவர் குழு அங்கத்தவர்களை கௌரவிக்குமுகமாக அழைத்து தேனீர் விருந்து வழங்குவார். அந்த ருசியான சிற்றுண்டிகளை ஒருவித வெட்கத்துடன் அதிபர், அவரது மனைவியார் முன் னால் இருந்து அருந்தியது நினைவில் உள்ளது. இம்மாணவர் குழுவிற்கு ஆனந்தரட்ணம் ஆசிரியர் போஷகராக எமது



காலத்தில் இருந்தார். எமது கல்லூரி இறுதியாண்டில் தர்மன் ஆசிரியர் போஷகராகவிருந்தார்.

இக்குழு மாதமொரு தடவை கூடி மாணவர் விவகாரங்கள், கல்லூரி விழாக்கள் நடத்துவதற்கான ஏற்பாடுகள் என்று பல விடயங்களை ஆராய்வார்கள். அத்துடன் மாணவர்களின் ஒழுங்கைப் பேணுவது, பாடசாலை விழாக்களை சிறப்பாக நடத்துவதற்கு ஆசிரியர்களுக்கு உதவுவது, குறிப்பாக, காலை பிரார்த்தனை நேரமும், பாடசாலைக் கூட்டங்களின் போதும் மாணவர்களை அமைதியாக வைத்திருப்பதும் இக்குழுவின் முக்கிய கடமைகள். காலை பிரார்த்தனை நேரத்தில் மாண வர்களை அமைதியாக வைத்திருப்பது இலகுவான காரிய மல்ல. அதுமட்டுமன்றி திடீரென அதிபர் சத்தமில்லாமல் கண் காணிக்க நடந்து வருவார். ஆகவே மாணவர் குழு அவ்வரை மணி நேரமும் மிகவும் உசார்நிலையில் நிற்கவேண்டும். மாணவர்களோடு முரண்படாது தன்மையாக வழிநடத்த வேண்டும், அதேநேரம் பாடசாலை நிர்வாகத்தின் எதிர்பார்ப் புக்களை பூர்த்திசெய்ய வேண்டுமென்பதும் மாணவர் குழு வுக்குள்ள மிகச் சவாலான விடயமாகும். இவை மட்டுமன்றி பாடசாலை விழாக்களை நடத்துவதற்கு ஆசிரியர்களுக்கு உதவுவதும் மற்றுமொரு கடமை. இவற்றுள் பாடசாலைப் பரிசளிப்பு விழா முக்கியமான ஒன்று. இந்த விழாவிற்கான ஆயத்தங்களில் மாணவர் குழு முக்கிய பங்காற்றுவது வழக் கம். பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினர், அதிபர், ஆசிரியர் கள், பெற்றோர், மாணவர்கள், பழைய மாணவர்களென பலர் கூடியிருப்பர். இதில் மாணவர் தலைவரின் பேச்சு முக்கிய மான ஒன்று. எமது இறுதி ஆண்டில் மாணவர் குழுவின் தலைவராக இருந்த யோகானந்தன் இவ் உரையை சிறப்பாக ஆற்றியமை இன்றும் நினைவுக்கு வருகிறது.

எமது காலத்தில் மாணவர் குழாம் செய்த மிகப்பிரதான விடயமென்றால் சரஸ்வதி பூசை செய்வதற்கான அனுமதியை பாடசாலை நிர்வாகத்திடம் முதல் தடவையாக 1977 ஆம் ஆண்டு பெற்றுக்கொண்டதுதான். எமது பாடசாலை ஒரு கிறிஸ்தவப் பாடசாலை. இதில் எப்படி சரஸ்வதி பூசை?... வாதங்களும், பிரதிவாதங்களும், வேண்டுதல்களும், கோரிக் கைகளும் பல்வேறு மட்டங்களில் பரிமாறப்பட்டன. மாணவர் குழுவின் கோரிக்கையின் நியாயத்தன்மையை கல்லூரி நிர்வாகம் பெருந்தன்மையுடன் ஏற்றுக்கொண்டது. இந்நிகழ்வு மாணவர் உணர்வுகளை கல்லூரி நிர்வாகம் மதிப்பளித்ததற் கான ஒரு சான்றாகும். சிறீதரன் தலைமையிலான மாணவர் குழுவிற்கே இந்த வரலாற்றுச் சாதனையை நிகழ்த்திய பெருமை சேரும். இந்த மாணவர் குழுவில் நானும், எமது வகுப்பில் இருந்த சில மாணவர்களும் அங்கத்தவர்களாக இருந்தமை பெருமை தருகிறது. இந்த விழாவை முழுமையாகவே மாணவர் குழாம் ஒழுங்கு செய்தது. மாணவர்களிடம் பணம் சேகரித்து, பாடசாலையின் அனு சரணையுடன் மூன்றாம் பனை வைரவர் கோவிலில் பூசை நடைபெறும். இதற்கான உணவுகளை வீடுகளில் மாணவர்கள் ஒன்றுகூடி தயாரிப்பார்கள். உணவு தயாரிக்கும் வேளையில் பல பகிடிக் கதைகளைப் பரிமாறி, சிரித்துச் சிரித்து வேலையின் பழு தெரியாமல் செய்து முடித்து விடுவோம். அதன் பின்னர் மாணவர்கள் வேட்டியுடனும், மாணவிகள் பாவாடை தாவணியுடனும் கோவிலுக்குச் சென்று சரஸ்வதி பூசையில் பங்கெடுத்தது மறக்க முடியாத நினைவு.

நாம் மாணவர் குழுவில் இருக்கும் காலத்தில் சிறப்பாக நடத்திய மற்றுமொரு நிகழ்ச்சி பற்றி குறிப்பிடாமல் இருக்க முடியாது. 1980 ஆம் ஆண்டில் நடைபெற்ற Daniel Poor Library திறப்பு விழாவும், பொருட்காட்சியும், இரவில் நடந்த கலை விழாவும்தான் இவை. இந்த நிகழ்ச்சிகளின் ஏற்பாடு களை மாணவர் குழாம் முன்னின்று நடாத்தியது. பல வெளியாட்கள் இந் நிகழ்ச்சியை பார்வையிட வந்திருந்தார்கள். மாணவர் குழு மாணவர் ஒழுங்கை மேற்பார்வையிட்டது மட்டுமன்றி போக்குவரத்து விடயங்களையும் கண்காணித் தது. இதனை விட ஒய்வு பெறும் ஆசிரியர்களுக்கு பிரியா விடை நடத்துவதிலும் மாணவர் குழு முக்கிய பங்காற்றியது.

நாம் சிநேகிதர்களாகக் கூடிக் களித்து மகிழ்ந்த நிகழ்வுகள் இன்றும் நீங்காமல் நினைவில் நிற்பது என்றால் Lyceum, Forum, Brotherhood and Academy இரவு விருந்துகள் தான். நானும் எனது தோழிகளும் எப்படி எங்களை இந்த நிகழ்விற்கு அலங்கரிப்பது என்று பல நாட்களுக்கு முன்னரே திட்டம் போடுவது, பின்னர் படங்கள் எடுப்பது, நாமே பழகி நிகழ்ச்சிகளை மேடை ஏற்றுவது, விளையாட்டுகள் விளை யாடுவது என்று அந்த வயதிற்குரிய கற்பனைகளுடன் செய்த செயல்கள் பல. Academy இரவு விருந்தில் ஒழுங்காக சாப்பிடமுடியாமல் முள்ளுக்கரண்டிகளால் தவில் வாசித்த தையும், இதனால் உருளைக்கிழங்குகள் மற்றவர்களின் கோப்பைகளுக்கு உயரம் பாய்ந்ததையும் இன்று நினைத் தாலும் சிரிப்பு வரும். இன்னுமொரு சுவாரசியம் என்னவென் றால் Academy Dinner-இல் எந்த மேசையில் யார் யாரு டன் இருக்கப் போகிறோம் என்பது மண்டபத்திற்குள் போகும் வரை எமக்குத் தெரியாது இருந்ததுதான். இது அந்த இளம் வயதில் எமக்கு ஒரு இனந்தெரியாத பதகளிப்பை ஏற்படுத்திக் கொண்டிருந்தது.

உங்கள் எல்லோருக்கும் இந்த நாட்கள் நினைவில் என்றும் இருக்குமென நினைக்கிறேன். அது Ragging என்ற பெயரில் எம்மை Academy-இல் சிரேஸ்ட மாணவர்கள் மேடையில் ஏற்றி கேட்ட கேள்விகள். சில மாணவர்களை அழவும் வைத்திருக்கிறார்கள். அந்த மேடையேறும் நாள் வரும் வரை ஒவ்வொரு திங்கள் கிழமையும் யுகமாக கழியும். ஆனந்த ரட்ணம் ஆசிரியர்தான் போஷகர். கேள்விக்கணைகள் அத்து மீறிப் போகும் போது அவர் தொண்டையைச் செருமுவது இன்னமும் என் காதுகளில் கேட்கிறது.

இவை யாவற்றிற்கும் மேலாக என்னுடன் படித்த உங்கள் ஒவ்வொருவரையும் நினைத்துப் பார்க்கிறேன். சிலருடன் மிகவும் நெருங்கிப்பழகி உள்ளேன், மற்றும் சிலருடன் ஓரிரு வார்த்தை அல்லது புன்னகை மட்டும் தான். ஆனால் உங்கள் ஒவ்வொருவரைப் பற்றிய நினைவும் மனதில் ஒரு பாகத்தில் குடிகொண்டிருந்தது. நாம் அடித்த அரட்டைகள், செய்த

குழப்படிகள், மாணவிகள் எங்களுக்குள் வைத்த பட்டப் பெயர்கள் என்று பல. இன்று 60 வயதை நெருங்கும் அரைக்கிழவியாக இவற்றை எல்லாம் நினைத்துப் பார்க்கும் போது மீண்டும் அந்த இளம் பள்ளி மாணவியாக மாறி விடுகிறேன். இதுவே உங்கள் உணர்வும் என நம்புகின்றேன்.

நான் யாழ்ப்பாணக் கல்லூரியில் கல்வி கற்று வெளியேறிய பின்னரும் கல்லூரியிடனான தொடர்பு ஊரை விட்டு 1995 இல் இடம் பெயரும் வரை இருந்தே வந்தது. யுத்தமும், இடப்பெயர்வும், புலப்பெயர்வும் எம் எல்லோருடைய வாழ்விலும் பெரிய மாற்றங்களை கொண்டு வந்தது. மரணத்துள் வாழ்ந்த நாட்கள் அவை. அவ் இடப்பெயர்வின் பின் நான் எனது ஊரிற்கு 2015 வரை செல்ல முடியவில்லை. எனது குடும்பத்தடன் இருபது வருடங்களின் பின்னர் யாழ்ப்பாணக் கல்லூரிக்குச் சென்ற பொழுது அங்கு இருந்த ஆசிரியர்கள், மாணவர்கள் எமக்கு அளித்த வரவேற்பு வெளிநாட்டில் வளர்ந்த எனது பிள்ளைகளை பிரமிக்க வைத்தது. எல்லோரையும் நட்புடன் வரவேற்பது தான் யாழ்ப்பாணக் கல்லூரியின் பெருந்தன்மை. இங்கு ஒரு விடயத்தை நான் குறிப்பிட வேண்டும். அதிபர் ராஜன் கதிர்காமர் கூறுவார்,

**'The doors of the institution shall never be closed to anyone'**

இப்படிப்பட்ட பாடசாலையில் படித்த பெருமை எங்கள் எல்லோரையும் சாரும்.

அது மட்டு மன்றி உங்கள் எல்லோருடனும் பழகிய அந்த நாட்கள் என்றும் பசுமையாக நினைவில்......

இது போல் உங்கள் எல்லோருக்கும் கதைகள், நினைவுகள் நிச்சயமாக இருக்கும். அதனை நாம் தொடர்ந்து எமது வாட்ஸ்அப் குழுவில் மீட்டிப் பார்ப்போம். நன்றி

## Days well spent at Jaffna College



Despite only joining Jaffna college for the last two years, it was unarguably some of the most enjoyable experiences of my life. For most people, their college life is something they treasure for many years following – I am no different.

However, I must say, I used to be very scared as lunch time approached during the first week of college. Mostly due to the ragging of 2/3 individuals. I will never forget their faces, as they are some of my closest friends right now.

I believe there will be not a single individual who has not heard of Jaffna college in Sri Lanka. Not only the architecture of the building, but the college garden was also breath-taking. The amazing personalities of the teachers and students helped to compliment the atmosphere of the college.

The teachers at the school were amazing at motivating the students and helping them regardless of how small the questions might be. Although I was a very studious student at college, it was my teachers who helped me to excel in all my subjects - winning a variety of awards during my 2 years there.

The college library would always leave me in awe. It was an incredibly large building with limitless resources, whether education or general. It was much more well stocked than our community library. The events held by the college were phenomenal. The performances which took place during college dinners, subject socials, award ceremonies and sports events were always extremely well organised and never failed to create enjoyable experiences

I will never forget my time at Jaffna College in this lifetime.

**Vijayaluxmy (Viji)** - Commerce student




# GOLDEN MEMORIES

## BICKNELL and BROWN FIELD of JAFFNA COLLEGE




Gunashanhar

**I would like to dedicate this piece to our dearest friend, K. Muralitharan, who captained and led numerous teams in a variety of sports. Your leadership, courage and dedication continue to inspire me to this day. May you rest in peace.**

For the most of us, the years between the ages of 13 and 19 are filled with fond memories of playing team sports together. If I were to recite all of these tales, this page would never end, hence, in this article I will recall a few of my warmest times as a sportsman for Jaffna College.

During our time as an under 13's team, we had to learn the basic techniques of cricket in the absence of a proper coach, until Mr Nithyaratnam kindly joined us in 1976. I recall Mr Nithyaratnam as one of the most dedicated and supportive coaches, spending evening after evening training us. Even when school facilities were closed on the weekends, he would invite us to his home to use his backyard as training grounds. I remember, when Mr Nithyaratnam coached for Hartley College prior to us, seeing him yelling from the sidelines and at the time laughing and things "Why is he screaming so much?". It is only now, after being his student, that I see this as his utter passion and dedication to both the game and to us that compelled him to yell.

Mr Nithyaratnam helped us develop the proper techniques of cricket through his instruction, even if the methods he



used were sometimes questionable. I still remember when Prem was extremely frightened of fast bowls, even running away when he was bowled on the leg side. To stop this, Mr Nithyaratnam resorted to tying Prem's shoelaces together with a rope, then securing him to a concrete block, in order to hold him still, in turn forcing him to face the ball.

Due to his sheer dedication and exceptional coaching, when we began playing in the under 16's, our team was able to perform amazingly, remaining undefeated for the entire season. It is said that open communication and strategical discussions, during the game, are required for a strong partnership, however, for Pathum and I, our simple, often limited communication, consisting of only "Yes", "No" and "Wait", seemed to secure an average of over 50 runs each match, in our opening partnerships.

and when we were batting, in the middle pitch discussion he would talk about going to a movie or food.

Mr Anantharatnam, the Director of Sports during my time at JC, and the elder brother of our coach, Mr Nithyaratnam, was a very dedicated man, known for his wise spending of school resources. When our cricket pitch mat was destroyed after vigorous use during our games, rather than splurging on a new mat, he would employ those from within the local community to restitch and repair our mats. Whilst we used to tease and judge him for these actions, I can now see and understand how he would make an effort support our local town and economy as well as foster a sense of community around the school and us. When we were fielding, a strong tea scent would often fill the oval, signaling that there was only 20 minutes until tea break,



courtesy of Mr Anantharatnam preparing tea right on the grounds. He was also our Hockey coach, leading us to consecutive championships during our time as under 14's until we were under 19's. Due to his sheer effort and constant training, more than 60% of our players went on to represent the Jaffna District School Hockey team. Back those days, Matale town was known for producing hokey players like Devarajan played full back and our goalkeeper Thayalan who used his body to save the goals make our team undefeated.

That year, most of our team were given the opportunity to play for the First 11. Under the leadership of my elder brother, Gunaseelan, our team again reigned undefeated. This achievement was a first after a long drought of losses in Jaffna College's cricket history, for which our winning prize was a grand dinner hosted by the Principal at the time, Mr R. Kadirgamar.

This was one of the most memorable events during my time as a young cricketer. Our friend, Kathir, was well known for bowling balls that particularly targeted the hip, for which the name Hip-Breaker, was bestowed upon him. Unfortunately, during our under 16's season, he broke his arm, preventing him from continuing as a cricketer. I forgot to mention the other opener and master of patience Muthulingam. Nithi captained the under 14 cricket team and we both compete to field in gully fielding position. Our cricket comedian Suven Broodie comments to opponents

My time as a sportsman for Jaffna College will always bring forward fond memories and times that are unforgettable. Thank you to all my teammates, juniors and seniors for your amazing sportsmanship, dedication and passion to the game and for being part of some of the most highlight years of my life.






# என் கல்லூரிப் பயணத்தின் பசுமையான நினைவுகள்

யாழ்ப்பாணக் கல்லூரியில் எனது பயணம் வாழ்க்கையில் மறக்க முடியாத ஒன்று. இந்தப் பயணம் 1973 ஆண்டு ஆரம்பித்து 1981 ஆண்டு பன்னிரண்டாம் வகுப்புகள் வரை சென்று இனிதே நிறைவடைந்தாலும் என் உள்ளத்தில் நிரந்தர இடம்பிடித்த பசுமையான நினைவுகளாக இருந்தன. நினைவுகளை 40 வருடம் பின்னோக்கி சென்று பார்க்க முனையும்போது நினைவலைகள் முட்டி மோதுகின்றன. சிலவற்றை இப்போது உங்களுடன் பகிர்ந்துகொள்வதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

நான் யாழ்ப்பாணக் கல்லூரியில் படித்ததை இட்டு மிகவும் பெருமிதம் அடைவதற்கு பல காரணங்கள் உண்டு. ஏனென்றால் இந்தக் கல்லூரி எத்தனையோ அறிவு ஜீவிகளையும், சாதனையாளர்களையும் உருவாக்கியது என்பது மறுக்க முடியாத உண்மை.

நானும் கல்லூரியில் பல துறைகளிலும் ஈடுபட்டு பல அனுபவங்களை பெற்றுக்கொண்டதானது வாழ்வின் பிற்பகுதியில் எனது முன்னேற்றத்திற்கு பெரிதும் உதவியது என்றால் மிகையாகாது. நான் எங்கு செல்லும்போதும் யாழ்ப்பாணக் கல்லூரியின் பழைய மாணவன் என்று சொல்வதில் பெருமை கொள்பவன்.

ஆரம்பகாலத்தில் கல்லூரிக்கு நான் அம்பலவாணர் டீச்சரின் காரிலும், பின்னர் சிறிது காலம் 789 இலக்க பஸ்ஸிலும், இறுதிக்காலங்களில் நண்பர்களுடன் துவிச்சக்கர வண்டியிலும் சென்று வந்தேன். ஒவ்வொரு பயணமும் ஒவ்வொரு அனுபவமென்றாலும், நண்பர்களுடன் துவிச்சக்கர வண்டியில் சென்று வந்த அனுபவங்களே இனிய நினைவுகளாக மனதில் பதிந்து விட்டன.

யாழ்ப்பாணக் கல்லூரியை நினைக்கும் போதெல்லாம் முதலில் நினைவுக்கு வருவது வாசலில் வரவேற்பது போல நிழல் பரப்பி நின்ற மரங்களும், குட்டி அரண்மனை போல தோற்றமளிக்கும் அதிபரின் பங்களாவும்தான்.

அதிலிருந்து பார்த்தால் எங்கும், எல்லோரையும் கண்காணிக் கக் கூடிய முறையில் அந்த பங்களா திட்டமிட்டுக் கட்டப்பட் டதோ என்று எண்ணத் தோன்றும்.

குடை போல நின்ற பெரிய ஆலமரத்தின் எதிரே தண்டவாளங் களில் அருகருகே நிற்கும் ரயில் பெட்டிகள் போல தோற்ற மளிக்கும் கட்டடங்களில் எமது ஆறாம், ஏழாம் வகுப்பறைகள் அமைந்திருந்தன.

அந்த வகுப்புகளில் படிக்க ஆரம்பித்த காலத்தை நினைவு கூர்ந்தால் எல்லாமே புதிதாகவும், மன அழுத்தமாகவும் இருந்த போதிலும் எமது ஆசிரியர்களும், நண்பர்களும், சூழல், சுற்றாடல் என்பன எங்களை அவற்றிற்கு முடிந்தவரை இசைவாக்கி ஒருவரையொருவர் புரிந்துகொள்ளத் தூண்டி யது. இதனால் புதிய நண்பர்களை கண்டடைந்தோம். Lunch Breakஇன் போது நாம் சுற்றித் திரிவதும், பானாவடி, ஆலமரம், அப்பையா கடை, கனகப்பா Book Shop மற்றும் பக்கத்துக்கு கடைகளில் Ice Block, கறுவாப்பட்டை, Rubber Band வாங்கு வது எல்லாமே இந்த நண்பர்களுடன்தான். அப்போது Junior School-இற்கு தலைமையாசிரியையாக Miss Elias இருந்தார்.

8ம் வகுப்புக்கு வந்த போது Upper School இற்கு சென்று Quadrangle-இல் வகுப்புகளை தொடர அங்கு அதிபர் ராஜன் கதிர்காமரின் கீழ் தொடர்ந்து A/L வரை படித்தேன். ஒட்லி மண்டபத்தில் காலை 8.15 Assembly மற்றும் பலவிதமான கூட்டங்களும் நடைபெறும். 8ம், 9ம் வகுப்பறைகளில் இருந்து பார்த்தால் தெரியும் Tennis Court, Old Library, Study Hall, Home Science Lab எல்லாவற்றினதும் கட்டட அமைப்பு கள் என்னை பிரமிக்க வைத்தன. புதிதாகக் கட்டப்பட்ட Daniel Poor நூலகத்திற்கு சென்று வருவது எனக்கு விருப்பமாய் இருந்தது.

கல்லூரியின், ஒழுங்குமுறைகளும், கட்டுப்பாடுகளும் என்னை நல்வழிப்படுத்தியதுடன், வெளியுலகத்தில் தலைநிமிர்ந்து வாழ ஒரு நல்ல பாதை காட்டியதுடன் இன்று அதன் பலனை நான் பெற்றதற்கும் அந்த தலைமைத்துவமே காரணம் என்றே சொல்லுவேன். நான் கல்லூரியின் Student Council-இல் 5 வருடம் தொடர்ந்து கடமையாற்றியதை இத் தருணத்தில் நினைக்காமலிருக்க முடியாது. யாழ்ப்பாணக் கல்லூரியில் ஆசிரியர் - மாணவர் இணைந்து ஒரு ஜன நாயக வழியில் மாணவர் மன்ற உறுப்பினர்களைத் தேர்வு செய்யும் முறை வரவேற்கத் தக்கதும், சிறந்ததுமாகும். கல்லூ ரியின் மேம்பாட்டுக்காகவும், ஒழுக்க விதிகளை நிலைநிறுத்த நிர்வாகத்துடன் இணைந்து வேலை செய்யவும், அதனூடாகப் பல அனுபவங்களை பெற்றுக்கொள்ளவும் எனக்கு இந்த வாய்ப்பு உதவியது. குறிப்பாக Annual Prize Giving பாடசாலை யின் பல்வேறு Functions எல்லாவற்றையும் School Councilors தான் நடத்துவதால் பல மாணவர்களுடனும், அதிபர், ஆசிரி யர்களுடனும் நெருங்கிப் பழகும் வாய்ப்பை இது அளித்தது.

Pavilion உடன் சேர்ந்திருந்த Bicknell விளையாட்டு மைதா னத்தில் எமது வருடாந்த விளையாட்டுப் போட்டிகளும், Cricket, Football, Hockey போன்ற கல்லூரி அணியின் விளை யாட்டுகளும் நடைபெறும் போதெல்லாம் நாங்கள் Councilors ஆக கடமையாற்றினோம். வட மாகாணத்திலே பிரபலமான விளையாட்டு மைதானம் இது என்றே கூறலாம். Hastings House(Red), Abraham House(Green), Brown House(Blue), Hitchcock House(White) ஆகிய இல்லங்களைக் கொண்ட விளையாட்டுப் போட்டிகள் மிகவும் விறு விறுப்பாக நடக்கும். எமது Hastings House இற்குப் பொறுப்பாசிரியர்களாக Bala chandran master, Kesavarajan teacher ஆகியோர் இருந்தனர்.

Hastings House-இல் Atheleticsஇல் நிறைய போட்டிகளில் பங்கு பற்றிப் பரிசில்கள் வாங்கியதுடன், Atheletics Captain ஆகவும் இருந்து பலருக்குப் பயிற்சி அளித்து வந்ததும் இப் போது நினைவுக்கு வருகிறது. இதைவிட Cross Country, Cycle ஓட்டம் ஆகியவற்றிலும் பங்கு பற்றிப் பரிசில்கள் பெற்றிருக் கிறேன். தடை தாண்டி ஓட்டம் எனது Favourite என்று சொல்லு வேன்.

இதைவிட வருடாந்தம் நடக்கும் Social Events ஆன Lyceum, Forum, Brotherhood மற்றும் Academy போன்ற நிகழ்ச்சிகளை நடாத்தும் ஏற்பாட்டுக்குழுவில் பதவி வகித்து வந்ததனால் போதிய அனுபவங்களைப் பெற்றதுடன், இன்று மனத்திடத்து டன் வெளி உலகில் பெரிய நிகழ்ச்சிகளையும், விழாக்களை யும் நடாத்தக் கூடிய அளவிற்கு நம்பிக்கையும் அனுபவமும் எனக்கு அன்று கல்லூரிதான் அளித்தது என்பதை மறக் கவோ, மறுக்கவோ முடியாது.

எமது Academy Dinnerஇல் Fork&Spoon எப்படி கையாளுவது என்றும், Table Manners என்பது என்ன என்றும் அறிந்து கொண்டோம். இப்படியான சில அடிப்படையான, அன்றாட வாழ்வியலுக்குத் தேவையான விடயங்களையும் கல்லூரி எமக்கு கற்பித்திருக்கிறது.

இறுதியாக A/L படித்த இரண்டு ஆண்டுகளின் நினைவுகள் நிறைய இருந்தாலும் Maths Class நண்பர்களின் உறவு, அன்பு, குறும்பு ஒரு தனி ரகம். எமது A/L வகுப்பு ஆசிரியர் வெற்றிவேல் master-ஐ 'வெற்றா' என்றும் Principal-ஐ 'பிறின்சி' என்றும், நிர்மலன் master-ஐ 'நிர்மா' என்றும் செல்லப் பெயர் களை வைத்து எமக்குள் பேசிக்கொள்வது மகிழ்வைத் தந்தது.

இது மட்டுமல்ல இதை விட மேலும் பலதையும் செய்திருக்க முடியும் என்பது கல்லூரியை விட்டு வெளியே வந்த பின்னரே தலைக்கு எட்டியது. வெற்றிவேல் Master-இன் திறமையான கற்பித்தலையும் தவற விட்டுவிட்டோமே என்று வருந்திய துண்டு. கடந்த 40 வருடங்களாக கல்லூரியில் கடந்து சென்ற காலங்களை rewind பண்ணிப் பார்த்து இனி திரும்பவும் அப்படி ஒரு சந்தர்ப்பம் கிடைக்காதா என்று ஏங்கியதுண்டு. நிச்சயமாக அது திரும்பி வரப்போவதில்லை என்பது உறுதி



என்றாலும் நண்பர்களே! இனிமேலாவது சந்தர்ப்பங்களை தவற விடாமல் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்று கவனத்துடன் இருப்போம் .

**"Make hay while the sun shines "**

எனது வாழ்வின் ஒரு இன்றியமையாத அத்தியாயமான கல்லூரி வாழ்வு யாழ்ப்பாணக் கல்லூரியில் 1981 இல் இனிதே நிறைவடைந்த பின்னர், அடுத்த அத்தியாயம் ஆரம்பமாகி உயர் கல்விக்காக இந்தியா சென்று, அதன் பின்னர் இங்கிலாந்து சென்று பொறியியல் துறையில் பட்டம் பெற்றேன். இப்போது திருமணமாகி மனைவி, இரு பிள்ளைகளுடன் இங்கிலாந்தில் வசிக்கிறேன்.

எத்தனை வருடங்கள் கடந்து சென்றாலும், கல்லூரி நினைவுகள் என் மனதில் பல தடவைகள் வந்து போனாலும் ஒரு சில நண்பர்களுடன் மட்டுமே தொடர்பில் இருந்தேன். எல்லாரையும் மீண்டும் ஏன் தொடர்பில் இணைக்க முடியாது என்ற ஆதங்கத்தில் இருந்த போதுதான் December 2019 இல் பதுமநிதியின் London வருகை என் கேள்விக்குறிக்கு முற்றுப்புள்ளி வைத்தது. இப்போது WhatsApp ஊடாக குறிப்பிட்ட சிலருடன் ஆரம்பமாகி, பலரையும் இணைத்துக்கொள்ள தோழி யமுனா, தோழன் சுவேந்திரராஜ் மற்றும் பலரின் உதவியுடன் நட்புறவு இந்த அளவுக்கு வளர்ந்து விட்டது.

மின்னலைகளில் தினம் தினம் சுவாரசியமான பல தகவல்கள் பதிவுகளாக வந்து கொண்டிருக்க, இனிமேல் நாம் பார்க்க, பேச கிடைக்காதா என்று ஏங்கிக்கொண்டிருந்த எமக்கு கிடைத்த இந்த அரிய சந்தர்ப்பத்தைத் தவற விடாதீர்கள் என்று அன்புடனும், தாழ்மையுடனும் கேட்டுக்கொள்கிறேன். மேலும் தற்போது 'JC-80' WhatsApp குழுவில் இணைந்திருக்கும் அனைத்து நண்பர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துகொள்கிறேன்.

எனது Secondary Education-ஐ யாழ்ப்பாணக் கல்லூரியில் படிப்பதற்கு எனக்கு கிடைத்த அரிய வாய்ப்புக்கு முதலில் இறைவனுக்கும், இரண்டாவதாக எனது அன்னையாருக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். மேலும் எமக்கு அறிவூட்டிய கல்லூரிக்கும் தலைவணங்குகின்றேன்.

என்றாவது ஒருநாள் எமது Reunion நடைபெறும் என்ற ஆவலுடனும், எதிர்பார்ப்புடனும் எல்லாரையும் விரைவில் சந்திப்பேன் என்ற மன உறுதியுடனும் உங்கள் எல்லோரது குடும்பங்களுக்கும் நல் வாழ்த்துதல்கள் கூறி இனிதே எனது எண்ண அலைகளை ஆறுதல்படுத்தி எனது பேனாவை இத்துடன் நிறுத்துகிறேன்.

*பழகு முன் தனிமை*

*பழகிய பின் இனிமை*

*பிரிவு என்பதே கொடுமை*

*பிரிந்தால் தெரியும் 'நட்பின் அருமை'*

அன்புடன் உங்கள் நண்பன்
சக மாணவன்

***சுகல்ஜன்***

# அலைகள் ஓய்வதில்லை...



அன்று ஓர் நாள் ! அதுவும் எனது ஓய்வு நாள்! யன்னல் திரைச் சீலையை விலக்கிய வண்ணம் என் கண்கள் வெளியே உற்ற வண்ணம் இருந்தது. பாடசாலை சிறார்கள் கூட்டம்கூட்டமாக சென்று கொண்டு இருந்தார்கள். மென்மையான மழையும் தூறலாகப் பெய்த வண்ணம் இருந்தது. என் உள்ளத்தின் எண்ணங்கள் எண்ணப் பறவையாக என்னை எங்கோ அழைத்தது. என் கல்லூரி வாழ்க் கையை மீட்டெடுக்க சென்றது. எனது கல்லூரி தொடங்கிய முதல் நாள் அன்று அடம்பிடித்து அடிவாங்கி அழுது புரண்டு, என் அம்மாவை கட்டியணைத்து வெம்பி வெதும்பி அழுது, அம்மாவிடம் இருந்து பிரிக்கப் பட்ட நேரத்தையும் கல்லூரியில் கண்ணீருடன் உட்கார்ந்து இருந்த நினைவும் என் எண்ணத்தில் வட்டமிட்டது. சிலகாலம் கடந்தது. நண்பர்கள் கூட்டத்தில் பழகியபோதுதான் நட்பு என்ற சுவாசத்தை சுவாசித்தேன். நானும் அவர்களுடன் இணைந்து கொண்ட அந்த நேரத்தின் எண்ணங்கள் என்னை ஒருகணம் தென்றலாய் தீண்டியது. அதிலும் ஒரு சிலர் உயிர் நண்பர்களாக கூடிக்குலாவினோம். காலங்கள் நகர்ந்தன, கல்லூரியின் கடைசி நாள் வரக்கூடாது என்ற நினைவு தான் என் உள்ளத்தில் எழுந்த வண்ணம் இருந்தது. இந்த நேரத்தில் என் ஆரம்ப நாட்களின் அழுகையை நினைத்து சிரிப்பு வந்தபோது மனதிற்குள் வெட்கப்பட்டேன். ஒன்றாகப் படிக்கும்போது ஓயாமல் செய்த குறும்புகள், எகிறி அடித்த கூத்துக்கள், சண்டைகள், ஒருவரை ஒருவர் பிடித்து உலுக்கி, புழுதி உடம்பில் பட உருண்டு, புரண்டு நாம் சிரித்து மகிழ்ந்த காலங்கள் இன்றும் இனிக்கின்றது. கிரிக்கெட், தாச்சி, கிட்டிப்புள், கள்ளன் பொலிஸ், பானா, மாபிள் என்று பல நூறு விளையாட்டுக்கள் விளையாடியது எல்லாம் எமது அன்றைய பொற்காலம். ஆனால் இன்றோ ஏசி அறையில் விரல் நுனிபட கம்ப்யூட்டரில் விளையாடும், எமது பிள்ளைச் செல்வங்களுக்கு கிடைக்குமா? இந்தப் பொற்காலம். இதை நினைத்து ஏங்குகின்றது என் இந்த பாழும் மனம். பசுமைகள் நிறைந்த வட்டுக்கோட்டை மண்தந்த யாழ்ப்பாணக் கல்லூரி என்ற இலட்சியக் கோட்டில் தொடங்கி எமது வெற்றிக் கோட்டை தாண்டும் போது பலரைக் காணவில்லை என ஏங்கினேன். எம்மவர் எங்கே? எம் நண்பர்கள் எங்கே? என்று தேடினேன். ஒவ்வொரு வெற்றியிலும் தோள்கொடுத்தவர்கள், தோளில் சாய இடம்கொடுத்தவர்களையும் தேடினேன். அவர்கள் எனக்குக் கிடைத்தால் இவர்களும் தாய் தந்தையே என என் மனதில் வடம் பிடித்தது. நாட்டில் ஏற்பட்ட பிரச்சினையால் சின்னா பின்னமாகி சிதறியோடி பல தேசம் கடந்து பழக்கங்கள் மாறி வாழ்க்கைப் படகில் தூரத்தில் தெரிந்த முகங்களை கண்டு இவனா? இவளா? என்று பார்த்து ஏங்கிய நாட்கள் பல உண்டு. கண்முன்னால் ஒரு கணம் வரமாட்டார்களா? என்று துடிக்கும் போது தெரிந்துகொண்டேன் கல்லூரி நட்பின் வலிமையை. நண்பர்கள் நட்பின் பெருமையை. எவ்வளவு தூரம் சென்று வாழ்ந்தாலும் மனதை விட்டு என்றும் அகலாதது அந்தக் கல்லூரி வாழ்க்கை. அனைத்தையும் கடந்து வந்த பரிசுத்த அன்பின் நேசம் தோழமை அவரவர் தேவைக் கேற்ப உணர்வால் உணர மட்டும் முடியும். இந்த எண்ணங்கள் நிறைந்த பூரிப்போடு யன்னலை விட்டு அகன்றேன். ஆனால் இன்று எவர் செய்த புண்ணியமோ முகநூலில் வந்த அந்த ஓர் அழைப்பு என்னை மட்டில்லா மகிழ்ச்சியுடன் ஆனந்தமடைய வைத்தது. சில நண்பர்களினால் தோண்டி எடுக்கப்பட்ட புதையலை பகிரவாருங்கள் என்ற குரல் நண்பன் சுகல்ஜன் மூலம் என் காதினுள் பாய்ந்தது. எங்கள் கல்லூரி நண்பர்களின் பரிசுத்த அன்பையும் நட்பையும் பகிர்ந்துகொள்வதற்கு நண்பன் பதுமநிதியுடன் இணைந்து நண்பர்கள் குழுமம் அமையும் செய்தி அறிந்து ஆனந்தம் அடைந்தேன். வானத்தில் இருந்து இறைவன் மலர் சொரிந்து பூமழை பொழிந்தது போல் ஓர் மகிழ்ச்சி, ஆனந்தம். இன்று வரை கனவா? நனவா? என்று எண்ணுகின்றேன். நண்பர்கள் எங்களின் குழுமத்தினால் கிடைத்த மகிழ்வையும் ஆனந்தத்தையும் தொடர்ந்து பெற்றிட எங்கள் குழுமத்தை உறுதியோடு கட்டிக் காப்போம். !!!

நன்றி

யமுனா



# யாழ்ப்பாணக் கல்லூரி வரலாற்றில் சில பக்கங்கள்

– ச.தில்லைநடேசன்

ஆங்கிலேயர் கால ஆரம்பத்தில் கிறிஸ்துவ மிசனரிகள் பல இலங்கைக்கு வந்தன. கல்வியே சகல முன்னேற்றத்துக்கு வழி என்பதும், அதனூடாக கிறிஸ்தவ மதத்தைப் பரப்பலாம் என்ற கருத்தும் மிசனரிமார்கள் சிந்தையில் இருந்தது. இம் மிசனரிகளில் அமெரிக்காவில் இருந்து வந்த புரட்டஸ்தாந்து கிறிஸ்துவ மிசனரி அமெரிக்கன் மிசனரி ஆகும். அமெரிக்கன் மிசனரி இலங்கையின் தென்பகுதியில் இயங்குவதை இலங்கை ஆங்கிலேய அரசு விரும்பவில்லை. இதனால் இலங்கையின் வடபகுதியை அமெரிக்க மிசனரி தனது செயற்பாட்டுக் களனாக கொண்டது.

வலிகாமம் பகுதியில் வட்டுக்கோட்டை, தெல்லிப்பளை, மானிப்பாய், உடுவில், பண்டத்தரிப்பு போன்ற இடங்களில் பாடசாலைகளை நிறுவியது. தெல்லிப்பளை அமெரிக்க மிசன் பாடசாலையின் அதிபராக இருந்த டானியல் பூவர் மாணவர்களின் திறமைகளில் மனம் மகிழ்ந்து யாழ்ப்பாணக் குடாநாட்டில் உயர்கல்விக்கூடம் ஒன்றை அமைக்க எண்ணி தேர்ந்தெடுத்த இடம் வட்டுக்கோட்டை. இக்கலாபீடத்தில் சுதேச வாலிபர்களுக்கு ஆங்கிலத்தில் பூரண அறிவை வழங்குவது, தமிழ் இலக்கியத்தை விருத்தி செய்வது போன்ற நோக்கங்கள் இருந்தாலும் கல்வியூடாக மதத்தைப் பரப்புவதும் நோக்கமாக இருந்தது. இக்கல்விக்கூடத்தை பட்டம் வழங்கும் கல்லூரியாக அமைக்கவே அமெரிக்கன் மிசனரி டானியல் பூவர் விரும்பினார். ஆனால் இலங்கை ஆங்கிலேய அரசு அதனை சந்தேகக் கண்கொண்டு பார்த்தது. அரசாங்கமே அப்படி ஒரு கல்லூரி அமைக்கப் போவதாகக் கூறி அனுமதி மறுத்தது. மனம் தளராத டானியல் பூவர் யாழ்ப்பாணக் கல்லூரி என்ற பெயரை தவிர்த்து அமெரிக்கன் மிசன் செமினாரி என்ற பெயருடன் கி.பி 1823ம் ஆண்டு கல்லூரியை ஆரம்பித்தார். இப்பெயர் கி.பி 1846இல் அதிபர் ஹென்றி ஹோஷிங்டன் காலத்தில் வட்டுக்கோட்டை செமினாரி என்று பெயர் மாற்றப் பட்டது.

செமினாரி என்பது கிறிஸ்துவ திருச்சபைகளின் இறையியற் பள்ளியாகவே அக்காலத்தில் கருதப்பட்டது. ஆனால் டானியல் பூவர் அப்பெயரில் உண்மையில் கல்லூரியையே அமைத்தார். டானியல் பூவருக்கு உறுதுணையாக இருந்தவர் காப்ரியல் திசேரா என்ற இலங்கையர். இவர்கள் காலத்தில் கணிதம், இயற்கை தத்துவம், கிருஸ்துவம், ஆங்கிலம், தமிழ் ஆகியன கற்பிக்கப்பட்டன. கல்வியில் சாதனைகள் நிகழ்த்தத் தொடங்கிய கல்லூரியை கிருஸ்துவ சமய மாற்றம் பற்றி புள்ளிவிபரங்கள் திருப்திகரமாக இல்லை கிருஸ்துவ சிந்தனைகள் முறையாக மக்களை சென்றடையவில்லை என்று கருதிய அமெரிக்காவில் இயங்கிய மிசனரி கல்லூரியை மூட முடிவு எடுத்தது.

வட்டுக்கோட்டை செமினாரி கி.பி. 1855இல் மூடப்பட்டது. செமினாரி இயங்கிய 32 வருடகாலத்தில் 700க்கு அதிகமான கல்விமான்கள் உருவாகினார்கள். இக்காலத்தில் கல்விகற்ற மிகமுக்கியமான தமிழறிஞர்கள் சி.வை. தாமோதரம்பிள்ளை, நெவின்ஸ் சிதம்பரம்பிள்ளை, ஆர்னால்ட் சதாசிவம்பிள்ளை, வைமன் கதிரவேற்பிள்ளை, எட்வேட்ஸ் கணபதிப்பிள்ளை, கரோல் விஸ்வநாதபிள்ளை ஆகியோர் ஆவார்கள். இவர்களே 19ம் நூற்றாண்டை தமிழிலக்கிய சூழலில் ஆழமான தடம்பதித்தவர்கள்.

செமினாரி மூடப்பட்டாலும் ஆரம்ப, மத்தியதர பாடசாலைகள் தொடர்ந்து நடந்தன. றோபேட், குக் போன்றவர்கள் முன்னின்று பாடசாலையை நடாத்தினார்கள். திரும்பவும் உயர்கல்விக்கூடம் கி.பி 1872இல் பலரின் முயற்சியில் ஆரம்பிக்கப்பட்டது. வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி வரலாற்றில் பலர்

அதிபர்களாக இருந்தபோதும் டாக்டர் டானியல் பூவர், ஹேஷிங்டன், ஹேஸ்ரிங்ஸ், ஹிச்கொக், பிறவுன், பிக்னெல் ஆகியோர் அழுத்தமான தடம் பதித்தவர்கள். அதிபர் ஹௌலண்ட் (1889-1897), அதிபர் ஹிச்கொக் (1898-1906) காலங்களில் கல்லூரி இந்தியாவின் கல்கத்தா பல்கலைக் கழகத்துடனும், 1907க்கு பின்பு மெட்றாஸ் பல்கலைக்கழகத் துடன் இணைந்து இயங்கியது. 1909 மெட்றாஸ் பல்கலைக் கழகத்துடன் தொடர்பு நிறுத்தப்பட்டு இலண்டன் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்துடன் இணைந்து சிரேஸ்ட, கனிஸ்ட பரிட்சைகள் நடாத்தப்பட்டன. 1910களில் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை மாணவர்களை தயார்படுத்தியது.

யாழ்ப்பாணக்கல்லூரியின் அதிபராக 1916இல் பொறுப்பேற்ற பிக்னெல் மிகச் சிறந்த அதிபர் மட்டுமல்ல சிறந்த சிந்தனை வாதியும் ஆவார். இவர் காலத்தில் பலத்த எதிர்ப்புகளுக்கு மத்தியில் தலித் மாணவர்களை பாடசாலையில் சேர்த்து கல்விகற்க வைத்தார். இதன் மூலம் யாழ்ப்பாணச் சமூகத்தில் பெரியதொரு மாற்றத்தைக் கொண்டு வந்தார். அத்துடன் சுதந்திரமான கலந்துரையாடலுக்கு தளம் அமைத்துக் கொடுத்தார். இந்தத் தளத்தில் 1924இல் உருவானதே யாழ்ப்பாண மாணவர் காங்கிரஸ். இந்த அமைப்பே 1931 யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் இலங்கை சமூக வரலாற்றில் பலத்த தாக்கத்தை ஏற்படுத்திய அமைப்பு. வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி சூழலிலேயே தோன்றியது. இந்த அமைப்பில் செயல்பட்ட முக்கியமானவர்கள் யாழ்ப்பாணக் கல்லூரியின் மாணவர்களே.

யாழ்ப்பாண பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டபோது 1974இல் யாழ்ப்பாணக்கல்லூரியிலும் விரிவுரைகள் நடந்தது நாம் அறிந்ததே. கல்வி, விளையாட்டு, கலை, இலக்கியம் யாழ்ப்பாண, இலங்கை, தென் ஆசியாவில் மிகச்சிறந்த கல்லூரியாக யாழ்ப்பாணக் கல்லூரி திகழ்ந்தது பழம்பெருமை இல்லை அது இன்றும் நீடிக்கின்றது என்பதினை கல்லூரியின் பழைய மாணவர்களும், இன்றைய மாணவர்களும் நிரூபித்து வருகின்றார்கள்.

உசாத்துணை:
"இலங்கையிலே பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழர் சிந்தனை வளர்ச்சி" - கலாநிதி எஸ் ஜெபநேசன் / "தமிழின் நவீனமயமாக்கமும் அமெரிக்கன் மிஷனும்" - கலாநிதி எஸ் ஜெபநேசன்
"அமெரிக்க மிஷனும் இலங்கை தமிழ் வளர்ச்சியும்" - கலாநிதி எஸ் ஜெபநேசன் / "யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ்" - சாந்தசீலன் கதிர்காமர்

# எனது கல்லூரி வாழ்க்கை



1977ஆம் ஆண்டு தை மாதம் நான் யாழ்ப்பாணக் கல்லூரிக்கு பயத்துடனும் கூச்சத்துடனும் கால்பதிக்கின்றேன். ஏனென்றால் நான் முதலில் படித்தது பெண்கள் பாடசாலை, அத்துடன் மிகப்பிரமாண்டமான கட்டடங்களைப் பார்க்கவும் பயமாக இருந்தது. ஆனால் வகுப்பறையினுள் நுழைந்தபின் சகமாணவர்கள் அன்பாகவும் சிநேகிதமாகவும் பழகியதால் பாடசாலை எனக்கு மிகவும் பிடித்துக்கொள்ள, அவர்களுடன் உற்சாகமாகக் கலந்துகொண்டேன். இருப்பினும் படிப்பின் முக்கியத்துவம் தெரியாததால் நான் முற்றுமுழுவதுமாக கல்வியில் கவனம் செலுத்தவில்லை. பாடசாலை போகிறோம், படிக்கிறோம் என்றுதான் இருந்தது. கல்லூரி நூலகசாலை மிகவும் பிரசித்தமானது. அங்கே எந்த அறிவையும் பெருக்கக்கூடிய மிகவும் பயனுள்ள பல நூல்கள் இருந்தன. ஆனால் அவற்றை பயன்படுத்தி எனது ஆங்கில அறிவு, பொது அறிவு அல்லது கல்வி அறிவைப் பெருக்கவேண்டும் என்ற புத்தி அந்த நேரம் எனக்கு இருக்கவில்லை. இன்றும் அதனை நினைத்து மிகவும் கவலைப்படுகிறேன்.

அராலி 789 இலக்க பேருந்தில் அன்பான நண்பிகளுடன் ஆனந்தமாக ஏறி, பல கதைகளையும் சொல்லிச் சென்ற காலமது. பாடசாலை நண்பிகள் அனைவரும் வாடி, போடி என்ற உரிமையுடன் கூப்பிடுவது மட்டுமல்ல, மனதாலும் மிகவும் ஒன்றிணைந்திருந்தோம். மதியபோசனத்தின் போது நண்பிகளுடன் எங்கள் உணவுகளைப் பகிர்ந்து உண்டதும்; சிரித்து, கதைத்து மகிழ்ச்சியாக இருந்த நினைவுகளையும் நினைத்துப் பார்க்கிறேன். பாடசாலையைச் சுற்றி நடப்பது, அப்பையா கடை, மற்றும் பாடசாலை உணவகத்தில் தின்பண்டங்கள் வாங்குவது, சிநேகிதிகள் வீடுகளுக்குச் சென்று அரட்டையடிப்பது, அவர்களுடன் சேர்ந்து கோயில், கடற்கரை மற்றும் சுற்றுலா சென்றதும், இன்றும் பசுமையாக மனதில் இருக்கின்றன.

யாழ்ப்பாணக் கல்லூரி கல்வியைப் புகட்டியது மட்டுமல்லாது, வாழ்க்கையில் நான் எப்படி வாழவேண்டும், முன்னேற வேண்டும் என்ற அனுபவத்தையும் உணரவைத்தது. எமது இளைய சந்ததியினர் அங்கு சென்று, கல்வி பயின்று, முக்கியமாக பாடசாலை நூலகம் சென்று அதனூடாகவும் மேலதிக அறிவினைப் பெறவேண்டும் என்றும் அனுபவ ரீதியாகக் கூறுகிறேன். எமது யாழ்ப்பாணக் கல்லூரி மேன்மேலும் வளரவேண்டும் என்று இறைவனை வேண்டி வாழ்த்துகிறேன்.

இறுதியாகவும், மனதில் நிறைவாகவும் மனதைத்திறந்து எழுதவைத்த WhatsApp Group பழைய மாணவர்களுக்கும் அன்பான நன்றிகளைத் தெரிவித்து எனது நினைவலைகளைச் சமர்ப்பிக்கின்றேன். நன்றி வணக்கம்.

**சிவராணி.**



50, Hibbins Avenue
Ajax.
Ontario L1T 4C3
Canada.

***Dear Former Students***

I am very pleased to know that both Bio and Maths Groups of Year 1978 HNCE Class of Vaddukoddai Jaffna College are having a re-union virtually very soon and had requested me for a Message of Greetings. First of all I like to extend my heartiest congratulations and Best Wishes to both groups with which I was involved.

I can still remember the first date on which I had joined as a Staff at Jaffna College, after graduating from University of Peradeniya. Even though, I was not an old student of Jaffna College; I was introduced to the college by the Former Vice Principal Mr. Rajasingam to teach Chemistry and Applied Maths as a part time teacher. I am still very grateful to him and the Principal Late Mr. Kadirgamar; who later offered me a permanent full time staff position.

Teaching both Groups was completely new to myself. Because I never had previous experience in teaching and I didn't get any feedback from your previous teachers with respect to knowledge in each subject of each of you. Also it was a complete new atmosphere for myself with respect to Jaffna College Campus environment, when comparing the rest of the schools in Jaffna Peninsula. This was due to existence of the undergraduate section, as well as involvement of American Missionary.

With respect to my teaching of both Groups, I took my first class to the Bio Group with Chemistry. I was assigned as the Class Teacher for this Group too. I was introduced to the Maths Group with teaching Applied Mathematics. I had a very good time with both Groups with teaching. Most of you were following my instructions in the class. With few of you I had to be little strict and disciplined. I had enjoyed giving tutorials and home-works every week and had tried most of you to answer my questions verbally and on the blackboard in the class. This was my style of teaching with all of you.

I feel very happy to know that all of my students from both Groups are well settled down with their family throughout the world. The war in our country had separated all of us. Even though some of you have contacts with me through Social Media. I am very happy that our relationship will continue.

I wish all of you very success in your Life.

Sincerely
***Nirmalan***
(Teacher from 1978 to 1985)



# முன்னாள் ஆசிரியருடன் ஓர் உரையாடல்

**எம்முடன் உரையாடுபவர்: திரு தங்கராஜா ஆசிரியர் (1977-2011)**

**1. நீங்கள் ஆசிரியராக விரும்பியதன் காரணம் அல்லது அதற்கு தூண்டுதலாக யாராவது இருந்தார்களா இதை பற்றி சொல்லுங்களேன்?**

நான் பட்டப்படிப்புக்காக B.Sc (PFT) Special என்ற பாட நெறியை கற்றேன். அப்போதைய நிதி அமைச்சர் N.M. பெரேரா அவர்களால் இந்த கற்கை நெறி ஆரம்பிக்கப்பட்டது. Tax Assessor உத்தியோகம் தான் இந்த பாடநெறியைக் கற்றவர்களுக்கு கிடைக்கும் உத்தியோகம். ஆனால் முக்கூட்டு அரசாங்கம் கலைய எமது கனவும் கலைந்தது.

பின்னர் Felix Dias பண்டாரநாயக்கா நிதி அமைச்சராக வந்தபோது உத்தியோகம் தருவதாக உறுதியளிக்கப்பட்டது. பின்னர் அதுவும் கூட கைவிடப்பட்டு இரண்டாம் தடவையாகவும் எமது கனவு கலைந்து, நாம் நடுத்தெருவில் விடப்பட்டோம்.

திரு. சந்திரசேகர் என்பவர் எனது Batchmate. அவர்தான் யாழ்ப்பாணகல்லூரியில் என்னைக் கொண்டு சென்று சேர்த்துவிட்டார். ஆனால் நான் விரும்பி ஆசிரியர் தொழிலை தெரிவுசெய்யவில்லை, ஆனாலும் பின்பு ஆசிரியர் தொழில் பிடித்துக்கொண்டது.

**2. நீங்கள் கற்பிக்க ஆரம்பித்தபோது யாழ்ப்பாணகல்லூரியின் சூழல் எப்படி இருந்தது குறிப்பாக ஆசிரியர், மாணவர் மற்றும் பெற்றோர் சமூகம்?**

எங்களை விட நன்கு படித்த அனுபவம்மிக்க ஆங்கிலம் பேசுகின்ற, திடகாத்திரமான, கண்ணியம் மிக்க, நல்ல உற்சாகமான, சுறுசுறுப்பான ஆசிரியர்களும் இருந்தார்கள். அதிலும் திரு. கனகரட்ணம், திரு. செல்வரட்ணம் போன்றோர் white and white இல் மிக நேர்த்தியான உடையில் வருவார்கள்.

மாணவர்களை பொறுத்த வரையில் நாமும் அவர்களும் மிக நட்புரீதியாகத்தான் பழகுவோம். யாழ்ப்பாணக் கல்லூரியின் நிகழ்வுகள் இரு பகுதியினரையும் சேர்ந்து பழகவைக்கும். மாணவர்கள் பல்வேறு துறைகளிலும் ஆற்றல் மிக்கவராக இருந்தார்கள்.

A/L பெண் பிள்ளைகள் எல்லாம் Saree இல் வருவார்கள். பெற்றோர் சமூகத்தினது பங்கு மிகக் குறைவாகத்தான் கிடைக்கும். பெற்றோர் ஆசிரியர் சந்திப்பின் போது தான் தலையை காட்டுவார்கள். மற்றும்படி அவர்களின் பங்களிப்பு மிகவும் குறைவு. 1-5 வரையான வகுப்புகளில் பெற்றோரின் பங்களிப்பு மிகவும் சிறந்ததாக இருந்தது.

**3. நீங்கள் ஒய்வுபெறும்போது உங்கள் மனநிலை எப்படியிருந்தது?**

அதிபர் இராஜன் கதிர்காமர், திரு. Paul போன்றவர்கள் அதிபர்களாக இருந்தபோது எனது மனம் இரம்மியமாக இருந்தது. அவர்கள் பட்டம், சேவை, மூப்பு போன்றவற்றுக்கு முதலிடம் கொடுத்தார்கள். அது மட்டும் அல்லாது யாழ்ப்பாணக்கல்லூரியில் Commerce Union ஒன்றை உருவாக்கி அதில் என்னை Patron ஆக்கினர். அத்தோடு திரு. Paul அவர்கள் பதவியில் இருந்த காலத்தில் அவர் என்னை Commerce Department Head ஆக உயர்த்தி பின்னர் Project Work Incharge ஆக பொறுப்பும் தந்தார்.

அரசாங்கம் எனக்கு சிறிலங்கா ஆசிரியர் சேவை தரம் 1 தந்தது. அத்துடன் இதற்கு முன்னர் A /L Paper Marking Additional Chief ஆக எனக்கு பதவி உயர்வு தரப்பட்டிருந்தது.

**4. ஓய்வுபெற்ற பின்பு உங்கள் மனநிலை மற்றும் கல்லூரியுடனான தொடர்பு எப்படி இருந்தது ?**

ஓய்வுபெற்ற பின் எனக்கு விடுதலை கிடைத்த மாதிரி இருந்தது. சுதந்திர பறவையானேன்.

எனக்கு அழைப்பிதழ் வந்தால் கல்லூரிக்கு போய் வருவேன். Prize Giving, Sports meet-ஐ தவறவிடமாட்டேன். இப்ப Sports meet-க்கு போவது கிடையாது. உடல், உள நிலைமை இடம் கொடுப்பது இல்லை. கல்லூரியில் படிப்பித்த நாட்களை மீட்டுப் பார்த்து சந்தோசம் அடைவேன். கல்லூரியில் நான் இப்ப இல்லையே என்ற ஏக்கம் எனக்கு உண்டு.

# எண்ணச் சிறகுகள்



எனக்கு இன்று 60களைத் தொடும் வயது. நான் வசிக்கும் இந்த பிரான்ஸ் நாட்டில் வந்து 25 வருடங்கள் ஓடி விட்டன. எனக்கு இரு குழந்தைகள். அவர்களை வளர்ப்பதே எனது முழு நேர வேலையாக இருந்தது. இப்போது அவர்கள் வளர்ந்து எனது வேலை குறைந்து ஒய்வுநேரம் கூடிய நிலையில் இருக்கின்றேன். 25 வருடங்கள் இந்த நாட்டில் இருந்தாலும் என்னால் முழுமையாக இந்த நாட்டு கலாசாரங்களுடன் ஒட்டமுடிவதில்லை, ஆனாலும் ஓரளவு adjust செய்து வாழ்ந்து வருகின்றேன். அயலவர்களை தெரியாது, உறவினர்களும் இந்த நாடு வந்ததும் முகம் மாறினால் போல் தோன்றுகிறது. எல்லாரும் எல்லாமும் காசு, பதவி, பவுசு என்று இருப்பதாலும் எங்கு செல்ல வேண்டும் என்றாலும் தொலைபேசியில் appointment எடுத்து தான் செல்ல வேணும், உறவு என்றாலும் அப்படியே, என்ன வாழ்க்கை என்ற நிலையில் இருந்தேன்.

2019 ம் ஆண்டு மார்கழி மாதம் எனக்கு ஒரு அன்பு தொலை (தொல்லை) பேசி வந்தது. அதில் என்னிடம் கேட்ட முதல் கேள்வி தன்னையும் அறிமுகம் செய்யாமல் உங்களுக்கு அதிகம் தெரிந்த சிறு வயது நண்பர்கள் யார் என்பது. நானோ இன்றும் கள்ளம்கபடு (எல்லாரும் சொல்வது) அற்ற ஒருத்தி நான் சொன்னேன். இங்கு யாரும் இல்லை படிக்கிற காலத்தில் யமுனா, (நல்ல வேளை அவவின் பெயரையும் சொல்லிவிட்டேன்) கல்யாணி, சிவமலர், ஞானாம்பிகை, மற்றும் இந்துமதி போன்று சிலர் நினைவில் உள்ளனர் என்று.

அந்த நேரமே எல்லோரும் கண் முன்னே சுழன்று சென்றனர். யமுனாவின் நீல நிற ஹீரோ பைக், கல்யாணியின் அழகான அச்சு போன்ற கை எழுத்து, ஓலை தொப்பியுடன் பாடசாலை வருவது, சிவமலரின் சதுரம் போன்ற கண்ணாடி, இந்து, ஞானாவின் அழகிய சுருட்டையான நீண்ட தலைமுடி என்று எல்லாமே. அப்போது அவ கேட்டா 'அதில் ஒருவரை சந்தித்தால் இப்ப எப்படி உணர்வீர்கள்?' என்று. எனக்கு உடம்பு முழுக்க மயிர்க்கூச்சு எறிந்தது. அவவின் அடுத்த கேள்வி 'உங்களை சந்திக்க முடியுமா? நீங்க பிரான்ஸ் இல் எந்த ஊரில் இருக்கிறீங்கள்? La Chappelle என்ற தமிழர் செறிந்து வந்துபோகும் கடைக்கு வாறனீங்களா? எப்ப சந்திக்கலாம்?' என்று 1000 கேள்விகள். நானும் 'நீங்க யார்? வந்து இருக்கிறீங்களா?' எனக்கு பதட்டத்தில் என்ன கதைப்பது, ஏது கதைப்பது என்று தெரியாமல் 'ஏன் யாராவது இருக்கிறார்களா? சொல்லுங்கோ நீங்க யார்?' என்று திரும்ப திரும்ப கேட்டேன். கன நேரத்தின் பின் அவ சொன்னா நான் யமுனா என்றும், இப்படி ஒரு வாட்ஸாப் குரூப் தொடங்குகின்றோம் சேர விருப்பமா என்றும். நானும் ஓம் சொல்லிவிட்டேன். யார் இருக்கிறார்கள் என்று கேட்டேன் இப்பதான் சேர்க்கிறோம் இப்ப 10 பேர் வரை இருக்கினம் என்றும் சுகல்ஜன், பதுமநிதி, அன்பழகன், கல்யாணி, ரவி, குமுதினி, சிவசீலன், ஜெயமணி என்று சிலர் இருக்கினம் என்றும் சொன்னா சந்தோசமாக இருந்தது.

எமது இந்த பிரான்ஸ் நாட்டில் இன்னமும் எமது நண்பர்களாகிய வைரகுமார், தில்லைநடேசன், உமா என்று அழைக்கப்படும் பத்மா, நிதிராஜ், சிவராஜா என்று இருக்கிறார்கள் என்று அறிந்து சந்தோஷமானேன். அதுமட்டும் அல்லாது எங்கள் பிரான்ஸ் நண்பர்களின் ஒன்று கூடல் நிகழ்ச்சியும் நல்லாக இருந்தது. அதோடு எமது பிள்ளைகள், எமது நண்பர்களின் பிள்ளைகளோடு பழகுவதும், நண்பர்களாக இருப்பதுவும் இப்ப ஒன்றுகூடலின் பின் குடும்ப நண்பர்கள் ஆகி இருப்பதுவும் ஒரு சிறப்பு அம்சமே .

இப்ப என்னவென்றால் திரும்ப Souvenir வெளியிடுகிறோம் ஏதாவது எழுதுங்கோ என்று கேட்கிறா, படிக்கும்போது எழுதிய பின் தமிழ் எழுதவே இல்லை. எழுத வருமா தெரியவும் இல்லை என்ற நிலையில் சுகல்ஜன் கூட 'atleast கேள்விக்காவது விடை எழுதுங்கோ. எல்லார் பெயரும் வரவேண்டும் என்று ஆசைப்படுகிறோம்.' என்று கேள்விகள் அனுப்பியும் இருந்தார். எழுதத் தொடங்கியபோது இப்படி எழுத வருமா என்று நம்பவே முடியாத அளவு இலை மறை காயாக இருந்த பழைய நினைவுகள் முட்டி மோதி வெளியில் வர துடிக்கின்றன. எனக்கே அதிசயமாக இருக்கிறது என்னால் முடிந்த ஒரு சிறு முயற்சியாக இதை எழுதுகின்றேன்.

நான் எனது பாடசாலையில் ஆண்டு ஒன்றில் இருந்து எனது ஆரம்பக் கல்வியைத் தொடங்கினேன். எனது பாடசாலைக் காலங்களை, எனது தந்தையாரின் மறைவுக்கு முன்னும் அவரின் மறைவுக்கு பின்னும் என்று இரண்டு பிரிவாக பிரிக்கலாம். முதலாம் வகுப்பில் தொடங்கிய எனது கல்விப் பயணம் 1970ம் ஆண்டு வரை தொடர்ந்தது, பின்னர் அவரின் வேலை, இடமாற்றம் காரணமாக திருகோணமலையில் சென்று படித்தோம். படிக்கும் காலங்களில் எனது பழைய

நண்பர்கள், ஆசிரியர்களை ரொம்பவும் miss பண்ணினேன். இந்த கல்வி 1979ம் ஆண்டு எனது தந்தையாரின் மறைவு வரை திருகோணமலையில் தொடர்ந்தது, அதன் பின் திரும்ப எனது பழைய பாடசாலைக்கு வந்து 1979ம் ஆண்டு உயர் தரம் Bio வகுப்பில் தொடங்கினேன்.

**நான் இன்று 40 வருடங்களின் பின் பழைய நினைவுகளுடன் :-**

நான் சிறுவயதில் படிக்கும் போது என்னை வழி நடத்திய ஆசிரியர் குழாமின் தலைவராக திரு பவிங் இருந்தார். இவர் ஒரு வெளிநாட்டவர். அவர் கிறிஸ்துவ மிஷனரியினால் இப் பாடசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். இவர் கதைக்கும் தமிழின் அழகும், இவர் எம்மை அரவணைத்த விதமும் ரொம்ப அழகானது.அவருடன் அம்பலவாணர் ஆசிரியை, திருமதி பாலசிங்கம் (செல்லையா) தமிழ், தையல் கற்பித்தார். அவருடன் தையல் பொருட்களை வைப்பதற்கு கார்டு போர்டு இல் sewing kit செய்து elastic வைத்து சிறிய தலையணை செய்து ஊசி குற்றி வைத்து செய்தது ஞாபகம் வருகிறது.

திரு. பொன்னம்பலம் ஆசிரியர் சமயம், சங்கீதம் வகுப்பில் கதைகள் கூறி எம்மை மெய்மறக்க வைப்பார். கதை சொல்வதில் அவருக்கு நிகர் அவரே. திரு.போல்ராஜா ஆசிரியர் தமிழ், திரு. நவரத்தினம் ஆசிரியர் கணக்கு, திரு. கனகசபாபதி ஆசிரியர் சித்திரம் பூ சாடியும் பூக்களும் அழகாக கீறுவார். சீலை கரை கீறி பெயிண்ட் அடிப்பது நினைவில் வருகிறது, திரு. தேவகடாட்சம் ஆசிரியர் Natural Science. அநேகம் ஆசிரியர்கள் தேசிய உடை வேட்டி நேஷனல் உடன் வருவார்கள். அதிலும் பொன்னம்பலம் மாஸ்டர் இன் அத்தர் மணமும், போல்ராஜா மாஸ்டரின் கிறீச் கிறீச் என்ற நடை ஒலியும், தேவ கடாட்சம் மாஸ்டரின் சிவப்பு ஸ்கூட்டர் சத்தமும் காதில் மோதுகின்றன .

திருமதி. ரூபி (இராமநாதன்), செல்வி சுகந்தி ஆசிரியர் ஆங்கிலம் படிப்பிக்கும் காலங்களில் ஆங்கிலப் பாடத்திற்கு Pen holder இல் மை தொட்டு எழுதுவோம். அதற்கு துரைரட்ணம் எமது டெஸ்க் இல் ஒரு ink pot வைத்து ink விட்டுச் செல்வார். நாமும் தொட்டு எழுதுவோம், அதுமட்டுமா அந்த நீல நிற மை Q.tex ஆக எமது விரல்களையும், எமது உடுப்பில் வண்ணங்களாகவும் ஜொலிக்கும். வீடு சென்றதும் அம்மாவிடம் பேச்சும் வாங்குவது உண்டு. எனக்கு ஆங்கிலம் தொடுத்து எழுத பழக்கிய ஆசிரியை திருமதி ரூபி.

செல்விகள் சிற்றம்பலம், எலாயஸ் ஆசிரியைகள் சிறு தோழிகள் (Little friends) குழுவை நடாத்தினர். இவர்களுடன் பேடன் பவெல் தினத்திற்கு வேனில் போனதும் அங்கு நாடகம் நடித்ததும் ஞாபகம் வருகிறது. அவர்களுடன் பாடசாலையில் உதவியாளர்களாக திரு. துரைரட்ணம், திரு நாகலிங்கம் (மணி அடிப்பவர்) இருந்தார்கள். சிறு பிள்ளைகளை எப்படி வழிநடத்த வேண்டும் என்பதை எமக்கு பிடிக்கும் விதமாக கொண்டு செல்வார்கள்.

எமது பாடசாலையில் ஊஞ்சல், see-saw விளையாட்டுக்கள் இருந்தன. நானும் அதில் ஏறமுடியாமல் ஏறி ஆடுவது நினைவுக்கு வருகிறது. அப்படி ஆடும் காலத்தில் விழுந்து காயம்பட்டேன். இன்றும் அந்த அடையாளம் என் கையில் உள்ளது. அக்காவின் வருகைக்காக காத்து நிற்கையில் Rounders விளையாடுவதும், அதிபர் வீட்டு படியில் house, step, garden, river, sea என்று படிகளைத் தாவிப் பாய்வதும், கோணல் புளி, இல்லாவிடில் அதன் இலையை வாயில் போட்டு மெல்லுவதும், மஹோகனி மரத்தின் பூவில் உள்ள மகரந்தம் எடுத்து கோழிச்சண்டை போடுவதும், நெல்லிக்காய் எடுத்து உண்பதுவும், அப்பையா கடையில் சோடா ஐஸ் கட்டி வாங்கி குளிர குளிர வாயில் போட்டு குளிர் தாங்க முடியாமல் கையில் எடுப்பதுவும் என்று எல்லாமே நினைவுக்கு வருகின்றது.



பின்பு 1979 ஆண்டு Bio பிரிவில் படிக்கும்போது நான் Hastings ஹவுஸ் (சிவப்பு) இல் இருந்தேன். அப்போது குண்டு எறிதல், தட்டு எறிதல், ஈட்டி எறிதல் போட்டிகளிலும், கயிறு இழுத்தல், ரிலே ஓட்டம் போன்ற நிகழ்ச்சிகளிலும் பங்கு பற்றி பரிசில்களும் வாங்கியுள்ளேன் என்பது எனக்கு பெருமையும் சந்தோஷமுமே. கயிறு இழுத்தல் போட்டி ரொம்ப சுவாரசியமாக இருக்கும். வேகமாக கயிறை இழுக்கும் போது விழுவதும், சுற்றி இருக்கும் மாணவர்களின் ஆர்ப்பாட்டமும், இந்தா குளுகோஸ் சாப்பிடு உஷாராக இழு என்ற ஆரவாரமும் வென்றாலோ தோற்றாலோ ஓ !!!!!!!!!! என்ற கூச்சலும் அப்பப்பா காதை கிளிக்கும். மாணவர் மட்டும் அல்ல ஆசிரியர்களும் கூட வந்து சப்போர்ட் பண்ணுவது இனி எந்த காலமோ. இப்படியான நினைவுகளை மீட்ட வைத்த எமது குழுமம் தொடர்ந்தும் இயங்கி இன்னும் பல ஆக்கபூர்வமான குழுமமாக இருக்க இறைவனை பிரார்த்திக்கிறேன்.

**- செல்வமலர்**




# வாழக் கற்றுத் தந்த கல்லூரியின் ஆழப்பதிந்துள்ள என் எண்ணங்கள்

சீரழிந்ததும் சிறுமைப்பட்டதுமான எமது சமுதாயத்தின் வாழையடி வாழையாக வந்த பாரம்பரிய செல்வங்களுள் கல்விச் செல்வமென்பது தனித்துவமானது. பல் வேறுபட்ட நெருக்கடிகளுக்கு மத்தியிலும் நீடித்து, நிலைத்து இன்றும் பலரின் அறிவுப் பசியைப் போக்கும் எங்கள் கல்லூரியாம் யாழ்ப்பாணக் கல்லூரிக்கு முதல் வணக்கம். அத்துடன் எங்கள் அனைவருக்கும் அறிவுக் கண்களைத் திறந்த எமது கல்லூரி இன்னும் பல்லாண்டு வளமுடன் பல தலைமுறைகளுக்கும் தனது சேவையைத் தொடர வாழ்த்துக்கள். கல்லூரியில் என்னுடன் கல்வி பயின்ற நண்பர்கள் அனைவருக்கும் வணக்கம். பசுமரத்தாணி போல பசுமையாக என் மனதில் ஆழமாக பதிந்திருக்கும், பொதிந்திருக்கும் கல்லூரி வாழ்க்கையின் நினைவுகளை உங்களுடன் பகிர்ந்து கொள்ளக் கிடைத்த இந்த அருமையான, பெருமையான வாய்ப்புக்காக முதலில் எல்லோருக்கும் நன்றி கூறுகின்றேன்.

இலங்கையின் வடமாகாணத்தின் யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள வட்டுக்கோட்டைக்கும் அங்கு அமைந்துள்ள யாழ்ப்பாணக்கல்லூரிக்குமென தனிச்சிறப்பான வரலாறும், பெருமைகளும் உள்ளன. 2023ம் ஆண்டில் 200வது ஆண்டு கல்விச் சேவையை நிறைவு செய்யவுள்ள எங்கள் கல்லூரித் தாயின் பணி நீண்டு நிலைத்து வளரட்டும். எமது கல்லூரி ஆரம்பத்திலிருந்து இன்றுவரை தொடர்ந்தும் தனியார் கல்லூரியாகவே கல்விச் சேவையை வழங்கி வருவது மற்றுமொரு சிறப்பம்சமாகும் .

கல்லூரியில் படித்த காலங்களிலும் பின்னர் நூல்நிலையத்தில் பணியாற்றிய வேளையிலும் பல சுவையான நகைச் சுவையான நிகழ்வுகள் நடந்தேறின. எமது கல்லூரி நூல்நிலையம் என்பது ஆசியாவிலுள்ள பாடசாலை நூலகங்களுடன் ஒப்பிடுகையில் தரத்திலும் நூல்களின் எண்ணிக்கையிலும் முதலிடத்திலுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. எமது நூல்நிலையம் பல கட்டடங்களில் இயங்கியது. 1980ம் ஆண்டில் புதிதாக தனித்து அமைக்கப்பட்ட நூல்நிலையத்திற்கு கல்லூரியின் முதல் அதிபரான Dr. Daniel Poor அவர்களின் ஞாபகார்த்தமாக "DANIEL POOR LIBRARY எனப் பெயரிடப்பட்டது. இங்கு சிறுவர் பகுதி, வாசகர் பகுதி, உசாத்துணைப் பகுதி, நாளிதழ் பகுதி, பருவ இதழ் பகுதி, சுவடிகள் காப்பகம் எனப் பல பிரிவுகள் உள்ளன. இங்குள்ள பல அரிய பெரிய நூல்களைப் படித்து நாம் பயனடைந்தோம்.

1841 ம் ஆண்டில் வெளிவந்த முதல் அச்சிடப்பட்ட தமிழ்ச்செய்தி இதழான 'உதய தாரகை' யாழ்ப்பாணக்கல்லூரியின் புகழைப் பறை சாற்றும் முதற் பிரசவமாகும்.

1924ம் ஆண்டு காலப்பகுதிகளில் எமது நூல்நிலையத்தில் 10,000-க்கும் - 15,000-க்கும் இடையிலான நூல்கள் இருந்தன. அவ்வேளையில் 25 ஆண்டுகளுக்கு மேலாக எமது நூலகத்தின் பிரதம நூலகராக பணியாற்றிய திரு. K. செல்லையா என்பவர் பற்றி குறிப்பிட விரும்புகிறேன். அவரிடம் எந்த புத்தகத்தைக் கேட்டாலும் அடுத்த நொடியில் எடுத்துக் கொடுப்பார். அவர் அனைத்து தகவல்களையும் விரல் நுனியில் வைத்திருந்து அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தி விடுவார். கணனி யுகம் வருவதற்கு முன்பே கணணியைப் போன்று பல தகவல்களையும் மனதில் மிகத் தெளிவாகப் பதிந்து வைத்திருந்து மிக வேகமாகவும் விவேகமாகவும் செயற்பட்ட சேவை இன்றளவும் எல்லோராலும் வியந்து பேசப்படுகின்றது.




நான் கல்வி பயின்ற காலங்களிலும் பின் பணியாற்றிய காலங்களிலும் பிரதம நூலகராகவும், உதவி நூலகராகவும் ஆசிரியர் திரு. மாணிக்கம், திரு. பத்மநாதன், திருமதி செல்வராணி, திரு. இரத்தினகுமார், ஒய்வுபெற்ற யாழ். மத்திய கல்லூரி அதிபர் திரு. N.S. இரத்தினசிங்கம், திரு. R. கனகரட்ணம், திருமதி உஷாதேவி தயாளன், திருமதி. R. சகாயசீலன், திரு. N. தற்பரானந்தன் ஆகியோர் கடமையாற்றினர். தற்போது திரு. ஜெயராஜசிங்கம் ஜெயசீலன் நூலகராக சேவையாற்றுகின்றார்.

1986-87ம் ஆண்டு காலப்பகுதியில் எமது நூலகமானது கணனிமயமாக்க முடிவுசெய்யப்பட்டது. அப்போது பிரதம நூலகராக திரு. N.S. இரத்தினசிங்கம் இருந்தார்கள். இதனை நெறிப்படுத்த நூலகவியலில் கலாநிதிப்பட்டம் பெற்ற திரு. பாக்கியநாதன் அவர்கள் அழைக்கப்பட்டார். இதனடிப்படையில் நூல்கள் அனைத்தும் பட்டியலிடப்பட்டு பகுப்பாக்கம் செய்யப்பட்டது. இதன்போது திருமதி. ஜெயசாந்தி நடராஜாவும், திருமதி றொக்கி றொகானும் பட்டியலாக்கதிற்கு உதவினர். திரு. N.S. இரத்தினசிங்கம் இளைப்பாறியதும் ஆசிரியர் திரு. R. கனகரட்ணம் நூலகப்பொறுப்பை ஏற்றார். இவ்வேளையில் பகுப்பாக்கம் செய்ய போதிய அலுவலர் இன்மையால் பழைய மாணவரை சேவை செய்யும்படி கனகரட்ணம் ஆசிரியர் கேட்டுக் கொண்டார். அவரது அழைப்பை ஏற்று சுதா குழந்தைவேல், கலைச்செல்வி, திருமதி காமினி சொலமன் ஆகியோருடன் நானும் இணைந்து கொண்டேன் .

எமது நூலகத்தில் சேவையராக தொடங்கி நிரந்தர நியமனம் பெற உதவிய ஆசிரியர் திரு. R. கனகரட்ணம் ஆசிரியர் அவர்களுக்கும் நிரந்தர பணியாளராக்கிய திரு. ஜி. இராஜநாயகம் ஆசிரியர் அவர்களுக்கும் இத் தருணத்தில் என் மனப்பூர்வமான நன்றியை தெரிவிப்பதுடன் இப் பொற்காலத்தை நினைத்து பெருமையும் பேருவகையும் அடைகின்றேன். கலாநிதி பாக்கியநாதனும், திரு. R. கனகரட்ணமும் எனக்கு நூலகவியல் பற்றிய அறிவையும் நுணுக்கங்களையும் விளக்கி அங்கிருந்த சகல நூல்களையும் மனத்திரையிலிட உதவினார்கள். அப்போது 44,000க்கு மேற்பட்ட நூல்கள் பகுப்பாக்கம் செய்யப்பட்டன. அத்துடன் இங்கு பல்கலைக்கழக புதுமுக மாணவர்கள் நூலக மேற்பார்வையாளராகக் கடமையாற்றினர்.

எமது நூலகத்தில் பலகாலம் மிக விருப்புடனும் ஆர்வத்துடனும் பணியாற்றிய திரு. மகேசனது சேவையும் என்றும் பாராட்டப்பட வேண்டியது. இதைவிட எமது வாழ்வின் ஒளியாய், வழிகாட்டிகளாய் இருந்த பெருமதிப்பிற்குரிய ஆசிரியர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்து கொள்கின்றேன்.

**மறக்கமுடியாத சில நினைவுகள் :-**

பொதுவாக நூல்நிலையத்திற்குள் அதிக மாணவர்கள் ஏதாவது தேடலுக்காகத் தான் வருவார்கள் அந்தத் தேடல்களும் அவரவர் விருப்பத்திற்கேற்ப பலவிதமாக இருக்கும். படிப்புடன் தொடர்புடைய தேடலுக்கு சிலரும் தமக்கு பிடித்தவர்களை தேர்ந்தெடுக்கும் தேடலுக்கு சிலரும் அவ்வப்போது வந்து போவதுண்டு. ஒன்றாக சேர்ந்து வந்த ஜோடிகள் சில நேரங்களில் பிரிந்து போவதும், மாற்றப்படுவதும் உண்டு. ஆனாலும் மிகக் குறுகிய நேரத்தில் பிரிந்த ஜோடிகள் மீண்டும் இணைந்து கொள்வதும் நடந்தேறும். இது சில காதலருக்கும் பொருந்தும் சில காலணிகளுக்கும் பொருந்தும் .

இப்போது எங்களில் எத்தனை பேருக்கு Tin Tin கேலிச் சித்திரங்களுடன் கூடிய நகைச் சுவைத் தொடர் நினைவு இருக்கிறதோ தெரியவில்லை Tin Tin கேலிச் சித்திரங்களுடன் கூடிய நகைச் சுவைத் தொடராக வந்த புத்தகங்களை வாசிக்கும் பழக்கம் எனக்கிருந்தது அந்தப் புத்தகத்தில் வரும் ஒரு கதாபாத்திரத்தை எமது கல்லூரியில் பணியாற்றிய ஊழியருக்கு பொறுப்பாக இருந்த ஒருவருடன் ஒப்பிட்டு வயிறு வலிக்கச் சிரித்து மகிழ்ந்த பொழுதை நினைத்தால் இப்பொழுதும் சிரிப்பாக இருக்கும் .

தொடர்ந்து இரண்டு மூன்று பாடவேளைகளுக்கு நூல்நிலையத்

தில் இருக்கும்படி நேர்கையில் நாங்களும் சில குறும்புகளையும் செய்து மகிழ்ந்தோம் .புத்தகங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் பகுதிகளில் இருந்து நூல்களை இடம் மாற்றியும் ,தலை கீழாகப் புரட்டியும் வைத்து விட்டு பார்த்துக்கொண்டிருக்கும்போது யாராவது வந்து குறிப்பிட்ட புத்தகங்களைக் கேட்பார். அப்போது பொறுப்பானவர் வந்து கண்டு பிடிக்க முடியாமல் திணறுவதை பார்த்து நாங்கள் அடையும் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை

அடிக்கடி வந்து போகும் இன்னுமொரு நினைவையும் உங்களுடன் பகிர்ந்து கொள்ளலாம் என எண்ணுகின்றேன். சில நேரங்களில் ஒரே வகுப்பு மாணவர்கள் குழுவாக சேர்ந்து படிப்பது வழக்கம். அப்படிபட்ட தருணங்களில் மிகவும் அமைதியாக இருக்கும் நூல்நிலையத்தில் சற்று சலசலப்புக் கேட்கும். அந்த நேரம் அங்கு மேற்பார்வை செய்பவர் எழுந்து வரும்போது அவர் அணிந்திருக்கும் காலணி மிகவும் உயரமாக இருந்தால் அமைதியான சூழ்நிலையில் பலமான காலடியோசை கேட்கும். அப்படிக் காலடி ஓசை கேட்கும் போது நாங்கள் ஊகித்துக் கொண்டு அமைதியாகி விடுவோம் .அமைதியானவுடன் அவர் திரும்பிச் செல்லும் போது கேட்கும் காலடியோசையைக் கேட்டு மாணவர்களாகிய நாம் ‘உஸ்’ என்போம். அதைக் கேட்டதும் அவர் நடப்பதை நிறுத்தி விடுவார். பின்பு மீண்டும் நடக்கும் போது வரும் ஓசையைக் கேட்டு மீண்டும் ‘உஸ்’ என்போம் அப்போது அவர் நடப்பதை நிறுத்திவிட்டு எமக்கருகில் வந்து உட்கார்ந்து பார்த்துக்கொண்டிருப்பார். அந்த நேரம் நாம் எம் இருப்பிடத்தை விட்டு வேறிடத்திற்கு மாறுவோம் அல்லது அங்கிருந்து வெளியேறி விடுவோம். இது அடிக்கடி நிகழ்வதால் அவர் எங்களைக் கண்டதும் இனிமேல் அப்படிச் செய்யவேண்டாமென பரிதாபமாக கெஞ்சிக் கேட்டுக் கொள்வார். அதன் பின்பு அவரது திரிசங்கு நிலையைக் கண்டு நாங்கள் ஒழுங்காக இருப்போம். அதை இப்போது நினைத்தால் மிகவும் கவலையாக இருக்கும்

இவ்வாறான பல சுவாரசியங்களுடன் மனதை நெருடும் வேதனையான நிகழ்வுகளும் இடம்பெற்றன. 1987ம் ஆண்டு காலப் பகுதிகளில் இந்திய இராணுவம் அராலித்துறையில் இருந்து வட்டுக்கோட்டையை நோக்கி முன்னேற முயன்ற போது விடுதலைப் புலிகள் வட்டுக்கோட்டைச் சந்தியிலிருந்து எதிர்த்தாக்கல் செய்ய முனைந்தார்கள் அதை அறிந்த எமது அதிபர் திரு. இராஜன் கதிர்காமர், பேராயர் அம்பலவாணர், ஆசிரியர் திரு. ஆனந்தரட்ணம் ஆகியோர் அப்போது புலிகளின் அரசியல் துறை பொறுப்பாளராக இருந்த எமது சக மாணவன் A.K. முரளீதரனைச் சந்தித்து எமது கல்லூரிக்கும் நூலகத்திற்கும் ஏற்பட இருக்கும் ஆபத்தினை எடுத்துரைத்தபோது மறுப்பேதும் கூறாமல் அனைத்து வீரர்களையும் அழைத்துச் சென்ற முரளியின் செயல் அவர் எவ்வளவு தூரம் கல்லூரியை நேசித்தார், அதிபரை மதித்தார் என்பதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். அவரது செயற்பாடு எமது கல்லூரிக்கும் நூல்நிலையத்திற்கும் ஏற்பட இருந்த பாரிய அழிவைத் தடுத்து. நிறுத்தப் பேருதவியாக இருந்தமை குறிப்பிடத்தக்கது .

இப்பேற்பட்ட பல்துறை சாதனையாளன் கல்வியிலும் விளையாட்டுத் துறையிலும் சிறந்து விளங்கி எமக்கெல்லாம் எடுத்துக் காட்டாக இருந்த A.K. முரளீதரன் பற்றி பெருமையுடன் பதிவு செய்ய விளைகின்றேன். அவர் கல்லூரியின் மேல் பிரிவு விளையாட்டுத்துறை வல்லுனர். (Senior Allrounder Sportsman) விருது பெற்றவர். தடகள விளையாட்டுகளிலும் (Athletics) கால்பந்தாட்டத்திலும் (Football) வளைகோல் பந்தாட்டத்திலும் (Hockey) துடுப்பாட்டத்திலும் (Cricket) பல சாதனைகளைப் படைத்தவர். 1981-ம் ஆண்டு காலப்பகுதியில் புனித பத்திரிசியார் கல்லூரிக்கு எதிராக துடுப்பாட்டத்தில் அடுத்தடுத்து ஒரு ஓவரில் மூன்று பந்து வீச்சில் மூன்று இலக்குகளை வீழ்த்தி (Hat trick) எடுத்து எம் கல்லூரியில் வரலாற்று சாதனை படைத்த சரித்திர நாயகன். அத்துடன் யாழ். மாவட்ட சிறந்த வேகப் பந்து வீச்சாளனாக 1976ம் ஆண்டில் தெரிவு செய்யப்பட்டவர் என்பதும் குறிப்பிடத் தக்கது.

தன் உயிரிலும் மேலாக மண்ணையும் மக்களையும் நேசித்த தன் பயனாக ஒப்பாரும் மிக்காரும் இல்லாத தேசியத் தலைவரின் தலைமையிலும் வழிகாட்டலிலும் தாயக விடுதலைப் பயணத்தில் பல்வேறு கால கட்டங்களில் தம்மை இணைத்துக் கொண்டவர்களில் தன்னையும் இணைத்து வித்தாக வீழும் வரை பல சாதனைகளைப் படைத்தார். 1988ம் ஆண்டு இந்திய இராணுவத்தினரின் சுற்றி வளைப்பின் போது அவர் வீர மரணத்தைத் தழுவிக் கொண்டார். அவரைப் பற்றி அறிந்து கொண்ட இந்திய இராணுவ அதிகாரி கப்டன் மோகனதாஸ், அவரை மிகவும் வியந்து பேசியதாகவும் துன்பமடைந்ததாகவும் அறிந்தோம். அந்தளவிற்கு மாவீரன் A.K. முரளிதரனின் திறமையும் வீரமும் வழிகாட்டலும் எதிரிகள் வியந்து பாராட்டும் குணாதிசயங்களும் என்றும் அழியாமல் போற்றி வணங்கப்படும்.

அதன் பிற்பாடு 1990-91ம் ஆண்டு காலப்பகுதியில் மீண்டும் எமது கல்லூரிக்கும் நூலகத்திற்கும் அபாயம் ஏற்பட்ட போது இரவோடு இரவாக 35 லாரிகளில் நூலகத்திலிருந்த அனைத்து நூல்களும் மானிப்பாய் கிறீன் மெமோறியல் வைத்தியசாலையிலிருந்த ஒரு கட்டிடத்திற்கு மாற்றப்பட்டு பாதுகாக்கப்பட வேண்டிய நிலை ஏற்பட்டது என்றும் என் மனதில் அழியாத ரணமாக உள்ளது. எனினும் அவை அனைத்தும் பாதுகாக்கப்பட்டமையை நினைத்து பெருமையும் பெருமிதமும் அடைவதுடன் பல்வேறுபட்ட அழிவுகளிலிருந்து காத்து இன்றுவரை இயங்குவதையிட்டு எல்லாம் வல்ல இறைவனுக்கு நன்றி கூறுகின்றேன்.

இன்னும் பல நிகழ்வுகளும் காட்சிகளும் என் மனதில் நிறைந்து நின்றாலும் எல்லாவற்றையும் குறிப்பிட்டு சொல்ல பக்கங்களும் நீண்டு நிறைந்துவிடும் என்பதால் மிக முக்கியமான விடையங்களை உங்களுடன் பகிர்ந்து கொண்ட மனநிறைவோடு நன்றியுடன் நிறைவு செய்கின்றேன் .மீண்டும் எனக்குக் கிடைத்த இந்த வாய்ப்பிற்கும், இந்த நேரத்தில் குறிப்பாக இதை வாசித்துக் கொண்டிருக்கும் உங்கள் எல்லோரிற்கும் நன்றி .

‘வாழ்க தமிழ்’ ‘ஓங்குக (வளர்க) எம் கல்லூரி புகழ்’.
நன்றி
என்றும் பசுமையான நினைவுகளுடன்....

**- பத்மாசனி**

# சமர்ப்பணம்



அதிகாலை இலங்கை போக்குவரத்துச் சேவையில்
சக நண்பர்களுடனும் நேற்றையதும் இன்றையதும்
செய்திப் பரிமாற்றங்களுடன் ஆனந்தமாய்
எமது கல்லூரி வாசலுக்குள் நுழையும் போது
எமது எதிர்காலத்தின் நம்பிக்கை தூண் போன்று
ஆயிரம் காலத்து பள்ளிக் கதைகளை தாங்கி
விருட்சம் பெற்ற நுழைவாயில் வரவேற்பாளனாய்
இதமான நிழல் பரப்பும் ஆலமரம் தாண்டிய
எமது அழகிய வகுப்பறைகளும்
அதில் நாம் செய்த சிறு சிறு குறும்புகளும்
மதிய போசன இடைவெளியில் நாம்
அராலி வடக்கு வீதியிலே உச்சி வெய்யில்
வெப்பக் காற்றினை தணிக்கும் வயல் காற்றின் மத்தியிலே
நண்பிகளுடன் விளையாட்டு மைதானம் நோக்கிய
குதூகல நடைப்பயணமும் மைதானக் கட்டிடத்தின்
ஆசனப் படிகளில் அமர்ந்து பகிர்ந்துண்ட நாட்களும்
நல்ல நண்பர்களையும் நல் ஆசிரியைகளையும்
வழிநடத்தலையும் கொண்ட நினைவுகள்
பசுமரத்து ஆணி போல் என்றும்
அழியாதவை எனும்போது
கன்னத்தின் ஓரத்தில் ஓர் துளி ஓடுவதுவே சமர்ப்பணம்!!

– சித்திராதேவி






# A Look Back in my School Years

I remember the day my father took me in his old Vespa scooter and let me loose into the back of the Old Portuguese church which was built in 1678 and was later renovated by the Dutch. I was scared, the place was dark and gloomy and had very few windows, the wall itself is probably wider than my height at that time. That was our Kindergarten classroom. Curious at that young age to ponder upon the JC moto that read "Jesus Christ the Light of Life '' it was etched in my memory till today. The dichotomy between the school motto and the place I call my Kindergarten classroom is quite confusing for me at that time. I vividly remember that I was even scared to look out the windows on the south where you can catch a glimpse of the cemetery just meters away from our tiny tables and chairs where I began my journey at Jaffna College. Kids sometimes come up with ridiculous stories of ghosts on the trees in the graveyard which terrified me even more. I do not think I grew out of this fear up until I was in my 5th or 6th grade. I cannot remember developing a close relationship with any of my peers at that time, perhaps they too had their share of fear and insecurities, perhaps I was timid too to forge any friendship. I do remember Pathumanity, Inthumathy, Jeyaranjan, Suvendraraj, Sharmini, Kalyani, Ramesh, and a few others who remained with us until the end of my school years. At the end of our school day, we all marched towards the curb carrying our drink bottles or bags (or no bags) around our shoulders and settle down on our suitcases looking intensely towards the direction our parents or guardians would come to pick us up. I quite remember Jeyaranjan's mom come and wait for Ranjan ahead of the closing bell. I too remember Pathumanithi's dad coming in his bike.

I have vivid memories of Mr. Ben Bavinck who was the headteacher. He was the first White person I ever knew, he was a kind, tall gentleman from the Netherlands. Based on the records, I came to know that he was there through our formative years until 1972 and he was a fixture of discipline and moral authority for us during those years. A few years later Mr. Bavinck nabbed me along with a few of my friends right next to his residence at the west end of the boys' hostel compound near Atkinson Rd. as we skipped school that day wandering around the compound outside the school premise. He made us write 100 lines of "We will not cut classes again", 100 lines back then was like writing a thesis, it was a form of torture, to put it bluntly. But his discipline was a life lesson that I have not forgotten this late in my life. Further, I came to learn about Mr. Bavinck as the one who grew up during the Nazi era in Holland after his missionary parent came back from Indonesia in 1939. Miss Elias replaced Mr. Bavinck as the headteacher for the Junior school, she was equally strict but extremely dedicated to her duties. I do not remember getting into trouble many times as most of my days went by uneventfully for most of my school life. I remember Miss Ellias as the one who lived in a lonely house right next to the Bicknell Pavilion with no neighbors around except the paddy fields. We had a boatload of fun playing at the Panna (a concrete seat wall in the shape of the Tamil letter 'Pa") located under a banyan tree on the opposite side of the Church, it was gigantic for a child who is just above 3 feet tall, it used to be our

primary social space in school, bustling with activities and play during the lunch hour and after school, Killithattu or Thaachi game, marble games, and exclusively JC invented 'Paana' game. My lack of skills in sports I made it up in the marble games that we often played under the Banyan tree, I remember my collection of marbles were at one point stacked up to the top of the largest Johnson and Johnson baby powder bottle, I believe most of them were collected from Pathumanity if my memory serves me right. It is quite amusing that we remember the trees as key landmarks back then. Nelli tree at the waterspout in the middle of our Junior school compound is just another attraction as we often look for the fallen Nelli fruits while we gulp fresh water from the water fountain under it. Kanahappa Kadai is where we get our school supplies, located a mere 100 yards from our Junior school, Mr. Kanahappa remained a loyal supplier until we left the school, he had hearing difficulties and kids made fun of him for obvious reason as he often yells at the kids for no obvious reason other than the fact he could barely hear us out when we order stuff. In junior school, we were not allowed to write with ink pens, but we moved on and graduated to write with an ink pen in senior school, where we all had customized study desks with the hole at one corner of the top as an ink bottle holder. I do attribute my chicken scratch handwriting to one of these ink pens. I am only joking.

I was not academically inclined, nor was I interested in sports, the only prize I ever won was for clay work, the subject matter I enjoyed throughout. Amirthanathan master was my clay work teacher, I was often fascinated by his creative ability to make real-life sculptures. During my time in school, he made masterpieces like 'Pieta', Michael Angelo's 'David' and Auguste Rodin's 'Thinker'. He was also an avid photographer, somehow through the friendship my father had with him, he often comes home during birthdays to take pictures which we cherished as a family even to this day. We lost most of these treasured photographs when my family along with the entire village was displaced due to the civil war. The only time I ever saw him angry was when kids tried to meddle with his sculptures wrapped in wet cloths.

Many times, we encountered Elli Sinnathambi on his bicycle in the school compound with live rats in the back of his carrier. These poor creatures will eventually see the scalpel knives of upper school students during dissecting sessions. But the fascinating fact is that we had a highly organized crew of lab assistants like Arumugams and Sinnaiah who looked after the mundane but essential functioning of the school and looked after these duties. Though I was hardly involved in sports, Anandaratnam master is yet another committed soul who spent the larger part of his life in the Sports field organizing and looking after every aspect of physical education. Not too far from our sports field is the Bursar's office where my father's friend Mr. Jeyasingham toiled day in and day out looking after every aspect of the JC finances. I reserve my deep respect for him for his considerate heart to waive the fees for one or two of my siblings because we had 5 in our family and at times it was difficult to pay the full fee for all 5 of us. We are indeed blessed to call JC our Alma Matter, it was more than a school.

Our Principal at that time was Mr. Rajan Kadirgamar, a quiet, highly disciplined, and meticulous person, he took us through many transitions like when part of our school was sectioned off to be an Undergraduate Jaffna campus and the constant drumbeat of looming war and displacements, etc. I had very few interactions with him in school, but I was fortunate enough to be able to strike many conversations when we met in Toronto during our annual Christmas carol celebrations. I used to wonder at his oratorical skills, it amazed me to think how a person can speak at length without looking at a script, he was such a flawless orator who cared for the good name of JC.



Our Vice-Principal Rajasigham was astutely intelligent, who taught me Applied Maths, he is a genius who could solve every math problem in the books. Occasionally I went to his house in Navalar Road Jaffna to get some extra help as his family happened to be close to my family right throughout. He is nonchalant in his ways and kids were not at all scared of him as he took care of the duties of a Vice-Principal.

When we were in senior school, I remember we had about 2 to 3 sessions of Transcendental Meditation classes in Odley Hall conducted by Norwegian disciples of Maharishi Mahesh Yogi, simply put, White folks taught the kids how to meditate. I was highly taken up by their training and got admission to a degree in their University in Norway after my A/Ls. But by happenchance, it never came to fruition. In one such meditation session, they told us that if we progress intensely from God Consciousness to Unity Consciousness we can literally levitate and float in the air. There was no floating no matter how much I tried. But voilà, it took seven more years when I finally floated for the first time, about 35000 feet above the sea level in a KLM flight to Paris, about 10 years after my days in JC.

I remember vividly that there were times of despair and hopelessness as I only managed to get B, C &2S grades in the Advanced Level exams after 3 tries, it was not a result that will ever let you see a University entrance, but by providence, I met someone (I cannot even remember who till this day) right in front of Ruby teacher's house and this person told me to apply for an aptitude test to do Architecture at Moratuwa University, I finally got in and ended up in the career in design.

As we progressed during our senior years, life got even more dark and gloomier with the intensification of the Sri Lankan Civil war where we witnessed the callous disregard for life. The dangerous trend never dissipated even beyond our school years. The life as a student at Jaffna College back then wading through the experience of war reminds me of the South African pop song called "Third World Child" Bits of songs and broken drums are all he could recall, so he spoke to me in a bastard tongue carried on the silence of the guns. In between my father's fields and the citadels of the rule lies a no-man's land which I must cross to find my stolen jewel". Oceans of tears were shed by many as we too witnessed the loss of our dear friend and our classmate Murali long after we left school. He was tough and fearless, yet the extremities of life took him too soon before his time. Many of our loved ones perished at the hands of evildoers and there is no justice thus far for these crimes. We witnessed the words of Prophet Isaiah being played out right before our tender eyes "So justice is turned away, and righteousness stands at a distance. For truth has stumbled in the public square, and honesty cannot enter.". Our resolve was tested many times, but we never lost hope. It is such a beautiful thing about life, that we go from strength to strength when we genuinely seek after the truth. My interest in life turned to holocaust studies which I did for 1 year in Toronto, it was the darkest period in recent human history, as we must always learn from the past and help teach our children life lessons. It was an eerie resemblance as a child in a dark and gloomy kindergarten classroom in the back of an old Dutch church looking out the window into the graveyard and the future marked with uncertainties, despair, and hopelessness, likewise, German Chancellor Konrad Adenauer surveyed the ruins of Berlin, looking through the window from his office he uttered these words, "Outside the forgiveness of Jesus Christ, I know of no other hope for humanity".

We came a long way, looking back into the years growing up in Jaffna College rekindled our joy, sadness, and hope. Jaffna College taught us the real American way where you had no uniform, boys and girls learning together and just as the founding trustees envisioned, to instill in us the true meaning of Life, Liberty, and Pursuit of happiness.



# கல்லூரி வசந்த காலம்



அன்பு நண்பர்களே, எங்கள் யாழ்ப்பாணக்கல்லூரித் தாய்க்கும் என் இனிய நண்பர்களுக்கும், இனிய வணக்கங்கள்.

எங்களின் கல்லூரி எமக்குத் தந்த அறிவு, ஒழுக்கம், பண்பாடு, கலாச்சார முறைகள், தன்னம்பிக்கை அனைத்தும் நாம் எங்கு சென்றாலும், எங்கு வாழ்ந்தாலும் இன்றுவரை எமக்கு உறுதியாகவும் வழித்துணையாகவும் இருக்கின்றது. இதை எண்ணி பார்க்கும் போது நாங்கள் யாழ்ப்பாணக்கல்லூரி மாணவர்கள் என்ற பெருமையும், ஓர் இனம்தெரியாத மன நிறைவும், மகிழ்ச்சியும் எங்கள் இதயத்தை தாங்கிப் பிடிக்கின் றது. எங்கள் கல்லூரியில் நாங்கள் கண்ட மகிழ்ச்சி என்றுமே எமக்கு திரும்பி கிடைக்க போவது இல்லை. ஆனால் இன்று 40 வருட காலத்தின் பின்பு நண்பர்கள், நாங்கள் அனை வரும் இப்போதாவது ஒன்றுசேர்ந்துள்ளோம் என்றால், அது எங்கள் கல்லூரித்தாயின் பாசமும், அரவணைப்பும் நிறைந்த ஆசிகளும், கருணையுமே என்பதே என் பார்வையில் காண்கிறேன்.

எங்கள் கல்லூரியின் வாழ்க்கையில் நாம் கற்றுக்கொள்ள வேண்டியது நிறையவே இருந்தது. மற்றைய கல்லூரிகளை விட நிறைந்த வசதிகளும் இருந்தன. சிலர் அனைத்தையும் பயன்படுத்தி வெற்றி கண்டனர். ஆனால் சிலர் சிலவற்றை மட்டும் பயன்படுத்தியும் வெற்றி கண்டனர். அது தான் எங்கள் கல்லூரியின் மகிமை.

கல்லூரிக் காலத்தில் என்றும் கலை சம்பந்தமான, தமிழ் மொழி சம்பந்தமான நீரோட்டமே என்னை வருடிக்கொண் டது. பிறகு அந்த நீரோட்டமே என்னை கவர்ந்திழுத்துச் சென்றது.

கல்லூரியின் சாரணர் இயக்கத்திலும் இருந்தேன். அதற்கு தேவகடாட்ச மாஸ்டரும், சச்சிதானந்த மாஸ்டரும் பொறுப்பாக இருந்தார்கள். சாரணர் பிரிவின் சகல விடயங்களிலும், கடமைகளிலும் முழு மூச்சாக நின்று செயற்பட்டு வந்தேன். யாழ்ப்பாணம் பழைய பூங்காவில் தான் எல்லா கல்லூரிக ளுக்குமான சாரணர் பாசறை நடக்கும். அங்கேயே தங்கியிருந்து சமையல், விளையாட்டு, மரத்தால் பாலம் கட்டுதல் என்று அட்டகாசமாக இருக்கும். இரவு எல்லோரும் உறங்கிய பின்பு நானும் சில நண்பர்களும் பூங்காவின் சுவரால் ஏறிக்குதித்து இரண்டாவது இரவுக்காட்சி படம் பார்த்ததும், திரும்பி வந்து சுவரால் குதித்து இறங்கும்போது சச்சிதானந்த மாஸ்டரிடம் கையும் களவுமாக பிடிபட்டதையும், அதற்குரிய தண்டனையாக அடுத்த நாள் போட்டு வேலை வாங்கியதையும் மறக்க முடியாது. இப்போது நினைக்க சிரிப்பு தான் வருகின்றது.

கனகப்பா கடை, கல்லூரி புக் டிப்போவும் கேன்டீனும் நடத்திய பரமேஸ் அண்ணா, விடுதியில் உணவு சமைத்து பரிமாறும் கோபால் அண்ணா என்றுமே சிரித்த வண்ணம் கதைக்கும் ஜெயசிங்கம் கிளாக்கர், யோகா கபே, அப்பையா கடை, மணியண்ணை கடை எல்லாமே ஞாபகம் வந்து நிற்கின்றது. நெக்டோ சோடாவின் ஐஸ் கட்டி வாங்கி சூப்பி சுவைத்தது, கச்சான் வாங்கி நண்பர்களுடன் சாப்பிட்டது, யோகா கபேயில் மணியண்ணையின் டீ, வடை, மட்டின் கறி வாங்கி சாப்பிட் டது, சந்தியில் உள்ள ராசன் கடையில் கொத்து ரொட்டி, கோப்பி, ரோல்ஸ், ரொட்டி வாங்கி நண்பர்களோடு உல்லாச மாக சாப்பிட்டதையும் ஆனந்தரட்ணம் மாஸ்டர் போய் எனது வீட்டில் அடிக்கடி போட்டு கொடுத்ததையும் மறக்க முடியாது.

கல்லூரி நினைவுகள் அமுத சுரபி போல் வந்துகொண்டே இருக்கின்றன. ஒரு முறை சரஸ்வதி பூசை காலத்தில் சரஸ்வதி படத்தினை வகுப்பின் அலுமாரிக்குள் வைத்து சாம்பிராணி குச்சி ஏற்றி வைத்திருந்தேன், அந்த நேரம் எங்கள் அதிபர் ஒரு நடை போட்டு நடந்து வந்தார். அவர் வருவதை கண்டதும் நான் அலுமாரி கதவை மூடிவிட்டேன், ஆனால் சாம்பிராணி வாசம் அறிந்து வகுப்பிற்குள் வந்து விட்டார். அன்று நான் வேட்டியோடு தான் வகுப்பில் பிரசன்னமாகியிருந்தேன். எனக்கு இதற்கு சிவலோகநாதன் உடந்தையாக இருந்தான். 'யார் இந்த வேலை பார்த்தது' என்று அதிபர் கேட்டார். 'நான்' என்று கூறி 'இன்று சரஸ்வதி பூசை அதுதான் சார்' என்றேன். சில காரணங்களையும், புத்திமதிகளையும் கூறி தன்னோடு அழைத்து சென்று இதுபற்றி எனக்கு மேல் உள்ள வகுப்பு நண்பர்களோடு கதைத்து நல்ல முடிவு எடுப்பதாக கூறினார். அதன் விளைவாகவே அடுத்த ஆண்டு மூன்றாம் பனை வைரவர் ஆலயத்தில் கல்லூரியால் நடத்தப்பட்ட சரஸ்வதி பூசையாகும். நான் கொஞ்சம் குழப்படி குறும்புக்காரன் தான் ஆனால் குசும்புத்தனம் இல்லாது கொஞ்சம் நல்ல குணங்க ளும் இருக்கின்றது. நண்பர்களே! கல்லூரி மாணவ நண்பர்க ளின் மேல் அக்கறையும் அன்பும் வைத்திருந்தேன். கல்லூரி யின் சில விழாக்களின் பின்பு எனக்கு தெரிந்த நண்பர்கள் நான் வீடு செல்லும் பாதையை நோக்கி செல்லும்போது இரவு நேரமானால் நண்பர்களோடு அவர்களின் வீடு வரை துணை யாக சென்ற காலமும் உண்டு. ஆனால் இன்று அனைத்தை யும் நினைக்கும் போது கவலை தான் வருகின்றது.

நண்பர்களே கல்லூரியின் தமிழ் மன்றம், வர்த்தக மன்றம், போன்றவற்றில் முக்கிய பொறுப்புகளில் பதவி வகித்து பலரது அன்பையும் பாராட்டினையும் பெற்றிருந்தேன். கப்பலோட்டிய தமிழன் திரைப்படம் இலங்கையில் தடை செய்யப்பட்ட காலமது. அந்த நேரத்தில் எனது சொந்த செலவில் ஒட்லி மண்டபத்தில் தமிழ் மன்றத்தின் ஓர் நிகழ்வுக்காக தொலைக்




காட்சி முகவர் மூலம் அதை திரையிட்டு வெற்றியும் கண்டேன். என்னோடு இணைந்த நண்பர்கள் சுவேன், ஜெயசீலன், டைட்டஸ், கலாமதி, தெய்வா, பத்மா, சூரியகுமார், ரகுராஜ் மற்றும் பலரோடு சேர்ந்து ஆசிரியர்கள் ஜெபநேசன், தங்கராஜா, சதாசிவம் அனைவரினதும் ஆலோசனை ஆதரவோடு அதிபரின் ஆசிகளோடும், உறுதியோடும் வர்த்தக மன்றத்தினை உருவாக்கி நண்பர்கள் அனைவரது ஒத்துழைப்போடு பங்காற்றினேன்.

கல்லூரியில் பல நாடகங்களை நெறிப்படுத்தி நண்பர்களோடு இணைந்து மேடையேற்றி நடித்து ஆசிரியர்கள், மாணவர்கள், அதிபரின் பாராட்டுக்களை பெற்று மகிழ்ந்தேன். பட்டிமன்றம், தனி நடிப்பு போட்டிகளில் யாழ் மாவட்ட கல்லூரிகளுடன் போட்டியிட்டு பல பரிசில்களை வென்றேன். எங்கள் குழுமத்தின் நண்பர்கள் தில்லை, ஜெயச்சந்திரன், சிவசீலன், சந்திரிகா போன்றவர்களும் என்னோடு இணைந்து நடித்தார்கள் என்பதும் எனக்கு பெருமையே. கல்லூரியில் தனி நடிப்பு போட்டியில் தொடர்ந்து ஆறு தடவைகள் முதலாவது இடத்தைப் பெற்று கல்லூரியின் சாதனைப் பட்டியலில் இடம் பெற்றேன். கல்லூரி நிகழ்ச்சிகளில் வில்லிசையும் நடத்தி வந்தேன். எனது ஒவ்வொரு வெற்றிக்கும் நண்பர்கள் என்னோடு உறுதுணையாக இருந்தார்கள். எங்களின் அதிபரினதும், உதவி அதிபரினதும் முயற்சியால் கட்டுபத்தை பல்கலைக் கழகத்தினால் நித்தியானந்தன், பாலேந்திராவின் நெறியாளுகையில் உருவாக்கப்பட்ட 'கண்ணாடி வார்ப்புகள்', 'யுக தர்மம்' ஆகிய இரண்டு நாடகங்களிலும் வட மாகாணத்திலும், இறுதியில் யாழ் வீரசிங்கம் மண்டபத்திலும் இணைந்து பங்கு பெற்று அனைவரது பாராட்டுகளையும் பெற்றுக்கொண்டேன். இந்த நாட்களில் நித்தி அண்ணா, நிர்மலா அக்கா, ஆனந்தராணி அக்கா, இசையமைப்பாளர் கண்ணன் அண்ணா போன்றவர்களோடு அன்பாக பழகியதையும் நகைச்சுவையாக கதைத்து மகிழ்ந்து உணவுகள் உண்டதையும் மறக்க முடியாது இருக்கின்றது.

நண்பர்கள் எனது எண்ணக்கருத்துக்கள் என்றுமே எழுதி முடிக்க முடியாது, இருப்பினும் நான் கல்லூரியை விட்டு சென்ற பின்பு 1982 ம் ஆண்டு நண்பன் நேசானந்தர் மூலமாக கல்லூரி அதிபரின் அழைப்பு வந்தது. செல்வகுமார், நேசானந்தர் உட்பட நான் கல்லூரி அதிபரை சென்று சந்தித்தேன்.

தமிழ் மன்றத்தின் வெளியீடாக கல்லூரியின் நடைமுறை வழக்கங்களை உட்புகுத்தி குறும் திரைப்படம் ஒன்றை தயாரிக்க இருப்பதாகவும், அதில் என்னையே கதாநாயகனாக நடிக்க கேட்டது மட்டும் அல்லாது திரைப்படம் சிறந்த முறையில் வெளிவருவதற்கு என்னால் ஆன ஒத்துழைப்பை தருமாறும் கேட்டுக் கொண்டார். அவரது எண்ணம் என்னை சற்று திக்குமுக்காடச் செய்தது. அவரின் எண்ணத்தை புரிந்து கொண்டு ஒருவாறு சமாளித்து ஒத்துழைப்பு தருவதாகவும், ஆனால் நான் தற்போது கல்லூரியில் இல்லாததால் நடிக்க முன் வந்தால் பல பிரச்சினைகள் வரும் என்பதனையும் கூறிச் செல்ல எனது கருத்தை உள்வாங்கினாலும் எதற்கும் ஆறுதலாக யோசி என்று வழியனுப்பி வைத்தார். மறுநாள் நேசானந்தர் மீண்டும் வந்து என்னோடு இதைப்பற்றி கதைத்து முயற்சித்தான். முழுநேர ஒத்துழைப்பு தருகின்றேன், உதவியாக இருக்கின்றேன் ஆனால் நடிக்க முடியாத காரணத்தையும் தெரிவித்து விட்டேன்.

இரு தினங்கள் கழிந்தது எனது அப்பா திடீர் என்று நாங்கள் இருவரும் இன்று அதிபரை சென்று சந்திக்க வேண்டும் என்றும் அதிபர் தன்னோடு தொலைபேசியில் கதைத்ததாகவும் கூறினார். அப்போதுதான் நான் அப்பாவிற்கு விடயத்தை கூறினேன். அப்பாவோ அதிபர் காரணம் இல்லாமல் எதுவும் செய்ய மாட்டார், என்று கூறி அதிபரிடம் அழைத்து சென்றார். இங்கே தான் இருக்கிறது நண்பர்களே நல்ல பகிடி. கல்லூரி

## "கல்லூரி வசந்தத்தில்" பார்த்தவர்கள் பாராட்டுகின்றார்கள் பார்க்காதவர்கள் காணத்துடிக்கின்றார்கள்



கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று ஸ்காபுரோ றோயல் சினிமாவில் திரையிடப்பட்ட "கல்லூரி வசந்தத்தில" என்ற குறும்படத்தை பார்ப்பதற்கு அரங்கு நிறைந்த மக்கள் குழுமியிருந்தனர். சுமார் 60 ரசிகர்கள் அனுமதிச் சீட்டு கிடைக்காமல் திரும்பிச் சென்றனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணக் கல்லூரி மாணவர்களால் தற்போது கனடாவில் வசித்துவருபவர்கள் 1984ம் ஆண்டு யாழ்ப்பாணக் கல்லூரியில் கல்வி கற்ற வருமான வி.எஸ். நேசானந்தரினால் தயாரிக்கப்பட்ட மேற்படி படத்தில் கல்லூரி அதிபராக இருந்த திரு. கதிர்காமர் உட்பட பல ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் நடித்துள்ளனர்.

நூற்றுக்கணக்கான ரசிகர்களின் வேண்டுகோளுக்கிணங்க மேற்படி "கல்லூரி வசந்தத்தில்" திரைப்படம் மீண்டும் நாளை மறுநாள் ஞாயிற்றுக்கிழமை ஸ்காபுரோ றோயல் சினிமாவில் திரையிடப்படவுள்ளது.

மேலதிக விபரங்களை (416) 982-9100 என்ற இலக்கத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

யில் படிக்கும்போது அப்பா அதிபரிடம் வந்த நாட்களும் விடயங்களும் வேறு, ஆனால் இப்போது என் கல்லூரி வாழ்க்கையில் முதன் முதலாக எந்த பயம் பீதி கொள்ளாது அப்பாவோடு அதிபர் அறைக்குள் நுழைகின்றேன். அதிபரே தனது பேச்சை முதலில் தொடங்கினர். இவ்வளவு காலமும் கலை சம்பந்தமாக நாடகம், தனி நடிப்பு என்று நல்ல முறையில் நடத்தி சிறப்பித்தாய், இன்னும் கொஞ்சம் கல்லூரிக்காக நீ செய்ய வேண்டியது இருக்கிறது. உன்னுடைய அப்பாவிலும் விட உன்னைப்பற்றி எனக்கு நல்லாய் தெரியும். இதில் நடிப்பதற்கு நீ தான் நம்பிக்கையானவன் என்று கூறி முடிக்க, எனது அப்பாவோ உடனே வைரம் இதில் நடிக்கத்தான் வேண்டும், இதில் நடிப்பார் என்று கூறி முற்று புள்ளி வைத்தார். அதன் பின்பு அதிபர் என்னை பார்த்து உன்ரை அப்பாவோடு நான் நேற்று வடிவாக காரணத்தை கதைத்து விட்டேன். நீ எத்தனையோ நாடகங்கள் எழுதி மாணவிகளையும் சேர்த்து நடித்திருந்தாய். இதுவரை அவர்களாலோ, அவர்களின் பெற்றோராலோ, ஆசிரியர்களாலோ பிரச்சினை எதுவும் வரவில்லை, செல்வரட்ணம் மாஸ்டரின் உறவினரான மாணவி தான் உன்னோடு நடிக்க இருக்கிறா, செல்வரட்ணம் மாஸ்டரும் உன்னோடு நடிப்பது என்றால் சம்மதம் தெரிவித்துள்ளார் என்று விபரமாக கூறி உனது பெயர் யாழ்ப்பாணக் கல்லூரியில் மீண்டும் நிலைப்பட வேண்டும் என்று என்னை உற்சாகப்படுத்தினார்.

அப்போதுதான் எங்கள் மாண்புமிகு அதிபர் ஒவ்வொரு மாணவர் மீதும் எப்படி எல்லாம் கருத்து கணிப்பு வைத்திருந்தார் என்று உள்ளத்தால் புரிந்து கொண்டேன். அவர் என் மீது கொண்ட அசைக்கமுடியாத நம்பிக்கையும், அப்பாவின் மகிழ்வோடு தரப்பட்ட ஆசிகளுடனும், தமிழ் மன்றத்தில் கொண்ட பற்றாலும் புதிய ஓர் மனத்திடத்துடன் நண்பன் நேசானந்தருக்கு தோள் கொடுத்தேன். கப்பலோட்டிய தமிழன் படத்தை திரையிட உதவிய நித்தியண்ணாவை சந்தித்து பேசினேன். படப்பிடிப்புக்களை அவரது தலைமையில் நிறுவி படப்பிடிப்பை ஆரம்பித்தோம். ஒவ்வொரு நாள் படப்பிடிப்பு முடிந்ததும் படக்குழுவுடன் இணைந்து அதிபரும் மாலையில் ஓட்லி மண்டபத்தில் படப்பிடிப்பை பார்த்து மகிழுவோம். அதிபர் ஒவ்வொரு நாளும் தட்டி கொடுத்து உற்சாகப்படுத்துவார். கல்லூரியின் நிஜமான நிகழ்ச்சிகளும், அன்றாடம் மாணவர்களின் கல்லூரியில் நடக்கும் குறும்புகள் நிறைந்த கதம்பங்களையும் ஒன்று சேர்த்து 'கல்லூரி வசந்தத்தில்' என்ற பெயரோடு வெளிவந்தது.

இத்திரைப்படத்தில் ஆசிரியர் பலர் பங்கு பற்றினாலும் ஆசிரியர்களான எலாயஸ், ஜீவா, கனகசபை, ஜெபநேசன், நோயல், சதாசிவம், தர்மன் மற்றும் அதிபர் அவர்களும் முக்கிய வேடங்களில் மற்றைய மாணவ நண்பர்களோடு நடித்தமை பெருமைப்பட வேண்டிய விடயம். இந்த திரைப்படமே கல்லூரியில் முதன் முதலில் எடுக்கப்பட்ட வீடியோ குறுந்திரைப் படமாகும். எங்கள் கல்லூரியின் பழைய மாணவர் டாக்டர் கெங்காதரனும் தனது வைத்தியசாலையில் தமது ஊழியர்களோடு சில காட்சிகளில் நடித்து எமக்கு பெருமை சேர்த்து என்றுமே மறக்க முடியாது.

'கல்லூரி வசந்தத்தில்' திரைப்படம் கல்லூரியில் ஓட்லி மண்டபத்தில் பல முறை திரையிடப்பட்டது. கனடாவிலும் திரைப்பட வெளியரங்கு ஒன்றில் பல முறை திரையிடப்பட்டதாக அறிந்து ஆனந்தமும் பெருமையும் கொண்டேன். இத் திரைப்படம் எடுத்து முடிக்கும் வரை மழை, வெயில், இரவு, பகல் என்று காட்சிகள் எடுத்து முடிந்தால் சைக்கிள் இலும் சில வேளைகளில் அப்பாவின் மோட்டார் சைக்கிள் இலும் நானும் நண்பன் நேசானந்தரும் அலைந்து திரிந்ததை மறக்க முடியாது. எங்களின் அயராத எண்ணத்தால் எல்லாரும் வியக்கும் வரையில் அக் காலத்தில் பெரும் வெற்றி கண்டோம். அந்த வெற்றியின் பலம் எங்கள் அதிபர் அமரர் ராஜன் கதிர்காமரையே சாரும். எங்கள் அதிபரை நாங்கள் வாழும் காலத்தில் எமக்கு தந்த அந்த இறைவனுக்கு என்றும் எங்கள் நன்றிகள்.

நன்றிகள் அன்பு நண்பர்களே.

**என்றும் அன்பு வைரம்.**



# நினைவின் ராகங்கள்...

– யமுனா

ஒரு கரையில் நெல் வயல்கள், மறுகரையில் குடிமனைகளும், ஆலயங்களும் கொண்ட அழகிய வட்டுக்கோட்டை கிராமத்துக்கு சிகரம் வைத்தாற்போல திகழ்வது யாழ்ப்பாணக்கல்லூரி என்னும் மிக நீண்ட பாரம்பரியம் கொண்ட பாடசாலை. இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்னர் தோற்றுவிக்கப்பட்ட இக்கல்லூரி இலங்கையின் வரலாற்றில் ஒரு மைல் கல்லாகவும் அமைந்துவிட்டது.

அமெரிக்க மிஷனரிமாரினால் சகல வசதிகளும் கொண்ட, இரு பாலார் கற்கும் கல்லூரியாக, இரண்டு பெரிய மைதானங்கள், மற்றும் பல்வேறு கட்டங்கள் என்று இதன் விஸ்தீரணம் மிக விசாலமானது.

கல்லூரிக்கென ஒரு பிரத்தியேக முத்திரை போல முகப்பு வாசலருகே நிற்கும் பெரிய ஆலமரம், பத்துப் பிள்ளைகள் சேர்ந்து கட்டிப்பிடிக்குமளவு இதன் பருமன், அதன் குளிர் நிழலின் கீழே ஒரு பானா வடிவில் கட்டப்பட்ட சீமெந்து திண்ணை. அது உண்மையில் பாடசாலை முடிந்தபின் பிள்ளைகள் பெற்றோருக்கு காத்திருக்கக் கட்டப்பட்ட இருக்கை. நாங்கள் அதில் ஏறி விளையாடினோம்.

1971 இல் நான்காம் வகுப்பிலே நான் கல்லூரியில் சேர்ந்தேன். அந்தக் குழந்தைகள் கூட்டத்தில் தவழத் தொடங்கிய நான், நல்லாசிரியர் பலர் என்னைக் கைபிடித்து வழிநடாத்த உயர்தர வகுப்பு வரை முன்னேறினேன்.

நண்பர்கள் பலரை அங்கே கண்டேன், அவர்களில் ஒரு சிலர் இன்றுவரை என்னுடன் கை கோர்த்து வருகின்ற அதிஷ்டம் பெற்றவள் நான். இதைவிட படித்த பல நண்பர்கள் என் ஒரே ஊரானதாலும் இந்த நட்பு தொடர்கிறது.

எவருமே எதிர்பாரா யுத்தம் நாட்டில் வந்து எங்கள் எல்லோரையும் சிதறியோட வைத்தது. யார் யார் எங்கெங்கோ என்றே தெரியாது ஆளுக்காள் உலகின் மூலைகளில் முடங்கிக் கிடந்த இவ்வேளையில்தான் 40 வருடங்கள் கழித்து, WhatsApp என்னும் தொழில்நுட்பம் எங்களை மீண்டும் இணைத்து வைத்துள்ளது.

இத்தனை வருடங்கள் கழித்து நண்பர்கள் இதில் எழுதுவதை வாசிப்பதும், அவர்களுடன் போட்டோக்களைப் பரிமாறுவதும், காலம் எமக்கு போட்ட ஒப்பனையையும் நாங்கள் படித்தபோது இருந்த அந்த குழந்தை முகங்களையும் நினைவில் வைத்து ஒப்பிட்டுப் பார்த்து, இது கனவா அல்லது நிஜமா என்று என்னைக் கிள்ளிப் பார்த்துக் கொள்கிறேன்.

அந்தப் பள்ளிப் பருவ நினைவுகள் நெஞ்சில் வந்து முண்டி யடித்து ஒன்று மாறி ஒன்றாக வந்து முட்டி மோதியதில் என் வயதில் 40 வருடங்கள் குறைந்து விட்டது போலாகினேன்.

அந்த வாழ்க்கை எவ்வளவு அழகானது. அன்பு ஒன்றைத் தவிர வேறெதுவும் தெரியாத கள்ளங்கபடமற்ற அந்த முகங் கள். இன்று அந்த முகங்களில் பல வாழ்க்கைப் படகில் பல புயல்களை எதிர்கொண்டு அடிபட்டு, அல்லற்பட்டு, சிதறி, சின்னா பின்னமாகி தட்டுத் தடுமாறி கரை சேர்ந்து, ஒருவாறு ஆறி அமர்ந்தபின் திரும்பவும் நட்புறவுக் கரம் நீட்டி தொலைந்து போன சந்தோஷங்களை தேடிக் கண்டடைந்து கொண்டாடு கின்றன.

இன்று இந்த 2020-2021 ஆம் ஆண்டில் கொரோனா என் னும் நுண் எதிரி எம்மைத் தேடி அலைகின்றது. எம்மைப் பாதுகாக்க அரசு வீட்டுக்குள் எம்மை அடைத்து வைத்து இந்த எதிரியிடமிருந்து பாதுகாக்கிறோம் என்கிறது. நான்கு பக்கச் சுவருக்குள் மூச்சு முட்ட முடங்கிக் கிடக்கின்றோம். ஆனாலும் இந்த வேளையில் இந்த தனிமை எம்மைப் பைத்தியங்கள் ஆக்காமல் பாதுகாப்பது அந்த நட்புத்தான் என்றால் அது அதிசயம்தான்.

இன்று தாய் நாட்டை விட்டுப் பலரும், தாய் நாட்டில் சிலரும் வாழ்ந்தாலும் எரிச்சல், பொறாமை என்ற பேதங்கள் தாண்டி பணம், பதவி, அந்தஸ்து, சாதி, சமயம் என்ற எல்லைகளைத் தாண்டி சிரிப்பு, கலகலப்பு என்று இந்தக் குழுமத்தில் அன்னி யோன்யமாக இருக்கின்றோம். இது தொடர வேண்டுமென எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன். பல்லாண்டு வாழ்க என்று எங்கள் குழுமத்தை வாழ்த்துகின்றேன்.

## கல்லூரியில் என் முதல் நாள் அனுபவம்

அந்த நாள் ஞாபகம் வந்ததே வந்ததே நண்பர்களே, நண்பர்களே! அன்றுபோல் இனி எந்நாளும் வரப்போவதில்லையே இல்லையே!

1970ஆம் ஆண்டு தைத்திங்கள் பாடசாலை தொடங்கும் நாள் அன்று மூன்றாம் வகுப்பிற்குள் நுழைவதற்காக ஒரு அமெரிக்கன் மிஷன் அரசினர் பாடசாலையி லிருந்து இன்னுமொரு அமெரிக்கன் மிஷன் தனியார் கல்லூரிக்கு மாற்றலாகி அதன் கனிஸ்ட பிரிவு வளாகத்திற்குள் சக கிராம மாணவர்கள் சகிதம் அடியேன் காலடி எடுத்து வைத்தேன். நேராக வகுப்பறையை நோக்கிச் சென்று இருப்பதற்கான இடப்பிடிப்பை ஆரம்பித்து ஒரு மாதிரியாக உறுதி செய்துகொண்டேன். சிறிது நேரத்தின் பின் மணி யடிக்கப்பட்டதும் பலரும் தியான மண்டபத்தை நோக்கி விரைந்தனர். நானும் சிறுவன் தானே அதனாலே எல்லோரும் போனாப்போல நானும் போனேன் என்கிற மாதிரி மண்டபத்திற்குள் சென்றேன். அங்கே பாடல்கள், கதைகள், ஜெபம் என பல நடந்திருந் தாலும் எனக்கு மேலைத்தேய இசைக்கருவியான Piano-வை முதல் முறையாக பார்த்ததும் அதன் இசையொலியை காதுகளால் கேட்டதும் முதல் நாள் அநுபவத்தில் முதலில் இடம்பிடித்துவிட்டது. தியானம் முடிந்து வகுப்பறை நோக்கி உற்சாகமாக விரைந்தேன். முதல்நாள் ஆகையால் சிறு தயக்கம். புதுமுக மாணவ நண்பர்கள், புது ஆசிரியர்கள் என்று இருந்தாலும் மனது கொஞ்சம் மத்தளம் அடிச்சுது, அட்டா இரண்டாம் வகுப்பில் ஒரு வாங்கில் மூன்று பேர் இருந்து படிச்சனாங்க இனி தனியாக ஒரு மேசை, கதிரை அந்த வயசிலே மனப் பூரிப்பை சொல்லவா வேண்டும். அடுத்து ஆசிரியர் வருகை உள்ளேன் ஐயா கணக்கெடுப்புகளுடன் வகுப்புகள் ஆரம்பம், பாடப் புத்தக விபரங்கள், ஒற்றை றூல், இரட்டை றூல், சதுர றூல் கொப்பிகள் எத்தனை எத்தனை என்ற லிஸ்ருகள். இவைகளுக்கிடையே தேநீர், மதிய உணவு இடைவேளை கள் இவைதான் நெல்லிமர நிழலிலும், மலைவேம்பினடியிலும் நண்பர்களை ஒன்றி ணைத்த வேளைகள். அன்று தானாக சேர்ந்த நட்புக் கூட்டம் ஆண்டுகள் தோறும் விருத்தியடைந்து 1980-இல் கல்லூரி நினைவுச் சின்னங்களில் ஒன்றான ஆலமரத்தி னைப் போல் பெரு விருட்சமாகி இன்று உலகெலாம் பரந்து வாழ்கின்றனர்.

**- கதிர்ராஜ்**




# எழுதித் தீராத கவிதை

ச.தில்லைநடேசன்

பள்ளிபருவம். காலநதி எவ்வளவு அனுபவ அடுக்குகளை வீசிச் சென்று இருந்தாலும் இனிக்கும் நினைவுகளாய் ஏகாந்தவேளையில் மேல் எழும்பி ராகம் பாடுவது கல்லூரி நினைவுகளே. நினைவுத் திரையை விலக்கி பார்க்கின்றேன் அது 1971ம் ஆண்டு யாழ்ப்பாணக்கல்லூரிக்குள் 4ம் வகுப்பு மாணவனாய் நுழைகின்றேன்.

யாழ்ப்பாணக்கல்லூரி பற்றி சிறுவயதிலேயே கனவுகள் எனக்குள் விதைக்கப்பட்டிருந்தது. யாழ்ப்பாணக்கல்லூரி மக்கள் மனதில் பதிந்த சமூக நிறுவனம். அதன் புகழ் சாதரண மனிதர்களாலும் அடிக்கடி சொல்லப்பட்டது. இயற்கை எழில் கொஞ்சும் அழகான சூழல். பச்சை பசேலென வயல்வெளி ஒருபுறம். ஓங்கி உயர்ந்த மரங்கள். பதினெட்டு வயது பருவப் பெண்ணை சுண்டி விட்டது போல் கம்பீரமான கட்டிடங்கள். பச்சைப் புல்விரிப்புக்கொண்ட மைதானங்கள். பாடசாலைக்குள் நுழையும்போது கனவு உலகத்தில் நுழைந்தது போல் இருந்தது. விருப்பமும் பயமும் கூடவே வந்தன. புதிய பள்ளிக்கூடம், புதிய ஆசிரியர்கள், புதிய மாணவர்கள்.

அந்தப் பயம் சில நாட்களில் தீர்ந்து போனது. எங்கள் பாடசாலையின் மரங்களும் செடிகளும் பூக்களுமே எனக்கு முதலில் சிநேகிதமாயின. வானைத் துலாவும் நெல்லிமரம், சிவப்புப் பழங்கள் உதிர்க்கும் விழுதெறிந்த ஆலமரம். சுழலும் விதைகள் தூவும் மலைவேம்புகள். மஞ்சள் மலர்களை பச்சை புல்விரிப்பில் வீசிவிட்டு மைதானத்தின் அழகு கூட்டும் மதிலோரத்து மரங்கள். நான் அந்த மலர்களையும் மரங்களையும் அணைத்தபடி இப்போதும் உறங்கிப்போவதுண்டு.

## சிற்பிகள்

களிமண்ணை கையில் கொடுத்தாலும் அதனை அழகு சிற்பம் ஆக்கும் ஆசிரியர்கள் எங்களுக்கு கிடைத்தனர். ஸ்னோவைற் கதையையும் அப்போது ஐரோப்பாவில் அறிமுகமான நவீன கருவிகள் பற்றியும் ரசிக்கும்படி சொன்ன சுகந்தி ரீச்சர் முதலில் மனதில் பதிந்தார். இதன்பின் எத்தனை ஆசிரிய, ஆசிரியைகள்... எழுதினால் காவியம் எழுதலாம்.

என் வகுப்பு மாணவ, மாணவிகள் இப்போது நினைத்து பார்க்கும்போது எழுத்தில் வடிக்க முடியாத உணர்வு. வசதியான குடும்பப் பின்புலங்கள், ஆனால் அதற்காக கலந்து பழக அவர்கள் மறக்கவில்லை. இப்போதும் சின்னஞ்சிறு சம்பவங்களையும் நினைவில் வைத்து அவர்கள் சொல்லும்போது மலைத்து போகின்றேன். எங்கள் மாணவகுழாமில் பல அசாத்தியமான திறமை தேவர்கள் இருந்தார்கள். அறிவுடன் அன்புசொட்ட பேசும் அழகு தேவதைகளும் இருந்தார்கள். கல்வி, கலை, விளையாட்டு எல்லோரும் போட்டி போட்டாலும் எங்களிடம் பொறாமையில்லை. வாழ்வை, சமூகத்தை எனக்கு கற்று தந்ததில் இவர்களுக்கும் பங்கு உண்டு.

பாடசாலை என்பது என்ன அதுவும் சமூகத்தின் ஒருபகுதி தானே. சமூகத்தில் இருந்த அவ்வளவு முரண்பாடுகளும் பாடசாலையிலும் இருந்தன. அதன் வெளிப்பாடுகளாக சில மாணவர்கள் இருந்தார்கள். அவர்களிடம் இருந்தும் நான் பாடம் கற்றுக் கொண்டேன்.

### கதைசொல்லி

என்வாழ்வில் நான் சந்தித்த அற்புதமான கதை சொல்லி பொன்னம்பலம் மாஸ்ரர்.அவர் வகுப்புக்கு வரமுன்பு அவரது அற்புதமான வாசனை தைல வாசம் வரும். வேட்டி நசனல் சேட் அவருக்காக கண்டுபிடிக்கபட்டது போல் அவ்வளவு பொருத்தம். தமிழும் சங்கீதமும் அவர் நாவில் நடம் புரிந்தது.

ஆர்மோனிய பெட்டியை வாசித்தபடி பாடும் பாடல்கள் இப்போதும் காதில் கேட்கின்றது. ஒரு மேடை பாடல் நிகழ்வுக்காக பயிற்சிகொடுத்து இருவரை தேர்ந்தெடுத்தார். ஒரு மாணவி, ஒரு மாணவன். மாணவனாக என்னையும் மாணவியாக வசந்தகுமாரியையும் தேர்வுசெய்தார். பின்பு ஒருவர் பாட வேண்டி வந்ததால் வசந்தகுமாரி பாடினார். அற்புதமான பாடகி. பொன்னம்பலம் மாஸ்ரர் கதைசொல்லி கேட்க புண்ணியம் செய்திருக்கவேண்டும். அவர் சொன்ன மகாபாரதம், இராமயண கதைகள் அக்காலத்தில் நாங்கள் பீமனோடும், அருச்சுனனோடும், திரோபதையோடும் வாழ்ந்ததாக ஞாபகம்.

ஏழாம் வகுப்பு முடிந்துவிட்டது, மகாபாரத கதை பாதியில் நின்றது. அடுத்த வகுப்புக்கு அவர் வரமாட்டார். எஞ்சிய கதையை எப்படிக் கேட்பது ஆவலோடுபோய் அவரிடமே கேட்டேன். என்னை கையை பிடித்து நூல்நிலையத்துக்கு அழைத்துச் சென்று ராஜாஜி எழுதிய வியாசர் விருந்து எனும் மகாபாரத கதையை எடுத்து தந்தார். அன்று தொடங்கிய நூல் வாசிப்புத் தான் இன்றுவரை தொடர்ந்து வந்து கொண்டு இருகின்றது.

### பட்டம்சூட்டி

ஐந்தாம் வகுப்பு. எங்களுக்கு பல தோழர்கள் தோழியர்கள். இந்துமதி, சாந்தினி, யமுனா, சியாளினி, கல்யாணி, சந்திரிக்கா... சுவேந்திராஜ், யோகன், உமாசங்கர், ஜெயசந்திரன், உதயக்குமார், சுதர்சன், முத்துலிங்கம், தேவநாயகம், தேவராஜ்.... இன்னும் சொல்லிகொண்டே போகலாம். எனினும் கூடுதலாக நான், மணிவாசகர், அமிர் ஆகிய மூவரும் ஒன்றாகத் திரிவது வழக்கம். இதனை சச்சிதானந்த மாஸ்ரர் கவனித்து பார்த்துள்ளார். ஒருநாள் மதிய உணவு முடித்து மைதானத்துக்குள் விளையாடி விட்டு வகுப்புக்கு நேரம் சென்று வந்தோம் அப்பாடம் சச்சிதானந்த மாஸ்ரரின் சமயபாட நேரம். தயங்கி, தயங்கி வகுப்புக்கு வந்தோம். சச்சிதானந்த மாஸ்ரர் கிண்டலாக வாங்கடா மும்மூர்த்திகளா எங்கே காணவில்லையென்று பார்த்தன் என்றார். வகுப்பு முழுக்க குலுங்கி சிரித்தது. அன்று முதல் எங்களை மும்மூர்த்திகள் என்று அழைப்பது வழக்கம். இபோது இதனை ஞாபகம் வைத்திருந்து தோழர் தோழியர் சொல்லிச் சிரித்தார்கள்... அப்போதுதான் எனக்கு தெரிந்தது நான் மட்டும் பள்ளிக்கூட ஞாபகத்துடன் வாழவில்லை எல்லோரும் தங்கள் நினைவுகளில்தான் வாழ்கின்றார்கள் என்பது.

மூவருக்கும் பட்டம் சூட்டிய சச்சிதானந்த மாஸ்ரர் எனக்கு தனிய ஒருபட்டம் சூட்டினார். அவர் பாடவகுப்பு எப்போதும் கலகலப்பாக இருக்கும். அவர் சிறந்த நகைச்சுவையாளர், அதுபோல் கேள்விகேட்பதையும் ஊக்குவிப்பார். கேள்விகளுக்கு சளைக்காமல் பதில் சொல்வார். எனக்கு அப்போதே மதம் பற்றி நிறையக் கேள்விகள் இருந்தது. வகுப்பில் நான்தான் அவரிடம் நிறையக் கேள்விகள் கேட்பேன். ஒருநாள் என் கேள்வி ஒன்று அவரை திகைக்கவைத்தது. என் அருகில் வந்தார். என் தலையை தடவினார். என்ன கேள்வி. உனக்கு கூர்மண்டையடா, கூர்மூளையாடா என்றவாறு நிறைய நுணுக்கமான கேள்வி கேட்கின்றாய் என்றவாறு பதில் சொன்னார். அன்றுமுதல் எனக்கு 'கூரன்' என்பது பட்டம் ஆனது.

### கண்டிப்பு, மாணவநேயம்

ஒன்பதாம் வகுப்பு படிக்கும்போது எனது குடும்பம் கொழும்பில் இருந்தது. நான் அம்மம்மாவோடு இருந்து படித்தேன். பாடசாலைக்கு இடைக்கிடை கட் அடித்தேன். இதனை பொன்னுத்துரை மாஸ்ரர் அவதானித்து விட்டார். ஒருநாள் வகுப்பில் வைத்து கண்டித்து தனியாக அழைத்துச் சென்று அறிவுரை சொன்னார். அன்றுமுதல் பாடசாலைக்கு ஒழுங்காக வந்து படிப்பை தொடர்ந்தேன். அவர் என்னை அப்படி கவனிக்காமல் விட்டிருக்கலாம், ஆனால் படிக்கக்கூடிய மாணவன் வழிதவறிப் போகக்கூடாது என்ற கண்டிப்பு இப்போது நினைத்தாலும் வணங்கத் தோன்றுகின்றது.

பொதுவாக யாழ்ப்பாணக்கல்லூரி எங்களுக்கு அடிப்படைப் பண்புகளை, ஒழுக்கத்தை போதித்தது. கல்வி, கலை, விளையாட்டு, பொதுவெளியில் பழகும் முறை, பெண்களை தோழியராக, நேசிப்புக்குரியவராக பழகும் முறையையும் கற்றுத் தந்தது. அறிவுத்தளத்தில் இருந்து சகலதையும் பார்க்கும் திறனை, சமூகமுரண்பாடுகளின் அறிமுகத்தையும் அது பற்றிய தேடலையும் கல்லூரியே எனக்குள் விதைத்தது. இன்றும் கலை, இலக்கியவாதியாகவும் எழுத்தாளனாகவும், ஆய்வாளனாகவும் பொதுவெளியில் இயங்க எனக்கு அடிப்படை போட்டுத் தந்தது எங்கள் யாழ்ப்பாணக்கல்லூரியே.

இங்கு சிதறியவை சில துளிகளே. ஒரு நினைவு நதியே மடைதிறந்து பாய்ந்து கொண்டு இருக்கின்றது. பார்ப்போம் எங்காவது இடம் கிடைத்தால் நதியை ஓடவிடுவோம்.



# நெஞ்சில் நிலைத்த கோலங்கள்

எங்கள் யாழ்ப்பாணக்கல்லூரித் தாய்க்கும் என் இனிய நண்பர்களுக்கும், என் இனிய வணக்கங்கள். அன்றில் இருந்து இன்று வரையில் பலவித எண்ணங்களோடும் ஆவலோடும், உங்களின் அன்பினால் இதயம் கட்டுண்டு என் இனிய நண்பர்களுடன் அன்று போல் இன்றும் இணைந்து நிற்கின்றேன். எல்லாம் எங்கள் கல்லூரி கற்று தந்த பாடங்களே.

சரி என் இனிய நண்பர்களே! எனது கல்லூரியில் படித்த காலத்தின் சொர்க்க நினைவலைகளை உங்கள் அனைவ ரோடும் பகிர்ந்து கல்லூரியின் வளாகத்திற்கு உங்களை அழைத்து செல்கின்றேன். எனது எண்ணங்களை எங்கள் தாய்மொழிதனில் வடிவமைத்தாலும் இடையில் ஆங்கில சொற்பதங்களும் வந்து போவதும் இயல்பாகின்றது. எனது ஆரம்ப கல்வியை வட்டு கார்த்திகேய வித்தியாலயத்தில் படித்து முடித்து தொடர்கல்விக்காக பெருமை மிக்க எங்கள் கல்லூரிக்கு நான் 6ம் வகுப்பு A பிரிவில் வந்து சேர்ந்தேன். பெரிய கல்லூரி என்பதினால் ஒரு புறம் மகிழ்ச்சியும் மறுபுறம் ஏக்கமும் ஏற்பட்டது. இருப்பினும் எனது தந்தையாரும் இங்கு தானே கற்றவர் என்று மனதில் வலுக்கட்டாயமாக ஒரு திடத்தை ஏற்படுத்திக்கொள்வேன். முதல் மூன்று நாட்கள் கடந்து சென்றதும் பின்பு முப்பது நாட்கள் கல்லூரியில் படிப்பது போன்ற எண்ணம் என் மனதில் தோன்றியது.

எனது வகுப்பில் என்னோடு சங்கர், றோய், ராஜநாயகம், ரஞ்சன், யோகன், கொட்வின், நிதி, பது, நரேந்திரமோகன், கிரிதரன், ரிஷாங்கன், சந்திரி, வசந்தி, இந்து, சியாமளா, ஞானா, பத்மா, மல்லி என்று பல நண்பர்கள் படித்தார்கள். அன்று நான் கண்ட நண்பர்கள் இன்றும் எங்களின் இனிய குழுமத்தில் இருப்பதை எண்ணி பெருமகிழ்ச்சி அடைகின் றேன். ஞாபகம் வருதே! ஞாபகம் வருதே! என்ற பாடல் கேட்கும் போதெல்லாம் உங்கள் அனைவரது நினைவுகளும் என் உள்ளத்தை இனிய தென்றலாய் வருடிச் செல்லும்.

இனி அனைத்து மகிழ்வான மறக்கமுடியாத விடயங்களை எண்ணிப்பார்க்கிறேன். பதுமநிதி, கதிராஜ், சுவேந்திராஜ், ஜெயராஜ், ராஜநாயகம், நிதிராஜ், ஜெயரஞ்சன், குணசங்கர், ரிஷாங்கன் எல்லோரும் சேர்ந்து கல்லூரி வளாகத்தின் பெருமை சொல்லும் அந்த ஆலமரத்தடியின் பானா இடத்தில் புழுதி பறக்க மாபிள் அடித்து மகிழுவோம். சும்மா தணல் பறக்கும். பதுமநிதி அப்போது சற்று உடம்பானவர் என்றாலும் அட்டகாசமாக விளையாடுவான். பூச்சியன் மாபிள் நிறைய வைத்திருப்பான். அந்தக்காலத்தில் நாங்கள் நடந்து திரியும் போது மாட்டின் சலங்கைச் சத்தம் போன்று பொக்கற்றுக்குள் இருக்கும் மாபிள் சத்தம் தான் கேட்கும். நண்பர்கள் நாங்கள் ஒன்றுகூடும் போது திரும்பவும் மாபிள் அடித்து விளையாட முடியும் என்றால் விளையாடிப் பார்ப்போம்.

எனது கல்லூரி வாழ்க்கையில் எங்களின் அதிபர் முதற் கொண்டு ஆசிரியர்கள் அனைவரையும் என்றுமே மறக்க முடியாது. எங்களின் இன்றைய வாழ்க்கைக்கு உறுதியான தூண்களாக இருந்தவர்கள். அவர்களில் சிலர் இன்று இவ் வுலகில் இல்லை, இருப்பினும் அவர்களின் செயற்பாடுகளை எண்ணி நினைவு கூர்வதோடு நன்றிகள் நிறைந்த வணக் கத்தை என் மூச்சுள்ளவரை செலுத்திய வண்ணமே இருப் பேன்.

ஆசிரியைகளாக இருந்த எலாயஸ், சிற்றம்பலம், சுகந்தி, குல சிங்கம், அம்பலவாணர், பாலசிங்கம், செல்வமணி, கேசவ ராஜன் அவர்கள் அனைவரையும் என்றுமே மறக்க முடியாது. அதேபோல் ஆசிரியர்களாக முதலில் எங்கள் அதிபர் ராஜன்-கதிர்காமர், சச்சிதானந்தம், சின்னையா, பொன்னம்பலம், பொன்னுத்துரை, செல்வரட்ணம், கனகரட்ணம், கனகசபா பதி, பூரூடி, அமிர்தநாயகம், ஜெபநேசன், ராஜசிங்கம், நோயல், ஆனந்தரட்ணம், தர்மன், ஜெயராஜா, சதாசிவம், தங்கராஜா, போன்றவர்களை என்றுமே என்னால் மறக்க முடியாது.

நான் விளையாட்டில் அதிக நாட்டம் கொள்ளவில்லை.

ஆனால் ஆரம்பத்தில் இருந்து இறுதி வரை விளையாட்டு மைதானத்தில் விளையாடும் வீரர்கள் அனைவருக்கும் பார்வையாளனாக இல்லாது பக்கபலமாக இருந்து முழு ஆதரவையும் கொடுத்து வந்தேன். கிரிக்கெட், கால் பந்து, ஹாக்கி என்று வரும் போது விளையாட்டு வீரர்கள் வந்தார்களோ இல்லையோ நாலைந்து பரிவாரங்களுடன் கல்லூரியின் குரல் எழுப்பி மைதானத்தில் ஆதரவு தெரிவிப் பதற்கு கல்லூரியின் சிவப்பு மஞ்சள் கொடியோடு நிற்பேன். எமது கல்லூரி வீரர்கள் வேறு கல்லூரிக்கு சென்று விளை யாடினாலும் ஒருவாறு அவர்கள் செல்லும் வேனில் ஏறிச் சென்று ஆதரவும் கொடுத்து வந்தேன். இன்றும் நினைவு கள் பசுமையாக தெரிகின்றது. படிப்பை தவிர குறும்போடு இணைந்த பல விடயங்களில் நான் முதல் தரம் தான். இதை எழுதும்போது உனக்கு வெட்கமாக இல்லையா என்று என் பேனா முனை என்னை கேட்கிறது. 'சே சும்மா போ' என் நண்பர்களுக்கு தெரியாததையா நான் எழுதுகிறேன் என்று தொடர்கிறேன்.

எனது கல்லூரிக்காலத்தில் சில விடுதி மாணவர்களும் என் உற்ற நண்பர்களாக இருந்தார்கள். நான் செய்யும் குறும்புக ளுக்கு என்னோடு துணை நிற்பார்கள். அவர்கள் செய்யும் குறும்புகளுக்கும் நானும் துணை நிற்பேன். அதில் நெப் போலியன் தான் எங்கள் தேவா. ஒரு முறை சின்னையா மாஸ்டர் வீட்டின் முன்பாக பிரவுண் பீல்ட் மதில் கட்டப்பட்டது. கட்டிய அன்று மாலையே அது இடிந்து விழுந்தது. என்ன சீமேந்து கலவை சரியில்லை என்று நினைக்கிறீங்களா? இல்லை ! அது எங்கள் தலைகளினால் முட்டி விழுத்தப்பட்டது தான் உண்மை. பின்பு சின்னையா மாஸ்டரிடம் கடி வாங்கி யதும் ஆனந்தரட்ணம் மாஸ்டர் எனது அப்பாவிடம் வந்து கூறி கடியும் அடியும் வாங்கியது ஞாபகத்திற்கு வருகிறது. விடுதி மாணவர்களின் தினங்களின் போது அவர்களோடு ஒன்றாக கலந்து நின்று செயற்படுவேன். இன்றும் என் நண் பன் தேவாவின் அன்பையும் பண்பையும், குறும்பையும் மறவேன்.

பின்பு ஒரு காலகட்டத்தில் யாழ் மத்திய கல்லூரி அதிபரை இடம் மாற்றம் செய்த காரணத்திற்காக எதிர்ப்பு தெரிவித்து யாழ்மாவட்டத்தில் உள்ள அனைத்து கல்லூரிகளுக்கும் மத்திய கல்லூரி மாணவர்களினால் பகிஷ்கரிப்பு செய்து ஆதரவு தருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. எங்கள் கல்லூரி அதிபருக்கு ஏதும் என்றால் விட்டுவிட்டு சும்மா இருப்போமா? என்று அன்றைய நேரத்தில் தோன்றியது. அதனால் நானும் எனது நண்பர்களும் சுவேன், சுகல்ஜன் உட்பட சேர்ந்து அதற்கான வழிமுறைகளை மேற்கொண்டு எல்லா மாணவர்களையும் கல்லூரிக்கு செல்லாது தடுத்து திருப்பி அனுப்பினோம். சுகல்ஜன் அப்போது கல்லூரி மாணவர் தலைவராக இருந்தவன். கல்லூரி அதிபர் நுழை வாசல் பக்கம் வருவதைக்கண்டு பலர் கல்லூரிக்குள் சென்று விட்டார்கள், பின்பு நாங்கள் கல்லூரி வீதியை சுற்றி 'பந்தம் பிடிக்கும் மாணவர்களே வெளியே வா, போட்டு கொடுக்காதே, போட்டு கொடுக்காதே, நாங்கள் என்றும் தோழர்கள்' என்று கத்தி, குளறி ஆர்ப்பாட்டம் செய்தோம். மாணவர்களுடன் உட்சென்ற சுகல்ஜன் மட்டும் நூலகத்திற்கு வருவது மாதிரி வந்து 'மச்சான் சொறியடா நான் ப்ரீபெக்ட் என்பதால் குறை வரும்' என்று கூறிவிட்டு வகுப்பிற்கு சென்று விட்டான் ஆனால் இதை பாலச்சந்திரன் மாஸ்டர் (பாச்சா) கண்டு விட்டார். பிறகு என்ன அவனும் மறைமுகமாக கடி வேண்டி யது தான். இது சுகல்ஜனுக்கு நினைவு இருக்கும் என்றே கருதுகின்றேன். சுகல்ஜனின் அன்றைய தோழமைப் பண் பாட்டை இன்றும் அவனோடு கதைக்கும் போதும் பழகும் போதும் நான் உணர்கின்றேன். நட்புறவு மேல் கொண்ட மதிப்பு இன்றுவரை நிலைத்து நிற்கின்றது.

அதன்பின் நண்பர்கள் ஜெயசீலன், சுவேனுடன் எங்களின் ஆர்ப்பாட்டம் தொடர்ந்தது. அப்போது நான் வர்த்தகப்பிரிவில் படித்துக்கொண்டு இருந்தேன். எங்கள் வகுப்பு போஸ்ட் ஆபீஸ்க்கு முன்னால் இருந்தது. காரைநகர் றோட்டால் கும்மாளம் அடித்து வரும் போது உள்ளே இருந்த எங்கள் வகுப்பு மாணவர்கள் சிலர் மீதும் எங்களுக்கு வெறுப்பு ஏற்பட்டது. சுவேன் எனது சைக்கிளை மிதிக்க ஜெயசீலன் பின்னுக்கு தொடர நான் கிழே இறங்கி ரோட்டில் இருந்த சாணியை எடுத்து யன்னல் வழியாக எறிந்தேன். எட்டி எறியும் போது புரூடி மாஸ்டர் எங்கள் வகுப்பில் இருந்தார். நேருக்கு நேராக கிளீன் போல்ட், பின்பு ஓடி வந்து சுவேனின் சைக்கிளில் ஏறும் போது சுவேனும் இரண்டாவது கிளீன் போல்ட். நானும், சுவேனும், ஜெயசீலனும் கல்லூரிக்காலத் தில் இணை பிரியாத நண்பர்கள். அதுமட்டும் அல்லாது எனது அப்பாவும், புரூடி மாஸ்டரும் நண்பர்கள் அதனால் அன்றில் இருந்து இன்றுவரை எங்கள் நட்பு மாணவ பராயத்தையும் தாண்டி குடும்ப நட்பாக இணைந்து நிற்கின்றது. பின்பு என்ன புரூடி மாஸ்டரே அதிபரிடம் நேரில் சென்று ஆர்ப்பாட்டக்காரர் இருவரை தனக்கு தெரியும் என்று அடையாளப்படுத்திவிட் டார். ஆர்ப்பாட்டம் நடந்தது ஒரு வெள்ளிக்கிழமை. சரி இன் னும் இரண்டு நாட்கள் இருக்கின்றன என்று மனதினை ஆற்றிக் கொண்டோம். பின்பு திங்கள்கிழமை எல்லோரும் கல்லூரி வளாகத்துக்கு சென்று கொண்டு இருந்தார்கள். நானு ம் வழமை போல சைக்கிளை பார்க்கிங் இல் விட்டு விட்டு நகர்ந்தேன். அப்போதுதான் ஓட்லி மண்டபத்திற்கு முன்னால் ஆப்பு இருந்தது.

அதிபர் கம்பீரத்துடன் ஒவ்வொரு மாணவர்களையும் 'நீ அங்காலே போ, நீ இங்காலே வா' என்று பிரித்து எடுத்துக் கொண்டு இருந்தார். நான் இதை கண்டதும் பதை பதைத்து போனேன். பின்பு மனதை திடப்படுத்திக்கொண்டு நான் எந்த பக்கத்தில் நிற்க வேண்டுமோ அந்த பக்கத்தில் நானாகவே போய் நின்று விட்டேன். பின்பு சுவேன், ஜெயசீலன் என்று எங்கள் கூட்டம் அதிபரின் ஆபீஸ் அறையில் நின்றோம். அதிபரோ கையில் பிரம்பை எடுத்த வண்ணம் தயாராகிக் கொண்டு தனது பேச்சை தொடங்கி முடித்தார். அடி வேண்டு வது என்று காலம் பதில் கூறிவிட்டது என்று நினைத்து

வருத்தப்பட்டேன். அதிபரோ 'எனக்கு எல்லாம் தெரியும்'. யாழ்ப்பாணக்கல்லூரி சரித்திரத்திலேயே இப்படி ஒருமுறை யும் நடக்கவில்லை என்று கூறி 'யார் யார் இதற்கு பொறுப்பு' என்று அதட்டிய வண்ணம் கையை நீட்டச் சொன்னார். நான் உடனே என் கையை நீட்டிக் கொண்டேன். நான் நின்ற இடமோ பத்தோ பன்னிரண்டாவது இடம். மற்றவர்கள் எல்லோரும் கையை நீட்டாது சும்மா நின்றார்கள். எனக்கு சற்று கடுப்பாகவும் இருந்தது, ஆனால் அதிபரோ எல்லோரை யும் பார்த்துவிட்டு தனது இருக்கையில் அமர்ந்து கொண்டு ஆலோசனைகள் வழங்கினார். அப்போதுதான் அவரின் கருத்தாற்றலை புரிந்து கொண்டேன்.

எமது காலத்தின் போது கிடைத்த சிறந்த அதிபர் மட்டும் அல்ல மனிதநேயம் கொண்ட மாமனிதராக இன்றும் கருதுகிறேன். ஆபிஸை விட்டு வெளியே வந்ததும் உன்னால் தான் தாங்கள் தப்பித்து விட்டதாக நண்பர்கள் கூறினார்கள். கடுப்பாக இருந்தாலும் நட்புரிமையோடு, விட்டு விட்டேன். ஆனால், அதிபர் நாளை வரும்போது பெற்றோர் சகிதம் வரச்சொல்லி யது அடுத்த பீதியை கிளப்பியது. ஒருவாறு என் அக்கா மூலம் அம்மாவிடம் கூறி அப்பாவிற்கு தெரியப்படுத்தினேன். என் அப்பா வீறுகொண்டு எழும்பி கர்ச்சித்தார். நாளை அதிபருடன் கதைத்து விட்டு என்னை கல்லூரியில் இருந்து மாற்றப் போவதாகக் கூறினார். அடுத்த நாள் காலை வழக்கம் போல் வகுப்பிற்கு சென்றோம். காலை 10.30 மணியளவில் கல்லூரி பீயோன் வந்து என்னை அதிபரின் ஆபிசுக்கு வரச்சொல்லி கூறினார். எனக்கு விளங்கி விட்டது எனது அப்பா வந்துவிட் டார் என்று, குலைநடுக்கத்தோடு சென்றேன். அங்கு சென்ற தும் எனது அப்பாவின் அதட்டலான பேச்சும், அதிபரின் அப் பாவை சமாதானப்படுத்தும் பேச்சும் அமர்க்களமாக இருந்தது. கடைசியில் அப்பா என்னை கல்லூரியை விட்டு மாற்றப் போவதாக அதிபருக்கு தெரிவித்தார். அதிபர் அதற்கு மறுப்பு தெரிவித்த வண்ணமே இருந்தார். அதிபர் என்னிடம் நல்ல திறமைகள் இருப்பதாகவும், பல பேச்சு போட்டிகள், பட்டி மன்ற விவாதங்கள், நாடகங்கள், தனி நடிப்பு என்று கல்லூரிக்கு பெயர் வாங்கி கொடுத்த ஒரு மாணவனை தான் அனுப்ப முடியாது என்று கூறினார். எனது அப்பாவோ விடவில்லை இறுதியில் அதிபர் கல்லூரியை விட்டு போவதற்கு எனக்கு விருப்பமா என்று கேட்டார். நான் அதற்கு 'எனக்கு விருப்ப மில்லை நீங்கள் விரும்பினால் நான் கல்லூரியை விட்டு செல்கிறேன்' என்று கூறினேன். பின்பு அதிபர் என்னை வகுப் பிற்கு செல்லுமாறு கூறிவிட்டு அப்பாவோடு தனது கருத்துக் களை பரிமாறிக் கொண்டு இருந்தார். நான் எனது வகுப்பிற்கு சென்று விட்டேன். மதியம் நான் வீட்டிற்கு சென்றபோது எனது கல்லூரி அதிபர் என் மீது வைத்துள்ள அக்கறை, அன்பு பற்றி அப்பா எடுத்துரைத்தார். நானும் எனது அதிபர் என் மீது கொண்ட புரிதலை புரிந்து கொண்டேன்.

சில காலங்கள் கழிந்தது பின்பு எனது அப்பா, அதிபர், பூரூடி மாஸ்டர் ஆலோசனைக்கு ஏற்ப நான் கல்லூரி விடுதியில் சேர்ந்து தங்கியிருந்து எனது கல்வியைத் தொடர்ந்தேன். விடுதி வாழ்க்கையும் சுவாரஸ்யமானது. அங்கு சென்ற பின்பு என் கூத்தும், கும்மாளமும் சற்று குறைவாகவே இருந்தது. ஆரம்பத்தில் யோக்கிம்பிள்ளை எனது விடுதியின் அறை நண்பன் ஆனான். பின்பு அவன் விடுதியை விட்டு சென்றபின் முரளிதரன் எனது ரூம் மேட் ஆக வந்து சேர்ந்தான். முரளி ஏற்கனவே எனது நண்பனாக இருந்ததினால் மேலும் அதிக நட்பு, பாசத்துடன் பழகி வந்தோம். விளையாட்டுத் துறையாக இருந்தாலும் சரி, வேறு துறையாக இருந்தாலும் சரி, எனக்கு ஓர் நல்ல நண்பனாக இருந்து நல்ல ஆலோசனைகள் தந்த வண்ணமே இருந்தான். முரளியை நினைக்கும்போது கவலை அடைகின்றேன். இன்று தாயக மண்ணில் வித்தாகி ஓர் முத்தாகி விட்டான். அதேபோல் ஆனந்தனும் (குப்பு) எனது கல்லூரி விடுதி நண்பனும் வித்தாகி முத்தாகி விட்டான். இருவரோடும் விடுதியிலும் கல்லூரியிலும் பழகி வாழ்ந்த வாழ்க்கையை மறக்க மாட்டேன். மறக்கவும் முடியாது.

அடுத்து என் கல்லூரி வாழ்க்கையில் செல்வரட்ணம் மாஸ்டரி டம் மோட்டார் மெக்கானிக் பற்றி அறிந்தது. ரேடியோ மெக்கா னிக் பற்றி அறிந்து படித்து நான், சுவேன், மோகன் மூவரும் ரேடியோ செய்து இயக்கி மனமகிழ்ச்சி அடைந்ததும், கல்லூரி யின் தொழில்நுட்ப கல்லூரிக்கு சென்று என்ஜின், கியர் பொக்ஸ் இயங்கும் விபரங்கள் பற்றி அறிந்து வந்தது இன்றும் என் நினைவில் உள்ளது. விவசாயப் பாடத்தின்போது சின்னையா மாஸ்டரின் வீட்டுக்கு செல்லும் போது இந்துவின் அம்மா மாஸ்டருக்கு தெரியாமல் பிஸ்கட் தந்து உபசரிப்பா. கனகசபை மாஸ்டரிடம் இருந்து தும்பு வேலை கற்று கால் துடைப்பம், தும்புத்தடி செய்தது. பொன்னுத்துரை மாஸ்டரிடம் மரவேலை பழகி சாம்பிராணி குச்சி குத்தி வைக்கும் நிறுத்தி செய்ததும், பத்திரிகைகள் வைப்பதற்காக நிறுத்தி செய்ததும், கேத்திர கணிதம் படித்ததும், அமிர்தநாயகம் மாஸ்டரிடம் களிமண் வேலை, சித்திரம் கற்றதும் நெஞ்சை விட்டு அகலாது உள்ளது. பொன்னுத்துரை மாஸ்டரின் அலுமினிய அடிமட்டம் யாருமே மறக்க முடியாது. அவரது 'நடுச் சென்டர்' பகிடியை யாருமே மறக்க மாட்டீர்கள் என்றே நினைக்கிறன்.

என் இனிய நண்பர்களே ! 2019ம் ஆண்டு பதுவின் லண்டன் வருகையினால் எங்கள் இனிய குழுமம் தொடங்குவதற்கான வித்திடப்பட்டது, அன்று சிவசீலனினால் சுகல்ஜன், பது, பிறேம், மற்றும் சில நண்பர்களோடு கதைக்கும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது. அன்று எடுத்த நண்பர்களின் முயற்சியி னால் சுகல்ஜன், பதுவின் முயற்சி பக்குவம் அடைந்து பலம் பெற்று எங்கள் கல்லூரியின் ஆலமரம் போன்று எங்களின் குழுமம் பெருவிருட்ஷமாக விளங்குகிறது. நடப்புறவோடு பாசமும் அன்பும் நிறைந்து ஆலமரத்தின் விழுதுகள் போல தாங்கி பிடித்து உரிமையோடு தோள் கொடுத்து நிற்கின்றது. எங்கள் இனிய குழுமத்தை நண்பர்கள் நாம் அனைவரும் ஒன்றிணைந்து பலப் படுத்தி ஒருமித்து தோள் கொடுப்போம்! வளர்க! வாழ்க! எங்கள் கல்லூரி தாய்! வாழ்க! வளர்க! எங்கள் இனிய குழுமம்.

**என்றும் அன்பு வைரம்.**





# எம் கல்லூரியில் ....
# என் நினைவுகள்.....

இலங்கையில் வடமாகாணத்தில் பழமையும் பெருமையும், புகழ்பூத்த நீண்டபெரும் பாரம்பரியம் மிக்க உயர்கல்லூரியாக மிளிர்வது எம் கல்லூரியான யாழ்ப்பாணக் கல்லூரி. இக்கல்லூரி கிறிஸ்தவ மிஷனரியான அமெரிக்க மிஷனரியினரால் ஆரம்பிக்கப்பட்டு ஆங்கிலக் கல்விக்கு அடித்தளமிட்ட தனித்துவம் மிக்க பாடசாலை ஆகும்.

ஒருவனுக்கு அழிவு இல்லாதது கல்வி ஆகும். கல்வி தவிர ஏனைய பொருள்கள் செல்வம் அல்ல என்கிறார் தெய்வப் புலவர் திருவள்ளுவர்.

**கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு**
**மாடல்ல மற்றை யவை**

ஒருவனை சிறந்த கல்விமானாக்கி பண்பட்ட மனிதராக்கி மக்கள் பணி செய்விப்பது கல்விச்சாலைகள் ஆகும். இத்தகைய கல்விச்சாலைகளில் ஒன்றான எம் கல்லூரி, கல்வி வளரச்சியில் தன்னிகரற்ற பணியை ஆற்றிவருகின்றமை போற்றுதற் குரியதாகும்.

எம் கல்லூரி கல்வியில் மட்டுமன்றி இணை பாட செயற்பாடுகளிலும் பல சாதனைகளை தொடர்ந்தும் பதித்து வருகின்றமை மகிழ்வைத் தருகின்றது. பல்வேறு உயர் தொழில்துறைகளைச் சேர்ந்த பல கல்விமான்களை உருவாக்கிய பெருமையை நினைந்து பெருமிதம் அடைகின்றேன். சிறந்த கல்வியை சரியான முறையில் எமக்களித்து எம்மை சமநிலை ஆளுமையுடைய வர்களாக ஆக்கிய நம் கல்லூரியை மறக்க முடியுமா? எமது கல்லூரியில் கல்வி கற்றவர்கள் இன்று எமது நாட்டின் பல பாகங்களில் மட்டுமன்றி மேலை நாடுகளிலும் பரந்து பல துறைகளிலும் உயர் பதவிகளில் தம்மை அலங்கரிப்பதோடு தான் கல்வி கற்ற பாடசாலைக்கும் பெருமை சேர்த்துக்கொண்டிருக்கின்றனர்.

நான் தரம் 7 முதல் க.பொ.த (உ.த) வரை இக் கல்லூரியில் கற்ற காலம் முழுவதும் பசுமையாகவே உள்ளன. சாரணர் பயிற்சியின் போது பெற்ற அனுபவங்கள் பல எனக்கு உதவியாக அமைந்தன. எம் நண்பர்களோடு கூடி ஒற்றுமையாக வாழ்ந்த காலத்தை எண்ணிப் பாக்கும்போது மகிழ்ச்சியாக இருக்கிறது. நல்ல அதிபர், நல்ல ஆசிரியர் குழாம் எமக்கு பல்வேறு வழிகளில் வழிகாட்டி எம்மை நல்ல நற்பிரஜையாக்கிய எம் பாடசாலையில் நானும் ஒருவனாக கற்றுத்தேறியது பெருமையாக உள்ளது. சுமார் 40 வருடங்கள் கடந்துள்ள இவ்வேளையில் எனக்கும் ஞான ஒளியூட்டி மனம் நிறைந்த நல்வாழ்வு அளித்த இக்கல்லூரியை நன்றியுடன் தலைவணங்குகின்றேன்.

**- சிவானந்தம் அன்பழகன்.**





# எனது பாடசாலையும் விடுதி வாழ்க்கையும்

வந்தனம் நண்பர்களே! எங்கள் கல்லூரியில் நான் படிக்கும்போது எனக்கு கிடைத்த அனுபவங்களை உங்களோடு பகிருகின்றேன். ஆரம்பத்தில் கண்டியில் டிரினிட்டி (Trinity) கல்லூரியில் கல்விப் பயணத்தை முடித்துக்கொண்டு 6ம் வகுப்பில் எங்களின் யாழ்ப்பாணக்கல்லூரிக்கு என் அண்ணன் நடராஜாவுடன் வந்து சேர்ந்தேன். அதே நேரத்தில் எனது இரு சகோதரிகளும் வேம்படி மகளிர் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தார்கள்.

கல்லூரியில் படிப்பதற்கு என்றுதான் வந்தேன். முயற்சி செய்தேன் ஆனால் படிக்கவில்லை ஒரே கூத்தும், கும்மாளமும் தான். கல்லூரியின் நினைவுகளை என்றுமே மறக்கமுடியாது. நானும், அண்ணனும் விடுதியில் தான் தங்கியிருந்தோம். ஒரே உல்லாசமான வாழ்க்கை. சின்னையா மாஸ்டர் வார்டனாக இருந்தபோது எனது குறும்புத்தனங்களால் அவரிடம் அதிகம் கடி வேண்டியுள்ளேன். நான் தோற்றத்தில் கட்டையாக இருந்ததினால் கட்டெறும்பு போல எனது குறும்புத்தனமும் சுறுசுறுப்பாகவே இருந்தது. விடுதியில் சமையல் அறைக்குச் சென்று கோபால் அண்ணையுடன் கிண்டல் அடித்து கதைத்து தோசை, இடியப்பம் சுடச்சுட வேண்டி சாப்பிட்டது இன்னும் எனது மனதில் இருக்கிறது. சம்பல் அரைக்கும் போது முதல் அடிபட்டு தேங்காய் பூ, சீனி சேர்த்து கோபால் அண்ணை அங்கும் இங்கும் பார்த்துவிட்டு தந்து என்னை கலைத்ததை நினைத்து இப்போதும் சிரிக்கின்றேன்.

கனகரட்ணம் மாஸ்டர் வார்டன் ஆக இருந்த போது நானும் சில நண்பர்களும் காரைநகர் ரோட்டில் உள்ள கேணியில் களவாக குளித்துக்கொண்டு இருக்கும் போது கனகரட்ணம் மாஸ்டர் காதைத்திருகி இழுத்து வந்தது, தலைமயிர் வெட்டும் போது முருகேசுவுக்கு வவுச்சர் கொடுக்காது டிமிக்கி கொடுத்து விட்டு அவர் கல்லூரி ஆபிஸில் வவுச்சரை கொடுத்து காசு வாங்கிய பின்பு ஆபீசில் வவுச்சரை குப்பை தொட்டியில் போட்ட பின்பு அதை மீண்டும் முருகேசுவிடம் கொடுத்து குறைவாக காசு வாங்கி யோகா கஃபேயில் தேநீர், வடை சாப்பிட்டது என் மனதில் நிறைந்துள்ளது.

சாண்டஸ், செல்லையா விடுதியில் மலசல கூடத்துக்கு கதவுகள் இல்லை,யாரும் உள்ளே சென்றால் கையை வெளியே




நீட்டிக் கொண்டு இருந்து சமிக்கை காட்டியது எனது நினைவில் வருகிறது, எனது கட்டைக்கையை சமிக்கை காட்ட நான் எவ்வளவு சிரமப்பட்டிருப்பேன் என்று நினைக்கும் போது வெட்கத்தோடு நிறைந்த சிரிப்பு வருகிறது. ஸ்டடி ஹாலில் நான் படிப்பதற்கு சென்றாலும் சாப்பிட்ட பின் தூக்கம் வரும் போது எல்லாம் தூங்கி விடுவேன். ஆனாலும் விளையாட்டு போட்டிகளில் தவறாது கலந்து சிறப்பித்தேன்.

3வது டீம் கிரிக்கெட், உதைபந்து, ஹாக்கி அணியிலும் இணைந்து விளையாடினேன். 12 வயதுக்கு உட்பட்ட சாம்பியன் ஷிப் இல் நானும் ரகுராஜுடன் இணைந்து பரிசை தட்டி சென்றோம். அது மட்டும் அல்லாது விடுதி மாணவர்களின் தினத்தில் நடாத்தப்படும் கரம், டேபிள் டென்னிஸ் போட்டிகளிலும் வெற்றி பெற்று உற்சாகமாக இருந்தேன். Cross Country-இல் இரண்டாவது இடம் கிடைத்து வெற்றி பெற்றது மறக்க முடியாது. கையில் பணம் கிடைக்கும் போது யாழ்ப்பாணம் சென்று படம் பார்த்து சுபாஸ் கஃபேயில் ஐஸ் கிரீம், ஷர்பத் குடித்து சாப்பிட்டு மகிழ்ந்ததும் நினைவுக்கு வருகின்றது.

எங்களது கல்லூரியின் பிரவுண் பீல்ட் இல் சுவர் கட்டும் போது நேரம் கிடைக்கும் போது எல்லாம் நானும் விடுதி நண்பர்களும் (வைரம் உட்பட) தலையால் முட்டி சீமெந்து கற்களை இடித்து விழுத்தியது நினைவுக்கு வரும் போது அட நானா இவ்வளவு குறும்புகள் செய்தேன் என்று இப்போது நினைக்கின்றேன். கல்லூரியில் படிக்கும்போது நான் புத்தகத்தை விரித்தது கிடையாது, ஒரே ஆட்டமும் பாட்டமும் தான்.

கல்லூரி தவணை விடுமுறை நாட்களில் காங்கேசன் துறைக்கு சென்று ட்ரெயினுக்கு டிக்கெட் எடுத்து சீட் பிடித்து சென்றதும் ஒரு அனுபவம் தான். விடுதியில் இருக்கும் போது நோயல் மாஸ்டர் தலைமையில் சைக்கிள் வாடகைக்கு எடுத்து கீரிமலைக்கு சென்று நண்பர்களோடு இணைந்து நீச்சல் அடித்து மகிழ்வேன். எந்த நேரமும் கல்லூரி காம்பௌண்டுக்குள் சுற்றி திரிந்த வண்ணம் இருப்பேன்.

கல்லூரி பரிசளிப்பு விழாவின் போது கல்யாணி, இந்துமதி, சியாமளா பரிசில்களை வாங்கி குவிக்கும் போது வாயை பிளந்து 'ஆ' வென்று பார்த்து புத்தகத்தை தொட்ட மகிமையை நான் அக்கணத்தில் புரிந்து கொள்வேன். ஆனாலும் அடுத்த நாள் 'பழைய குருடி கதவை திற' என்ற மாதிரி என் ஆட்டத்தை தொடங்கி விடுவேன்.

இப்படியே காலங்கள் கடந்து செல்லும் போது எங்கள் கல்லூரி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகமாக்கப்பட்டது எனக்கும் அதிர்ச்சியைத் தந்தது... நாட்டில் ஏற்பட்ட இனக்கலவரப் பிரச்சனைகளால் எனது அப்பா சண்முகராஜா (சமாதான நீதவான்), எனது அம்மா ராஜேஸ்வரி இருவரும் சேர்ந்து நல்ல தீர்க்கமான முடிவு எடுத்தார்கள். இந்தியாவுக்கு எல்லோரும் சென்று அங்கேயே தங்குவதாக முடிவு எடுத்தார்கள். அதனால் N .C .G .E-யுடன் எனது யாழ்ப்பாணக்கல்லூரியின் கல்வி வாழ்க்கை முடிவுக்கு வந்தது. ஆனாலும் இன்று வரை அதை மறக்க முடியவில்லை.

பின்பு இந்தியா வந்து எனது படிப்பை தொடங்கினேன். தாம்பரம் கிறீஸ்தவ கல்லூரியில் P.U.C படிப்பை முடித்து பின்பு 1983-இல் இருந்து 1986ம் ஆண்டு வரை சட்டக் கல்லூரியிலும் படிப்பை தொடர்ந்தேன். பின்பு 1986ம் ஆண்டு வழக்கறிஞராக பதிவு செய்து அன்று முதல் இன்று வரை சென்னை உயர் நீதி மன்றம் உட்பட மற்றைய நீதி மன்றங்களில் வழக்காடும் வழக்கறிஞராக பணி புரிந்து வருகின்றேன். 1989ம் ஆண்டு எனது மனைவி சாந்தாவை திருமணம் செய்து கொண்டேன். கண்மணிகளாக மகள் சிந்துஜாவையும், மகன் சண்முகநிரஞ்சனையும் பெற்று எடுத்தோம். எமது மகளுக்குத் திருமணமாகி ஒரு குழந்தையும் உள்ளது. மகன் னிஸீபு கம்ப்யூட்டர் மேற்படிப்பு படித்து கொண்டு இருக்கின்றார்.

1980ம் ஆண்டில் இருந்து எனது அப்பாவும் அம்மாவும் எங்களோடு தான் வாழ்ந்தார்கள். 2013-2014 காலப்பகுதியில் இருவரும் இறைபதம் அடைந்துவிட்டார்கள். எனது ஒவ்வொரு முயற்சிக்கும் அப்பா, அம்மா, என் மனைவி தான் காரணம். அவர்களின் உறுதுணை, ஊக்குவிப்புதான் இன்று வரை எனது குணம், நடை, மதிப்பு, பழக்கவழக்கங்களை உறுதி செய்துள்ளது. எனது கடின உழைப்பும், முயற்சியும், தன்னம்பிக்கையும், எனது இந்திய நண்பர்களின் நட்பின் ஆதரவும்தான் என் வெற்றிக்குக் காரணம். எங்கள் 1980 குறூப் நண்பர்களோடு கதைக்கும் போது நான் இந்தியாவில் இருப்பதையே மறந்து கல்லூரி காம்பௌண்டை சுற்றிவந்த நினைவோடு வாழ்கின்றேன். கல்லூரி வாழ்க்கையில் உருண்டு, புரண்டு நண்பர்களோடு வாழ்ந்த வாழ்க்கையின் நினைவுகளைப் பகிர்ந்து விடைபெறும்

உங்கள் நண்பன்
**தேவநாயகம்**





# ஆரம்பப் பாடசாலையில் ...

எமது கல்லூரி வாழ்க்கைப் பயணம் 1966ம் ஆண்டு யாழ்ப்பாணக் கல்லூரி பாலர் பாடசாலையில் சில மாணவர்களுடன் இனிதே ஆரம்பித்தது. இப்பயணத்தில் சில மாணவர்கள் வெவ்வேறு கட்டங்களில் எம்முடன் வந்து இணைந்தார்கள். இன்னும் சிலர் இப்பயணத்திலிருந்து நீங்கி வேறு பாடசாலைகளில் தமது பயணத்தைத் தொடர்ந்தார்கள். பலர் இறுதி வரை இப்பயணத்தைத் தொடர்ந்து வெற்றிகரமாக முடித்தார்கள். பல தசாப்தங்கள் கடந்த பின்னர் இன்று தங்கள் ஆரம்பப்பாடசாலை நினைவுகளை சில சக மாணவர்கள் இவ்வாறு மீட்டிப் பார்க்கிறார்கள். அவற்றைத் தொகுத்து இங்கே தந்துள்ளோம்.

**கல்யாணி மனுவல்பிள்ளை**

Friends,

I joined Jaffna College in 1968 in Grade 1 Junior School. Those days, it was called Lower School. From Grade 1 to A/L, days at J/C were unforgettable and enjoyable.



One of my unforgettable days in J/C was falling from the swing. In 1971, I was in grade 4. After school, we were waiting for Ms.Ambalavanar teacher's car to go home, till it came we were playing in the swings which were in the Junior School section. While I was playing in the swing, I fell to the ground from a reasonable height and fainted. When I woke up, I could see the Bavink master carrying me & calling me "Kunchu, Kunchu". Later he took me to Moolai hospital by his jeep and dropped me at my grandmother's home in Sithankerny. After two days, when I came to school and observed that the three swings were locked up. After a few days, they were removed. It was a disaster by me to our school.

Now, I am living in Colombo with my wife and daughter.

**K.S.Somaskantha**



Hello my friends,

I started my schooling at Jaffna College from grade 1 to NCGE. Starting school at a tender age is anxious and an exciting experience.

At that tender age you want to be in a secure environment and be happy. Look forward to playing time. I remember during the 20 minutes interval we all rushed to the swings at the lower school play area where only two were available. Also want to compete with the other person who swings higher. I remember one dear friend Sharmini fell from the swing and got hurt in the head and had to rush to the doctor nearby for the treatment. Then for a few days we all will not be allowed to swing.

Then some of us go and play a game called Batta. That consists of points for every completion of the game. Whoever scores highest will be the winner. Normally we play in pairs. If we don't score well, we are guaranteed to be knocked down on the following day while on selection who you want to choose as your partner. This is where we learn how to tackle differences.

I remember Ponnampalam Master who uses the OUD fragrance and when he passes by you can smell. He used to tell maha bharatham during his religious class time.

Navaratnam master who taught us Tamil language and Prem reminded me at the first get together that he one day gave us homework to do and few of us didn't do it . So we were caned by him.

Also remember Devakadacham master who was always been kind to all the kids at school, very loving and used to call the kids Muyalkutty. He was very fond of all the kids.

**Shyalinee Bagirathan**



ஐம்பது வருடங்கள் பின்நோக்கி சென்று JC-80 Re-Union நினைவு இதழ் பதிவிற்காக சில வரிகள் சேர்க்க முனைகின்றேன். நினைவலைகளை மீட்கும்போது கடல் அலைபோல் முட்டி மோதுகிறது. எதைச் சொல்வது, எப்படி சொல்வது என்று வினாவும் எழுகிறது. இருப்பினும் பங்களிப்பின் முக்கியத்துவம் கருதி தொடருகிறது எனது ஆரம்பம் ரம் ரம் ரம்....

பொதுவாகவே சோதனைகள் வந்தால் பின்னர் நல்லவை நடக்கும் என்பார்கள். அதேபோல் எனது கல்லூரி தொடக்கமும் சோதனையுடன் ஆரம்பம். அதாவது நுழைவு அனுமதி பரீட்சை. அதில் சித்தி அடைந்து உள்ளே நுழைந்தபோது எல்லாம் நல்லதாகவே அமைந்தது.

சிறந்த தலைமை ஆசிரியர், கண்டிப்புடன் கனிவும் கொண்ட ஆசிரியர் குழாம், அன்பான சக மாணவ, மாணவியர்கள் இத்துடன் பாடசாலை வளாகம். இத்த கைய சூழல் அமைவது மாணவர்க்கு வரப்பிரசாதமே. மேலும் அந்த கனிஷ்ட பிரிவு நாட்களில் நாம் ரசித்து சிறகடித்து பறந்த நேரங்களை என்னவென்று சொல்வது. ‘உள்ளங்கை நெல்லிக்கனி’ என்று உதாரணத்திற்கு சொல்வார்கள் ஆனால் நாம் நெல்லிக்கனியை பிளந்து உள்ளங்கையில் வைத்து குளாய்நீர் பருகிச் சுவைத்தோம். உருளைக்கிழங்கில் தண்ணீர் கலக்கும் மை தடவி நண்பர்களின் மேலங்கியில் குத்தியும், மழையில் மேலங்கியை தலைப்பாகை கட்டி உதைபந்து விளையாடியும் மகிழ்ந்தோம். மேலும் நான் சிறுவயதிலேயே துடுப்பெடுத்தாட்டத்தில் ஆர்வம் கொண்டவனாகையால் சூட்டி மாஸ்டர் எனும் சிறந்த பயிற்றுனரால் பயிற்சியளிக்கப்பட்ட சம்பவங்களும், கல்லூரிக்காக 14 வயதிற்குட்பட்டோர், 16,17, 19 வயதிற்குட்பட்டோர் அணிகளில் விளையாடியதும் மறக்கமுடியாதவையாக உள்ளபோதும் 16 வயதிற்குட்டோர் அணிக்கு தலைமை தாங்கியது என் கல்லூரி வாழ்வில் நெஞ்சை விட்டு அகலாத சம்பவமாகவும் உள்ளது. இதன்போது உறுதுணையாக இருந்த சக வீரர்களும் மறக்கமுடியாதவர்களே.

மேலும் ஒரு சம்பவம் தலைமையாசிரியர் செல்வி. எலையாஸின் பிரம்படி. ஒருமுறை மைதானத்தில் வகுப்பறைகளுக்கிடையே உதைபந்தாட்டம் விளையாடிக்கொண்டிந்தபோது போட்டி விறுவிறுப்படைந்தவேளை சிறு சிறு வாக்குவாதங்கள் இறுதியில் கைகலப்பில் முடிவடைந்தது. சிறுவயதில் மாணவர்களுக்கிடையில் இவைகள் சகஜமாக நடப்பதாயினும் தலைமை ஆசிரியரிடம் முறைப்பாடு நண்பருடன் நானும் காரியாலத்திற்கு சென்றேன். எலையாஸ் ரீச்சர் கதிர்ராஜ் you can go என்றார். நண்பனை தனியே விடமுடியாமல் இல்லை ரீச்சர் நானும் என்று சொல்ல ஒப்பனைக்காக ஓர் அடியை தந்து போகலாம் என்றவர் நான் வெளியேறுவதற்குள் நண்பருக்கு சில அடிகளை வழங்கிவிட்டார். எனக்கும் அடி வழங்கப்பட்டதால் எமது நட்பு மேலும் இறுக்க மடைந்தது. 16 வயதிற்குட்பட்ட துடுப்பெடுத்தாட்ட அணிக்கு தலைமை தாங்க எனக்கும் சமவுரிமை உண்டு என வாதிட்டு தலைவர் தெரிவு போட்டியில் வெற்றிபெற சக நண்பர்களுடன் முன்னின்று உழைத்தவரும் பிரம்பு அடியில் இணைந்த நண்பரே. இப்படியான சம்பவங்கள் எல்லாம் என்றும் நெஞ்சை விட்டு அகலாத நினைவுகளே. அவர் உங்கள் நண்பருமாவார். பின்னர் அவர் கல்லூரியின் விளையாட்டுத்துறையில் பல சாதனைகளை நிலைநாட்டி கல்லூரிக்கும், சக நண்பர்களுக்கும் பெருமை தேடிதந்தார். உங்கள் நினைவலை களில் பின்னோக்கி செல்லுங்கள் நண்பரை கண்டுபிடித்துவிடுவீர்கள். நான் சாதாரண மாணவனாக வகுப்பு எனும் தடைகளங்களை கடந்து உங்கள் அனைவருடனும் தொடர்ந்து வந்ததும் ஒரு சுகமான அனுபவமே.

மேலும் விளையாட்டுப்போட்டிகள், பாடசாலைச் சுற்றுலாக்கள் என பல உள்ளது. இத்தனை மகிழ்வுகளிலும் எம்மோடு இருந்த சில நண்பர்களை இழந்தும், சிலரை இணைக்க முடியாமல் இருப்பதும் கவலையளிக் கின்றபோதிலும் அவர்கள் எம்முடன் இணைந்திருப்பதாகவே கருதுவோம்.

நன்றி.

**சுப்பிரமணியம் கதிர்ராஜ்**



எனது ஆரம்ப பாடசாலை நினைவுகளை ஐம்பது வருடங்களின் பின்னர் நினைத்துப் பார்க்கும் போது ஒரு சில நினைவுகள் இன்னமும் நினைவில் பசுமையாக உள்ளன. அவற்றுள் முதலில் நினைவிற்கு வருவது என்றால் காலையில் பாடசாலை வாசல் திறக்கு முன்னரே காவல் நின்று, துரைரட்ணம் அண்ணை வாசலை திறந்தவுடன் முண்டியடித்து சென்று நெல்லி மரத்தின் கீழுள்ள நெல்லிக் காய்களை பொறுக்கி உண்பதுதான். அந்த நெல்லிக்காய்களின் சுவையை இன்றும் நாவில் உணர்கிறேன்.

அம்பலவாணர் ஆசிரியையிடம் முதலாம் வகுப்பில் படித்த நினைவுகள் மறக்க முடியாத ஒன்று. வாய்பாடு பாடமாக்குவது மாணவருக்கு கஸ்டமான விடயம். அவர் காலையில் வேப்பமரத்தின் கீழிருந்து பாடமாக்கினால் இலகுவாக மனப்பாடமாகும் என்று கூறுவார். இன்னுமொரு விடயம் அவரைப்பற்றி நினைவில் நிற்பது மாணவர்களுக்கு அவர் அடிமட்டத்தால் கை மொளியில் அடிப்பது. எமது இரண்டாம் வகுப்பு ஆசிரியை செல்லையா ஆசிரியை. அவர் சாவச்சேரியிலிருந்து பல மைல்கள் தூரம் பயணம் செய்து வந்து எமக்கு பாடம் கற்பித்தார். அவர் சொல்லித்தந்த பாடல்கள் இன்னமும் மனதில் உள்ளது. மற்றொரு ஆசிரியை பற்றிக் குறிப்பிடாமல் இருக்க முடியாது. அவர் தான் ரூபி டீச்சர். உயரமான தோற்றமுடையவர். மிகவும் அழகாக ஆங்கிலம் கற்பிப்பார். அவர் கற்பித்த poems இன்னமும் நினைவில் உள்ளன. அத்துடன் ஆங்கிலத்தில் தொடுத்து எழுதுவதை எமக்கு கற்பித்தவர்.

பொன்னம்பலம் ஆசிரியர் வருவார் பின்னே, கமழும் சந்தன வாசனை வரும் முன்னே! அவர் பயிற்றுவித்து நாம் கோலாட்டத்தோடு உறி பின்னிய நிகழ்ச்சி மேடையேற்றியது ஒரு போதும் மறக்க முடியாத ஒன்று. அவர் புராணக் கதைகள் கூறும்போது வகுப்பறையில் ஒரு நிசப்தம் நிலவும். மாணவர்கள் கதையில் வரும் பாத்திரங்களுடன் ஒன்றிப் போவார்கள். எமக்கு நான்காம், ஐந்தாம் வகுப்புகளில் வரைதல் படிப்பித்த கனகசபாபதி ஆசிரியர் பற்றியும் கூற வேண்டும். அவரின் வகுப்பில் நாம் பலவிதமான சித்திரங்கள் வரைவதற்கான முறைகளைக் கற்றுக் கொண்டோம். சச்சிதானந்தம் ஆசிரியர் என்றால் நினைவிற்கு வருவது அவரின் தாடியும், அவரின் துவிச்சக்கர வண்டியும்தான். அவர் scouts master ஆக இருந்து மாணவர்களை scouts camps இற்கு கொண்டு செல்வது நினைவிலுள்ளது. அவர் எமக்கு சமயம், ஆங்கிலம் ஆகிய பாடங்கள் படிப்பித்தவர்.

இன்னமும் சில சுவாரசியமான விடயங்கள் நினைவில் வருகின்றன. எமது வகுப்பில் ஒரு மாணவி தனது suitcase இற்குள் வெற்றிலை, பாக்கு கொண்டு வருவா. அவ அதனை மற்றைய மாணவிகளுடன் பகிருவா. மற்றும் இடைவேளை நேரம் நாம் சிநேகிதிகள் சேர்ந்து கணபதிப்பிள்ளை கடைக்குச் சென்று ஐஸ், கறுவாப்பட்டை, மிட்டாய், இனிப்பு போன்றவை வாங்கி பகிர்ந்து உண்ட நினைவுகள். துரைரட்ணம் அண்ணை வகுப்பிற்கு அறிவிப்பு கொண்டு வருவார். அந்நேரம் மாணவர் மத்தியில் ஒரு பரபரப்பு. அந்த அறிவிப்பில் என்ன இருக்க போகிறது என்று அறியும் ஆவல். ஆசிரியர் அதனை வாசித்து சொல்லும் வரை மாணவர் ஆவலுடன் காத்திருப்போம்.

நாம் ஆலமரத்தடியில் உள்ள 'ப' இல் பல விளையாட்டுகள் விளையாடினோம்.

மேலும் நாம் nursery இல் படிக்கும் போது எமது பெற்றோர் எம்மை பாடசாலை விட்ட பின்னர் கூட்டிச் செல்ல வருவர். அப்போது அவர்கள் எல்லோரும் பாடசாலை முடியும் வரை church இற்கு அருகிலுள்ள வேப்பமரத் தடியில் கூடியிருந்து பல கதைகளும் கதைப்பார்கள். இவற்றால் அவர்களுக்கிடையே நட்பும் வலுவுற்றது.

இப்படி எத்தனையோ நிகழ்வுகளுண்டு. ஆயினும் ஆண்டுகள் பல உருண்டு ஓடியதால் நினைவில் நிறுத்தி எழுத முடியவில்லை.

**தெய்வநாயகி அசோகன்.**



நான் இரண்டாம் வகுப்பில் யாழ்ப்பாணக் கல்லூரியில் வந்து சேர்ந்தேன். ஆண்டுகள் பல உருண்டோடிய பின்னரும் சில நினைவுகள் இன்றும் மனதில் நிற்கின்றன.

நண்பர்களுடன் விளையாடிய விளையாட்டுகள், படித்த பாடல்கள், ஆடிய நடனங்கள், விளை யாட்டுப் போட்டிகள், சுற்றுலாக்கள் எனப் பல இனிமையான நினைவுகள். சுற்றுலாவிற்கு பஸ் வண்டியில் மாணவர்களாகிய நாம் ஆசிரியர்களுடன் சேர்ந்து பயணம் செய்யும் அனுபவம் மிகவும் குதுகாலமானது. அவ் பஸ் பயணத்தின் போது பல பாடல்களை ஆசிரியர்களுடன் சேர்ந்து பாடுவோம். அது மட்டுமன்றி வீதியில் போவோர் வருவோருக்கெல்லாம் கை காட்டி எமது மகிழ்ச்சியைத் தெரிவிப்போம்.

விளையாட்டுப் போட்டிகள் என்றால் எனக்கு அலாதிப் பிரியம். பல விளையாட்டு போட்டி நிகழ்ச்சிகளில் பங்கு பற்றியதும் பரிசுகள் பெற்றதும் நினைவில் உள்ளது. அதுவும் வினோத உடைப் போட்டி மிகவும் கலகலப்பானது. விளையாட்டுப் போட்டியின் ஆரம்பத்தில் நடக்கும் Drill மிகவும் அழகாக இருக்கும். அதற்கு எமக்கு பல வாரங்களாக தனரஞ்சனி ஆசிரியை, சுகந்தி ஆசிரியை, புஸ்பராணி ஆசிரியை ஆகியோர் பயிற்சி தருவார்கள். இதனை விட ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்கள் எமக்கு நடனங்கள், பாட்டுகள், நாடகங்கள், band எனப் பல விடயங்களைப் பயிற்றுவித்து பெற்றோர் தின விழாக்களில் இவற்றை நாம் பெருமையுடன் மேடையேற்றிய இனிமையான நினைவுகள் உண்டு.

இன்னுமொரு நிகழ்வு என்னவெனில் எமது பிறந்த நாள் அன்று இனிப்பு பாடசாலைக்கு கொண்டு சென்று எமது வகுப்பு மாணவர்கள் யாவருடனும் பகிர்ந்து உண்பது. அது மட்டுமன்றி ஒரு தோழியை துணைக்கு அழைத்துக் கொண்டு சென்று ஆரம்ப பாடசாலையிலுள்ள சகல ஆசிரியருக்கும் இனிப்பு கொடுப்பதும். அந்த ஒரு தோழியை தேர்வு செய்வது என்பது மிகவும் கடினமான செயல். எல்லோரும் நான் நான் என்று முண்டியடித்துக் கொண்டு நிற்பார்கள். ஆனால் ஒருவரை மட்டுமே கூட்டி செல்ல ஆசிரியர் அனுமதிப்பார். யோசித்துப் பாருங்கள் இது எவ்வளவு கடினமான விடயம் என்று!

எனக்கு கனகசபாபதி ஆசிரியரின் வரைதல் வகுப்பில் நடந்த ஒரு சுவாரசியமான நிகழ்வு ஞாபகத்திற்கு வருகிறது. அவரின் வரைதல் வகுப்பு மதிய உணவின் பின்னர் வரும் பாடம். அவர் எமக்கு படம் வரைய கூறிவிட்டு கதிரையில் இருந்த படி குட்டி தூக்கம் போடுவார். உண்ட களை தொண்டருக்கும் உண்டாம். அவ் வகுப்பு நேரம் சிறுவர்களாகிய நாம் பல குறும்பு செயல்கள் செய்வோம். ஒரு நாள் நான் அம்பிட்டு விட்டேன். அவர் என்னை வகுப்பிற்கு வெளியே நிற்க அனுப்பிவிட்டார். நான் வெளியே நிற்கும்போது நெல்லி மரத்திலிருந்து நெல்லிக் காய்கள் விழுந்தன. நான் மெதுவாக வகுப்பறைக்குள் எட்டிப் பார்த்தேன். ஆசிரியர் மறுபடி தூங்குகிறார். நான் ஓடிச் சென்று நெல்லிக்காயை பொறுக்கி விட்டு வந்து எதுவும் நடவாதது போல மறுபடியும் வகுப்பறைக்கு வெளியில் நின்றேன். இதை இப்போது நினைக்கவும் சிரிப்பு வருகிறது.

எமக்கு சுகந்தி ஆசிரியை ஆங்கிலம் கற்பித்தார். அவர் பாடம் கற்பித்து முடிந்த பின் மணி அடிக்கும் வரை நல்ல கதைகள் கூறுவார். சில வேளைகளில் கதை முடிய முன்னரே மணி அடித்து விடும். நாம் அடுத்த நாள் வரை அந்த கதைக்காக ஆவலுடன் காத்திருப்போம். அத்துடன் அன்றைய வகுப்பில் நன்றாக படித்த மாணவர்களுக்கு ஊக்குவிக்கு முகமாக இனிப்பு கொடுப்பார்.

தமிழ் கற்பித்த போல்ராஜா ஆசிரியரை நினைக்கும் போது அவர் நடந்து வரும் போது கேட்கும் செருப்பு சத்தமே முதலில் ஞாபகத்திற்கு வருகிறது. அழகாக தமிழ் படிப்பிப்பார். குழப்படி செய்யும் மாணவர்களுக்கு அடிக்க கையை ஓங்கிக் கொண்டு செல்லுவார், ஆனால் அடிக்க மாட்டார்.

ஆலமரத்தடி வாசலில் இருந்து கடலை விற்ற மாணிக்கம் ஆச்சியை பலரும் நினைவில் வைத்திருப்பீர்களென நினைக் கிறேன். நாம் சிறுவர்களாக அவரிடம் கடலை வாங்கி உண்டதும், அவருடைய நீண்டு தொங்கிய காது ஓட்டையையும், ரவிக்கை போடாமல் சேலை அணிவதையும் நாம் வியப்பாகப் பார்த்தது இன்னமும் நினைவில் உள்ளது.

எல்லாவற்றிற்கும் மேலாக அன்று ஆரம்ப பாடசாலையில் ஆரம்பித்த உங்களுடனான நட்பு இன்றும் நிலைத்து நிற்பது மகிழ்ச்சிக்குரியதே.

**ஞானாம்பிகை சிறீதரன்**



ஆரம்பப் பாடசாலையில் எமது கால கட்டத்தில் மிக முக்கியமான தலைமை ஆசிரியர்களாக இருந்த ஆசிரியர் பவிங், ஆசிரியை எலையாஸ் பற்றிக் குறிப்பிடாமல் இருக்க முடியாது. பவிங் ஆசிரியரின் புன்முறுவல் பூத்த முகமும், சுறுசுறுப்பும் சிறுவர்களாகிய எம்மை மிகவும் கவர்ந்திருந்தன. யாழ் இனிது குழல் இனிது என்பர் பவிங் ஆசிரியரின் மழலை தமிழ் மொழி கேளார். ஒருமுறை வகுப்பில் அவர் 'ஏற்றுமதி' என்ற சொல்லை 'புத்திமதி' என்று தவறுதலாக நினைத்துக் கொண்டு பிள்ளைகளே, 'உங்களுக்கு பல ஏற்றுமதிகள் சொல்லியிருக்கிறேன்' என்று சொல்லியிருக்கிறார். இதை அடிக்கடி நகைச் சுவையாக மாணவர்கள் அப்போது பேசிக்கொண்டது நினைவுக்கு வருகிறது. பவிங்க் ஆசிரியர் தமிழை கற்றுக்கொண்டதும் யாழ். கல்லூரியில் இருந்தபோதுதான் என்பதும் உங்களுக்குத் தெரிந்திருக்கும்.

பவிங் ஆசிரியர் ஒல்லாந்து நாட்டிலிருந்து அமெரிக்க மிசனெரியாக யாழ்ப்பாணக் கல்லூரிக்கு 1954ம் ஆண்டு வந்தார். அவர் நாம் ஆரம்பப் பாடசாலையிலிருந்த காலத்தில் அதன் தலைமை ஆசிரியராக கடமையாற்றினார். இக் காலகட்டத்தில் அவர் துவிச்சக்கர வண்டியில் உள்ளூர் தெருக்களில் பயணம் செய்யும் அழகு ஊர் மக்களை திரும்பிப் பார்க்க வைத்தது. பவிங் ஆசிரியரின் பிரியாவிடை வைபவத்தின் போது அவரின் மனைவி மாலையும் சேலையுமாக தோற்றமளித்த அழகிய காட்சி இன்றும் மனதில் நிற்கிறது. பவிங் ஆசிரியர் 1972ம் ஆண்டு ஓய்வு பெற்றவுடன் ஆரம்ப பாடசாலையின் தலைமை ஆசிரியராக செல்வி எலையாஸ் பொறுப்பேற்றார். செல்வி எலையாஸ் என்றாலே எமது ஞாபகத்திற்கு வருவது, அவரின் சுறுசுறுப்பும், கண்டிப்பும், தமிழை விருப்புடன் கற்பிக்கும் முறையுமே. அவர் Little Friends (Brownies) என்ற சிறுமிகளின் சாரணியர் அமைப்பிற்கு பொறுப்பாளராக இருந்தார். அப்போது அவர் தானும் ஒரு சிறுமியாக மாறி எம்முடன் பல விளையாட்டுகளும் விளையாடி, பாடல்களும் பாடுவார். அவ்விளையாட்டுகளில் ஒன்று மிகவும் சுவாரசியமானது. மாணவிகள் ஒன்றன் பின் ஒன்றாக வரிசையில் நிற்பார்கள். செல்வி எலையாஸ் முதலாவதாக நிற்கும் மாணவியின் காதிற்குள் ஒரு கதையை இரகசியமாக கூறுவார். அந்தக் கதையை அந்த மாணவி மற்றைய மாணவியின் காதிற்குள் கூற வேண்டும். இவ்வாறு கதை கடைசி மாணவி வரை போகும். இறுதியாக கடைசியில் நிற்கும் மாணவி தான் கேட்ட கதையை உரக்க எல்லோருக்கும் கூற வேண்டும். அந்த மாணவி கூறிய கதை எலையாஸ் ஆசிரியை கூறிய கதையிலிருந்து மிகவும் வேறுபட்ட கதையாக இருக்கும். இந்த விளையாட்டிலிருந்து நாம் வாழ்க்கையில் ஒரு பாடத்தைக் கற்றுக் கொண்டோம். ஊரில் எவ்வாறு ஒரு கதை பரவும்போது அது திரிபடைந்து போகுமென்று அறிந்து கொண்டோம்.. இவ்வாறு பல வாழ்க்கை பாடங்களை விளையாட்டு மூலம் எமக்கு சொல்லித்தந்தார்.

செல்வி எலையாஸ் மற்றைய ஆசிரியர்களான புஸ்பராணி தம்பிராசா, சுகந்தி வைரசிங்க, செல்வி சந்திரா சிற்றம்பலம் ஆகியவர்களுடன் சேர்ந்து Little Friends சிறுமிகளை ஒவ்வொரு வருடமும் சுண்டிக்குளியிலுள்ள பழைய பூங்காவிற்கு Robert Baden Powel விழாவைக் கொண்டாட அழைத்துச் செல்வார். இந்த விழாவிற்கு பல பாடசாலைகளிலுமிருந்து மாணவிகள் வந்து கூடுவது மாணவர்களாகிய எமக்கு ஒரு மிகச் சிறந்த அனுபவம். திறமையான நிர்வாகியான செல்வி எலையாஸ் ஆரம்ப பாடசாலையை சிறப்பாக வழிநடத்தியவர்களில் ஒருவர்.

மேல்வகுப்புகளில் பெற்ற அனுபவங்களிலிருந்து ஆரம்பபாடசாலை அனுபவங்கள் வேறுபட்டாலும் அது எங்களை அறியாமல் எங்களில் ஊறிப் போனவை. ஆரம்ப பாடசாலையில் பெற்றுக்கொண்ட பாட அறிவை விட சமூகத் திறன்களை வளர்த்துக் கொண்டமையே வாழ்வின் பெரு மூலதனமென கருதலாம். யாழ்ப்பாணக் கல்லூரியின் விழுமியங்கள், அதன் பண்பாடு என்பன ஆரம்ப பாடசாலையிலிருந்தே எங்களைப் பற்றிக்கொண்டன. அதன் நினைவுகள் வாழ்நாள் முழுவதும் எம்முடன் கூடவரும்.

**கல்யாணி மனுவல்பிள்ளை**



# நினைத்தாலே இனிக்கும் பாடசாலையும் நண்பர்களும்

– ஜெயமணி

ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி என்ற ஆன்றோர் வாக்குக்கு அமைய நான் படித்த பாடசாலைகளில் ஒன்றான யாழ்ப்பாணக் கல்லூரியை பற்றி....

இலங்கையிலேயே மிகவும் பழமையான அமெரிக்க மிசனரியால் நடாத்தப்படும் மிகவும் பழமையான யாழ்ப்பாண சரித்திரத்தில் பேசப்படும் பாடசாலையில் ஒன்றான வட்டுக்கோட்டையில் அமைந்துள்ள தனியார் பாடசாலையே இந்த யாழ்ப்பாணக்கல்லூரி என்றால் மிகையாகாது. இதில் என் கல்விக்காக தம்மை அர்ப்பணம் செய்து கல்விச் செல்வத்தை அளித்த எனது பெற்றோருக்கு எனது முதற்கண் நன்றிகள் பல.

இப் பாடசாலையின் பிரமாண்டமும் விஸ்தீரணமும் படங்களில் வரும் மாளிகைகள் போன்று மிகப் பெரியது. பாடசாலை முன்றலில் நான் படிக்கும் போது ஒரு பனையும் அதை சுற்றி ஆலமரமும் இருந்தன. அப்போதே அம்மரம் பல நூற்றாண்டுகள் கண்டு இருந்தது எனலாம். ஆனால் இப்போது பனை பட்டு ஆல் மட்டும் உள்ளது .

பாடசாலையின் இரு மருங்கிலும் அழகிய மகோகனி மரங்களும் அதன் பூக்கும் காலங்களில் அழகான மஞ்சள், ஆரஞ்சு கூடிய ஒரு சிவப்பு கலந்த அழகான பூக்களும் பார்க்க மிகவும் இரம்மியமாக இருக்கும். பாடசாலைக்கு வருபவர்கள், மாணவர், பெற்றோர், நலன் விரும்பிகள் அமர கல்தூண் இருக்கைகளும் ஒரு பூங்காவையே நினைவுபடுத்தும். அதன் நடுவே வடமாகாணம் போன்ற ஒரு சிறிய அழகிய குளமும் அதற்குள்ளே துள்ளி விளையாடும் நிற நிற மீன்களும் அவற்றை சுற்றி அழகான பூமரங்களும் என்று மனதுக்கு இதம் தரும் அழகிய சூழ்நிலையை கொண்டது. இது பற்றி எழுதினால் எழுதி செல்லும் எனது கையை நிறுத்துவது கடினம் .

நான் 1977ம் ஆண்டு HNCE வகுப்பில் கல்வி கற்க இக் கல்லூரியில் அடி எடுத்துவைத்தேன். இது ஒரு கலவன் பாடசாலை. ஒரு சில மேற்கத்திய கலாசாரத்துடனும் இணைந்துள்ளது என்பது பேசப்படும் விடயமே. நான் O/L வரை 450 மாணவர்கள் வரை உள்ள பாடசாலையில் கல்வி பயின்று பின்னர் 1500-கும் மேல் பட்ட மாணவர்கள் உள்ள இந்த பாடசாலைக்கு வந்தேன். நான் வந்த காலங்களில் இந்த பாடசாலையின் ஒரு பகுதி அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்டு Under Graduate Section ஆக இயங்கியது.

இக் கல்லூரியில் காலடி எடுத்துவைக்கும்போது என்னை தயங்கவைத்த விடயங்களில் ஒரு சில இப்பாடசாலையின் பிரம்மாண்டம், பெரிய வகுப்பு மாணவர்கள், பல்கலைக்கழகம், மேலைத்தேய கலாசார நிழல்கள் என்று சொல்லலாம். மற்றும்படி இக் கல்லூரியில் மாணவர்களுக்கு சீருடை இல்லை. ஆனால் A/L 2ம் வருட மாணவர்கள் நீண்ட கால் சட்டையும் பெண்கள் சேலையும் அணிய வேண்டும். வெளியில் இருந்து புதிதாக வருபவர்கள் இப் பாடசாலையில் இவ்வளவு ஆசிரியர்களா என்று மூக்கில் விரல் வைத்த நிகழ்வுகளும் உண்டு. இதில் கல்வி பயிலும் மாணவர்கள் சமூகத்தில் மரியாதையாக பார்க்கப்பட்டனரும் கூட.

**இப் பாடசாலை பற்றிய எனது சில அனுபவங்களும் மனப் பதிவுகளும்:**

நான் A /L வகுப்பில் படிக்க வந்த காலங்களில் சக மாணவர்களால் அறிமுகம் செய்ய வேண்டிய போது கொஞ்சம் பயமாக இருந்தது. பின்னர் அவர்களுடன் நெருங்கிய உறவு ஏற்பட இதுவே காரணமாகவும் இருந்தது. A/L மாணவர்களுக்கு Academy என்ற ஒன்றுகூடல் கிழமையில் ஒரு நாள் இருக்கும். அந்த நாளில் புதிதாக A/Lக்கு வந்த மாணவர்கள் introduction

என்ற பெயரில் பகிடிவதைக்கு உட்படுத்தப்படுவார்கள். அதில் எம்மை மேடையில் ஏற்றி அறிமுகம் செய்யவைத்து கேள்விகளும் கேட்கப்படும். இதில் பழைய புதிய மாணவர்கள் என்ற விதி விலக்கு இல்லை. சில சமயம் அவர்களின் சகோதரர் அல்லது நண்பர்கள் மூலம் காப்பாற்றப்படுவார்கள். பகிடிவதை அளவுக்கு மீறினால் திரு. ஆனந்தரட்ணம் ஆசிரியர் (Patron) இன் தலையீடு காரணமாக அந்த மாணவர்கள் காப்பாற்றப்படுவதும் உண்டு. இது பாடசாலையின் மிகவும் பிரமாண்டமான Odley மண்டபத்தில் நடக்கும். இதில் எம்மை அறிந்தோ அறியாமலோ எமது Stage fear எம்மை விட்டு விலகியது எனலாம். அதோடு Social resistance உம் எம்மில் உருவாகியது.

Academy Dinner என்ற ஒன்றுகூடல் நடக்கும். இதற்கு மற்றைய பாடசாலை A/L மாணவர்களுடைய பிரதிநிதிகளும் அழைக்கப்படுவது உண்டு. இந்த இரவு போசனம் மேலைத்தேய கலாச்சாரப்படி Folk and Spoon இனால் சாப்பிட வேண்டி இருக்கும். இது எமக்கு மேலைத்தேய பண்புகளை கற்று தந்தது எனலாம். இது மட்டும் அல்லாது எமது சக ஆண் நண்பர்கள் இரவு போசனம் முடிய எம்மை எமது வீட்டில் பாதுகாப்பாக விடும் கடமை உணர்ச்சியும் மிக்கவர்கள் என்பது பெருமையான விடயமே. இன்று நாட்டு பிரச்சினை காரணமாகவும் எமது பொருளாதாரத்தை மேம்படுத்தவும் பலர் நாட்டை விட்டு திரை கடல் ஓடியும் திரவியம் தேடு என்று வெளி நாடுகளில் வாழ்கின்றோம். இங்கு வாழும் நாம் எல்லோரும் வேலை செய்தால் ஓரளவு வசதியாக இருக்கலாம். இந்த நாடுகளில் வேலை தேடுவது என்பது ஒருவரின் கெட்டித்தனத்தை பொறுத்தது எனலாம். இந்த நாடுகளில் வேலை தேட பல மையங்கள் இருந்தாலும் எமது சுய முயற்சியும் முக்கியம். பெரிய பிரமாண்டமான கட்டிடங்களின் உள்ளே சென்று CV கொடுத்து வேலை தேட அடிப்படை துணிச்சலும், சவாலும், தன் நம்பிக்கையும், மனோ தைரியமும் இப் பள்ளியில் எமக்கு ஊட்டப்பட்டது என்றால் மிகையாகாது.

இப்படியான எமது பாடசாலை நண்பர்களில் சிலர் இந்த நாடுகளில் இருந்தோம். பின்னர் சில நண்பர்களின் முயற்சியால் இந்த குழுமம் ஆரம்பித்து இது உலகம் பூராவும் உள்ள எமது நண்பர்களை இணைத்துள்ளது. அதுமட்டும் அல்லாது எல்லாரும் ஒருநாள் சந்திப்போம் என்று நினைக்கும்போது கொரோனா என்ற உயிர் கொல்லி எம்மை தடுக்கிறது. இருந்தும் அவரவர் நாடுகளில் உள்ள நண்பர்களுடன் ஒன்று கூடுகிறோம். அப்படி கூடுவதற்கு முயற்சி எடுத்து UK குரூப் ஒன்று கூடல் ஜூலை 26, 2020 நடைபெற்றது. எல்லாரும் செல்ல முடியாவிட்டாலும் ஒரு சிலர் சென்றோம். மிகுந்த எதிர்பார்ப்பில் கற்பனையில் நண்பர்களை மனதில் இருத்தி சென்ற எனக்கு யாரையும் தெரியவில்லை. நீங்கள் என்னைப் போல் யோசிக்கலாம் நான் மண்டபம் மாறி வந்து விட்டேன் என்று. அதுதான் இல்லை. காலத்தின் ஒப்பனைகள் என் நண்பர்கள் முகத்தில், உருவத்தில். அதன் பின்பு கேட்கவும் வேணுமா குழுவில் சிறு குழுவென்று காண்பவர்கள் எல்லாருடனும் கதைக்க நிறைய விடயங்கள் நேரம் போவதே தெரியவில்லை. எமது குழு நண்பர் ஆனந்தன் மிக ஆர்வமாக மேசை சீலை விரிப்பது, மங்கள விளக்கு ஏற்றுவது, அது இது என்று பலமான ஆரவாரங்களுடன் வந்தவர், நண்பர்களை கண்டவுடன் எல்லாவற்றையும் மறந்து விட்டார். அவரின் மனைவி உதயாவினதும் அவரின் சகோதரியினதும் உதவியால் எமது ஒன்றுகூடல் ஒரு குழப்பமும் இல்லாமல் அதீத சந்தோசமாக நடந்தது எனலாம்.

எமது யாழ்ப்பாணக் கல்லூரி மாணவர்கள் உலகு எங்கும் ஆல் போல் தழைத்து அறுகு போல் வேரூன்றி எமது பாடசாலைக்கும் எமது சமூகத்துக்கும் பெருமை தேடி தரவேண்டும். இந்த நேரத்தில் எமது நண்பர் முரளிதரன் நினைவுக்கு வருகிறார். நாட்டுப் பிரச்சினை நேரம் எமது பாடசாலையை காத்து தந்த பெருமை அவரை சேரும் என்பதை நினைவு கூறி என்னையும் இந்த குழுமத்தில் ஒருவராக்கிய எமது நண்பர்களுக்கும் நன்றி கூறி சீக்கிரமே எல்லா நண்பர்களும் சேர்ந்து சந்திக்க ஆண்டவனின் அருளை வேண்டி எனது இக் கட்டுரையை முடிக்கிறேன்.



# தென்றல் தழுவிய பொழுதுகள்

கரம் போட்டின் நடுவில் அழகாக அடுக்கிவைக்கப்பட்டிருக்கும் காய்கள் ஒரு விரல் தட்டலில் எட்டுத் திக்கும் சிதறுவதைப் போல, எண்பதுகளின் ஆரம்பத்தில் எமது அழகிய தாயக பூமியில் ஏற்பட்ட ஒரு பெரு வெடிப்பில் நாமும் உலகப் பரப்பெங்கும் தூக்கி வீசப்பட்டு ஏறத்தாழ நான்கு பத்தாண்டுகள் ஆகிறது.

விழுந்த இடங்களிலிருந்தே எமக்கான இருப்பை நிலைப்படுத்திக்கொள்ளும் கடினப் பாதையில், இன்பம் துன்பம், ஏற்ற இறக்கம், சோதனை சாதனைகள் அனைத்தையும் கடந்து, அமைதியான, சீரான வாழக்கைக்கான பயணம் தொடர்கிறது....

அறுபதை எட்டும் வயது.... எண்ணத்திலும் தோற்றத்திலும் மாற்றம்.... எஞ்சிய வாழ்வு இனிமையாகக் கழிய ஏங்கும் மனது... இதுதான் எம்மில் அனேகரின் இன்றைய நிலை....

எமது ஏக்கத்தை நிவர்த்திசெய்யும் வழியாக பள்ளித் தோழர்கள் சிலரின் நன்முயற்சியின் பயனாக ஏற்படுத்தப்பட்ட இணையவழியேயான ஒருங்கிணைப்பு எமக்குக் கிடைத்தவொரு நல்வாய்ப்பு.... 40 வருட இயந்திர வாழ்வில் கனவில் கூட எட்டாத சில பள்ளித்தோழர்களின் முகங்கள், குரல்கள்... இன்று நாளாந்தம் தொலைபேசித் திரையிலும், கணினித் திரையிலும்...


விரைவில், ஏற்றதோர் சூழலில், இடத்தில் ஒருவரை ஒருவர் நேரடியாகச் சந்திக்கப்போகின்ற வாய்ப்பொன்றை எதிர்பார்த்து, எனது பள்ளிக்கால நினைவுகள் சிலவற்றைப் பகிர விழைகின்றேன்...

1972ம் ஆண்டின் இறுதி நாட்களிலோ அல்லது 1973ம் ஆண்டு தொடக்க நாட்களிலோ சரியாக நினைவில்லை... நுழைவுத் தேர்வை எழுதி சில வாரங்களின் பின், அகன்று விரிந்து நின்ற ஆலமர சூழலோடு அமைந்திருந்த வகுப்பறைகளில் முதலாவதாக அமைந்திருந்த 6ம் வகுப்பு பிரிவில் எனது யாழ்ப்பாணக் கல்லூரி வாழ்க்கை ஆரம்பிக்கிறது...

பாடசாலையின் முதல்நாள்... பிரமிப்பா, பயமா இல்லை இரண்டும் கலந்ததோர் உணர்வா என்று பிரித்தறிய முடியாத வயது... அதிகம் பழக்கப்படாததால், அணிந்திருந்த காலணி வேறு சங்கடத்தை கொடுத்தது. சில தோழர், தோழிகளின் ஆங்கிலச் சொற்கள் கலந்த தமிழ் என்னை முழுவதுமாக மௌனியாக்கிவிட்டது. பதட்டத்துடனேயே இரண்டு நாட்கள் கழிந்தன. அடுத்தடுத்த நாட்களில் வகுப்புக்களில் இருந்த பயம் கலந்த இறுக்கம் மெல்ல மெல்ல தளர்ந்தேபோனது... அதற்கு முக்கிய காரணமாக அமைந்தது அந்த ஆலமரமும் அதன் கீழிருந்த 'ப'வும் தான் என்றால் பொய்யல்ல. 8ம் வகுப்புக்கு மேல்பிரிவுக்குச் செல்லும் வரை ஆலமரத்தின் கீழும், 'ப'வைச் சுற்றியும் களைக்க களைக்க விளையாடினோம். மாபிள் அடி தொடக்கம் கிளித்தட்டு வரை எது எது முடியுமோ அத்தனையையும் அனைத்தையும் மறந்து விளையாடினோம். மிகவும் சீக்கிரமே இறுக்கமான நண்பர்களையும் தேடிக்கொண்ட எனக்கு பாடசாலையே உலகமாய் மாறிப்போனது.

ஆண்டுகள் இரண்டு கடந்து 8ம் வகுப்பில் மேல் பிரிவுக்குச் செல்லும்போது இதுவரையும் உணரத்தவறிய பாடசாலை அமைந்திருக்கும் சுற்றாடலும் அதன் பிரமாண்டமும் என்னை மிகவும் வசீகரித்தது. இதற்கு இணையான இன்னொரு பாடசாலை யாழ்ப்பாணத்தில் இருக்கமுடியாதென மனது நம்பியது.

8ம், 9ம் வகுப்புகளில் ஓரளவு படிப்பிலே இருந்த கவனம், 9ம் வகுப்புப் பொதுப்பரீட்சையைத் தொடர்ந்து உயர்தர வகுப்புக்குச் சென்றதன் பின் முற்றுமுழுதாக விளையாட்டுக்கள் பக்கம்



திரும்பியது. சிறந்த விளையாட்டு வீரனாக வரவேண்டும் என்ற எண்ணமே மேலோங்கியிருந்தது. யாழப்பாணக் கல்லூரி அனைத்து விதமான விளையாட்டுத்துறைகளையும் அதற்கான மைதானங்களையும் கொண்டிருந்தது என் போன்றோருக்கு பெருவாய்ப்பாக அமைந்தது.

நான், எமது அன்பு நண்பன் முரளி, குணசங்கர், பதுமநிதி ஆகியோர் முறையே துடுப்பெடுத்தாட்டம், உதைபந்தாட்டம், ஹொக்கி என அனைத்து அணிகளிலும் இணைந்தே விளையாடினோம். முத்துலிங்கம், கதிர்ராஜ், பிரேம்குமார், சங்கரசே ஆகியோருடன் துடுப்பெடுத்தாட்ட அணிகளிலும், சுகல்ஜன், தயாளன், சுவேந்திரராஜ், வின்சன் பிரபாகர் ஆகியோருடன் கால்பந்தாட்ட அணிகளிலும் இணைந்து விளையாடிய நினைவுகள் இன்றும் பசுமையாக...

போட்டிகளின் போது மைதானத்தில் முரளியின் ஈடுபாடு தனித்துவமானது. சமயங்களில் அவரின் கோபத்துக்கு ஈடுகொடுத்து விளையாடுவது கடினமாக அமைந்துவிடும். துடுப்பெடுத்தாட்டப் போட்டிகளின்போது எனக்கும் சங்கருக்கும் இடையில் பந்தைத் தடுக்க Gully நிலையில் யார் நிற்பது என்ற ஆரோக்கியமான போட்டி இருந்துகொண்டேயிருக்கும். பதும நிதியுடன் பேசிக்கொள்ளாமலேயே அனைத்துப் போட்டிகளி லும் இணைந்து கலந்துகொண்டோம். ஆனாலும் அவரின் off-cut shot-ஐ மிகவும் ரசிப்பேன். துடுப்பெடுத்தாட்டப் பயிற்சிக ளின் போது முரளியின் பந்துவீச்சை எதிர்கொள்வது பயம் கலந்த சவாலாக இருக்கும்.

15 வயதிற்குட்பட்ட துடுப்பெடுத்தாட்ட அணிக்கு தலைமை தாங்கி கொழும்பு டி.எஸ்.சேனநாயக்க கல்லூரி அணிக்கு எதிராக கொழும்பு சென்று விளையாடிய நினைவுகள் நேற் றுப்போல் இருக்கின்றன. முதலில் துடுப்பெடுத்தாடிய டி.எஸ். சேனநாயக்கா அணி இரண்டு விக்கட்டுக்கள் இழப்புக்கு 240 ஓட்டங்களுக்கு மேல் பெற்று ஆட்ட நிறைவுசெய்திருந்தது. அணியின் தலைவர் மிக லாவகமாக மைதானத்தின் அனைத்து மூலைகளுக்கும் பந்தை அடித்து ஆட்டமிழக்கா மல் 140 ஓட்டங்களை எடுத்திருந்தது மனதாலும் உடலாலும் எம்மை மிகவும் வருத்தியிருந்தது. தொடர்ந்து ஆடிய நாம் இரண்டு ஆட்டங்களிலுமாக சேர்த்து 70 ஓட்டங்களுக்குக் குறைவாகவே எடுத்து படு தோல்வியை சந்தித்திருந்தோம்.

நீண்ட வருடங்களின் பின்பு, எமக்கு எதிராக 140 ஓட்டங்களை எடுத்திருந்த வீரர்தான் பின்னாளில் இலங்கையின் மிகச் சிறந்த வீரர்களுள் ஒருவர் என எல்லோராலும் போற்றப்பட்ட அரவிந்த டி சில்வா எனக் கேள்வியுற்றபோது, அவர்கள் இரண்டு விக்கட்டுக்களுடன் ஆட்டத்தை நிறுத்தியிருக்காவிட் டால்..... தலை தப்பியது என்ற நினைப்பு வந்துபோனது.

ஆனந்தரட்ணம் ஆசிரியரின் பாதுகாப்பில் முரளியின் தலை மையில், பதுமநிதி, சங்கர், பிரேம்குமார், சங்கரசே, ரமேஷ் அடங்கலாக 17 வயதிற்குட்பட்ட எமது துடுப்பெடுத்தாட்ட அணி மாத்தளை சென். தோமஸ் கல்லூரிக்கு எதிராக விளையாடுவ தற்காக மாத்தளை சென்றிருந்த அனுபவம் மிகவும் தனித் துவமானது. விளையாட்டின் பெறுபேறுகள் சுத்தமாக நினை வில் இல்லை, ஆனால் நாம் அனுபவித்த மகிழ்ச்சி அப்படியே நினைவில் உள்ளது. நாம் முதன் முதலில் தொலைக்காட்சிப் பெட்டியை பார்த்தது அங்குதான். ஒரு நாள் இரவு ஆனந்த ரட்ணம் ஆசிரியர், பொதுவெளி ஒன்றில் பொருத்தப்பட்டிருந்த தொலைக்காட்சிப் பெட்டியை கூட்டிச்சென்று காட்டினார். அதைப் பார்த்துவிட்டு திரும்பி வரும்பொழுது எமது தங்கு



மிடத்தில் மின்சாரம் இல்லாமல் கும்மிருட்டாக இருந்தது. எதுவுமே கண்ணுக்குப் புலப்படவில்லை. கதிரை ஒன்றில் அமர்ந்திருந்த உருவத்தின் வயிற்றுப் பகுதியை தடவியபடியே 'மச்சான் முரளி உன்னுடைய கள்ளு வண்டி' என்று பிரேம் குமார் கூற அதில் உட்கார்ந்திருந்த ஆனந்தரட்ணம் ஆசிரியர் செருமிக்காட்டி தான் முரளி அல்ல என்று தெரியப்படுத்த அந்த இடமே கலகலப்பாய் ஆகியது.

இதேபோன்று, 1980ம் ஆண்டு யாழப்பாணப் பாடசாலைகளின் ஹொக்கி அணிக்கு தலைமை தாங்கிய எனது அண்ணா மதிராஜோடு முரளி, சங்கர், நான், பதுமநிதி, தேவராஜன் ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டு குருத்தலாவெல சென்ற அனுபவமும் பிரத்தியேகமானது. போட்டிகளுக்கு முதல்நாள், மலைநாட்டின் சீதோஷ்ண நிலையை கணக்கில் எடுக்காமல் சில நண்பர்கள் அங்குள்ள நீச்சல்குளத்தில் குதித்து குளிரில் விறைத்தது முதல் அடுத்தநாள் போட்டிகளில், 'கண்டி' அணிக்கு எதிராக, எமக்கு நன்கு பழக்கப்பட்ட புல் தரை மைதானத்தில் நடந்த போட்டியில் எமது திறமையான விளையாட்டை அவதானித்த 'கொழும்பு றெட்ஸ்' அணி, புற்தரையில் நடக்கவேண்டிய அவர்களுடனான போட்டியை விளையாட மறுத்து அடம்பிடித்ததும் பெருந்தன்மையாக நாம் விட்டுக்கொடுத்து களிமண் தரை மைதானத்தில் நடந்த அவர்களுடனான போட்டியில் 5:1 என்ற கோல் கணக்கில் வாங்கிக்கட்டிக்கொண்டு திரும்பியதும் நன்றாக நினைவில் உள்ளது.

1977ம் ஆண்டு 14 வயதில் இளையோர் பிரிவுக்கான Cross Country ஓட்டப்பந்தயத்தில் முதலிடம் பெற்றதால் ஏற்பட்ட உந்துதலால் அடுத்தடுத்த வருடங்களில் விளையாட்டுக்களில் எனது ஈடுபாடு மிகவும் அதிகமாகிப் போனது. படிப்பில் ஆர்வம் மிகக் குறைந்திருந்தாலும் எனது அப்பா, அம்மா ஒருபோதும் எனதோ எனது அண்ணாவினதோ விளையாட்டு ஆர்வத்திற்கு எப்போதும் குறுக்கே நின்றதில்லை, மாறாக விளையாட்டுக்களுக்குத் தேவையான உடை மற்றும் உபகரணங்களை எமது இறுக்கமான குடும்ப சூழ்நிலையிலும் வாங்கியே தந்துள்ளார்கள்.

நான்கே ஆண்டுகள் மட்டுமே நீடித்த குறுகிய காலத்தில், முறையே 15, 17 வயதிற்குட்பட்ட துடுப்பெடுத்தாட்ட, கால்பந்தாட்ட அணிகளுக்கு தலைமை தாங்கியது; 1978, 1979, 1980ம் ஆண்டுகளில் முறையே 16, 17, 19ம் வயதுப் பிரிவுகளின் மெய்வல்லுனர் போட்டிகளில் சிறந்த வீரனாக (Champion) தெரிவுசெய்யப்பட்டது; நீல இல்ல (Brown House) மெய்வல்லுனர் தலைவனாக தெரிவுசெய்யப்பட்டது (அந்த வருடம் முறையே, ஜெயச்சந்திரன் (U15), போல் தேவராஜன் (U16), றோய் தேவதயாளன் (U17), நான் (U19), எஸ். சிவக்குமார் (O19), என அனைத்து ஆண்கள் பிரிவு சிறந்த வீரர்களாக நீல இல்ல வீரர்களே தெரிவுசெய்யப்பட்டதும், எமது இல்லமே முதல் இடத்தைப் பெற்றதும் குறிப்பிடத்தக்கது); 19 வயதிற்குட்பட்டோர் துடுப்பெடுத்தாட்ட மற்றும் ஹொக்கி அணியில் அங்கத்துவம்; யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கான ஹொக்கி அணியில் அங்கத்துவம் என தொடர்ந்து.... 1980ம் ஆண்டின் இளையோர் பிரிவின் சகலதுறை விளையாட்டு வீரன் (Junior Allrounder Sportsman 1980) என்ற இடம் வரை வரமுடிந்தது.

1980ம் ஆண்டு எனது 17 வயதில், உயர்தர பொதுப்பரீட்சையின் பின் யாழ்ப்பாணக் கல்லூரியிலிருந்து வெளியேறிய தோடு மேலும் விளையாட்டுக்களில் ஈடுபடமுடியாது போனது அந்த நாட்களில் எனக்கு மிகவும் கவலையை கொடுத்தது. 19 வயது வரை யாழ்ப்பாணக் கல்லூரியில் நீடித்திருந்தால் விளையாட்டில் இன்னும் ஒரு படி மேலே போயிருக்கலாம் என்ற வருத்தம் இருந்திருக்கிறது.


ஆனாலும் நான் யாழ்ப்பாணக் கல்லூரியில் பெற்ற அனுபவம், அதுவும் விளையாட்டுக்களின் மூலம் பெற்ற அனுபவம்தான் இன்று வரை என்னை வழிநடத்தி வருகிறதென்பதே உண்மை.

இன்று ஐரோப்பிய நாடுகள் பலவற்றிலும் தமிழர்களுக்கான மெய்வல்லுனர் போட்டிகள் தொடங்கி தமிழர் விளையாட்டு விழா நிகழ்வுகள், உதைபந்தாட்டம், துடுப்பெடுத்தாட்டம், கரப்பந்தாட்டம், பூப்பந்தாட்டம், மேசைப்பந்தாட்டம், சதுரங்கம் வரையான அனைத்து விளையாட்டு நிகழ்வுகளும் நடைபெறுகின்றன. பிரான்சில் நடைபெறும் தமிழர்களின் அனைத்து விளையாட்டு நிகழ்வுகளை வளரத்தெடுப்பதிலும் எனது பங்கும் இருக்கிறதென்றால் அது யாழ்ப்பாணக் கல்லூரி எனக்களித்த வரத்தினால்தான். இதை நான் எங்கும் எவர் முன்னாலும் கூறுவதை பெருமையாக எண்ணுகிறேன். நாம் எல்லோரும் சந்திக்க இருக்கும் ஓர் இனிய நாளில் இதைப்போன்று, நான் பெற்ற எண்ணற்ற பயன்களை உங்களுடன் பகிர ஆவலாய் இருக்கிறேன்.

பாடசாலையில் எனக்கு மூன்று பக்க நட்பு வட்டாரம் அமைந்திருந்தது. ஒன்று, வகுப்புத் தோழர்கள்; இரண்டு, விளையாட்டுத் தோழர்கள்; மூன்று விடுதி மாணவத் தோழர்கள். வட்டுக்கோட்டையில் நான் வசித்த வீடு யாழ்ப்பாணக் கல்லூரி வளாகத்தை ஒட்டி அமைந்திருந்ததால், விடுதியில் தங்கியிருக்கும் மாணவர்களோடும் மிகுந்த நெருக்கத்தைப் பேணிவந்தேன். அதனால் விடுதி மாணவர்களுக்காக காலையிலும், மாலையிலும் நடைபெறும் படிப்பிலும் (Studies) கலந்துகொள்வேன். ஒவ்வொரு நாளும் காலை 6.30 மணி முதல், இரவு 9.30 வரை பாடசாலை வளாகத்திற்குள்ளேயே எனது வாழ்வு கழிந்தது. இது பாடசாலை என்மீது எத்தனை வலுவான தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கும் என நீங்கள் ஓரளவுக்கு உணரமுடியும் என்று நம்புகின்றேன்.

இச்சந்தர்ப்பத்தில், யாழப்பாணக் கல்லூரியில் சேர்த்து படிக்க வைத்த என்னை ஆளாக்கிய எனது பெற்றோரையும், எனது ஆசிரியர்களாவும், வழிகாட்டிகளாகவும் விளங்கி சமூகத்தில் பொறுப்புள்ள மனிதனாக உலாவர வைத்த அனைத்து ஆசிரியர்களுக்கும் மனமார்ந்த நன்றிகள்.

**- நிதிராஜ்**



# நெல்லிமரமும் ஆலமரமும்

**- கந்தசாமி சோதிநாதன்**

நான் இரண்டாம் வகுப்பிலிருந்து உயர்தர வகுப்பு வரைக்கும் யாழ்ப்பாணக் கல்லூரியில் படித்தேன். அப்போது அங்கு திருவாளர் பவிங் அவர்கள் Junior School தலைமை ஆசிரியராகக் கடமையாற்றினார். அவர் மிகவும் கண்டிப்பானவர். அதனால் மாணவர்கள் எல்லோரும் அவ ருக்குப் பயப்படுவார்கள். அத்தோடு யாராவது கடுமையான குழப்படி செய்தால் தனது அறைக்கு அழைத்து காலில் பிடித்து தலைகீழாகத் தூக்கி பின்புறத்தில் அடிப்பார் என்று சில மாண வர்கள் சொல்லி கேள்விப்பட்டிருக்கிறேன்.

அதனால் மாணவர்கள் எல்லோரும் ஒழுக்கமாக நடந்து கொள்வார்கள். அந்தச் சிறுவயதுக் காலங்கள் எப்படிக் கழிந் தது என்று இப்போது நினைக்கையில் மகிழ்ச்சியாக இருக் கிறது. எனக்கு மிகவும் பிடித்த ஆசிரியர் திருவாளர் பொன்னம் பலம் அவர்கள். அவர் துவிச்சக்கரவண்டியில் வருவார். அவர் வரும்போது அவர் கூடவே நறுமண வாசமும் வரும். சந்தர்ப் பம் கிடைக்கும் வேளைகளில் அவரது துவிச்சக்கரவண்டியின் கைபிடியை தேய்த்துத் தேய்த்து முகர்ந்ததுண்டு.

Junior School உள்வளாகத்தின் நடுவில் வட்டமாக வளர்ந் திருந்த கொடிமர வேலியோடு நெல்லிமரமும் தண்ணீர் pipeபும் இருந்தன. இடைவேளை விடும்போது முண்டியடித்து தண்ணீர் குடிப்பது, நெல்லிக்காய் காய்க்கும் காலத்தில் தடி யால் எறிந்து நெல்லிக்காய் பறித்து தின்பதோடு தண்ணீரை யும் குடிக்கும் போது ஏற்படும் சுவையே சுவை. எமது கல்லூரி நுழைவாசலில் வலது பக்கமாக மலைவேம்போடும் இரும்புச் சங்கிலியால் ஆன 3 பேர் ஆடக்கூடிய ஊஞ்சல் ஒன்று இருந் தது. மதிய இடைவேளையின் பின்பு உணவை உண்டபின் யார் முதலில் ஓடிப்போய் ஊஞ்சலைக் கைப்பற்றுவது என்று போட்டி போட்டு சண்டை பிடித்த நினைவுகள் உண்டு.

அப்படியே வருடங்கள் ஓடி பிரதான சாலையின் வலப்பக்க மாக உள்ள 'ப' அடியில் அற்புதமான இயற்கை அழகுடன் கூடிய ஆலமரத்தின் நடுவில் ஒரு பனை மரம். அது ஒரு வியப் புத்தானே! அந்த 'ப' அடியில் மாபிள் அடி விளையாட்டில் யார் வெல்வது என்ற போட்டிகள் நடந்த நினைவுகளும் உண்டு.

அத்தோடு 5, 6ஆம் வகுப்புகளில் மாணவர்களிடையே கடும் போட்டி போட்டு படித்து நாட்கள் கடந்தன. அக்காலத்தில்தான் மெய்வல்லுனர் போட்டிகளில் ஆர்வம் வர Over12 பிரிவில் Champion ஆனேன். அந்த வருடம் எமது Blue house தான் இல்ல விளையாட்டுப் போட்டிகளில் முதல் இடம் பெற்றது. நானும் வடிவாம்பாளும் Over12இல் champions ஆக கலக்கியிருந்தோம். எனது வாழ்க்கையில் முதற்தடவைாக வெற்றிக்கோப்பையை வாங்கிய பெருமையை அடைந்தேன். காலங்கள் கடந்து எட்டாம் வகுப்பிற்கு Uper School இற்கு இடம்பெயர்ந்து உதைபந்தாட்டத்தில் தீராத விருப்பம் ஏற்பட்டு 3வது பிரிவில் சேர்ந்து விளையாடி, பின் 2வது பிரிவில் விளையாடி, 1வது பிரிவில் இரண்டு வருடங்கள் விளையாடி, வாலிப வயதை எட்டியிருந்தேன். கல்லூரி நாட்களில் Social நிகழ்வில் நான், ரவி, பல நண்பர்களோடு நாடகம் ஒன்றும் நடித்தோம். யாழ்ப்பாணக் கல்லூரியில் படித்த பெருமையை நினைக்க இன்றும் கர்வமாக உள்ளது. ஏன் என்றால் ஆங்கி லம் பேசுவதற்கும், விளங்குவதற்கும் எமது கல்லூரிதானே கற்றுக்கொடுத்தது என்று மார்பைத் தட்டிச் சொல்லலாம்.

இன்னும் நிறைய நினைவுகள் உண்டு, பக்கங்கள் நீண்டு விடும் என்பதை கருத்திற்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.



# ஆவலுடன் ஓர் கடிதம்..!

சாந்தி, தெய்வநாயகி, குணசங்கர், ஜெயரஞ்சன், உருத்திரகுமார், யோகானந்தன், சுவேந்திரராஜ், கொட்வின், பதுமநிதி

அன்பு நண்பர்களே, நலந்தானா? அவுஸ்திரேலியா– நியூசிலாந்து நண்பர்கள் நாம் சேர்ந்து எழுதும் இக்கடிதம் எப்படியும் உங்கள் கையில் வந்து சேரும் என்ற நம்பிக்கையுடனும், ஆவலுடனும் இதை எழுதுகிறோம். இது வெறும் கடிதமல்ல எம் எல்லோரினது வாழ்விலும் கடந்து போன மூன்று ஆண்டுகளை மீள நினைவுக்கு கொண்டு வரும் ஒரு முயற்சி. கடலின் ஆழத்தில் கிடந்த புதையலொன்றை சுழியோடிகள் கண்டடைவதுபோல எம் மன ஆழத்திினின்று நாம் சிலர் சுழியோடிக் கண்டடைந்தவைதான் இந்த நினைவுகள்.

**இனி கடிதத்தைப் படியுங்கள்.**

மூன்று பக்கமும் இணைத்துக் கட்டபட்டிருந்த கட்டட தொகுதியின் மூன்று பக்கங்களும் வகுப்பறைகள். தெருவோடு ஒட்டியிருந்த நீண்ட கம்பி வலை போட்ட மண்டம் நாலாவது கட்டடம். அதில்தான் காலை Chappel நடக்கும்.

நடுவில் ஒரு தண்ணீர் பைப்பும் சுற்றவர அரை சுவர் போல் அழகாக வெட்டப்பட்ட கோணற் புளிய மரங்களாலான ஒரு வளையம். நடுவில் நெல்லி மரம். வகுப்பறைகளை சுற்றி வர ஓடுகிறது ஒரு திண்ணை.

அது 1972 ஆம் ஆண்டு. ஐந்தாம் வகுப்பில் 5A, 5B என்ற இரு பிரிவுகள் இருந்தன.

வகுப்பறைகளின் உயர்ந்த ஒடு வேய்ந்த கூரையை அண்ணார்ந்து பார்த்தால் முகடுகளின் பொருத்துகளுக்குள் புறாக்கள் பதுங்கியிருப்பது தெரிகிறது. காலையில் அவற்றின் எச்சங்கள் சுவர்களின் ஓரம் விழுந்து கிடந்தன.

வகுப்பில் சிறிய மேசைகளில் இருவர் சேர்ந்திருக்க வசதியாக அவை இணைக்கப்பட்டிருந்தன. அதன் ஓரத்தில் மைக்கூடுகளுக்கான துவாரம் இருந்தது. ஒரு உசாரில் வெள்ளை ஆடைகளில் பேனாவிலிருந்த மையால் கோலம் போட்ட பலருக்கு வீட்டில் நல்ல பூசை கிடைத்தது.

வகுப்பில் எம்மில் சிலருக்கு எல்லாம் புதிய முகங்கள், சிலருக்கு ஏற்கனவே தெரிந்த முகங்கள் இருந்தன.

போல் ராஜா மாஸ்டர் 5A க்கு தமிழ். 5B க்கு கணிதம். அவர் மிக கஷ்டப்பட்டுப் படிப்பிப்பார். அவருக்குத் தொய்வு வியாதி வேறு. மெல்லிய உடல் கொண்டவர். கோபம் வந்தால் கடுமையாக ஏசுவார்.

'நான் இஞ்ச படிப்பிக்கிறன். அங்க பாரப்பா அந்த விசரன் கதைச்சுக் கொண்டிருக்கிறான்.'

எங்களில் பலருக்கு இந்த அர்ச்சனை கிடைக்கும். பெண்கள் பெரும்பாலும் தப்பித்துக் கொள்வார்கள்.

தேவகடாட்சம் மாஸ்டர் 5B க்கு தமிழ், 5A க்கு கணிதம் படிப்பிக்க வந்தார். ஒரு சிவப்பும், வெள்ளையும் நிற C90 யில் வருவார். சாரணர் இயக்கம் மற்றும் முதலுதவி பயிற்சிகள் என்று பல்வேறு தொண்டர் அமைப்புகளில் இருந்தார். கல்லூரியில் அநேகமான இல்ல விளையாட்டுப் போட்டிகளில் தமிழில் அறிவிப்பாளர் அவரே. வகுப்பில் ஆட்டுக்குட்டி, மாட்டுக்கன்று என்று எமக்குப் பெயர் வைத்து அவர் உரத்துக்கு கூப்பிடும்போதெல்லாம் வெட்கம் எம்மைப் பிடுங்கித் தின்றது. அதை விட குழப்படி செய்தோருக்கு செவியைப் பிடித்து இழுத்து விடுவது அவரின் தண்டனைகளில் ஒன்று.

சமூகக்கல்வி நவரத்தினம் மாஸ்டர். அவர் இன்றைய இளசுகள் அணிவது போல முன்னர் கடுக்கன் போட்டிருந்திருக்க வேண்டும். எங்கள் காலத்தில் அவர் அதை அணியாததால் அவர் காதில் துவாரங்கள் இருந்தன. அதுவே அவருக்குப் பட்டப் பெயர் ஒன்று வைக்க வழி வகுத்து விட்டது.

ஆசிரியர்களெல்லாரும் வேட்டியிலும், ஆசிரியைகள் சேலையிலும் வலம் வந்த காலமது .

ஆங்கிலம் படிப்பிக்க புஷ்பராணி டீச்சர் வந்தார். அவர் கடமையில் கருத்தானவர் கண்டிப்பானவரும் கூட.


செல்வி எலையாஸ் டீச்சர் ஆரம்பப் பிரிவுகளுக்கு மேற்பார்வையாளர். அவரும் கண்டிப்பானவர் என்றாலும் எங்களுக்கு அவ்வப்போது பாடங்கள் எடுக்கும் வகுப்புகளில் அவர் பிள்ளைகளோடு பிள்ளையாய் மாறி விடுவார்.

மதிய இடைவேளைகளில் நுழைவாயிலோடு அருகில் இருந்த ஊஞ்சல்களில் இடம் பிடிப்பதற்காக எப்போதும் போட்டி இருக்கும். இடங்கிடைக்காதோர் Nursary கட்டிடத்துக்கு அருகாக செல்லும் குறுகிய ஒழுங்கையினூடு நடந்து பவிலியன் வரை ஒரு நடை போய் Bignel மைதானத்தின் Cricket Score Board இற்கு அருகாமையிலிருந்த நல்ல தண்ணீர்க் கிணற்றில் தண்ணீர் குடித்து வர மீண்டும் பாடங்கள் தொடங்கும் மணி அடித்து விடும்.

5B வகுப்பறைக்கு முன்னாள் அந்தத் திண்ணையில் எப்போதும் பளிச்சென்று துடைத்து விடப்பட்ட நிலையில் ஒரு சைக்கிள் நிற்கிறது.

அது சங்கீதம் பொன்னம்பலம் மாஸ்டரின் வண்டி. அதை அவர் திண்ணையில் ஏற்றி நிறுத்தி விடுவார். அதன் ஹாண்டிலின் பிளாஸ்டிக் கைப்பிடியில் எப்போதும் அத்தரோ அல்லது சந்தனமோ மணம் கமழ்ந்திருக்கும். அதை எங்கள் உள்ளங்கையில் ஒற்றிக்கொள்வதற்காக கைப்பிடியைப் பிடித்து திருகுவோம்.

அவர் கோயில்களில் கதாப் பிரசங்கம் செய்பவர் என்று சொல்வார்கள். அதனால் அவருக்கு புராணங்கள் இதிகாசங்கள் எல்லாம் தண்ணீர் பட்ட பாடம். மஹாபாரதத்தில் உப கதைகள் அனைத்தையும் நுட்பமாக வெளிச்சம் போட்டுக் காட்டியவர். பீமனைக் கொல்ல துரியோதனன் தண்ணீருக்குள் ஈட்டியை குத்தி நிறுத்தி விட்டு மரத்திலிருந்து தண்ணீருக்குள் கரணம் அடித்து குதிக்கும் போட்டி வைத்ததையும்,



பீமன் தண்ணீர்ப் பூச்சிகளைக் கண்டு அதை ஊகித்துக் கொண்டு மேலும் சில கரணங்கள் அடித்து ஈட்டிக்கு அப்பால் விழுந்து தப்பியதை சொன்னது ஏனோ எமக்கு இன்னும் நினைவிலுள்ளது.

தமிழ் சங்கீதம் படிப்பித்த அவருடைய சங்கீத அறைக்கு செல்வதானால் 5B வகுப்புக்குப் பின்னல் ஓடும் ஒரு ஒற்றை யடிப் பாதையை பிடிக்கவேண்டும். அது ஒரு முள்வேலிக்கு அருகாக செல்கிறது, வேலிக்கு அப்பால் ஒரு ஒழுங்கை. அது கல்லூரிவீதிக்கு எதிர்த்தாற் போல வட்டுக்கோட்டை பிரதான வீதியிலிருந்து பிரிந்து சென்ற ஒழுங்கை.

அப்போது யாழ்ப்பாணக் கல்லூரிக்கு 150 வயதாகியது. அதைக் கொண்டாடுவதற்கான பல ஏற்பாடுகள் மும்முரமாய் நடந்தன. சுகந்தி டீச்சரும், தனரஞ்சனி டீச்சரும் இதற்கான மேடை நிகழ்வொன்றை எமது A, B பிரிவுகளையும் சேர்த்து தயாரிக்க விரும்பினார்கள். இருவரும் ஆங்கில ஆசிரியர்கள் அத்துடன் தனரஞ்சினி டீச்சர் பியானோ, மேற்கத்தைய இசையையும் கற்பித்து வந்தா.

அவர்கள் தேர்ந்தெடுத்தது சிண்ட்ரெல்லா கதையை. அதில் கடைசியாக வரும் நடன விருந்தில் அனைவரும் கை கோர்த்து நடனமாடும் காட்சி வரும். சிண்ட்ரெல்லா யார், இளவரசன் யார் என்பதெல்லாம் இப்போது நினைவிலில்லை. அப்போதுதான் A, B பிரிவிலுள்ள மற்றைய தோழர்களும், தோழிகளும் எமக்கு அறிமுகமாயினர் .

Rhetorical என்று ஒரு பாடநேரம் இருந்தது. அது ஒவ்வொருவரும் மேடையில் பேசி நடிப்பதற்கான பயிற்சிக் களம். இதில் ஒவ்வொருவரும் வெவ்வேறு திறமைகளை காட்டினர். வெட்கப்பட்டோர் ஆரம்பத்தில் கூச்சத்துடன் நின்றாலும் நாட் செல்ல, செல்ல அவர்களும் வழிக்கு வந்தனர்.

வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிகளுக்காக மாலை நேர பயிற்சிகள் ஆரம்பமாகும் காலத்தில் எமக்கெல்லாம் பரபரப்பு. பாடசாலை 3.45 க்கு முடிந்ததும் நேரே பிக்னல் பவிலியனை நோக்கி சாரி சாரியாக மாணவர் கூட்டம் செல் லத் தொடங்கும். இதைக் கண்காணிக்க இல்ல ஆசிரியர்கள் தயாராக பதிவேட்டுடன் மைதானத்தில் நிற்பார். இருந்தும். அவர்களுக்கு கண்ணில் மண்ணைத் தூவிவிட்டு வீட்டுக்கு ஓடிவிடும் எம்மில் சிலரும் இருக்கத்தான் செய்தனர்.

பயிற்சிகள் 6 மணி வரை தொடர வியர்த்துக் களைத்த எங்க ளுக்கு பவிலியனின் அருகே இருந்த கிணற்றுத் தண்ணீர் அமிர்தமாகவிருந்தது. மாலை மங்கி மஞ்சள் சூரிய ஒளி விழுந்த பசிய புற்களை மிதித்துக் கொண்டே சூட்கேசுகளை தூக்கிக் கொண்டு வீதியை நோக்கி நடந்தோம்.

இல்ல விளையாட்டுப் போட்டிகளில் வழமையான போட்டிக ளுடன் Wheelbarrow ஓட்டம், Aeroplane ஓட்டம், சாக்கு ஓட்டம் என்பன வேடிக்கையாகவும், ஆர்வமூட்டுபவையாகவும் இருந்தன. வினோத உடைப் போட்டி மிகுந்த உற்சாகத்தை யையும், வரவேற்பையும் பெற்ற ஒன்று.

இப்போது 1973 ஆம் ஆண்டு. நாங்கள் ஆறாம் வகுப்பு. புதிய வகுப்புக்கு தெருவைக் கடந்து கல்லூரியின் பிரதான வாயிலை ஒட்டி இருந்த இரண்டு கட்டடங்களுக்குப் போகிறோம். வலப்பக்கத்து கட்டடத்தில் முதலாம் அறை 6A, தொடர்ந்து 6B, 6C அறைகள்.

கட்டடங்களுக்கு எதிரே நின்ற ஆல மரத்தின் இலைகளை ஊடுருவிய காலைச் சூரியனின் மஞ்சள் ஒளிப்பொட்டுகள் கீழே சிதறிய சில்லறைகள் போல கிடந்தன.

பாடசாலை மணி அடிக்க முன்னரே வந்து விட்ட பலருக்கு விளையாட நேரம் இருந்தது. பானா வடிவில் கட்ட பட்டிருந்த சீமெந்து திண்ணை. அதின் நடுவில் தரையில் ஒருவர், நாலு மூலைகளில் நால்வர் நின்றபடி மூலைகளில் இடம் பிடிக்கும் விளையாட்டு.

இன்னொரு பக்கத்தில் கைபிடி போட்ட சூட்கேஸ் பெட்டிகளை குத்தென வைத்து விக்கெட்டாக்கி முன்னால் நின்று கிரிக்கட் அடிக்கிறார்கள் சிலர். வட்டுக்கோட்டை வீதியில் வாகனங்க ளின் இரைச்சல்களை விட அவர்களின் சத்தம் ஓங்கியிருக் கிறது.

ஆலமரத்திற்கு அப்பால் பெருத்த மகோகனி மரங்கள் பல நிழல் பரப்பி நின்றன. சிறிய போர்த்தேங்காய் போன்ற நிறத்தில் பாரமான காய் மரத்திலேயே வெடிக்காது விட்டால் நிலத்தில் முழுசாக விழுகிறது. மரத்திலே வெடித்த விதைகள் ஹெலிகொப்டர்கள் இறங்குவது போல செட்டைகளை விசிறிச் சுழன்று பறந்து காற்றில் மெதுவாக மிதந்து கீழே விழுகின் றன. விழுவதற்குள் அவற்றை பிடிப்பதற்காக ஓடுவது திரில் லாக இருந்தது.

மகோகனி மரங்களுக்கு எதிரே பெண்கள் வலைப் பந்து விளையாடும் இடம். மதிய இடைவேளைகளில் விளையாட இடங் கிடைக்காதவர்களுக்கு வேறு பல பராக்குகள் இருந் தன. அதிலொன்று கல்லூரி வாசலிலிருந்து கூப்பிடு தொலை விலிருந்த கனகப்பா புத்தகக் கடை, கணபதிப்பிள்ளை கடை என்று காலார நடந்து சென்று வருவது. புத்தகக் கடைக்குப் போவது புத்தகம் கொப்பி வாங்க வேண்டுமென்தற்காக மட்டுமல்ல.

கனகப்பாவுக்கு கடுப்பேற்றி வேடிக்கை பார்ப்பது ஒரு சுவா ரஸ்யம். சுவேந்திரராஜுக்கு, இதில் பெரும் பூராயம்.

இலந்தைப் பழம் என்ன ருசியென்று இப்போது எங்கள் எல்லோரினதும் நாக்கு மறந்திருக்கும். புளிப்புக் கொண்ட வாயில் பட்டால் மாப்போல கரையும் அதன் தோல் நாக்கு மேல் அண்ணத்தில் ஒட்டிவிட பல்லில் கொட்டை கடிபடுகிறது.

இலந்தைப் பழ காலம் என்று ஒன்று இருந்தது. அக்காலத்தில் வௌவால்கள் தவறாது வந்து பழங்களை புசித்துக் கொட்டை களை மட்டும் கீழே விழுத்திவிட்டுப் போய் விடும். வௌவால் கள் வந்ததோ இல்லையோ எங்களில் சிலர் அந்த காலத்தை ஆவலோடு பார்த்திருந்தோம். ஆங்கிலம் கற்பித்த புரூடி மாஸ்டர் வீடு வட்டு வீதியில் கல்லூரியிலிருந்து ஒரு நானூறு

மீட்டர் தூரத்திலிருந்து. அங்கு பழம் பிடுங்குவதற்காக செல்ப வர்களுடன் சேர்ந்து கொண்டோம். இரவில் வரும் வௌவால் களை நாம் முந்திவிட வேண்டும். இவ்வாறாக இலந்தைப் பழங்களைப் பொறுக்கிச் சேர்த்து புரூடி மாஸ்டரின் வளவை சுத்தப்படுத்திய எம் போன்ற தொண்டர்களின் பட்டியல் நீண் டது. அதை விட அவர் வீட்டு வளவில் இரண்டு நாவல் மரங் கள் நின்றன.

அக்காலத்தில் சமயம் பத்தாம் வகுப்பு வரை கட்டாய பாடமாக இருந்தது. சைவ சமயத்தின் தொன்மை என்ற கேள்வி சமய பாடப் பரீட்சையில் பெரும்பாலும் கேட்கப்படலாம் என்ற நம்பிக்கை சச்சிக்கு இருந்தது. அதனால் பாடப் புத்தகத்தில் ஒரு இரண்டு பக்கத்தில் அச்சாகியிருந்த அந்தத் தலைப்பையே முற்றாக பாடமாக்கியிருந்தான் சச்சி. சமய பாட ஆசிரியர் பெயரும் சச்சிதானந்தம். அன்றிலிருந்து 'தொன்மை' என்ற கௌரவ பட்டப் பெயரை சச்சிக்கு அளித்தோம்.

ஆறாம் வகுப்பில் கணிதம் சிற்றம்பலம் டீச்சரும், கனகரட்னம் மாஸ்டரும். நோயல் விமலேந்திரன் மாஸ்டர் 6A வகுப்புக்கு புதிய விஞ்ஞான ஆசிரியராக பாடம் நடாத்த வந்தனர். செல்வ மணி டீச்சர் ஆங்கிலம் படிப்பித்தார். அவர் டீச்சர் அதிர்ந்து ஒரு பேச்சுப் பேசியறியார்.

சங்கீதம் கற்பிக்க ஜீவா டீச்சர், ஆறாம் வகுப்பில் பெற்றோர் தின விழாவுக்காக ஜீவா டீச்சரும், பொன்னம்பலம் மாஸ்டரும் எமக்கு ஒரு நாடகம் தயாரித்து நடிக்க வைத்தனர். பதுமநிதி இதில் விசுவாமித்திரர் வேடத்தில் நடிக்க இந்நாடகம் இரு தினங்கள் ஓட்லி மண்டபத்தில் மேடையேற்றப்பட்டது நினை வுக்கு வருகிறது.

அதிபர் பங்களாவுக்கும், எமது வகுப்பறைகளுக்கும் இடையில் இருந்த கட்டிடத்தில் - அது கட்டிடமா? அல்லது அதிபரின் பாவிக்காத களஞ்சிய அறையில் ஒன்றா? என்று தெரிய வில்லை. அங்குதான் தும்புவேலை ஆசிரியர் கனகசபாபதி மாஸ்டரின் சாம்ராஜ்யம்.

அங்கு தும்புத்தடிகளும், கால் மிதிகளும் செய்தோம். கயிறு திரிக்கிறோம் என்றும் கயிறு விட்ட வேறு சிலர் தண்ணீர் விடாய்க்கிறது என்று சாட்டுச் சொல்லிக்கொண்டு வகுப்பிலி ருந்து நேரே போய் அதிபர் முற்றத்துப் பைப்பில் தண்ணீர் குடிப்பது வழக்கம்.

கனகசபாபதி மாஸ்டர் ஓவியம் வரைய கற்பித்தும் வந்தார். மதியம் கடந்து அடுத்ததாக ஓவிய வகுப்பு இருந்தால் அவரால் நித்திரையை இலகுவில் கட்டுப் படுத்திவிட முடியாது.

ஒருநாள் ஓவிய வகுப்பில் அப்பிடி நித்திரை கொண்டெழுந்து வந்த அவர் பெரும்பாலும் வெறுமையாக்கிக் கிடந்த எங்கள் வரைதல் கொப்பியைக் கண்டு விரல் நுனியால் புரட்டிப் பார்த்தவாறே போனார். அன்று சூரன் போர் காட்சியை வரைய சொல்லியிருந்தார். சூரனை தூக்கி வைத்திருப்பது போலவும் சூழ நிறைய ஆட்கள் நிற்பது போலவும் வரைய வேண்டும்.

ஆட்களை படம் வரையச் சொன்னால் எம்மில் சிலர் வரைந்து வைத்திருப்பது அவருக்கு எப்போதும் சினத்தை கொடுப்பது வழக்கம். முகத்துக்கு ஒரு வட்டம் போட்டு விடுவது, பிறகு உடம்புக்கு ஒரு சதுரம் போட்டு விடுவது, இரண்டு கைகளுக்குப் பதிலாக மேலே இரண்டு கம்பிகள், இரண்டு கால்களுக்குப் பதிலாக கீழே இரண்டு கம்பிகள். கம்பியை கடைசியில் நாய் வால் போலச் சுருட்டி விடுவது. இப்படித்தான் ஆட்களை வரைந்து வைத்திருந்தோம். இதுதான் கனகசபாபதி மாஸ்டரின் கடுங்கோபத்துக்கு காரணம். எங்களில் பலர் நேர்சரியில் படம் வரைந்ததை இன்னும் கைவிடத் தயாராகவில்லை.

இதைவிட பொன்னுத்துரை மாஸ்டரின் மரவேலை வகுப்பு களுக்கும், அமிர்தநாதன் மாஸ்டரின் களிமண் வேலை வகுப்பு களுக்கும் பிரவுண் மைதானத்தோடு ஒட்டியிருந்த அறைக ளுக்குப் போய் வந்தோம்.

எமது வகுப்பறைக் கட்டிடத்தில் கடைசியாக இருந்தது மனை யியல் பயிற்சிக்கூடம். எங்களுக்கு அப்போது மிஸ் குலசிங்கம் ஆசிரியை மனையியலுக்குப் பொறுப்பாகவிருந்தார்.

அன்று அலுவலக உதவியாளராயிருந்த துரைரத்தினம் எம் நினைவுகளில் என்றும் நிற்பவர். வரவு இடாப்புகளை வகுப்புக ளுக்கு கொண்டு வருவார். பாட நேரங்களுக்கு மணி அடிப்ப தும், அதன் பின் வகுப்பறைகளை போகும்படி எம்மை விரட்டுபவரும் அவரே.

மாலை 3.45 மணிக்கு பள்ளி முடிந்து சங்கரத்தைச் சந்திக்கு நடந்து போவது எமக்கெல்லாம் ஒரு பாதயாத்திரை போல் தான். ஒரு கையில் சூட் கேஸ் இருந்தால் மறு கையில் கிறிக் கட் பந்து அல்லது இலந்தை பழம் இருந்தது. பதுமநிதியும் உருத்திரகுமாரும் சைக்கிள் வைத்திருந்ததால் இந்தப் பாதையை சைக்கிளில் கடந்து செல்ல ஜெயச்சந்திரனும், யோகானந்தனும் சந்திக்கு பஸ்ஸை பிடிக்க நடந்தனர்.



சங்கரத்தைச் சந்திக்கு நடந்து சென்றவர்கள் பட்டியலில் சாந்தியும், ஜெயரஞ்சனும், ரிஷாங்கனும், அவ்வப்போது இணைந்து கொண்டது நினைவுக்கு வருகிறது.

கொட்வினுக்கு உடுவில் செல்வதற்கு 767 இலக்க பஸ் கல்லூரி வாசலிலேயே தயாராக நிற்பதால் சங்கரத்தைக்கு நடக்க வேண்டியிருக்கவில்லை.

மழை காலம் என்றால் பலவிதமான ஜந்துக்கள் மண்ணில் ஊரத் தொடங்குகின்றன. தெரு ஓரத்தில் நடக்கையில் அவற்றை மிதித்து விடாமல் காலை எட்டி வைக்க வேண்டியிருக்கிறது. அதிலும் சிவப்பு வெல்வெட் போன்ற தம்பலப் பூச்சிக்களை கவனமாகக் கடந்து செல்கிறோம். ஆனால் தெருக்கரைக்கும், வேலியோரத்திற்கும் இடையில் ஓடும் வெள்ள வாய்க்கால் வெகு சுவாரஷ்யமானது. அதில் நீந்தும் வாற்பேத்தைகளையும், சிறு நண்டுகளையும் நின்று பார்க்காது கடந்து போனதில்லை.

வட்டுக்கோட்டை - சங்கரத்தை வீதியில்தான் ராஜநாயகம் மாஸ்டர், விசுவநாதன் மாஸ்டர், புரூடி மாஸ்டர் ஆகியோர் வீடுகள் இருந்தன.

பிறகு வரும் வலப்பக்க ஒழுங்கையில்தான் ஜெயசிங்கம் கிளாக்கர் இருந்தார். எம்முடன் படித்த அவர் மகன் குணசங்கர், மற்றும் நவேந்திரன், கல்யாணி ஆகியோர் வீடுகளும் அங்கேதான். அவர்களுக்கெல்லாம் கல்லூரியிலிருந்து குறுகிய நடையில் வீடு வந்து விடும்.

ஒழுங்கை கடந்ததும் அத்தியடிப் பிள்ளையார் கோயிலும் எதிரே டிஸ்பென்சரியும். கோயிலை ஒட்டி இருந்த ஒழுங்கையில் தெய்வநாயகியின் வீடு இருந்தது. காலையில் 5.30 மணிக்கு வட்டுக்கோட்டை திருச்சபையின் ஆலயமணியின் ஓசை அவர்களையெல்லாம் துயிலெழுப்பிவிடும்.

பிறகு இன்னும் தூரம் செல்ல ஒரு மதகை கடக்க வேண்டும். மேலே செல்ல படலையில் சீமெந்து பெஞ்சுகள் கொண்ட சில வீடுகளை காண்போம். முற்காலத்தில் நடைப் பயணிகள் களையாறிச் செல்ல கட்டப்பட்டவை அவை. நாங்கள் ஒருபோதும் அதில் அமர்ந்து களையாற விரும்பாமைக்கு காரணம் ஒன்று இருந்தது. அது உள்ளே படலையோடு தயாராக நின்ற கடிநாய்கள்தான்.

அதற்கு அப்பால் வலப்பக்கமாக செல்லும் ஒழுங்கையில் ஜெயரஞ்சனின் வீடு.

பாத யாத்திரை முடிய எம்மில் சிலருக்கு பஸ் யாத்திரை தொடங்கும். சங்கரத்தையிலிருந்து பஸ் போகும் வழியில் பத்திரகாளி கோயில் வருமுன் சந்திரிக்கா வீடு, கோயில் தாண்டி குளம் தாண்டியதும் சாந்தியின் வீட்டுக்குப் போகும் ஒழுங்கை இப்படியாக பலரின் வீடுகள் கண்டு செல்லும் அந்த பஸ்.

1974ம் ஆண்டு முடிய ஏழாம் வகுப்பினை முடித்து எட்டாம் வகுப்புக்கு வர ஆலமரத்தையும் ஆரம்ப வகுப்புக் கட்டடங்களையும் பிரிந்து கல்லூரியின் உயர் வகுப்புகள் அமைந்துள்ள கட்டடங்களை நோக்கிப் போகிறோம்.

சிறு பிள்ளைத்தனங்கள் குறைந்து கொஞ்சம் முதிர்ச்சி வந்திருக்க வேண்டும்.

அது வந்ததா என்பதுதான் கேள்வி?

முகத்தில் எப்போதும் புன்னகை தவழும் முகங்கள், குறும்பு கொப்பளிக்கும் முகங்கள், சீரியஸான முகங்கள் என்று பல்வேறு நண்பர்களின் பலவகை முகங்கள் நினைவுக்கு வந்து போகின்றன.

இந்த 40 வருட வாழ்க்கை எம் நண்பர்களை எப்படி எல்லாம் மாற்றி இருக்கும் என்று கற்பனை பண்ணிக் கொண்டிருந்தோம். ஆனால் இந்த வாட்ஸ்-அப் உரையாடல்களில் இருந்து எம்மில் பலர் இன்னும் மாறாமல் அதே குணாதிசயங்களோடு இருக்கிறோம் என்பது ஆச்சரியமளிக்கிறது.

இப்போதும் மனதின் ஆழத்தில் பல நினைவுகள் இருந்தாலும் நீர்க்குமிழிகள் போன்று அவற்றுள் ஒரு சில மட்டுமே அவ்வப்போது மேலெழுந்து பெரிதாகி வருகின்றன. மூன்று ஆண்டு நினைவுகளை மீட்கும் எங்கள் இந்த முயற்சி எல்லா நிகழ்வுகளையும், நினைவுகளையும் சொல்ல வந்த ஒன்றல்ல. இன்னும் பல நினைவுகள் மன ஆழத்திலேயே அமிழ்ந்து போய்விட்டதனால் இது முழுமையானதல்ல. ஒருவேளை முன்னர் எழுதப்படாது இருந்திருக்கக் கூடும்.

உங்கள் அனைவரையும் மீண்டும் எப்போதாவது நேரில் சந்திக்கு முன்னர் இந்தக் கடிதத்தை நீங்கள் படித்திருப்பீர்களென்ற நம்பிக்கை எமக்குண்டு. நம்பிக்கைதானே வாழ்க்கை. !

அதுவரை வணக்கம் நண்பர்களே.!

**உங்கள் நண்பர்கள்**



# மனதை விட்டகலாத நினைவுகள்

சுவேந்திரராஜ்



எனதருமை நண்பர்கள் அனைவருக்கும் வணக்கம். எமது கல்லூரி வாழ்வில் மறக்க முடியாத சில நினைவுகளைப் பகிர்ந்துகொள்ளுமாறு நண்பர்கள் என்னையும் கேட்டுக்கொண்டார்கள். அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க மறக்கமுடியாத இப்பொழுதும் எனது நண்பர்களுடன் கதைக்கும்போது நான் சொல்லிச் சிரிக்கும் ஒரு சில நிகழ்வுகளை உங்களுடன் பகிர்ந்துகொள்ள விளைகின்றேன். நான் எதுவுமே எழுதாமல் விட்டு பலகாலமாகி விட்டது. எனக்கும் எழுத்துக்கும் வெகுதூரமென்பது நான் சொல்லித்தான் உங்களுக்குத் தெரிய வேண்டுமென்பதில்லை. சோம்பல் காரணமாகத் தான் எழுதுவதில்லை, அத்துடன் அதற்கான வாய்ப்புகளும் அருகி விட்டது.

உங்களில் அநேகமானவர்கள் கனகப்பாவின் புத்தகக் கடையை மறந்திருக்க மாட்டீர்களென எண்ணுகின்றேன். அவரையும் அவரது கடையையும் பற்றித்தான் ஒரு சில நகைச்சுவையான சம்பவங்களைக் கூறவுள்ளேன். அவரது கடையில் பலவிதமான புத்தகங்களும் விற்பனை செய்யப்படுவது வழக்கம். அவருக்கு காது சரியாகக் கேளாது என்பதனால் ஏதாவது புத்தகம் வாங்குவதென்றால் ஒரு கடதாசித் துண்டில் எழுதிக் காட்டித்தான் வாங்க வேண்டும். ஒரு நாள் நானும் எனது வகுப்பில் படித்த நண்பனுமாகச் சேர்ந்து வேண்டுமென்று ஒரு கெட்ட வார்த்தையை (Filthy language) எழுதிக் கொடுத்து அந்தப் புத்தகம் இருக்கிறதாவென்று கேட்டோம். அவர் அதனை வாசித்து விட்டு கடுங்கோபத்துடன் உரத்த சத்தமாகக் கத்திக்கொண்டு எங்களைத் துரத்திக் கொண்டு வந்தார். நாங்கள் வேகமாக ஓடித் தப்பித்துக் கொண்டோம். அந்த நேரம் பார்த்து எனது தாயார் கனகப்பா கடைக்கு அருகில் வருவதைக் கண்ட கனகப்பா எனது தாயாரை அழைத்து நாங்கள் செய்த குறும்பை சொல்லியிருக்கிறார். அவர் சொல்லியது எனது தாயாருக்கு சரியாக விளங்கவில்லைப் போலும். எனது தாயார் வீட்டுக்கு வந்ததும் என்னிடம் கனகப்பா கடையில் என்ன நடந்தது என்று கேட்டார். நான் உடனே சுதாகரித்துக் கொண்டு வேறு விதமாகச் சொல்லி எனது தாயாரை சமாளித்து விட்டேன்.

அதே மாதிரி இன்னுமொரு நாள் நானும் எனது நண்பனுமாக மீண்டுமொரு கெட்ட வார்த்தையை எழுதி அவரிடம் சென்று கொடுத்தோம். கனகப்பா மீண்டும் கடுங் கோபத்தில் எங்களைத் துரத்தும் போது எங்களின் கெட்ட நேரமோ துரதிஷ்டமோ அமிர்தநாதன் ஆசிரியர் அவ்வழியால் கனகப்பா கடைக்கருகில் வந்த போது கண்டுவிட்டார். அவரைக் கண்ட கனகப்பா அவரிடம் நடந்தவற்றை அப்படியே சொல்லி விட்டார். அன்றிலிருந்து நானும் நண்பனும் எப்பொழுதும் அமிர்தநாதன் ஆசிரியரிடம் Art பாடமும் Clay work பாடமும் எடுக்கும் போதெல்லாம் மற்றைய எல்லா மாணவர்களுக்கும் முன்னால் கனகப்பாவிடம் நீங்கள் என்ன புத்தகம் கேட்டீர்கள்? கேட்ட புத்தகம் வந்து விட்டதா? என்று கேட்டுச் சிரித்துக் கொண்டே இருப்பார். நான் அவர் வகுப்புகளுக்குச் செல்லும் போதெல்லாம் என் காதருகில் வந்து என்ன புத்தகம் கேட்டாய்? கேட்ட புத்தகத்தை கனகப்பா தந்தாரா? எனக் கேட்பார். அத்துடன் எல்லோர் முன்னிலையிலும் மகிழ்ச்சி மேலீட்டால் அவர் வகுப்பறையையும், தன்னையும், எங்களையும் மறந்து அளவு கடந்த உற்சாகத்தால் பலமாகச் சிரித்து மகிழ்வார். அந்த நிகழ்வுக்குப் பின்னர் அதை நினைத்து எங்களை விட அவர் தான் மகிழ்ந்து இரசிப்பார். எனக்கென்றால் ஒரே பயமாகத் தான் இருக்கும் எனது தந்தையாரிடம் இவர் சொன்னால் எனக்கு வீட்டில் ஆபத்தாகி விடும் என ஏங்கிக் கொண்டே இருந்தேன். அமிர்தநாதன் ஆசிரியரிடம் படித்து முடியும் வரை குற்றவுணர்வு என்னை உறுத்திக் கொண்டே இருந்தது. எனது நல்லகாலம் அவரும் என்னைத் தான் பயமுறுத்தினாரே தவிர அதைப் பற்றி யாரிடமும் சொன்னதாகத் தெரியவில்லை. அப்போது 'பூனைக்கு விளையாட்டு சுண்டெலிக்கு சீவன் போகிறது' என்ற பழமொழி தான் என் நினைவுக்கு வந்து போகும். அப்படியாக நாங்கள் விளையாட்டாகவும், குறும்பாகவும் செய்த அந்த செயல் இன்றளவும் என்னை உறுத்திக் கொண்டே இருக்கிறது. அவர் நினைத்திருந்தால் என்னையும் நண்பனையும் குற்றஞ்சாட்டித் தண்டித்திருக்கலாம். ஆனால் அவர் அதைப் பொருட்படுத்தாமல் தண்டனையும் தராமல் அப்படியே மறந்துவிட்டார். இருந்தாலும் சிரிப்பும், சிந்தனையும் கலந்த மனவேதனை என்னை இப்பொழுதும் வாட்டுகின்றது. என் வாழ்நாள் முழுவதும் மறக்க முடியாத நினைவு நிழலாகத் தொடர்கிறது. தொடரும் நினைவுகளுடன்........ **அன்பு வணக்கம்!**



## FROM 16 TOWARDS 60

# என் வாழ்வுடன் கலந்த கல்லூரி நினைவுகள்

**என் பெற்றோரை நெஞ்சில் இருத்தி, ஆரம்ப, கனிஷ்ட, உயர்தர, பல்கலைக்கழக ஆசான்களின் ஆசியை வேண்டி, ஆன்மீக குருமார்கள் குலதெய்வங்களின் திருவடிகளை சிரம்தாழ்த்தி பணிவுடன் வணங்கி, மனதில் உதிக்கும் என் வாழ்வில் கலந்த யாழ்ப்பாணக்கல்லூரி சார்ந்த நினைவுகளை இங்கு சமர்ப்பிக்கிறேன்.**

ஆமாம் 'ஆறில் இருந்து அறுபது வரை', 'பதினாறு வயதினிலே', 'கல்லூரி வசந்தத்தில்' போன்ற சினிமா படங்கள் ஒன்றன் பின் ஒன்றாக ஞாபகம் வரும் வேளையிலே இதுவும் 'கிழக்கே போகும் ரயில்' போல் 'அறுபதில் இருந்து பதினாறு' நோக்கிய ரயில் பயணங்களாக அமையப் போகிறதோ யானறியேன் என் இனிய நண்பர்களே! 'அறுபதிலிருந்து பதினாறு' நோக்கிய உள்முகமான உற்று, உன்னிப்பாக ஞாபகப்படுத்தி எழுதும் இப் பயணம் கடலில் முத்து குளிப்பது போல, அடிக்கடி ஞாபகமறதி வரும் இவ் முதுமைப் பருவத்தில் அழகிய நினைவு சின்னங்களாக முத்துக்களை எடுக்க வேண்டிய மிக கடினமான தருணத்தில் இருக்கின்றேன். ஆனால் உன்னதமான, ஆனந்தமான, அற்புதமான பயணமாக இருக்கப் போகின்றது என்ற ஆனந்தத்துடன் வாரும் வாரும் தோழர்களே என உங்களையும் அரவணைத்து பயணிக்க போகின்றேன்.

ஆமாம் 1977-இல் இக் கல்லூரி அதிபர் பணிமனையில் HNCEல் படிப்பதற்கான நீண்ட கடித விண்ணப்பத்தினை அம்மா மூலம் சமர்ப்பித்து, சில மணி நேரத்தில் நேர்முக (தேர்வின்) உரையாடலின் முடிவில் வகுப்பில் வந்து சேரும் படி கேட்கப்பட்டேன். அளவற்ற சந்தோசத்தில் பட்டாம் பூச்சி உள்ளத்தில் பறக்க ஆரம்பித்தது. பின்பு இரண்டு கட்டை கால் சட்டைகள் சேர்ட்டுகள் புதிதாக தைக்கப்பட்டு பாடசாலையில் காலடி வைத்தமை ஓரளவு தோன்றி மறைகிறது. ஆமாம்! உயர்ந்த கட்டிடங்கள், விசாலமான நூலகம், உயர்ந்த மரங்கள் தளபாட வசதிகளுடனான விசாலமான வகுப்பறைகள் உயர்தர மாணவ மாணவியரின் உயர்ந்த ரக உடைகளுடன் சகஜமாக உரையாடி ஒய்யாரமாக செல்வதைப் பார்க்க எனக்கு அந்த வயதிற்கான உணர்ச்சிகள், கிளர்ச்சிகள் எழத்தான் செய்தது என்பது உண்மை தான். கூச்ச, பயந்த சுபாவமும், தாழ்வுமனப்பான்மையும் மற்றும் வீட்டு முழுக் குடும்ப



சுமையை சுமந்தமையால் அவ்வுணர்ச்சிகள் மழுங்கடிக்கப் பட்டு அப்பப்ப தலை தூக்கி பார்த்ததுண்டு என்பதும் உண்மை தான்.

இவ்வாறாக கல்லூரியின் நல்ல வனப்பும், ஆய்வுக்கூடங்கள், ஆசான்களின் கண்டிப்புடனான வழிநடத்தல்கள், செயல் முறைப் பயிற்சிகள், விளக்கங்களுடனான கற்பித்தல் முறை யும், சக மாணவர்களுடனான நட்பும் படிப்படியாக பயத்தை புறம் தள்ளி எனக்குள் இலைமறை காயாக இருந்த எனது ஆளுமை திறனை தட்டி எழுப்பி வாழ்வின் முன்னேற்றத்திற் கான சிறந்த அடித்தளத்தை அமைத்து தந்தது என்றும் சொல்லலாம்.

இறையருளுடன் கடும் முயற்சியினாலும் படிப்பிலும் உழைப் பிலும் கவனத்தை செலுத்தி அமைதியாக எல்லோரையும் உள்ளுர நேசித்து கல்லூரி பரிசளிப்பு விழாக்காலங்களில் பாட சாலையில் பல பரிசில்களை பாடங்களில் பெற்றும் பின்பு திறமை அடிப்படையில் மஹாபொல புலமைப்பரிசில் பெற்று பல்கலைக்கழகம் சென்று பட்டபடிப்பையும் முடிக்க உதவிய கல்லூரி அதிபர் அமரர் ராஜன் கதிர்காமர், ஆசிரியர்கள், நண் பர்கள், உறவுகளை இந்த சந்தர்ப்பத்தில் கண்கள் குளமாக மீண்டும் நினைவுகூர்ந்து மனமார நன்றி கூறி வணங்கி தொடர்கிறேன்.

பரிசளிப்பு விழாக்காலங்களில் பரிசில்களுக்கான காசோலையை தந்து பூபாலசிங்கம் புத்தக சாலையில் எமக்கு அத்தியாவசிய மான புத்தகங்களை நாமே தெரிவுசெய்து வாங்குவதற்கு உதவியமை அன்றைய எனது குடும்ப பொருளாதார நெருக்கடி யில் பெரிதும் உதவியாக இருந்தது ஒருவித சிறப்பு அம்சமாக இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

ஆமாம் 1976 இல் N.C.G.E பரீட்சையின் போது ஒரு விபத்தில் அப்பாவின் கால் ஊனமுற்று முடங்கியபோது முழு குடும்பப் பொறுப்பும் என் மீது இறை வனால் சுமத்தப்பட்டது. பாடசாலை தவிர்ந்த நேரங்களில் வயல், தோட்ட வேலைகளுடன் ஊர் கிணறுகளையும் Sigma water pump மூலம் கலக்கி இறைத்து அவர்களின் பயன்தரு மரங்களிற்கு வாரம் தோறும் கிரமமாக நீர் பாய்ச்சி உழைத் துக்கொண்டு, படிப்புடன் இதர செலவுகளையும் சமாளித்து போராடி கொண்டிருந்த அந்த பொற்(கற்)கால அனுபவங்க ளும் இங்கு தோன்றி மறைகின்றன. சிலவேளைகளில் கல் லூரியின் கடைசி பாடங்களை cut பண்ணி உழைப்பதற் காக வீட்டுக்கு போகும்போது சைக்கிள் park இல் அதிபரினால் பிடிக்கப்பட்டு தண்டனை அனுபவித்ததும் உண்டு.

**எமது அதிபர் அமரர் ராஜன் கதிர்காமர் பற்றி சில :-**

அதிபரின் ஊடுருவிப் பாயும் நல்ல நேர் மறையான அதிர் வலைகளால் என்னை புரிந்துகொண்டு இலவசமாக கல்வி கற்க, அனுமதி அளித்தமைக்கு முதற்கண் பலகோடி நன்றி கள். மேலும் ஒரு நாள் என் வீட்டு படலையடியில் எதிர்பாராத விதமாக சந்திக்க நேர்ந்தபோது காரை விட்டு இறங்கிவந்து அப்பாவை பார்த்து சுகம் விசாரித்து சென்றதோடு அல்லாமல்,

பின்னர் என்னுடன் கலந்துரையாடி படிப்பதற்காக மேலதிக ஊக்குவிப்புகளை ஆசிரியர்கள் மூலமும், நூலக வசதிகளை முழுமையாக இரவு 8 மணிவரை பயன்படுத்தவும் ஆலோசனைகள் கூறியதை எங்கனம் மறப்பேன். இவ்வாறாக அதிபரின் உன்னத உயர்ந்த மனிதாபிமானத்தை மனிதப் பண்பினை போற்றி வணங்குகிறேன். இவ்வாறான மனிதம் கொண்ட மனிதர்கள் அருகி வரும் வேளையில் எமது கல்லூரி அதிபர்கள், ஆசிரியர்கள் இப்படியான முயற்சியை முன் எடுத்து எமது கல்லூரி பெயர், இன்னமும் கல்லூரிச் சின்னங்களான ஆல், மகோகனி போன்ற மரங்கள் போல் வேரூன்றி நிலைக்க வழி வகுக்க வேண்டும் என்று இறையருளை வேண்டி பயணிக்கின்றேன். அன்றைய எனது வீட்டு சூழ்நிலையால் படிப்பு தவிர்ந்த ஏனைய துறைகளில் என்னால் பங்குகொள்ள முடியாமையையிட்டு இன்னும் கவலைப்படுவதுண்டு .

**எமது ஆசிரியர்களுடனான ஞாபகங்கள் சில ;-**

1. உடனடியாக என் கண் முன் வருபவர் என் விலங்கியல் பாட ஆசிரியை திருமதி இந்திராணி ஜெயகுமாரன். இவரின் அறிவாற்றலும், வனப்பும், மனிதப்பண்பும் என்னை அறியாமல் கண்முன் கொண்டு வருகிறது. எலி, தவளை, கரப்பான்பூச்சி மூலம் பல தடவைகள் செய்முறை பயிற்சிகள், விளக்கங்கள், நீண்ட கற்றல் வழிகாட்டிகளுடன் அன்பாகவும் என் உள்ளத்தை கவர்ந்த உன்னதமான ஆசிரியை. என் பெயரை ஒரு முறை பாடசாலை மாணவ தலைமை பதவிக்கு பரிந்துரைத்த தாயன்பு மிக்க சீதா பிராட்டி எனலாம்.
2. Chemistry : திரு. நிர்மலன், திரு தட்சணாமூர்த்தி ஆசிரியர்கள் வினைத்திறன் கூடிய கற்பித்தலில் ஆர்வம் ஆனந்தம் அடைகிறார்கள் என்பதை இவர்களின் கற்பிக்கும் முறை, நீண்ட குறிப்பேடுகள், அடிக்கடி நடாத்தப்படும் பரீட்சைகள் எடுத்து இயம்புகின்றன. மிகவும் அற்புதமான ஆற்றலும், ஊக்கமும் உள்ள இவர்களிடம் கற்றமையால் ஒவ்வொரு முறையும் Chemistry 1st prizeம் ஸ்பெஷல் மெமோரியல் பரிசினையும் தட்டிக் கொண்டேன் என்றால் இவர்களின் கற்பித்தல் திறனை எடுத்து இயம்பும். அது மட்டுமா நானும் பின்பு tuition கொடுத்து உழைக்கக்கூடியதாக என் வாழ்க்கையில் இலகுவாக முன்னேற இவர்களது கற்பித்தல்தான் காரணம் என்றும் கூறலாம். உழைப்பின் உயர்ச்சி மாற்றம் என்றும் கூறலாம். நன்றிகள் பலகோடி இவர்களுக்கும்.
3. தாவரவியல் திரு. தர்மன் குலத்துங்கம், திரு. இரகுநாத முதலியார். இவர்களின் விரிவான விளக்கங்களுடனான செயல்முறை பயிற்சிகள், குறிப்பேடுகள் எனக்கு தனிப்பட்ட முறையில் வாசிக்கும் பழக்கத்தை மெருகூட்டியது டன் தர்மன் மாஸ்டர் வீட்டுக்கு நானும் லம்போவும் போய் மேலதிக கற்றல் பயிற்சிகளைப் பெற்றமை தர்மன் மாஸ்டரின் விரிந்த மனப்பாங்கை எடுத்து இயம்புகிறது எனலாம்.
4. Physics திரு. செல்வரத்தினம், திரு விசுவநாதன், திரு. வெற்றிவேல் ஆசிரியர்களின் ஆய்வுகூட செயல்முறைகளுடனான விளக்கங்கள், குறிப்பேடுகள், மறக்கமுடியாதவை. குறிப்பாக வெற்றிவேல் மாஸ்டரின் அபரிமிதமான கற்பித்தல் என்னை கவர்ந்து பரிசில்களையும் வருடாந்தம் பெறவைத்தது.
5. Pre-vocational Subject :- H N C E யில் இரகுநாத முதலியர் தலைமையில் பின் தங்கிய கணவக்கை கிராம மக்கள் முன்னேற்றத்திற்கு செயல்திட்டங்களை நெறிப்படுத்தியமை, அன்றைய கால எனது குடும்பம் சார்ந்த நிலையில் உனக்கும் கிழே உள்ளவர் கோடி என்பதை புடம் போட்டு காட்டி எனக்கு பெரிய ஆறுதல் அளித்ததுடன் சமூக மேம்பாட்டிற்கான சிந்தனை வளத்தினையும் வளர்த்து விட்டது எனலாம். அக் கிராமத்திற்கு சென்று குடும்ப விபரங்களை சேகரித்து அவர்களின் வாழ்வாதாரங்கள், பிரச்சினைகளை கேட்டு புள்ளி விபர வேலைகள் தயாரிக்கப்பட்டதுடன் சில கல்வி சுகாதார மேம்பாட்டுத் திட்ட அறிக்கைகளை தயாரித்தமை இன்னமும் பசுமையாக நினைவுக்கு வருகின்றது, அவற்றில் குழி மலசலகூட வசதிகள், நூலகம் கட்டிக் கொடுத்ததுடன் குடல் புழு பூச்சி மருந்துகள், தோல் சிரங்கு வியாதிகளுக்கு முதலுதவி சிகிச்சைகளுக்காக வைத்தியசாலை கூட்டிச்சென்று பெற்றுக்கொடுத்தமை என் கண் முன்னே வருகின்றது.

இவ்வாறான சமூக மேம்பாட்டு அபிவிருத்தி பற்றிய விழிப்புணர்வை சிரித்த முகத்துடன் பவ்வியமாக ஒவ்வொரு வாரமும் எமக்கு எடுத்தியம்பி எமது மனதில் ஆழமாக பதித்துவிட்ட அற்புதமான விதை இன்று பல்கி பெருகி விருட்சமாகியுள்ளதை எண்ணி புளகாங்கிதமடைகிறேன். அதாவது பட்டப் படிப்பின் பின், கிராமங்களில் அதி உன்னத கிராம மேம்பாட்டு திட்ட அறிக்கைகளை குடிமக்கள் (கீழ்) மட்டத்தில் இருந்து வினைத்திறனுடன் தயாரித்து அவை வெற்றிபெற்று நன்மதிப்பைப் பெற்றுத்தந்தன. இந்தப் பெருமை எமது கல்வி முறையையும், அதனைக் கற்பித்த ஆசிரியரையுமே சேரும். இன்றும் அதே ஆர்வத்துடன், அத்தகைய திட்டங்களிற்கு சமயோசிதமான அறிவுரைகள் மூலம் அவற்றை வெற்றிகரமாகக் கொண்டுசெல்ல எமது கல்வி முறை உதவுகிறது என்றால் மிகையாகாது.



**நண்பர்கள் :-**

என் கடினமான வாழ்வியல் பயணத்தில் உயிரியல் பிரிவு நண்பர்கள் கூட்டத்துடன் எல்லைப்படுத்தப்பட்டு இருந்தாலும் ஏனைய பிரிவு நண்பர்களுடனும் அப்பப்ப சந்திக்கும்போது போதியளவு அளவளாவி மகிழ்ந்து கொள்வதுண்டு.

குறிப்பாக மதிய போசன, சிற்றுண்டி தேநீர் இடைவேளைகளில் விக்கி, நலீம், திருச்செந்தூரன் போன்றோருடன் சேர்ந்து மேசையில் மேளம் அடித்து பழகிய அனுபவம் (இன்றும்) வருடாந்த ஒன்றுகூடலில் மேளம் அடித்து இரசிக்க உதவியதை, உதவுகின்றதை பெருமையோடு குறிப்பிடுகின்றேன். அத்துடன் எமது வகுப்பில் இருந்து மாணவரவை உறுப்பினராக தெரிவு செய்யப்பட்ட விக்கி, சுகல்ஜன், கல்யாணி எம்மை இ.போ.ச. பேரூந்தில் யாழ் திரையரங்கிற்கு 'உத்தமன்' சினிமா படம் பார்க்க கூட்டிச்சென்ற, நண்பர்களுடனான இனிய அனுபவம் இன்றும் இனிமையாக உள்ளது. மற்றும் பெரும்பாலான நண்பர்கள் சங்கானை சந்தைக்கு எமது வீட்டு வீதியூடாக அதாவது அந்திரான் வாய்க்கால் வீதி வழியாக சென்று வரும்போது எல்லாம் என்னிடம் வந்து படிப்பு விடயங்கள் பலதும் பத்தும் உரையாடி மகிழ்ந்து சென்ற ஏராளமான பசுமையான நாட்களை இங்கு சிறப்பாக நினைவுகூரத்தான் வேண்டும்.

பாடசாலை விடுமுறை நாட்களில் கிரிதரன், லம்போ, அருட்செல்வன், சிவசீலன், யோகேஸ்வரன், சபாரத்தினசிங்கி போன்றோருடனும் ஏனைய யாழ் கல்லூரி சில நண்பர்களும் (SIVANESAN, VALLUVAN) எம் வீட்டிற்கு வந்து (தங்கி ) மேலதிக கற்றல் பயிற்சிகளில், குறிப்பாக கடந்தகால வினா விடை பயிற்சிகளை விளக்கங்களுடன் அலசி ஆராய்ந்து கலந்து படித்து, உண்டு, களித்து சென்ற நினைவுகள் மலர்கின்றன. இம்முறையான கலந்து பரிமாறி பெற்றுக்கொண்ட கற்றல் முறையில் ஒருவித தெளிவான ஆழ்ந்த அறிவையும் உயரிய உன்னதமான நட்பையும் வளர்த்து விட்டதை இங்கு சிறப்பான அனுபவமாக பகிர்கிறேன். அத்தோடு சுகல்ஜன், லூஹிந்திரன், அகஸ்டின், சிவசீலன் எல்லாருடனும் சித்தன்கேணி தனியார் கல்வி நிலையத்தில் கணித, விஞ்ஞான பாடங்கள் படித்து விளையாடி குறும்புகள் பல செய்தமை நினைவுக்கு வருகின்றது.

இவ்வாறான நட்புகள் கல்லூரி காலத்தின் பின்னர் புலம்பெயர்ந்து லம்போ, கிரிதரன், சபாரத்தினசிங்கி, சிவமலர், உருத்திரகுமார் ஆகியோருடன் குறுகி வாடி வதங்கி முடங்கியது உண்மைதான். பட்டப்படிப்பின் பின்னும் புலம்பெயர்ந்த பின்னும் பல நண்பர்களை அடிக்கடி நினைப்பது உண்டு. இடைவிடாத பரிசுத்தமான தூய உன்னத எண்ணங்கள், உருவங்களாக மாறி தோன்றும் என்பதற்கு அமைய (எண்ணம் போல் வாழ்க்கை) சுமார் (1980ன் பின்பு) இருபது வருடங்களின் பின்பு சில நண்பர்களை (சிவசீலன், ஜெயமணி, சித்ராதேவி, லம்போதரன்) UK யில் சில நிகழ்வுகளில் சந்தித்து பழையனவற்றை ஞாகப்படுத்தி சந்தோசப்பட்டதுடன் ஏனையோரையும் அடிக்கடி எண்ணிப் பார்ப்பது உண்டு. ஊருக்கு வருடாந்த விடுமுறையில் போகும் போது கிரிதரன், சிவமலர், சபாரத்தினசிங்கி ஆகியோரை தேடி சென்று அளவளாவி உண்டு களித்து வருவதில் தவறுவதில்லை .

2000 ஆண்டு சித்தன்கேணி ஒன்றுகூடலில் சிவசீலனை சந்தித்ததனை தொடர்ந்து நமது நட்பு, உறவு மீண்டும் துளிர்விட ஆரம்பித்து வளர்ந்துகொண்டிருந்தது. பின்பு சுகல்ஜன் தொலைபேசியூடாக பலதடவைகள் என்னுடன் கதைத்து நேரில் சந்திப்பதற்கான பல சந்தர்ப்பங்களை கடந்த சில வருடங்களாக தந்து இருந்த போதும் ஒருவித தெளிவில்லாத நிலையிலும், பிள்ளைகளின் படிப்பிலும், தொழிலிலும் கூடிய கவனம் செலுத்தியமையால், நேரடியாக சந்திக்கும் பல சந்தர்ப்பங்களை தவற விட்டதை எண்ணி கவலைப்பட்டதுண்டு.

இறுதியாக 2019 Decemberஇல் பதுமநிதியின் லண்டன் விஜயத்தை தொடர்ந்து சிவசீலன், கந்தப்பு, பிரேம்குமார், பதுமநிதி, இரவீந்திரன், சுகல்ஜன், கதிர்ராஜா ஆகியோரின் சிறிய ஒன்றுகூடலின்போது தொலைபேசி ஊடக சிவசீலனின் உயரிய அர்ப்பணிப்பால் கதைத்து சந்தோசப்பட்டேன். மேற்கூறிய இவர்களின் ஒன்றுகூடலுடன் எமது எல்லாரினதும் எண்ணங்களும் சேர்ந்து அவர்கள் மூலம் இந்த JC-80 குழும இணையத்தை உருவாக்கி என்னையும் அதில் இணைத்த நாளான 30/12/2019 (After 39 years) என்றென்றும் என்னால் மறக்க முடியாத, நான் பெற்றெடுத்த மூன்றாவது குழந்தையாகவே இன்னும் கருதி மிகுந்த சந்தோசமடைகின்றேன். ஆரம்ப காலங்களில் குழந்தையின் பிறப்பு முதலான வளர்ச்சி படிகளாகவே சில ஒலிப்பதிவுகளையும் மனம் திறந்து உற்சாகப்படுத்தி சந்தோசமாக அனைவருடனும் கதைத்து மகிழ்ந்து வந்தேன்... வருகிறேன்.

இக் குழும வளர்ச்சியின் நிலையில் சிறிய (26/07/2020) UK ஒன்றுகூடலில் நண்பர்களை சந்தித்து, கதைத்து, உண்டு, பரிமாறிய நிகழ்வு என் வாழ்வில் வந்த சந்தோசம் மிகுந்த தருணமாகவே கருதுகின்றேன். இவ்வாறாக 50-க்கு மேற்பட்ட நண்பர்களை துரிதகதியில் வளர்த்து விட்டதோடு அல்லாமல் தினமும் காலையில் எழும்பியவுடனும், நித்திரை செல்லும் முன்பும் தவறாமல் போனை பார்த்து கதைத்து களிப்புற வைத்த அந்த உள்ளங்களுக்கு நன்றிகள் கோடி. என்னால் அனுபவங்களை எழுத முடியும் என்று உரமூட்டிய சுகல்ஜன், கல்யாணி, யோகானந்தன் ஆகியோருடன், என்னை விரட்டி விரட்டி எழுத வைத்த ஈமெயில் அனுப்ப உதவிய யமுனாவிற்கும் எனது நன்றியை தெரிவித்து கொள்கின்றேன் .

இதுவரை என்னோடு ஒன்றாகப் பயணித்துகொண்டு இருக்கும் அனைவரும் இறையருளுடன் ஆரோக்கியமாகவும், மகிழ்ச்சியாகவும், திருப்தியாகவும் வாழ பிரார்த்தித்துக்கொண்டு உங்கள் எல்லோரையும் நேரில் கண்டு உங்கள் அனுபவங்களை பகிரும் அந்த நன்னாளை (2022) எண்ணி இத்துடன் எனது மலர்ந்த நினைவுகளை நிறைவு செய்கின்றேன் .

**- ஆனந்தன்**





# Everlasting school days

I am Sivaseelan known as Siva presently from UK and my native place is Sithankerney which is in Jaffna, Srilanka. I studied with you all and enjoyed your friendship during my school days. After 40 years, in the year 2019 with the help of WhatsApp we all came together and sharing our old memories which made me laugh and cry (all the feelings together at once). I do not know how to express it. I do not have words to express my feelings and hope some of you underwent the same like me.

This group was started officially on the 30th of December 2019 during Pathu's visit to the U.K, initiated by Sugaljan and Pathu. Actually at the beginning we seven brothers including Pathu (New Zeland), and the rest from UK are Sugaljan, Sivaseelan, Kadir, Ravi, Prem and Kandapoo. As people said started by 7 brothers 'Lucky Seven' and it worked well and we all are happy. We thought of uniting our childhood classmates from all over the world. A good effort was taken by a few members to bring more classmates into this group. We had already some friends in UK. Later we expanded to other countries like France, Canada, Australia, Srilanka, New zeland, USA, Middle East and India.

Since the day I left school I have contacts with Swendraraj from Australia, Vairam from France and Muthulingam who is in Badulla, Srilanka where my father who owned his Jewellery shop in Bandarawella a well-known Jewellery shop named as Punitha Jewellers. We had a branch at Jaffna too. When I spoke to Swen he desperately chasing for Jaffna college batchmates and always talked about his old classmates and the mischievous he did when he was young. I knew how he missed them, and the fun they had, knowing his thirst I brought him in and his entrance in the group made him happy and he brought in some more friends.

At the beginning of our chats we discussed about our school life and the boutiques around our school. We had few famous shops in that area like Kanakappa who cannot hear well but a nice person full filled our needs and introduced new things like marbles, water colours, water pictures, stickers, work books, and stationeries to our tastes with the special smell of new books and things. The other person was Depot Parameshwaran. He owned his book Depot in our school premises along with a canteen, most of the time filled with higher class students and Teachers, where we were afraid to go in to buy things. The other one was the Pin cafe which opened only at certain times relevant to his business strategy. The Pin cafe shop was just behind our school premises, and it was easy for us to run across the road to do the last minute shopping for things like pen, pencil, nice stationary items and colourful sweets.

Friends, I am sorry I don't take much part in the chats but I go through all your messages and like to talk to in person via WhatsApp. When I chat with Swen, Vairam who is very talented in Tamil writing and most of us admired his writing and because of that most of us downloaded Tamil fonts and started chatting in Tamil too. When we talked among us, we used to talk how we irritated Kanagappa, and how we cut classes and went to see cinema etc. When I talked to Muthulingam who stayed in our school hostel talked about Raguraj another classmate who taught him cycling and gave his bicycle to practice as well.

When we were kids we had nicknames and most of our friends still remembered with that.

Nithiraj you have done a great job by creating Profile picture Icon to our group, which is very nice and valuable. Lambo I was happy we met you in UK once when you came for a conference in London. We met you with Chitra and Anandan. Your messages are interesting and have values. I had chats with Kalyani, Arul, Paramakanthan, Thayalan and Devanayagam. I met Somaskantha in Srilanka and make it a point to visit him whenever I had a chance.

Still some friends are missing in our group and still searching for them. I often try to meet friends or chat with them whenever I have time and nice talking to them without any hesitation even after 40 years. We feel like we are at school and we do not have any fear or second thought when we talk to them. I think this is the biggest difference between a childhood friend and a normal friend.

Friends, please all of us join hands to help and contribute the maximum to run this group a success

Thanking you all.

***Siva alias Sivaseelan*** (Sithankerney presently UK)



# கல்லூரியில் முதல்நாள் அனுபவம்

முதன்முதலாக காலடி எடுத்து வைத்த வகுப்பறை காரைநகர் - யாழ்ப்பாணம் பிராதன வீதியோரம் இருந்த வகுப்பு. நாலாம் வகுப்பு entrance exam செய்தது இந்த வகுப்பில்தான். இங்கேதான் கடைசியாக N.C.G.E படித்து முடித்து யாழ்ப்பாணக் கல்லூரியை விட்டு வெளியேறினேன். For some reasons this was my favourite classroom too. திகதி மறந்துவிட்டேன் ஆனால் Ruby teacher இடம் paper வாங்கி சோதனை எழுதியது இன்னமும் என் ஆழ் மனதில் உள்ளது.

## பிடித்த 4ம் 5ம் வகுப்பு ஆசிரியர்கள்

**பொன்னம்பலம் மாஸ்டர்** : நன்றாக புராணக் கதைகளை விவரிப்பார்.

**தேவகடாட்சம் மாஸ்ரர்** : நன்றாக வேதநூல் அத்தியாயங்களை எடுத்துச் சொல்லுவார்.

**தனரஞ்சினி ரீச்சர்** : Likes her piano lessons.

**சச்சிதானந்தம் மாஸ்ரர்** : நல்ல மனிதர், சிரித்த முகத்துடன் மாணவர்களுடன் அன்பாகப் பழகுவார்.

**ஜீவா ரீச்சர்** : அன்பான ஆசிரியை. சங்கீதம் கற்பித்தவர். அவருடன் அடுப்படிப் பொருட்களை வைத்து band வாசித்தது ஞாபகம் வருகிறது.

## கல்லூரி வாழ்வில் தவறவிட்டவை

6ம் வகுப்பில் கிரிக்கெட் பயிற்சிக்கு சேர்ந்தேன். ஆனால் தொடரமுடியவில்லை. பயிற்சி முடிய நேரம் செல்லும். காரில் பாடசாலைக்கு வருவதால், கார் எனக்காகக் காத்திருக்காமல் சென்றுவிடும். பஸ் சிலவேளைகளில் வரும். சில வேளைகளில் வராது. அதனால் பயிற்சியை தொடரமுடியவில்லை.

N.C.G.E முடிய மகாஜனா கல்லூரிக்குச் சென்றேன். அப்போது தான் உணர்ந்தேன் தவறான முடிவு எடுத்து நல்ல கல்லூரியைத் தவறவிட்டுவிட்டேன் என்று. காலம் கடந்துவிட்டதால் மீண்டும் சேரமுடியவில்லை.

## யாழ்ப்பாணக் கல்லூரியில் பிடித்தவை

அழியா நினைவுகள், நல்ல நண்பர்கள், நண்பிகள். (நண்பிகளுடன் பழகவில்லை ஆனாலும் பழகியது போன்ற உணர்வு) பசுமையான மரங்கள் நிறைந்த சுற்றாடல். நல் அக்கறையுள்ள ஆசிரியர்கள். பெரிய காற்றோட்டமான வகுப்பறைகள். செய்முறைகளுடன் கூடிய கற்பித்தல் முறை. வசதிகள் கூடிய பிரமாண்ட நூல்நிலையம். நூல்நிலையத்தில் விரும்பிப் படிக்கும் புத்தகம் The Adventures of Tintin மதிய உணவு வேளையில் Bicknell விளையாட்டு மைதானத்திற்கு சென்று நண்பர்களுடன் அரட்டை அடித்துக்கொண்டு சாப்பிடுவது.

**Enjoyed gathering for sportsmeet practice sessions with other class students.**

லுகீந்திரன்





# மீட்கப்படும் நினைவுகள் சில!

எனது பெயர் சந்திரா. நான் நாலாம் வகுப்பிலிருந்து உயர்தர வகுப்பு வரை யாழ்ப்பாணக் கல்லூரியில் கல்வி கற்றேன். 789 நம்பர் போக்குவரத்து வண்டியில் 3 சத ரிக்கட்டுடன் பயணம் செய்த காலம் அது. அக்காலத்தில் கல்லூரி அனுமதிக்கு பரீட்சை எழுதுதல் வேண்டும். எனது முதற் காலடி அந்தப் பரீட்சை நாளுடன்தான் தொடங்கியது. Odley Hallல் பொதுப்பரீட்சை போல் மிகக் கடினமான விதிமுறைகளுடன் கூடிய சூழலில் பரீட்சை, அப்பப்பா! அந்த வயதில் எப்படி அதைத் தாண்டினேன் என்று கடவுளுக்குத்தான் தெரியும்.

கல்லூரி அனுபவங்கள் ஒரு தனித்துவமானவையே. தனித்தனி desk. அதில் தொட்டெழுதும் பேனாவுக்கு மை விடும் புட்டி. பல தடவை மை சக மாணவர்களின் ஆடை மீது தெளிபட்டதும் உண்டு. கொஞ்சம் வீரமானவர்கள் புட்டியுடனேயே மையை எடுத்து மற்றவர்கள் மீது எத்தியும் விடுவார்கள். Pipeஇலிருந்து கையில் ஏந்திக் குடித்த தண்ணீரின் குளிர்மையே குளிர்மை! கல்லூரியைச் சுற்றியிருக்கும் வீடுகளுக்குக் கூட்டமாகச் சென்று நாவல் பழம், நெல்லிக்காய் பொறுக்கி பங்கிட்டு சாப்பிட்டதும் ஒரு சுவைதான், நினைத்தால் இப்பவும் வாயூறும். அக்காலம் கிருமிகள், பக்ரீறியாக்கள், வைரஸ் முதலியன மனிதனுக்கு பயந்த காலம். தற்காலம் மனிதன் பயப்படும் காலம்.

வகுப்பில் இருக்கும் இடத்தைப் பொறுத்து பல காட்சிகள் காணலாம். வகுப்பு நடைபெறும் பொழுதே மதிய உணவை மேசையின் கீழ் மறைத்து வைத்துச் சாப்பிடுவார்கள். எழுதுவது போலவே பேனாவைப் பிடித்தபடி நித்திரை கொள்வார்கள். இப்படிப் பல. இவற்றைப் பார்த்துச் சிரித்ததால் ஆசிரியரிடம் பிடிபட்டுத் தண்டனை வாங்கியதும் உண்டு.

விளையாட்டுகளில் பங்குபற்றுவதில் எனக்கு நாட்டமே இல்லை எனினும், கிரிக்கட் விளையாட்டுப் பயிற்சிகளுக்கு நின்று மாலை நேரத்தில் அராலி ஆட்கள் எல்லோரும் ஒற்றுமையாகக் கூடி வீடு போனது ஒரு தனி இன்பமான அனுபவம். இவ் அனுபவங்கள் உங்களுக்கும் ஏற்பட்டிருக்கும் அளவான தொப்பியைப் போட்டுப் பாருங்கள் முதுமை மறைந்து இளமை தெரியும்.

கல்லூரி ஆசிரியர்கள், மற்றும் ஊழியர்கள் எங்கள் மீது அக்கறையுடன் வழிகாட்டியது என்றும் மறக்க முடியாது. உதாரணமாக உயர்தர வகுப்பில் படிக்கும் பொழுது ராஜசிங்க மாஸ்டர் எங்களை தன் வீட்டுக்கு வரவழைத்து தேநீரும் தந்து படிப்பித்தது என்றும் என் நினைவில் உள்ளது. இவ்வாறு பல அனுபவங்கள்! பாடசாலை நாட்களில் சக மாணவர்கள், சிநேகிதர்கள் என்ற வித்துக்களை விதைத்து பாடசாலை நாட்களின் பின் தனி மரங்களாக வளர்ந்து இன்று Jaffna College 80 Re-Union இன் இன்ப நிழல் கீழ் ஒன்றாகக் கூடுவது ஒரு கொடுத்து வைத்த பாக்கியமே.

**- சந்திரவதனி**



# நம் நட்பு

அறிமுகம் இல்லாமல் கல்லூரி வந்தோம்
அடிக்கடி பின்னர் பேசிக்கொண்டோம்
உறவுக்கு மேலே உயிர் நண்பர் ஆகினோம்
காலங்கள் கடந்து கல்லூரியும் முடிந்தது
நட்பும் முடிந்தது என எண்ணி ஏங்கினேன்
வருடங்கள் பல இப்படிக் கழிந்தன
நாடு இழந்து, வீடு இழந்து
நம் மண்ணையும் இழந்து நாடோடியாகி
சூறாவளியில் சிக்கிய இலை போல்
சுழன்று ஓடிய அந்நிய தேசங்களில்
உயிரை ஒறுத்து வாழ்ந்த போது
சற்றும் எதிர் பாராது
கணீர் ஒலியுடன் என் வீட்டு தொலைபேசி
யாரோ என நினைத்து காதில் வைத்தேன்
ஆச்சரியம் தந்தது அதில் கேட்ட குரல்
பள்ளி நண்பர்கள் தேடி அழைத்து
பரவசப்படுத்தியது அந்த நட்பின் வலிமை
மனதில் ஒரு பரபரப்பு அடடா இவன்
எமது பள்ளி பழைய நண்பன் அல்லவா ?
நீயா? நீயா? என்று துடித்த போது
தெரிந்து கொண்டேன் நண்பர்களே
நீங்கள் எனக்குள் இருக்கிறீர்கள் என்று
நட்புக்கு வயது தடைக்கல் இல்லை
காசோ பணமோ முக்கியம் இல்லை
பட்டம் பதவி தேவையும் இல்லை
எமக்குள் கருத்து வேறுபாடு வந்தாலும்
பிரிவு என்பது வருவது இல்லை
என்றும் மாறாத இளமை மனமும்
உரிமையுடன் பழகும் குழந்தைக் குணமும்
இதைவிட வேறு தேவையும் இல்லை
என்று தொடங்கிய நமது குழுமம்
இன்று நம் நட்பு இல்லை எனில்
வாழ்க்கை எமக்கு இனிப்பாக இல்லை
என்பதற்கு எடுத்து காட்டாக
வருடம் ஒன்று நிமிடம் போல் கடந்து
வயது அறுபதிலும் சிறுவர் போலாகி
சிரித்து மகிழும் எங்கள் இந்த
யாழ்ப்பாணக் கல்லூரி 80 A/L குழுமம்
இன்று போல் என்றும் வாழிய வாழியவே

– யமுனா

# கல்லூரி அரங்கத்தில் மனைவியாக....

**யாழ்ப்பாணக் கல்லூரி 80 குழும நண்பர்கள் 1980ம் ஆண்டு கலாச்சார விழாவில் ஆசிரியை செல்வி எஸ். பி. குலசிங்கத்தின் நெறியாள்கையில் அரங்கேற்றிய இசை நாடகத்தில் மனைவி கதாபாத்திரமேற்ற சிவசீலனின் நினைவலைகளிலிருந்து...**

**கதாபாத்திரங்கள் : கணவர்** : வைரக்குமார் - **மனைவி** : சிவசீலன் - **மகள்** : கணேசலிங்கம்

**புரோக்கர்** : தில்லைநடேசன் - **டாக்டர்** : ஜெயச்சந்திரன்

**மனைவி** : இஞ்சாருங்கோ வாருங்கோ... ஒடியல்கூழ் சமைச்சாச்சு வந்திங்கு அருந்துங்கோ... விரைவாக வாருங்கோ

**கணவர்** : எப்போது பார்த்தாலும் நான் வேலை செய்யும்போது குழப்புவது உன் தொழிலே... தொடக்கியதை முடித்தால் தான் என் மனதில் நிம்மதியே. நித்தமும் சாப்பிட்டால் புளி மூட்டை ஆகிடுவேன்.

**மனைவி** : சாப்பாடு போதாதென்று எல்லோரும் சொல்லுவார்கள். ஆனால் இவரோ அதற்கெதிராய் இருக்கின்றார். கல்யாணம் ஆனபின்னே புளி மூட்டை ஆனாலும் பரவாயில்லை என்றுதானே நான் நினைக்கின்றேன்.

**புரோக்கரும், டாக்குத்தரும் வருகை...**

**கணவர்** : புரோக்கர் ஐயா, புரோக்கர் ஐயா
நல்ல நேரம் வந்தீங்க என் மனைவி
சுவைக்கினிய ஒடியல்கூழ் சமைத்தாளே...

யாரைய்யா இப் பையன் ஏனிங்கு வந்தான்

**புரோக்கர்** : நல்லதொரு செய்தி சொல்ல
இவ்விடம் வந்தேனே

**கணவர்** : செல்லுங்கள் கேட்போமே
தாராளமாய் சொல்லுங்கோ...

**புரோக்கர்** : எங்கள் ஊர் பையன் ஒருவன்
டாக்டர் பட்ட ம் பெற்றானே அவனுக்கு
பெண் கேட்க இவ்விடம் வந்தோமே...

**உள்ளிருந்து மகள் வருகை....**

**மகள்** : ஹலோ டாக்டர், ஹலோ டாக்டர் ஏன்
இங்கு வந்தனீங்க...

**டாக்டர்** : அப்பாவின், அம்மாவின் அனுமதி
பெறத்தான் இவ்விடம் வந்தோமே

**கணவன் - அப்பா** : இதுவென்ன சம்பவம்
இதற்கிடையில் நடக்கிறது. டாக்டரின் குணங்களை சிறிதளவு சொல்லுங்கோ




**புரோக்கர்** : குணத்திலே பார்த்தாலும் மன்மதக்குஞ்சு, நிறத்திலே பார்த்தாலும் வெளிநாட்டுக்காரர் போல...

**நகைச்சுவைக்கான இணைப்பு**

**மனைவி** : இஞ்சாருங்கோ, இஞ்சாருங்கோ சரியென்று சொல்லுங்கோ வெளியிலேதான் விட்டோமென்றால் பக்கத்தி வீட்டு பார்வதி மகள் காத்திருக்காங்கோ.

நன்றி




YOU
we GOT
IT.
Noble























































1980







# கல்லூரி நினைவுகள்

நான் 1972ம் ஆண்டு கல்லூரியில் வகுப்பு 5ல்-இல் இணைந்தேன். 5ம் வகுப்புக்கு தேவகடாட்சம் ஆசிரியர் தான் வகுப்பாசிரியர். வகுப்பறைக் கட்டிடம் தேவாலயம் பக்கமாக அமைந்திருந்தது. தேவகடாட்சம் ஆசிரியர் மாணவர்களுக்கு பிடிக்கும் வகையில் அன்புடன், ஆர்வம் தரும் வண்ணம் பாடங்களைச் சொல்லி தருவார். அவர் எம்மை ஒவ்வொரு பிராணிகள், பறவைகளின் பெயரால் செல்லமாக அழைப்பது எமக்கு அவரில் ஒரு விருப்பத்தை உருவாக்கியது. அது மட்டுமல்ல அவர் பாடசாலைக்கு ஒரு சிறிய ஸ்கூட்டரில் வருவார். அதில் சிலசமயம் மாணவர்களையும் ஏற்றிக் கொண்டு சென்று சந்தோசப்படுத்துவார். அதனாலோ என்னவோ மாணவர்களுக்கு அவரை பிடிக்கும்.

பின்னர் வகுப்பு 6ல் (6C) சச்சிதானந்தன் ஆசிரியர்தான் வகுப்பாசிரியர். அவர் எமக்கு ஆங்கிலமும் படிப்பித்தார். நீண்ட தாடி வைத்திருப்பார். அதோடு அவர் Scouts மாஸ்டர் ஆகவும் இருந்தார். எமது வகுப்பறை ஆலமரப்பக்கமாக அமைந்திருந்தது. சச்சிதானந்தன் மாஸ்டர், தேவகடாட்சம் மாஸ்டர் இருவரும் Scoutsஇற்கு பொறுப்பானவர்கள். சச்சிதானந்தன் மாஸ்டர் Scouts campஇல் எதிர்பாராது உயிர் நீத்தார். அவரின் இறுதிச் சடங்கு எல்லாக் கல்லூரி சாரணர்களும் புடைசூழ இடம்பெற்றது. அதில் நானும் கலந்துகொண்டிருந்தேன். அவரின் இறப்பு எமக்கு ஒரு பெரிய இழப்பு. அவரின் பிள்ளைகளும் எம்மோடு படித்தமையும், அவரின் இறப்பை பார்த்ததும், மாணவர்கள் அவருக்கு இறுதி மரியாதை செய்ததும் இன்றும் என் கண் முன்னே இருக்கின்றது. அது எனது மனதில் நீங்காத நினைவாக இன்றும் உள்ளது. நானும் எனது இரு நண்பர்களாகிய மணி, தில்லை எப்போதும் ஒன்றாக சுற்றித்திரிவோம். அதனால் எம்மை சச்சிதானந்தன் ஆசிரியர் மும்மூர்த்திகள் என்று வகுப்பில் செல்லமாக அழைப்பார்.

வகுப்பு 8-ல் வயல் பக்கமாக வகுப்பறை அமைந்திருந்தது. வயற்காற்று தாலாட்டும் சுகமோ தனி. பாலசிங்கம் டீச்சர் வகுப்பாசிரியர். வகுப்பு 9 Tennis Court பக்கமாக வகுப்பறை அமைந்திருந்தது. கனகரத்தினம் மாஸ்டர் வகுப்பாசிரியர். நாம் கல்விகற்ற ஆசிரியர்களில் மறக்க முடியாதவர்கள், போல்ராஜா மாஸ்டர், சிற்றம்பலம் டீச்சர், பொன்னம்பலம் மாஸ்டர், அமிர்தநாயகம் மாஸ்டர், பொன்னுத்துரை மாஸ்டர், குலசிங்கம் டீச்சர், தனரஞ்சனி டீச்சர், ஆனந்தரட்னம் மாஸ்டர், ரகுநாதமுதலியார் மாஸ்டர், தர்மன் மாஸ்டர், இந்திராணி டீச்சர், நிர்மலன் மாஸ்டர் ஆகியோரைக் குறிப்பிடலாம்..

Lions Club ஆதரவில் நடைபெற்ற Exhibitionஇல் Physics Lab dark roomஇல் நானும் உருத்திரகுமாரனும் இணைந்து மேற்கொண்ட 'மனித தலையை மண்டையோடாக மாற்றும் விந்தை' என்ற நிகழ்வை இன்றும் மறக்க முடியாது. இதை பார்க்க நண்பர்கள் கூட்டம் முண்டியடித்தது இன்றும் நினைவுக்கு வருகிறது. இப்படி பலவற்றை கூறிக்கொண்டே செல்லலாம். எழுத எழுத தீராது என்றாலும் எழுதியதில் ஒரு மன நிறைவு வருகிறது. அதனால் இத்துடன் முடிக்கிறேன்.

**அ.அமிர்தராஜா**



# கல்லூரி தந்த சுகந்தம் !

**உங்கள் நண்பி சந்திரிக்கா வேலாயுதபிள்ளை – தற்போது திருமதி சந்திரிக்கா சிறீரஞ்சன், கனடாவில் இருந்து என் நினைவலைகளுடன் இந்த கட்டுரை மூலம் உங்களைச் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். இன்று நான், என் கணவர், இரு குழந்தைகளுடன் வாழும் வாழ்க்கைக்கும், அப்போது எனது பள்ளிக்கால வாழ்க்கைக்கும்தான் எத்தனை வித்தியாசங்கள்..! அன்றைய சந்தோசம் வேறு, இன்றைய சந்தோசம் வேறு. எவ்வளவு மாற்றங்கள்...!**

**முதுமையின் தொடக்கத்தில் இருந்துகொண்டு எனது கடந்தகால நினைவுகளை இப்போது மீட்கும் முயற்சியில் நான் எனது வயதுகளில் அரை நூற்றாண்டைத் தொலைத்த மகிழ்ச்சியில் இதை எழுதுகின்றேன். எழுத, எழுத ஆனந்த கண்ணீர் சொரிகிறது. அதை துடைக்கக்கூட விரும்பாமல் தொடர்ந்து எழுதுகிறேன். அவ்வளவு தூரம் எனது மனம் இலேசாகி பல வர்ணப் பட்டாம் பூச்சி போல் பறந்து பறந்து உயரத்தில் மிதப்பதைப் போன்ற உணர்வு. நான் செய்ய வேண்டிய இன்றைய கடமைகளை கூட வழமையை விட விரைவாகவும், இலகுவாகவும் செய்தது போல் உள்ளது. இன்று எனக்கு நேரம் போவதே தெரியாது என்பது எனக்கு நன்றாகத் தெரிந்து விட்டது.**

நான் வழக்கத்துக்கு மாறாக பேப்பர், பேனாவுடன் மேசையின் முன்னால் இருப்பதை எனது மகன் விசித்திரமாக பார்ப்பதை உணர்கிறேன், ஆனால் அவர் என்னை எதுவும் கேட்வில்லை. குழப்பத்துடன் என்னைப் பார்த்துவிட்டு சென்று விட்டார். நானும் ஐம்பது வருடங்கள் பின்னோக்கிய என் பார்வைகளுடன்..... மனதை நினைவுகளில் ஓட விட்டேன்....

1968ம் ஆண்டில்தான் யாழ்ப்பாணக்கல்லூரி என்ற பிரபல இருபாலார் பாடசாலையில் நான் சேர்ந்து படிக்க ஆரம்பித்தேன். அப்போது அமரர் S.V பாலசிங்கம் அதிபராக இருந்தார். அவரது மறைவின் பின்னர்தான் அமரர் இராஜன் கதிர்காமர் அதிபரானார்.

நான் சிறு வயதிலே ஒரு துடினமான குழந்தை. எங்கள் வீட்டில் மூன்று இளவரசிகள். எனது மூத்த சகோதரி வீட்டு பொறுப்பை அம்மாவுடன் கவனித்ததில் நான் ஒரு விளையாட்டுக் குழந்தையாகவே இருந்தேன். எனது தந்தையாரும், தாயாரின் சகோதரரும் எனது தாயாரை போலவே எமது வளர்ச்சியில் அக்கறையும், ஆதரவும், அரவணைப்பும் காட்டினார்கள். எமது வீட்டில் சிரிப்பிற்கும், சந்தோசத்திற்கும் ஒரு போதும் குறைவு இல்லை. வீட்டில் எமக்கு தாராள சுதந்திரமும் தந்திருந்தார்கள்.

ஞாபகம் வருதே! ஞாபகம் வருதே!.... எனது குழந்தை பருவத்தில் பாடசாலையில் Brownies 'சிறு தோழிகள்' என்ற ஒரு அமைப்பில் என்னை இணைத்துக்கொண்டேன். கிழமையில் ஒரு நாள் பாடசாலை முடிந்ததும் எங்கள் சந்திப்பு நடைபெறும். அதற்கு இன்று அமரர்களாகிய செல்வி எலையாஸ், சொல்வி சிற்றம்பலம் ஆசிரியைகள் பொறுப்பாக இருந்தார்கள். பின்பு பெரிய வகுப்புகளிற்கு செல்லும்போது Brownies அமைப்பிலிருந்த நாங்கள் Girl guide என்ற அமைப்புக்கு சென்றோம்.

நான் தொடர்ந்து அதில் அங்கம் வகித்தேன். இதன்போது சிறு சிறு சுற்றுலாக்கள் செல்வோம். எமது பாடசாலை மாணவிகளுக்காகவே ஒழுங்கு செய்யப்பட்ட பஸ்ஸில் செல்வது வழக்கம். அதில் ஆசிரியர்களும் எம்முடன் வந்து இணைந்து

பாட்டுக்கள் பாடி உற்சாகப்படுத்துவார்கள். எமது மகிழ்ச்சிக்கு அளவு இல்லை. கத்திக் கூச்சல் போட்டு தெருவில் போவோர் வருவோர் எல்லாருக்கும் கைகாட்டி ஒரு வழி பண்ணி விடு வோம். இன்று யாழ்ப்பாணக்கல்லூரி மாணவர்கள் சுற்றுலா செல்கிறார்கள் என்பது எமது முழுக்கிராமத்திற்கும் தெரிந்து விடும். இப்படி எங்களில் பத்து பேர் பிறகு பத்து நாட்கள் சுற் றுலா பயணமாக கொழும்பு விகாரமகாதேவி பூங்கா, விக்டோ ரியா பூங்கா என்று பல இடங்களுக்கும் சென்றது நினைவுக்கு வருகிறது. அந்த அனுபவங்களை இப்போது வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது. அந்தளவு அருமையான சந்தோஷமான நினைவுகள்.

அடுத்து என் நினைவுக்கு வருவது பாட்டு, நாடகம், நடனம். அதில் ஆங்கில குழுப் பாட்டு பாடியதும், அதில் எனது வகுப்பு நண்பர்கள் பலர் பங்கு பற்றியதும், பிறகு ஆங்கிலத்தில் சிண் டெரல்லா என்று ஒரு நாட்டிய நாடகம் - அதில் Ballroom dance style இல் ஆண், பெண் ஜோடி சேர்ந்து தனரஞ்சனி ஆசிரியை, சுகந்தி ஆசிரியையின் வழிகாட்டலில் பாடி- நடித் ததும் ஞாபகம் வருகிறது. இதற்காக ஒரு கம்பி வளையத்தில் பச்சை நிற பேப்பர் ஒட்டி, அழகிய ரோஜா பூக்களை இணைத்து, கைகளில் பிடித்தபடி நடனம் ஆடினோம். இந்த கம்பி வளையம் தயாரிப்பதற்கு எனது தந்தையார் இரும்பு ஒட்டும் கடையில் கொடுத்து ஒட்டி, அழகிய வளையமாக்கி தனது கைப்பட செய்து தந்தார்.

பின்பு அரிச்சந்திர மயான காண்டம், கண்ணகி போன்ற நாடகங்களில் நடித்து பாடசாலை நிகழ்ச்சிக்காக மேடையேற் றிய ஞாபகம் வருகிறது. அது மட்டுமல்ல, பொன்னம்பலம் ஆசிரியரின் வழிகாட்டலில் கோலாட்ட நடன நிகழ்வு மூலம் கூடை பின்னுவது போல அழகிய மேடை நிகழ்ச்சி ஒன்றை செய்தோம். அதில் ஒருவர் பிழை விட்டாலும் பின்னலை அவிழ்ப்பதில் சிரமம் ஏற்படும் என்பதால் கவனமாக செய்ய வேண்டியிருந்தது ஞாபகம் வருகிறது.

**மரதன் போட்டியும் இல்ல விளையாட்டு போட்டியும்**

மரதன், சைக்கிள் ரேஸ் போட்டிகளில் சில தடவைகள் முதலி டம் பெற்றேன். இந்த நிகழ்வுகளின் போது எனது தந்தையார் தானே சைக்கிள் ரேஸில் பங்கு பற்றுவது போல மைதானத் தில் அங்கும் இங்குமாக ஓடி என்னை ஊக்குவித்தது நினை வுக்கு வருகிறது. இல்ல விளையாட்டு போட்டியில் நான் பிரவுண் ஹவுஸ் (நீல நிறம்) இற்கு ஒரு முறை தலைமை தாங்கினேன். விளையாட்டுகளில் நான் உயரம் பாய்தல், நீளம் பாய்தல், தடை தாண்டி ஓட்டம், ஈட்டி எறிதல் ஆகிய போட்டிகளில் பங்கு பற்றினேன். அது மட்டுமல்ல வினோத உடை போட்டியிலும் பங்கு பற்றினேன். வினோத உடை போட்டியில் சாண்டா கிலாஸ் ஆகவும், மீன் வியாபாரியாகவும் வந்து இருமுறை முதல் பரிசினை பெற்றேன். உயரம் பாய்த லில் சாந்தினி இரத்தினசிங்கம், குமுதினி வேலாயுதபிள்ளை ஆகியோருடன் எனக்கு ஆரோக்கியமான போட்டிகள் இருக் கும். ஆனாலும் நாம் எல்லாருமே ஒரே வகுப்பு மாணவர்க ளாக இருந்ததால் அவர்கள் எல்லாரிடமும் நல்ல நட்பும் இருந்தது.

ஈட்டி எறிதலில் முதலிடம் பெற்றது மட்டுமல்லாது ஸ்கந்தவ ரோதயா கல்லூரியில் பாடசாலைகளுக்கிடையிலான போட்டி யில் முதலிடம் பெற்று யாழ்ப்பாணம் முற்றவெளியில் நடந்த யாழ்ப்பாண மாவட்ட மாணவர்களுக்கிடையிலான போட்டியி லும் பங்கு பற்றி அதிலும் முதலிடத்தை தட்டிக்கொண்டேன்.

அடுத்து குழு விளையாட்டில் வலைப்பந்தாட்டத்தில் இணைந் தேன். அப்போது யாழ் இந்து மகளிர் பாடசாலை, உடுவில் மகளிர் பாடசாலையுடனான போட்டிகளில் யாழ்ப்பாணக் கல் லூரி வெற்றிக்கிண்ணத்தை கைப்பற்றிக்கொண்டது நினை வுக்கு வருகின்றது.

எனது வீடு சங்கரத்தை கிராமத்தில் வயல்வெளி நிறைந்த இரம்மியமான இடத்தில் உள்ளது. எமது காலத்தில் நண்பர் கள் பலர் 786 இலக்க நவாலி - சங்கரத்தை பஸ் இல் வந்து சங்கரத்தை சந்தியில் இறங்கி பாடசாலைக்கு நடந்து செல் வார்கள். தொலைபேசி வசதிகள் இல்லாத காலம். சொல்லி வைத்தது போல் மூளாய் ரோடு, மாவடி நண்பர்கள் மாவடிச் சந்தியில் உள்ள பொன்னுத்துரை மாமாவின் கடையில் சந்தித்து ஊர்வலமாக சங்கரத்தை சந்தியை அண்மித்து, அங்கும் நண்பர்களை இணைத்துக் கொண்டு ஓர் ஊர்வல மாக பாடசாலையை அடைவோம். இப்பவும் எனது மனக் கண்ணில் இந்த ஊர்வலம் அடிக்கடி வலம் வருகிறது.

இது மட்டுமல்ல, நான் 1980ம் ஆண்டு பாடசாலையை விட்டு வெளியேறிய பின் அதே பாடசாலையில் 1983ம் ஆண்டில் இருந்து 1987ம் ஆண்டு வரை ஆசிரியையாகவும் பணிபுரி யும் ஒரு நல்ல வாய்ப்பு எனக்கு கிடைத்தது.

என்னுடன் படித்த என் குழும தோழர், தோழிகளை சந்தித்து இந்த நினைவலைகளை மீட்டு சந்தோசப்படும் ஒரு நாள் என்று வருமோ என்று ஆவலுடன் காத்திருக்கிறேன். என் னைப் போலவே உங்களில் பலரும் இருப்பீர்கள் என்று நினைக்கிறேன்.

எனது மகன் இப்போது பல தடவைகள் என்னை கடந்து செல்வதும், எழுதிக் கொண்டிருக்கும் என்னை வினோதமாக பார்ப்பதும் புரிகிறது. நான் எதோ எழுதுவதால் அவர் என்னை குழப்பவில்லை, ஆனாலும் திடீரென்று என் வீட்டு தொலை பேசியின் மணிச்சத்தத்தில் நான் என் கனவிலிருந்து விடுபட்டு விட்டேன். எழுதுவதை நிறுத்தி விட்டு யார் என்று தொலை பேசியை எடுக்க, மறுபுறத்தில் என் கணவரும், எனது மகளும்... கண்ணீருடன் எழுதும் என் நிலையை கண்டு பதறிய எனது மகன் அவர்களுக்கு அழைத்ததில் அவர்கள் மிரண்டு போய் என் கண்ணீரின் காரணத்தை அறிய தொலைபேசியை சிணுங்க வைத்துள்ளனர்.

கடவுளே ! இனி இதை வைத்தே என்னை கேலி செய்து சீண்டப் போகின்றார்களே !

என்றும் அன்புடன்
**சந்திரிக்கா**



# விளையாட்டும் நானும்

மாணவிகள் பாடசாலை விளையாட்டுக்களில் ஈடுபடுவதை ஊக்குவிக்காத காலம் அது. பொதுவாக மாணவர்களின் விளையாட்டுக்களைக் கண்டுகளிக்க மைதானம் நிறையும் கூட்டம் இருக்கும். ஆனால் மாணவிகளின் விளையாட்டுகளுக்கோ விரல் விட்டு எண்ணும் பார்வையாளர்களே அப்போது வருவது வழக்கம்.

விளையாட்டில் ஈடுபட்டால் படிப்பு குழம்பிப் போகுமென தடைபோடும் பெற்றோரும், மாணவிகளது பாடசாலை விளையாட்டை வரவேற்காத சமூகமும்தான் அன்று இருந்தது. ஆயினும் என் அனுபவத்தில், பாடசாலை நாட்களில் என் உடல், உள விருத்திக்கு உதவியது நான் ஈடுபட்ட விளையாட்டுக்களே என்பதை நான் பின்னர் உணர்ந்துகொண்டேன். உண்மையைச் சொன்னால் எனக்கு கல்வியில் ஆர்வத்தை ஊட்டியதே விளையாட்டுத்தான். குறிப்பாக நான் பாடசாலை பரிசளிப்பு விழாவில் முதல் முதலில் பௌதீகவியலிற்கு பரிசிலைப் பெறுவதற்கான தூண்டுதலையும், உள வலிமையையும் பெற்றுத்தந்ததே நான் ஈடுபட்ட விளையாட்டுக்களே. இன்றும் அந்த விளையாட்டுக்கள் தந்த அனுபவங்களும், உடல், உள வலிமையுமே என்னோடு கூட வாழ்கின்றன. கல்லூரி விளையாட்டுத்துறையில் என்னை ஊக்குவித்த ஆசிரியைகள் செல்வி குலசிங்கம், செல்வி செல்வமணி செல்வதுரை ஆகியோரை நான் என்றும் மனதில் நினைத்துக்கொள்வேன். இவர்கள் என்றும் எனது நன்றிக்குரியவர்கள்.

யாழ்ப்பாணக் கல்லூரியில் என்னுடைய வாழ்க்கை 1973 ஆம் ஆண்டு ஆறாம் வகுப்பில் ஆலமரத்தடியிலுள்ள வகுப்பறைகளில் ஆரம்பித்தது. அன்று ஆரம்பித்த எனது கல்லூரி வாழ்க்கையின் தொடர்ச்சியாக பாடசாலை விளையாட்டுப் போட்டிகளில் ஈடுபட்டு ஏழு தடவைகள் வெற்றிக் கோப்பையைப் (champion cup) பெற்றுக்கொண்டேன். அத்துடன் பல விளையாட்டுக்களில் யாழ்ப்பாணக் கல்லூரியின் சாதனைகளை (records) முறியடித்திருக்கிறேன். என்னுடைய சாதனைகளுக்கு என்னுடன் கூடவே போட்டியாளர்களாயிருந்த பாடசாலை நண்பிகளே ஊக்கமளித்தனர். எங்களிடத்தில் விளையாட்டான, ஆரோக்கியமான, அதேநேரம் நட்புறவுடன் கூடிய போட்டி இருந்தது. ஒருவர் மற்றவரிடமிருந்து விளையாட்டு நுட்பங்களைக் கற்றுக்கொண்டோம். 1979-ம் ஆண்டு, மேல்நிலைப் பாடசாலை மாணவிகளுக்கான குண்டெறிதல் போட்டியின் பயிற்சியின் போது, எனது சிரேஸ்ட வகுப்பு மாணவி ஒருவருடன் போட்டியாக இருவரும் பயிற்சி செய்தோம். இதன் பயன் இறுதிப்போட்டியில் அப்போதிருந்த யாழ்ப்பாணக்கல்லூரி சாதனையை முறியடிக்க முடிந்தது. இதனை விட உயரம்பாய்தல் போட்டியில் இரு தடவைகள் சாதனையை முறியடித்துள்ளேன். விளையாட்டுகள் பொழுதுபோக்குக்கானவை மட்டுமல்ல. மகிழ்ச்சியுடனும், உளவலிமையுடனும் சாதனை படைப்பதன் மூலம் மன நிறைவையும் எமக்குத் தருவன.

நான் மிக ஈடுபாடுடன் விளையாடிய இன்றுமொரு விளை யாட்டு வலைப்பந்தாட்டம். இது ஒரு குழு விளையாட்டு என்பதால் மற்றைய விளையாட்டுக்களிலும் பார்க்க இதனை மிகவும் மகிழ்ச்சியுடன் மற்றைய மாணவர்களுடன் சேர்ந்து அனுபவித்து விளையாடினேன். 1980ம் ஆண்டு யாழ்ப்பாணப் பாடசாலைகளுக்கிடையிலான பெண்களிற்கான வலைப் பந்தாட்டப் போட்டியில் எனது தலைமையில் யாழ்ப்பாணக் கல்லூரி இரண்டாம் இடத்தில் (Runner up) வெற்றி பெற்றது. இப்போட்டியில் என்னை சிறந்த வீராங்கனையாக தெரிவு செய்தார்கள். அத்துடன் எமது குழுவிலிருந்து நானும், நளாயினி தேவராஜாவும் வடமாகாணத்திற்கான வலைபந்தாட்டக் குழுவிற்கு தெரிவு செய்யப்பட்டோம். இது எனது வாழ்க்கையில் மறக்க முடியாத அனுபவம். எம்முடன் போட்டியிட்ட மற்றைய பெண்கள் கல்லூரிகளில் மாணவிகள் தொகை யாழ்ப்பாணக் கல்லூரியை விட பல மடங்கு அதிகம். யாழ்ப்பாணக் கல்லூரி கலவன் பாடசாலை ஆனதால் குறைந்த எண்ணிக்கையான மாணவிகளிலிருந்தே வீராங்கனைகளின் தெரிவு நிகழ்கிறது. ஆயினும் நாங்கள் சாதனையாளர்களாயிருந்தது பெரு மகிழ்ச்சியைத் தருகிறது. எங்கள் குழுவின் கூட்டு மனப்பான்மையே எங்கள் பலமாயிருந்தது.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக, எமது கல்லூரிச் சூழலும், ஆசிரியர்களும், நிர்வாகமும் மாணவிகள் விளையாட்டிற்கு குறைவற்ற ஊக்கத்தைத் தந்தனர். பாடசாலையின் இல்லங்களிற்கிடையேயான விளையாட்டுப் போட்டிகளின் போது மாணவர்களுக்கு இல்லத் தலைவர்கள், விளையாட்டுத் தலைவர்கள் இருப்பது போலவே மாணவிகளுக்கும் தலைவர்களாகும் சம வாய்ப்பு வழங்கப்பட்டது. எல்லாப் பாடசாலைகளிலும் மாணவிகளது விளையாட்டுத்துறைக்கான வளங்கள் அதிகரிக்கப்படுவதோடு அவர்கள் விளையாட்டுத் துறையில் ஈடுபடுவதற்கான ஊக்கமும் தொடர்ந்து அளிக்கப்பட வேண்டுமென விரும்புவதுடன் அது எதிர்காலத்தில் நிகழும் என உறுதியாக நம்புகிறேன்.

**குமுதினி வேலாயுதபிள்ளை**



# கல்லூரி ஒரு பல்கலைக்கழகம்

நண்பர்களே, உங்களுடன் எனது அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

எனது தனிப்பட்ட கல்லூரி அனுபவத்தை காட்டிலும் யாழ்ப்பாணக் கல்லூரியே என்னை மிகவும் பிரமிக்க வைத்துள்ளது, அதனால்தான் நான் இந்த கல்லூரியில் பயின்றதை யிட்டு மிகவும் பெருமை கொள்கிறேன்.

பார்த்த உடனேயே மனதை கொள்ளை கொள்ளும் எமது கல்லூரியின் பிரமிக்க வைக்கும் கட்டிடங்களும், வானளாவிய மரங்களும் கல்லூரிச்சூழலை அழகாகவும் புதுமையாகவும் காட்டியது.

யாழ்ப்பாணக் கல்லூரி என்ற இந்தப் பெயரிலேயே வடமாகாணத்தின் முக்கிய நகரமாகிய யாழ்ப்பாணம் என்னும் பெயரும் கல்லூரி அமைந்துள்ள இடமும் ஒருங்கே பொதிந்துள்ளன. அதனால் யாழ்ப்பாணத்துக்கே தனிப்பெருமை சேர்க்கும் கல்லூரியாக மிளிர்ந்து நிற்கிறது.

என்னைப் பொறுத்த வரையில் எமது கல்லூரி மட்டும் தான் வடமாகாணத்தின் தனியார் கலவன் பாடசாலை. அதைவிட வடபகுதியில் வேறெந்தக் கல்லூரியிலும் இல்லாத வகையில் இங்கு இரண்டு விளையாட்டு மைதானங்களும், இரண்டு கூடைப்பந்தாட்ட அரங்குகளும், இரண்டு டெனிஸ் மைதானங்களும், இரண்டு வலைப்பந்தாட்ட மைதானங்களும் அமைந்துள்ளமை எமது கல்லூரியின் சிறப்பம்சம் ஆகும்.

வடமாகாணத்திலேயே முதல்தரமான பார்வையாளர் அமரும் அரங்கம் (stadium) அமைந்துள்ளதும் எமது கல்லூரியின் தனி சிறப்பு. அத்துடன் யாழ்ப்பாணத்தில் உள்ள மிகச் சிறந்த நூலகங்களில் எமது கல்லூரி நூலகமும் முதன்மையாக விளங்கியது.

மொத்தத்தில் எமது கல்லூரி ஒரு பல்கலைக்கழகம் போல் திகழ்ந்தது.

என்னைப் பொறுத்த வரையில் யாழ்ப்பாணக் கல்லூரி, யாழ். பல்கலைக்கழகத்தை விட மேலதிக வசதிககளைக் கொண்டதாகவே கருதுகின்றேன்.

அன்புடன்

**லண்டனில் இருந்து பொன்னாலை V.ரவீந்திரன்**




# Unforgettable Days at Jaffna College

I joined Jaffna College in 1971 in Grade 4 and left in 1980 after completing G.C.E A/L examination in the Commerce section. I came from Bandarawela-upcountry and boarded in the Hostel throughout my tenure at Jaffna College. During the junior school days, I was at Sanders hostel, moved to Chelliah hostel, Howland hostel, and finally was at Bunker Hall. I enjoyed the 'Boarders Day' celebrations and won many prizes at the Talent contest and Fancy dress contest. Once, I acted as 'Dumb boy' in the talent contest and did many jokes by a dumb person which made all have a good laugh and I won first prize.

At the Fancy dress contest, I played a 'Drunkard' role. My acting was so real the teachers decided to give me a breathalyzer test, and found I was sober. I was also a stage pop singer and entertained students with many Tamil and Sinhala songs at Boarders' day and Literacy Association functions.

During school years, I enjoyed playing Cricket, FootBall and Hockey.

I joined the third eleven Cricket team for one year and played in the second eleven for two years, and finally played for three years in the first eleven. For two years, I was one of the opening batsmen.

I played against all Jaffna school teams and three Big matches Battle of the Gold. During one of the matches, I got into a fight with school fans and became popular in all schools. I played in the Hockey team, unfortunately, I had to leave after a year due to an injury. I had also played in the third, second and first eleven Football teams. I was the goalkeeper for 2 years and impressed the audience with my performance. I saved many goals, except for one match, where a team player passed the ball to the keeper unexpectedly and I missed, we lost the game to the opposite team.

I was a member of Hastings house. I participated mostly in the field events and won many awards. I participated each year in the Cross Country race. I always completed the race but did not win. I was an active participant in indoor games such as Badminton, Carrom, Chess, Table Tennis. I became the Table Tennis Champion for 5 continuous years at Hostel and school tournaments.

I was elected as the junior school President in 1974 and Hostel Councilor in 1979 and served as the Councilor secretary. I was an all-rounder and most eligible to be chosen as the President of the school council in 1980, but was rejected due to an unfortunate circumstance that happened with a friend whom I could not betray.

I want to share a few unforgettable and enjoyable incidents during my school years.

- *At the literacy association get together, we played the parcel passing game. The parcel stopped in my hand. I was asked to find a slipper from one of the girls and to hold it on my head and walk around the audience three times. I was so uncomfortable and started looking for a slipper, but the girls started to hide their slippers. At last, I found Mrs. Kadirgamer carelessly had one of her slippers off of her foot. I grabbed it and started walking. Principal Mr. Kadirgamer couldn't stop laughing at my action.*

- *The new Daniel Poor Library was built, and everyone was busy getting ready for the opening ceremony. The furniture and books were being transferred from the old library. One Sunday, the Librarian asked my friends and I to transfer the books. We were very tired and thirsty and looked around for water. Finally, we found a bottle and started drinking from it. Guess what was in the bottle, it was sweet white wine to be served in the holy communion at the church. This should have been taken to the church but ended up in the library. This is how we knew why the water was so sweet and refreshing and it wasn't like that miracle in the bible - water turned into wine.*

Jaffna College teachers and the hostel life taught me a lot of meaningful life lessons and guided me to be a good human in the society today. I was appointed as an English teacher in the Government school. I got the Teachers Training, and at the same time worked towards completing the Bachelor's Degree. My achievements led to my appointment as the Principal of Madulsina Tamil Maha Vidyalaya in top grade Badulla District, SriLanka. The school has one thousand five hundred students and fifty-five teachers. Now, I am happily retired at the age of 60 after being a principal for 35 years.

***- Muthulingam***

# Education at Jaffna College

Education as a preparation for life or social living may sound old fashioned today; but read between the lines there lurks the secret that a school organized as a free and happy community turns out men of character that are in short supply now.

Jaffna College was always well known for its liberal tradition. Character involves disciplined behavior; such discipline is self-imposed. These values are instilled in us by well designed multi-disciplinary training provided by allowing us to participate and contribute from day one. When we consider the crooks of our society, we realise that mere intellect does not develop character."

An example of such training, I recall the annual dinner of the Academy. (the literary association of students in the university entrance classes). Distinguished chief guests are often an exemplary example of our society graced these occasions. The dinners consisted of four or five courses with six speeches – the toast to the College, toast to the association and the toast to the guests with the respective responses. For students these were hilarious and memorable occasions, several dressed in full suit and tie for the first time. The speeches were humorous and of a high order. Alcohol was prohibited in the college; the glasses raised were filled with ginger beer. In the dinner term the students in their wisdom and at times by consensus elected the most competent public speakers in English.

At Jaffna college we recognize that.

- Everyone may not get a chance to continue with their education at universities due to standardisation, competition, or other forms of discrimination.
- They can excel well in other areas if they are well disciplined and focused



- Winning attitude and self-confidence need to be developed while at school.
- Everyone has a strength in one discipline or other, train them to bring the best out of each of them.

I regret to mention the values we cherished and the training we had during our time does not prevail due to so many reasons we are all aware. Our goal is to rebuild our college that served us better to serve the generations to come. This is our obligation to humanity.

"If there is will there is a way"

**Yokeswaran Kandasamy**



# நம்மை உருவாக்கியவர்கள்

எம்மை உருவாக்கியதில் தமக்குள்ள பங்கை அறிந்தால் நமது ஆசிரியர்கள் மிகவும் ஆச்சரியம் அடைவார்கள் என்பது மட்டும் உண்மை. நமது ஆசிரியர்கள் ஒவ்வொரு வரிடமும் அவர்களுக்கேயுரிய வினோதமான போக்குகள் இருந்திருக்கின்றன; நூதனமான நடை உடை பாவனைகள் இருந்திருக்கின்றன; தனித்துவமான தன்மைகள் இருந் திருக்கின்றன; பாடங்களின் கற்பித்தலையும் ஆசிரியர்களின் கற்பித்தல் திறமை ஆற்றல்களையும் தாண்டி, கற்பித்த பாடங் களையும், வகுப்பறைகளையும், பாடசாலையையும் தாண்டி எம் மீது இவை சிறுவயதிலிருந்தே ஆளுமை செலுத்தி வரு கின்றன; நாம் அறியாமலே நம்மை உருவாக்கி வந்திருக் கின்றன.

ஆசிரியர்களின் அவரவருக்குரிய குறை, நிறைகள், கிறுக்குத் தனங்கள், இவற்றுக்காக நாம் அவர்களுக்குக் கொடுத்த பட்டப் பெயர்கள் எல்லாவற்றையும் தாண்டி அவை நம் ஆளுமை விருத்தியில் பெரும்பங்காற்றியிருக்கின்றன என்பது அவர்க ளுக்குத் தெரியாது. தாம் இருந்த இடத்திலேயே இருந்து கொண்டு, நாம் எமது வாழ்க்கைப்பயணத்தில் ஏறிவர ஏணிப் படிகளாகத் தம்மைக் கொடுத்தவர்கள் எமது ஆசிரியர்கள். சில படிகள் கரடுமுரடாக இருந்திருக்கலாம், சில படிகள் சமாந்தர மில்லாமல் இருந்திருக்கலாம்; சில படிகள் குறுகலாக இருந் திருக்கலாம், சில படிகள் சாய்வாக இருந்திருக்கலாம்; ஆயி னும் அந்த ஏணிப்படிகளில் ஏறியே நாம் இன்று எம் வாழ்க் கையில் இந்நிலையில் நிற்கின்றோம் என்பதை அறிந்தால் எமது ஆசிரியர்கள் எவ்வளவு இறும்பூது எய்துவார்கள். அதே போல் நாம் அறியாமலே அவர்கள் எவ்வளவுக்கு நமது ஆளுமை விருத்திக்குப் பங்காற்றியிருக்கின்றார்கள் என்பதை நாமும் மீட்டுப் பார்த்தல் அது எமக்கும் ஒரு ஆன்மீக அகத் தேடலாய் இருக்கும்.

இவ் வகையில் யாழ்ப்பாணக் கல்லூரியில் நான் கற்ற காலத் தில் (1974 - 1981) என்னை உருவாக்கிய ஆனால் இன்று எம் மத்தியில் இல்லாத ஆசிரியர்களில் ஒரு சிலரை இங்கு நினைவுகூருகின்றேன்.

நான் 1974 இல், 7ம் வகுப்பில் யாழ்ப்பாணக் கல்லூரியில் மிகுந்த பிரயத்தனங்களினூடாக வந்து சேர்ந்தேன். நான் வந்த நேரம்; கல்லூரிக்கு ஏழரைச் சனி ஆரம்பம் போலும். ஆரம்பக் கல்வி, இடை நிலைக் கல்வி, மேல் நிலைக் கல்வி, பட்டப்படிப்புக் கல்வி, புகழ் பெற்ற நூல்நிலையம், விளையாட்டு மைதானங்கள் என்று பெரும் ஆலவிருட்சமாக ஆசிரியர்கள் மாணவர்கள் நிறைந்து விளங்கிய கல்லூரி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தொடங்குவதற்காக சுவீகரிக்கப்பட்டது இதே ஆண்டில்தான். பாரிய பரந்த யாழ்ப்பாணக்கல்லூரி தனது நூலகத்தையும், கட்டடங்களையும் மட்டுமல்ல பட்டப்படிப்புத் துறையையும், பல ஆசிரியர்களையும் மாணவர்களையும் கூட இழந்து முள்வேலி அடைப்புக்குள் ஒடுங்கியிருந்து செயற் படத் தொடங்கியது.

## அதிபர் ராஜன் கதிர்காமர்:



அத்தனை சவால்களின் மத்தியிலும் உயிரோட்டத்துடன் பாடசாலையை வழி நடத்திய ஆளுமைதான் அதிபர் ராஜன் கதிர்காமர். மாணவர்களின் பாடப்பெறுபேறுகள், புள்ளிகளில் மட்டும் கவனம் செலுத்தாது அவர்களின் ஒருங்கிணைந்த ஆளுமை விருத்தியில் கவனம் செலுத்தி மாணவர்களின் பல்துறைப் பட்ட ஆளுமைகளை உள்ளிருந்து வெளிக்கொணர உதவிய அவரின் தீர்க்க தரிசனமான தூர நோக்குள்ள கற்றல் - கற்பித்தல் அணுகுமுறை நாம் அக்காலத்தில் புரிந்துகொள்ள முடியாது இருந்த ஒன்று. தேசியப் பரீட்சைகளில் பாடசாலை மாணவர்களின் பாடப் பெறுபேறுகள் பின்னிலை அடைந்தபோதும் அதனால் பல விமர்சனங்களையும், அழுத்தங்களையும் சந்தித்தபோதும் ஒரு சில மாணவர்களை உயர்பெறுபேறுகளுக்குத் தயார் படுத்தும் கல்விமுறையைத் தாண்டி, தளரா மனத்துடனும் தூரநோக்குடனும் அனைத்து மாணவர்களும் தத்தமது அகத் திறமைகளையும், ஆளுமைகளையும் வளர்த்தெடுத்துக் கொள்வதற்குத் தளம் தந்தவர் கதிர்காமர்.

நாம் உயர்தர வகுப்பில் படிக்கும்போது வாரத்தில் ஒரு பாட நேரம் அதிபரினுடையதாகும். வேலைப்பளுவின் மத்தியிலும் இயன்றவரை அப்பாடநேரத்தை அவர் பயன்படுத்தினார். அதிலே அவர் பாடவிதானப் பாடங்கள் எதையும் கற்பிக்கவில்லை. அந்நேரத்தை அவர் எம்முடன் உரையாடுவதற்கும் தொடர்பாடலுக்கும் பயன்படுத்தினார். சிறுவயதில் தனது இரண்டாம் உலகமகாயுத்த அனுபவங்கள், பாடசாலை எதுவும் இல்லாமல் இடையில் கழிந்த அவரது இளமைக்கால வருடங்கள், அக்காலத்தில் தனது தந்தையாருடன் உரையாட வரும் ஆளுமைகளின் உரையாடல்களிலிருந்து தான் பெற்ற முறைசாராக் கல்வி, மலேசியாவில் இருந்து இலங்கைக்கு இடம் பெயர்ந்தமை, யாழ்ப்பாணக்கல்லூரி அதிபராக உலகளாவிய தனது பயணத்தில் தனது அனுபவங்கள், தான் கண்டவைகள், தாம் வாசித்தறிந்த நூல்கள் எனப் பல விடயங்களை அப்பாட நேரத்தில் கதிர்காமர் எம்முடன் பகிர்ந்துகொண்டார். அதனூடாக அவர் எம்முடன் ஏற்படுத்திய பிணைப்பும், எம்மில் ஏற்படுத்திய தாக்கமும் தாயகத்தில் யுத்தகால அனர்த்தங்களிலும், உலகளாவிய ரீதியில் நமது புலம்பெயர் வாழ்க்கையிலும் சந்தித்த பல சவால்களை எதிர்கொள்ள எம்மை நாமறியாமலே தயார்படுத்தியிருந்தது.


பின்னாளில் கனடாவில் என்னுடன் பலமுறை உரையாடியிருக்கின்றார். பத்திரிகைகளில் வெளிவரும் எனது கட்டுரைகளைத் தொடர்ந்து வாசித்து வருகின்றார் என்பது அவரின் உரையாடலில் இருந்து தெரிந்துகொண்டேன். ஒருமுறை அவரே என்னிடம் 'இதெல்லாம் நீ எங்கே படித்தனி?' என்று கேட்டு என்னை வியப்பில் ஆழ்த்தினார். 'மற்றவர்கள் இதே கேள்வியைக் கேட்கும்போது நான் யாழ்ப்பாணக் கல்லூரியில் படித்தனான் என்று பதில் சொல்லுவேன்; இப்போது நீங்களே இப்படிக் கேட்டால் நான் என்ன சொல்வது?' என்று நான் கூறியது ஞாபகம் இருக்கின்றது.

## மிஸ் எலாயஸ்:




நான் 7ம் வகுப்பில் வந்து சேர்ந்தபொழுது எமது ஆரம்பப் பிரிவுக்குப் பொறுப்பாக இருந்தவர் எலாயஸ் ரீச்சர். அவர் எமக்கு தமிழ் பாடமும் கற்பித்தார். அப்போது அதில் ஒரு பாடம் மழை பற்றியது. பாடம் இப்பொழுது நினைவில்லை. ஆனால் நம்மை மழை பற்றி ஒரு பாடல் எழுதிக்கொண்டு வரும்படி அவர் சொன்னார். அதற்கு நான் எழுதிய பாடலை மிக வியந்து பாராட்டியதோடு பொன்னம்பலம் மாஸ்டரையும் வகுப்புக்கு வரவழைத்து அவரிடமும் அப் பாடலைக் காட்டி இசையுடன் பாடச்செய்து மகிழ்ந்தார். இதுவே நான் வாழ்க்கையில் எழுதிய முதல் கவிதை. இது எனது தமிழ் ஆர்வத்தையும், திறனையும் உற்சாகமாக வளர்த்துக்கொள்ளப் பெரிதும் உதவியது எனலாம். எலாயஸ் ரீச்சர் கண்டிப்பான ஆசிரியரும் கூட. பாடசாலை இடைவேளையில் பக்கத்துக் கடைகளுக்குச் சென்று வந்ததற்காக அவரிடம் தண்டனை பெற்றதும் ஞாபகமுள்ளது.

## போல்ராஜா மாஸ்டர்:



அடுத்தடுத்த வகுப்புகளில் எனது தமிழ் ஆசிரியர் போல்ராஜா மாஸ்டர். அவர் பிரமச்சாரியாக வாழ்ந்தவர். வட்டுக்கோட்டையிலேயே வாடகைக்கு இடம் எடுத்து தங்கியிருந்து கொண்டு வாராந்த விடுமுறைகளில் தனது ஊர் சென்று வந்தவர். பரீட்சைகள் முடிந்ததும் அவர் விடைத்தாள் திருத்தும்வரை நாம் எமது பெறுபேற்றை அறிவதற்காக அவர் வீடு சென்று வருவது உண்டு. அப்போது ஒருமுறை நான் எழுதிய தமிழ்க் கட்டுரை தரம் குறைவாக இருந்ததால் மிகக்குறைவான புள்ளிகளையே வழங்கியிருந்தார். ஆயினும் தனது வதிவிடத்திற்கு வரப்பண்ணி கட்டுரை எழுதும் உத்திகளைக் கற்றுத்தந்தவர் போல்ராஜா மாஸ்டர். கட்டுரை எழுதும்போது முகவுரை போல் எழுதும் முதல் பந்தி, அதிலே எடுகோள் செய்யுள், பழமொழி ஆகியவை அமைதல், முடிவில் முடிவுரை போல் அமையும் இறுதிப்பந்தி என அவர் வழிகாட்டிய உத்திகளே எனது எழுத்தாற்றலுக்கு இன்றும் உதவுகின்றன.

## பாலசுப்பிரமணிய ஐயர்:



இவர் எனது அயல்வீட்டுக்காரர். ஆனால் வீட்டில் அதிகம் பேசமாட்டார். பாடசாலையில் தமிழ்ப்பாடம் எடுத்தவர். பாடங்களுக்கு அப்பால் ஆனந்தவிகடன், கல்கி, கலைமகள் போன்ற இதழ்களின் தீபாவளி மலரில் வரும் சிறந்த சிறுகதைகளை வகுப்பில் வாசிக்கப் பண்ணுவார். இதுவே தமிழ் இலக்கிய உலகிற்கு எனது நுழைவாசலாய் அமைந்தது. இவர் இல்லத்தில் நான்கு அலுமாரிகளில் இருந்த சிறிய நூலகம் பிற்காலத்தில் நான் எந்நேரமும் சென்று புத்தகங்களை எடுத்துவந்து வாசித்து பின்னர் ஐயருடன் அவை பற்றி உரையாடும் அறிவகமாகவும் எனக்கு அமைந்தது. வகுப்பறையின் சமயபாடத்திட்ட பாடங்

களுக்கு அப்பால் சமய ஆன்மீக உலகை எனக்குத் திறந்து வைத்தது இவர் இல்லத்தில் இருந்த நூல்களே. இன்றும் நான் இந்நூல்களில் இருந்து மேற்கோள் காட்டி எழுதியும் பேசியும் வருகின்றேன். பின்னாளில் இவரிடமும், இவருடைய மகள் சாந்தா ரீச்சரிடமும் அவரது இல்லத்தில் சமஸ்கிருதமும் சிறி தளவு கற்றிருக்கிறேன். என்னிடமுள்ள வடமொழி நூலறி வுக்கு வித்து இதுவே எனலாம்.

### சின்னையா மாஸ்டர்:



அதிகம் அலட்டிக்கொள்ளாத எளிமையான ஆசிரியர். விவசாயம் பாடத்துக்கு இவர் ஆசிரி யர். பாடத்திட்ட பாடங்களுக்கு அப்பால் தான் எழுதிய பயிர்ச்செய்கை, நெற்செய்கை, கோழி வளர்ப்பு போன்ற நூல்களினூடாகவும் விவ சாய அறிவை ஊட்டியவர். எப்போதும்கையில் கமத்தொழில் விளக்கம் சஞ்சிகையை அல்லது அன்றாட புதினபத்திரிகையைத் தன்னுடைய தலைக்கு வெய்யில் விழாதபடி பிடித்தவாறு நடந்து திரியும் இவர் வகுப்பறைக்கு மட்டம் போட்டுவிட்டு களவாகப் பாடநேரத்தில் வெளியேறும் மாணவர்களைக் கண்டாலும் காணாதமாதிரி இருப்பார். அவர்களுக்கு உதவியும் இருக்கிறார். இவருடைய நூல்களை பாடசாலைக் காலத்துக்கு அப்பாலும் பலகாலம் பலமுறை நான் படித்திருக்கிறேன் என்பது அவர் அறியாத ஒன்று. இன் றும் என்னிடம் உள்ள விவசாய மற்றும் பண்ணை ஆர் வத்தை வளர்த்தெடுத்த ஆசிரியர் இவர் எனலாம்.

### பொன்னுத்துரை மாஸ்டர்:



கேத்திரகணிதப் பொறிமுறை வரைதலுக்கு ஆசிரியராக இருந்தவர். அத்தோடு மரவேலை ஆசிரியராகவும் இருந்தார். பாடநேரத்துக்கு அப்பாலும் இவருடைய மரவேலைக் கூடத் திலே பல்கலைக்கழகம் செல்லவிருக்கும் உயர்வகுப்பு மாணவர்களுக்கும் மற்ற மாண வர்களுக்கும் கேத்திரகணித வரைதல் படிப்பித்துக்கொண்டி ருப்பார். கேத்திரகணித வரைதல் எனக்குச் சிம்மசொப்பன மாக இருந்தபொழுது தனிப்பட்ட கவனம் எடுத்து எனக்கு அதை இலகுவாக்கித்தந்தவர். எனது தனிப்பட்ட குடும்ப நில வரங்கள் அறிந்து என் கல்வி முன்னேற்றத்தில் நான் பல் கலைக்கழகம் செல்லும்வரை அக்கறை காட்டியவர்.

### விசுவநாதன் மாஸ்டர்:



எனக்கு பௌதிக ஆசிரியராக இருந்தவர் விசு வநாதன் மாஸ்டர். ஆற்றல் உள்ளவர்; அதிகம் அலட்டிக்கொள்ளாதவர், அனைத்தையும் அவ தானித்து வைத்திருப்பவர், பாடசாலை நிர்வா கத்தின் உள்ளக அரசியல் தெரிந்தவர். அனை வரையும் விமர்சிப்பார். இதனால் பலருக்கு அவரைப் பிடிக்காது. அது அவருக்கும் தெரியும்.

எனக்குப் பௌதிகத்தில் சாதாரண சித்தி (எஸ்). அவர் என்னை அழைத்தார். 'லம்போ பௌதிகத்தில் ஆகக் குறைந்தது திற மைச் சித்தி - சி எடுக்காமல் மருத்துவம் படிக்கக் கிடைக்காது; நான் உனக்கு உதவுகின்றேன்' என்றார். ஒரு சில மாதங்கள் பௌதிகத்தில் பல்தேர்வு வினாக்களை அணுகும் முறைகளை யும் உத்திகளையும் சொல்லித் தந்தார். அடுத்த முறை பௌதி கத்தில் திறமைச் சித்தி - சி. மருத்துவக்கல்வி அனுமதியும் கிடைத்தது. இப்பொழுது சொன்னார் 'இந்த விசுவநாதன் இல் லாமல் நீ மருத்துவம் படிக்கப் போயிருக்க முடியாது'. விசுவ நாதன் மாஸ்டரின் தனி ஸ்டைல் அது. வடமாகாணத் தமிழ் ஆசிரியர் சங்கத்தில் இருந்து அவர் ஓய்வு பெற்றபோது அவ ருக்காக அச்சங்கம் வெளியிட்ட பாராட்டுப் புத்தகத்தில் அக் காலத்தில் அவரைப் பற்றி ஒரு கட்டுரை வரைந்திருந்தேன். அவர் அதனைப் பலமுறை வாசித்து ரசித்து ஒவ்வொருமுறை நான் அவரைச் சந்திக்கும்போதும் அதைச் சொல்லி மகிழ்ந்து பாராட்டியிருக்கின்றார். ஆசிரியர்களின் மனமார்ந்த ஆசிகளே எம்மை இன்று இந்நிலையில் வாழவைத்திருக்கின்றன என் றால் அது மிகையாகாது.

பின்னாளில் அவுஸ்திரேலியா போயிருந்தபோதும் அங்கும் கல்விச் சேவையில் இணைந்து கற்பித்தார். ஹேலிஸ் வால் நட்சத்திரம் தோன்றும் காலத்தைப் பற்றிய சரியான எதிர்வு கூறல்களுக்காக பிரித்தானிய வானியற் கழகத்தின் (Royal Astronomical Society) அங்கத்துவம் வழங்கப்பட்ட காரை நகர் அம்பலவாணர் எனப்படும் அலன் ஆபிரகாம் என்பவருக் குப் பின்னர் இதே வானியற் கழகத்தின் அங்கத்துவம் பெற்ற வர் ஆசிரியர் விசுவநாதன். போலிச் சோதிடர்களின் பெருக்கத் தைக் கண்டு அவுஸ்திரேலியாவில் சோதிட ஆய்வுக்கழகத்தை நிறுவி முறையாகப் பலரையும் சோதிடம் கற்கவும், எழுதவும், பேசவும், கற்பிக்கவும் வைத்தவர். பின்னாளில் கனடாவில் எனது இல்லத்துக்கும் வருகை தந்திருந்தார். அவரின் முன்னு தாரணத்தைக் கொண்டு கனடா சோதிட ஆய்வுக் கழகம் என்னால் உருவாக்கப்பட்டது.

### மாணிக்கம் மாஸ்டர்:



தமிழில் எனது ஆளுமையை வளர்த்த இன் னோர் ஆசிரியர் மாணிக்கம் மாஸ்டர். பாடத் திட்டத்துக்கு அப்பால் அவர் கற்பித்த பாடல்கள் பல இன்றும் நினைவில் நிழலாடுகின்றன. **'பொன்பூச் சொரியும் பொலிந்த செழுந்தாதி றைக்கும்'** என்ற நல்லூர் சின்னத்தம்பிப் புல வரின் பாடல் இன்றும் மனதில் உள்ளது.

### கேசவராஜன் ரீச்சர்



எனக்கு இந்துசமய பாட ஆசிரியராக இருந்த வர் கேசவராஜன் ரீச்சர்; எனக்கு ஒரு விதத்தில் உறவினருங்கூட. நான் 9ம் வகுப்பு படிக்கும் காலத்தில் மெய்யாகவே கிறிஸ்தவத்தின் பால் ஈர்ப்பு கொண்டு அதைச் சார இருந்தபொழுது என்னை அழைத்து ஆற்றுப்படுத்தியவர் கேசவராஜன் ரீச்சர். 'ஒரு வருடம் பொறுத்துப் பாரும்' என்று எனக்கு அறிவுறுத்தினார். இன்றும் முக்கிய முடிவுகளை எடுப் பதன் முன்னர் சில காலம் அடைகாத்தல் எனது வழமையாக உள்ளது.




## ஆனந்தரட்ணம் மாஸ்டர்:



அதிகாலை எழுந்ததில் இருந்து அந்தி சாய்ந்து இருட்டும் வரை பாடசாலைக்காகவே உழைத்த ஆசிரியர் ஆனந்தரட்ணம். பாடசாலையில் இருந்து வீட்டுக்கும் சுற்றயலுக்குமாக அடிக்கடி சைக்கிளில் போய்வந்துகொண்டிருப்பார். பாடசாலையின் பொலிஸ் ஆனந்தரட்ணம் மாஸ்டர் எனலாம். அவரது கண்ணில் இருந்து எதுவும் தப்பாது. எங்கே மாணவர்கள் என்ன குழப்படி செய்தாலும் அவருக்குத் தெரியும். அது எங்காவது சந்தர்ப்பம் வரும்போது அவர் சொல்லும்போதுதான் தெரியும். பாடசாலை நாட்களில் சிலவேளைகளில் வயல் வேலைகள் காரணமாக நான் பாடசாலை செல்லாமல் இருந்ததுண்டு. அவ்வாறு நான் போகாமல் இருந்த நாள் ஒன்றில் எனது அம்மா மட்டுமே வயலில் வேலைகளைச் செய்விப்பதற்குச் சென்று வந்ததை அவதானித்திருக்கின்றார் ஆனந்தரட்ணம் மாஸ்டர். அடுத்த நாள் வகுப்பில் என்னை 'லம்போதரன், நீர் ஏன் நேற்று வரவில்லை? வயல் வேலைக்கும் நீர் போகவில்லைதானே' என்று கேட்டபொழுதுதான் அவர் பாடசாலையில் மட்டுமல்ல அதற்கு வெளியேயும் மாணவர்கள் பற்றி எவ்வளவு கண்காணிப்பாக இருக்கின்றார் என்பது எனக்குத் தெரிந்தது. அவர் எமக்கு சமூகக்கல்வி கற்பிக்கும்போது பாடப்புத்தகத்துக்கு அப்பாலும் வரலாற்றுக் குறிப்புகளையும், சம்பவங்களையும் துல்லியமான ஆண்டு, திகதிகளுடன் கூறிச்செல்வார். இவர் விதைத்த விதையே இன்று என்னுள்ளே வரலாற்றுத்தேடல், வாசிப்பு, எழுத்தாக வளர்ந்துள்ளது. இவர் கற்பித்த இன்னொரு பாடம் பண்பாடு. அது அப்போதைய H.N.C.E பாடத்திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு பாடம் ஆகும். அப் பாடத்துக்குத் தெளிவான பாடவிதானமோ, வழி காட்டலோ, புத்தகமோ இல்லாத நிலையிலும் தானே தேடிக் குறிப்புகள் எடுத்து வந்து கற்பித்தது இன்றளவும் நினைவில் உள்ளது. பண்பாடு என்றால் என்ன? என்ற அறிமுகத்துக்காக பற்பல மேதைகளின் கூற்றுகளையும், வரைவிலக்கணங்களையும் தேடித் தொகுத்து பல நாட்களாக அவர் தந்த அறிமுக வகுப்பு ஒரு பல்கலைக்கழக வகுப்பு போல இருந்தது. உயர்வகுப்பு மாணவர்களின் கழகமான அக்கடமியில் வழிநடத்துனராக இருந்த ஆனந்தரட்ணம் மாஸ்டர் கண்காணிப்பில் எமக்கு அக்கடமியில் ராக்கிங் எனப்படும் பகிடிவதை இடம் பெறும். இது எமது கல்லூரியில் மட்டுமே இருந்த தனித்துவம் எனலாம்.

## அமிர்தநாதன் மாஸ்டர்:



எமக்கு சித்திரமும், களிமண் வனைதலும் கற்பித்த ஆசிரியர் P. A. அமிர்தநாதன் மாஸ்டர். சிறந்த ஓர் கலைஞர். எமக்கு NCGE பாடத்திட்டத்தில் ஓவியம் ஒரு தேசியக் கலைப் பாடமாக உருவெடுத்தது. சரியான பாட வழிகாட்டிகள், நூல்கள் இல்லாத நிலையிலும் இத்தாலியின் மைக்கல் ஏஞ்சலோ, இஸ்பானியாவின் பிக்காசோ முதல் இலங்கையின் ஜோர்ஜ் கீற் வரை பலதரப்பட்ட ஓவியர்களையும் அவர்கள் ஓவிய பாணியையும், பண்டைய இலங்கையின் சித்திர மரபையும் நமக்கு ஊட்டிய கலைமகன் அவர். எமது பாடசாலை நூலகத்தில் உள்ள இது பற்றிய பல நூல்கள் அவர் ஓவிய வகுப்பறையில் எடுத்து வைத்திருந்து எம்முடையை கற்றலுக்கு விருந்தாக்கினார். வனைதலிலும் அவருக்கு நிகர் அவரே. சிலுவையில் இருந்து உயிர் பிரிந்தபின் இறக்கப்பட்ட இயேசுக்கிறிஸ்துவின் உடலை கன்னி மேரி ஏந்தியவாறு கண்ணீர் வடிக்கும் சியெஸ்டா சிலைகள் பலவற்றை வடித்தவர் அமிர்தநாதன் மாஸ்டர். அச் சிலையில் கன்னி மேரி இளமையாகக் காட்சியளிப்பதன் தத்துவ விளக்கத்தையும் எமக்குக் கற்பித்தார். இயேசு கிறிஸ்துவின் கடைசி இராப்போசன ஓவியத்தில் இயேசு வரையப்படுவதற்கு மொடெலாக அமர்ந்தவனே, பல ஆண்டுகள் எடுத்த அவ் ஓவியத்தில் பின்னர் இயேசுவைக் காட்டிக்கொடுத்த யூதாஸை வரைவதற்கும் மொடெலாக அமர்ந்த செவி வழிச் செய்தியையும் எமக்குச் சொன்னவர் அமிர்தநாதன் மாஸ்டர். இவர் எமது பாடசாலையின் ஆஸ்தான படப்பிடிப்பாளரும் ஆவார்.

இவ்வாறு பல ஆசிரியப் பெருந்தகைகளின் பங்களிப்பினால் உருவானதே எனது இன்றைய வாழ்க்கை. இங்கு மறைந்தும் எனது நினைவில் மறையாத ஆசிரியர்களில் ஒரு சிலரைப் பற்றியே குறிப்பிட்டுள்ளேன். இவர்களுக்கு அப்பாலும் பல ஆசிரியர்கள் என்னை உருவாக்குவாக்குவதில் பெரும் பங்காற்றியிருக்கின்றார்கள். அவர்களில் பலர் இன்றும் வாழ்ந்துகொண்டிருகின்றார்கள். விரிவஞ்சி அவர்களைப் பற்றி இங்கு குறிப்பிடவில்லை. எனது ஆரம்பப் பாடசாலையான திருஞானசம்பந்த வித்தியாசாலையிலும், அதற்கு முந்திய முன்பள்ளியிலும் எனது ஆளுமைக்கு வித்திட்ட ஆசிரியப் பெருந்தகைகள் பலர். அவர்களையும் இங்கு நான் குறிப்பிடவில்லை.

**இ. லம்போதரன்**



# நினைவுகளுக்குள் நீங்கா இடம்கொண்ட கல்லூரிக் காலங்கள்

பாடசாலைக்காலம் அனைவரது வாழ்விலும் மறக்க முடியாத நினைவுகளை நாம் உயிர்வாழும் காலம் வரை எமக்கு கொடுத்துக்கொண்டேயிருக்கும். எம்மை நெறிப் படுத்தி வளப்படுத்தி இன்றைய இந்நிலையில் எம்மை நிலைப் படுத்தியிருப்பதற்கு ஆளுமையை ஏற்படுத்திக்கொடுத்த பாட சாலை நம் அனைவரது வாழ்விலும் தவிர்க்கமுடியாத இருப்பு.

'ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது' என்ற முது மொழிக்கமைய பாறையாகிய எம்மை அழகிய சிலையாக உருவமைத்த ஆசிரியப்பெருந்தகைகள் என்றென்றும் போற் றுதற்குரியவர்கள்.

யாழ்ப்பாணக்கல்லூரி எனது கனவு. எனது தந்தையாருடன் நான் சிறுவனாக செல்கின்றபோது இக் கல்லூரியில் கற்க வேண்டும் என்ற அவா எனக்குள் உருவாகியது. கல்லூரியின் பிரமாண்ட அழகு எனக்குள் அக் கல்லூரி மீது கொண்ட விருப்பத்தை இன்னும் அதிகரித்தது. கல்லூரியில் மாண வனாவதற்கு பரீட்சையில் சித்தியடையவேண்டும் என்ற நிபந்தனை இருந்தது. கடவுளின் அனுக்கிரகம் பரீட்சையில் சித்தியடைந்து நான் மாணவனாக என் விருப்பத்துக்குரிய கல்லூரிக்குள் நுழைந்தேன். ஒவ்வொரு நினைவும் ஒவ் வொரு கதையை சொல்லிக்கொண்டே இருக்கின்றது.

அப்பொழுது பாடசாலை ஆரம்பிப்பதற்கு முன்னர் நாம் மாபிள் அடித்து விளையாடுவதுண்டு. விளையாடிய இன்னொரு மாணவன் என்னுடையதை எடுத்துச் சென்றுவிட்டார். அழுது கொண்டே சென்று மதிப்பிற்குரிய அதிபர் பவிங் அவர்களிடம் முறையிட்டேன். உடனே மாபிளை எடுத்துச்சென்ற மாண வனை அடையாளம் கண்டதுடன் இருவரையும் அதிபர் அறைக்கு அழைத்துச்சென்றார் பிரம்புத்தடியால் அம் மாண வனுக்கு முழங்காலுக்கு கீழ் அடி விழுந்தது. அன்று 'அடுத் தவர் பொருளை எடுத்தால் தண்டனை உண்டு' என்பதனை மதிப்பிற்குரிய அதிபர் கற்றுக்கொடுத்தார் என்றே கூறவேண் டும்.

எமது கல்லூரியில் எனக்கு கணிதம் கற்றுக்கொடுத்த திரு. நவரட்ணம் ஆசிரியர் மிகவும் கண்டிப்பானவர். தனது வகுப் பில் யாரும் மாணவர்கள் கல்வியை கற்காது குழப்படியில் ஈடுபட்டால் அம் மாணவர்கள் நெல்லிமரத்திற்கு அருகில் துரத் தப்படுவார்கள். இன்றும் நெல்லிமரம் அக்கதைகளை நினைவு படுத்திக்கொண்டே இருக்கின்றது. எங்களின் குறும்புகள் சில வேளைகளில் ஒன்றுமறியாத மற்றவர்களைக் காயப்படுத்தி யும் உள்ளது. அதனால் தண்டனை பெற்ற நினைவுகளும் பசுமரத்து ஆணியாய் மனதிற்குள் புதைந்துள்ளன. நான்

எட்டாம் தரத்தில் கல்வி கற்றபோது ரப்பர்பாண்டில் சிறு குச்சி வைத்து வெளியில் நின்ற குருவிக்கு இலக்கு வைத்து அடித்த போது அவ்வழியில் வந்த உயர்தர மாணவி ஒருவருக்கு அக் குச்சியின் அடி விழுந்துவிட்டது. முறைப்பாட்டின் மீது எனக்கு தண்டனை கிடைத்தது. மேசைக்குள் கீழ் தலையை புகுத்து மாறு கூறி சித்திர ஆசிரியர் முதுகில் பலத்த அடி. அன்றிலி ருந்து ரப்பர் பாண்டை தொட்டதே இல்லை. இன்று நினைக் கும்போது மிகுந்த சுவாரசியமாகவே இந் நினைவுகள் உள்ளன.

ஒழுக்கத்தையும் விழுமியத்தையும் கற்றுக்கொடுத்த கல் லூரிக்கு என் நன்றிகளுடனான வாழ்த்துக்கள்.

அன்று ஒருநாள் அதிபர் ஆசிரியர்கள் யாரும் எமது கண் ணில்படவில்லை என்று நானும் எனது நண்பரும் சைக் கிளை எடுத்துக்கொண்டு சத்தம்போடாமல் வெளியே செல்ல முயற்சித்தபோது அதிபரின் கண்ணில் பட்டுவிட்டோம். அதி பர் நம்மை கண்டுவிட்டார் என்பதனை அறிந்த நான் அந்த இடத்திலிருந்து நகர முயற்சித்து தோற்றுப்போனேன். அதிபர் அறைக்கு அழைக்கப்பட்டோம். பாடசாலையின் ஒழுக்க நெறிக்கு முரணாக செயல்பட்டமையால் தந்தையாருடன் வருமாறு பணிக்கப்பட்டோம். வீட்டில் நிலைமை தெரிந்தால் பாடசாலையில் விழும் அடிகளை விட பத்துமடங்கு அதிகமாக இருக்கும். வேறுவழியில்லை தந்தையாரை மூன்று நாட் களின் பின்பு அதிபரிடம் அழைத்துச்சென்றேன். பாடசாலை யின் விதிமுறைகளை மீறினால் பாடசாலையிலிருந்து நிரந்தர மாக வெளியேற்றப்படுவேன் என எச்சரிக்கப்பட்டேன். பாட சாலையில் இணைவதே போட்டியான நிலையில் இவ்வா றான தண்டனைகள் பாரதூரமானவையாய் எனது தந்தை யார் மனம்நொந்து கொள்ளும்படியாக நடந்துகொண்டேன் என்ற குற்ற உணர்வு எனக்குள் வாட்டிக்கொண்டுதான் இருந் தது. ஆயினும் பாடசாலையில் கற்ற இச்சொல்நெறிகள்தான் இன்று எனது அலுவலகத்திலும் கடமையிலும் குடும்பத்திலும் என்னை நான் வடிவமைத்துக்கொள்ள படிக்கற்களாய் அமைந் தன என்று பெருமைகொள்கிறேன்.

ஒருமுறை உயர்தரம் கற்றுக்கொண்டிருந்தபோது ஒரு தவ ணைப்பரீட்சையில் குறைந்த பெறுபேறுகளை பெற்றேன் எனது மதிப்புக்குரிய அதிபர் ராஜன் கதிர்காமர் அவர்கள் என்னை அடுத்த வகுப்பில் இறங்கியிருந்து கற்குமாறு ஆலோ சனை வழங்கியபோது எனக்கு மிகுந்த தலைகுனிவை ஏற்படுத்தியது. அன்று என் மனதில் போட்ட தீர்மானம் இன்று என்னை வைத்தியராக்கியுள்ளது. மதிப்புக்குரிய அதிபர் ராஜன் கதிர்காமர் அவர்கள் என் வாழ்வில் மறக்கமுடியாத சிறந்த ஆசானாக என் உள்ளத்தில் எப்போதும் நிலைத்திருக்கின்றார்.

என் பாடசாலையில் கற்ற விடயங்கள் கல்வி மட்டுமல்ல இதர பாடவிதானங்களும் என்னை சிற்பமாக செதுக்கியுள்ளன. நேரம் தவறாமை, ஒழுக்கம், பிறரை மதித்தல், விட்டுக் கொடுப்பு, மனிதாபிமானம் இன்னும் பல எனக்குள் ஏற்பட கல்லூரியின் வளர்ப்பு முறையே காரணமாக அமைந்தது என்று கூறுவது மிகைப்படுத்தப்படாத உண்மையாகும். மேலும் எனக்கு கீழ் வகுப்பில் கல்வி கற்பித்த அதிபர் எலை



யாஸ், திருமதி ரூபராணி, திருமதி அம்பலவாணர், செல்வி சுகந்தி, திருவாளர் பொன்னம்பலம், திருமதி புஸ்பராணி ஆசிரியர்கள் மறக்கப்படமுடியாதவர்கள். உயர்தரத்தில் கற்பித் துக்கொடுத்த திருமதி இந்திராணி, திருவாளர் நிர்மலன், திரு வாளர் தர்மன் குலத்துங்கம், திருவாளர் வெற்றிவேல், திரு வாளர் தவரட்ணம் ஆகியோரும் என் மனத்தில் நீங்கா இடம் பிடித்தவர்களாக இருக்கின்றார்கள். கல்லூரியில் என்னுடன் கற்ற நட்புகள் என்றென்றும் இனிமையான நினைவுகளுடன் என்னுள் உறைந்திருக்கிறார்கள்.

கல்லூரியின் மண்வாசனையோடு கற்றுத்தேறி இன்று வைத் தியராக மட்டுமல்ல பல துறைகளிலும் என்னால் கால்பதிக்க முடியுமாக உள்ளதற்கு என் கல்லூரித்தாயிற்கே நான் நன்றிக் கடன் பட்டுள்ளேன். கல்லூரியின் வளர்ப்பே இன்று என் ஆளுமைக்கு அடித்தளமாக அமைந்துள்ளதால் என் வாழ் நாளில் என் கல்லூரித்தாயிற்கு பேரன்புடன் கடமைப்பட்டுள் ளேன். இன்று என் நினைவுகளின் புத்தகத்தில் சிலவற்றையே மீட்டுள்ளேன். இன்னும் அழியாத நினைவுகள் பசுமரத்தாணி போல் நெஞ்சில் புதைந்துள்ளன. என்னை இந்நினைவுகளை மீட்ட வாய்ப்பு கொடுத்த இந்த புத்தக ஆக்கத்தின் செயற் குழு வினர்களுக்கு என் மனமார்ந்த நன்றிகளையும் பாராட்டுக் களையும் தெரிவித்துக்கொள்கின்றேன் .

**இ.மணிவாசகன்**



# கனவுக் கல்லூரி

1970இல் பதவிக்கு வந்த சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அரசாங்கத்தில் கல்வியமைச்சராக இருந்தவர் அல்ஹாஜ் பதியுதீன் முகமது அவர்கள். அவரது அமைச்சு கல்வியில் ஒரு மறுமலர்ச்சி காண விழைந்தது. இதன்படி 1972இல் ஆறாம் வகுப்பிலிருந்த மாணவர்களுக்கு புதிய பாடத்திட்டமொன்றை அறிமுகப்படுத்தியதுடன், அம்மாண வர்கள் ஒன்பதாம் வகுப்புக்கு வரும்போது 1975 ஆண்டின் இறுதியில் N.C.G.E என்ற புதிய பரீட்சை எடுக்கவேண்டு மென்றும் அறிவுறுத்தப்பட்டனர்.

நாங்கள் இந்த பாடத்திட்டத்தில் இரண்டாவது அணியாகவிருந் ததால் 1976இல் ஒன்பதாம் வகுப்பை வந்தடைந்த நாங்களும் N.C.G.E பரீட்சை எடுக்க வேண்டியிருந்தது. பழைய க.பொ.த சாதாரண தர, உயர்தர பரீட்சைகளுக்குப் பதிலாக N.C.G.E / H.N.C.E பரீட்சைகள் மாற்றீடாக அறிமுகமாகின. புழக்கத்திலி ருந்த க.பொ.த பாடநூல்களெல்லாம் முடக்கப்பட்டு புதிய நூல் கள் வெளியாகின. 10 பாடங்களைக் கொண்டிருந்த N.C.G.E வகுப்பில் வழமையான பாடங்களுடன் தொழில் முன்னி லைப் பாடங்கள் இரண்டையும் அறிமுகப்படுத்தியிருந்தனர்.

இதற்கு முன் நாங்கள் ஏழாம் வகுப்பில் படித்துக்கொண்டிருந்த போது 1974 இன் இறுதியில் யாழ்ப்பாணக் கல்லூரியில் இன்னொரு பெரிய மாற்றம் நிகழ்ந்தது. இதே சுதந்திரக் கட்சி யின் அரசாங்கத்தில்தான் அதுவும் நிகழ்ந்தது. திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரியில் அதே ஆண்டில் நிறுவப்பட்ட இலங்கைப் பல்கலைக்கழக யாழ்ப்பாண வளாகத்தின் விஞ் ஞான பீடத்திற்காக யாழ்ப்பாணக் கல்லூரியின் ஒரு பகுதி சுவீ கரிக்கப்பட்டதே அந்த மாற்றம். இதை கல்லூரி வரலாற்றில் ஒரு சோதனையான கால கட்டம் என்று சொல்லலாம்.

இதன்போது Undergraduate Section மாணவர்கள் பயன் படுத்திய விஞ்ஞான ஆய்வுகூடங்கள், அதிபரின் அலுவலகம், நிர்வாக அலுவலக கட்டடம், ஒட்லி மண்டபம், நூலகம் மற்றும் அதனுடன் இணைக்கப்பட்டிருந்த வகுப்பறைகளையும் கொண்ட ஒரு தொகுதி கட்டடங்கள், உபகரணங்கள், தள பாடங்கள், நூல்கள் என்பவற்றை பல்கலைக்கழகம் தனது பாவனைக்காக எடுத்துக்கொண்டது. கல்லூரியின் மிகப்பிர தானமான வரலாற்றுப் புகழ்மிக்க கட்டிடங்கள் இவற்றை சுவீகரித்து முட்கம்பி வேலி போட்டது பல்கலைக்கழக நிர்வா கம். இதனால் டென்னிஸ் கோட்டுக்கு எதிரேயிருந்த கட்டிட அறைகளுக்குள் அதிபர் மற்றும் நிர்வாக அலுவலகங்களும், சுவீகரிக்கப்படாத நூல்களைக் கொண்ட நூலகமும் இடமாற றப்பட்டன.

நாங்களும் ஆலமரத்தடியில் ஏழாம் வகுப்பை முடித்து விட்டு 1975இல் உயர் வகுப்புகளுக்கு எட்டாம் வகுப்புக்கு வந்த போதுதான் இந்த யாழ் பல்கலைக்கழக சுவீகரிப்பினாலேற் பட்ட மாற்றங்களை நேரடியாகக் காண முடிந்தது. முட்கம்பி

வேலிக்கு அப்பால் தெரியும் கட்டிடங்களை மதிய இடைவேளை களில் ஒரு ஏக்கத்துடன் வேடிக்கை பார்த்தது நினைவுக்கு வருகிறது.

யாழ்ப்பாணக் கல்லூரி புத்தகப் படிப்புக்கு வெளியே பல துறைகளில் மாணவர்களை ஊக்குவித்தது. அதற்கு வசதியாக ஒவ்வொரு வகுப்பிலும் மாணவர் மன்றங்கள் அமைக்கப் பட்டு பல்வேறு மேடை நிகழ்சிகளை வருடாந்தம் நிகழ்த்துவ துண்டு. அப்போது நடைபெற்ற மாணவர் இரவு நிகழ்ச்சிகள் பலவற்றில் நான் கலந்துகொள்ளா விட்டாலும் ஒரே ஒரு முறை விதி விலக்காக Forum என்ற மாணவர் அமைப்பின் வருடாந்த இரவு நிகழ்ச்சிக்கு செல்லும் வாய்ப்பு வந்தது.

எங்கள் வகுப்பில் இருந்த நளீம், யாழ்ப்பாண கல்லூரியில் படிப்பதற்காக திருமலை - கிண்ணியாவிலிருந்து யாழ்ப்பா ணம் வந்து நவாலி CSI திருச்சபையின் குருவானவர் மனோ பவன் அவர்களின் குருமனையில் தங்கியிருந்து படித்துக் கொண்டிருந்தான். அதிபர் ராஜன் கதிர்காமருக்குப் பிறகு கல்லூரி அதிபராகவிருந்த ஜெபநேசன் அவர்களின் தம்பிதான் மனோபவன்.

நளீம் உடன் நானும் நவாலியிலிருந்து Forum டின்னருக்குப் போவது என்று தீர்மானித்திருந்தோம். அதுதான் முதல் தடவை இரவு விருந்துக்காக கல்லூரி செல்கிறேன். உள்ளுக்குள் பர பரப்பு. விருந்துக்கு வருகிறேன் என்று நண்பர்களிடம் பல தடவைகள் சொல்லியாயிற்று.

உடைகள் எல்லாம் மாற்றிக்கொண்டு மாலையில் 4 மணிக்கே நவாலியிலிருந்து 786ம் இலக்க பஸ்லில் இருவரும் புறப்பட டோம். யாழ்ப்பாணம் செல்லும் கடைசி பஸ் சங்கரத்தைச் சந்திக்கு இரவு பத்து மணிக்கு வரும், அதை பிடித்து திரும்பி வந்து விடுவோம் என்றுதான் வீட்டில் சொல்லிக்கொண்டு வெளிக்கிட்டோம்.

நிலவொளி நிறைந்த இரவு, நிகழ்ச்சி நடந்த study hall என்ற ழைக்கப்படும் மண்டபத்துக்கு முன்னாலிருந்த டெனிஸ் கோர்ட் எங்கும் பால் போன்ற வெளிச்சம். நேரம் இரவு பத்து மணிக்கு மேலாகிவிட்டது. அந்த அமளியில் எனக்கும், நளீமுக்கும் அது எங்கே தெரிந்தது?.

நிலா வெளிச்சத்தில் அம்மா எங்கள் வீட்டுப் படலையில் இரவு பத்தரை மணி மட்டும் நின்று பார்த்தா. எனது அப்பா எனக்கு மூன்று வயதிலேயே இறந்து விட்டதால் வீட்டு நிர்வாகம் அனைத்தும் அம்மாதான். யாழ்ப்பாண பஸ் போய் விட்டதை அறிந்துகொண்ட அம்மா மனோபவன் வீட்டுக்கு அண் ணனை அனுப்பி எங்களை தேடி வர சொல்லி செய்தி அனுப் பினா. நித்திரைத் தூக்கத்திலிருந்த அவரும் கடுங் கோபத்து டன் தனது மோட்டார் சைக்கிளை எடுத்துக்கொண்டு எங்களை தேடி வந்தார். பிரவுண் மைதானத்துக்கு அருகிலிருந்த சைக் கிள் பார்க்கில் மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு, பக்கத்தி லிருந்த மண்டபத்தில் ஆரவாரமாக இருந்த எம்மிருவரையும் வெளியேறி வருமாறு சொல்லியனுப்பினார். உற்சாகம் வடிய வெளியில் வந்த எம்மிடம் 'ஏறுங்கடா பின்னாலை' என்று, கோபம் கொப்பளிக்க கூறிக்கொண்டே ஒரு கணமும் தாமதி யாது மோட்டார் சைக்கிளையோ ஸ்டார்ட் பண்ணி விட்டார். மோட்டார் சைக்கிளில் அவருக்குப் பின்னுக்கு நானும், நளீமும் நெருக்கிக்கொண்டு இருந்தோம். இடைக்கிடை அவரிடம் திட்டு வாங்கியதைத் தவிர வழியில் அதிகம் எவரும் பேசவில்லை.

கல்லுண்டாய் - நவாலி வீதியில் எமது ஊரை நெருங்கிக் கொண்டிருந்த வேளை, யாரோ தெருக் கரையில் குவித்து வைத்திருந்த நெல் உமிக் குவியலின் மீது மோட்டார் சைக் கிள் இருட்டில் தவறுதலாக ஏற அது கட்டுப்பாட்டை மீறி எகிறிப் போய் நாங்கள் மூவரும் உமிக் குவியலில் வீழ்ந்தோம். மனோபவன் போதகரின் கோபம் கட்டுக்கடங்காமல் போன தையும் மறந்து நளீம் அந்த இரவில் அடக்க முடியாது சிரிக்கத் தொடங்கினான். அது எனக்கும் தொற்றிக் கொண்டது. அதற் கும் சேர்த்து நிச்சயம் வீட்டில் பிறகு வாங்கிக் கட்டியிருப்பான் என்று எண்ணிக் கொண்டேன்.

1977இல் H.N.C.E இன் முதலாம் ஆண்டு எமக்கு உண்மை யில் 10ம் வகுப்பு. பாடங்களில் கணிதம், இரசாயனம், பௌதீ கம் ஆகியன கணித பிரிவுக்கும், உயிரியல் பிரிவுக்கும் பொது வாக இருந்தன. H.N.C.Eஇன் இரண்டாம் ஆண்டிலேயே கணிதம், உயிரியல்,வர்த்தகம், கலைப் பிரிவுகளுக்கு அந்தந் தப் பிரிவுகளுக்குரிய பாடங்களை எடுக்க வேண்டும்.

கல்வியமைச்சு வகுத்திருந்த புதிய பாடத்திட்டத்தின் படி 11 ஆம் வகுப்பிலேயே H.N.C.E பரீட்சைக்கு மாணவர்கள் தோற்ற வேண்டும். அதாவது 12 வது வகுப்பு வரை செல்லும் பழைய உயர்தர வகுப்பு பாடத் திட்டத்திலிருந்து 1 வருடத்தைக் குறைத்து புதிய பாடத் திட்டத்தை தயாரித்திருந்தனர்.

ஆனால் இது நிகழாமல் இன்னொன்று வந்து குறுக்கிட்டு H.N.C.E பரீட்சையை தடுத்து நிறுத்தியது. அதுதான் 1977ம் ஆண்டுத் தேர்தல்.

1977 தேர்தலில் சுதந்திரக்கட்சி படுதோல்வியடைய, ஐ. தே. க அரசு வந்ததும் முதலில் ஜுலை இனக்கலவரம் நிகழ்ந்தது. இதனைத் தொடர்ந்து புதிய கல்வித் திட்டத்தை தூக்கியெறிந்து விட்டு மீண்டும் பழையபடி க. பொ. த சாதாரண தர, உயர்தர பாடத்திட்டங்களுக்குப் போக ஐ. தே. க அரசின் கல்வியமைச்சு தீர்மானித்தது. அதற்கு அவர்கள் முன் வைத்த முதல் குற்றச் சாட்டு N.C.G.E/H.N.C.E பரீட்சைகள் சர்வதேசிய ரீதியில் அங்கீ கரிக்கப்படவில்லை என்பதே.

நாங்களும் புதிய புத்தகங்களை தூக்கியெறிந்து விட்டு பழைய புத்தகங்களை தூசி தட்ட ஆரம்பித்தோம்.

உயர்தரம் படிக்க எந்த துறைக்குப் போவது என்பதில் எனக்கு குழப்பம். உயிரியலா? கணிதமா? எனக்கு ஒத்துப் போகும் என்ற கேள்விகள் குடைந்த வண்ணமே இருந்தன. படம் வரைவது என்று எதையாவது கிறுக்குவதில் விருப்பமிருந்த என்னை வீட்டில் எனது அக்கா உயிரியலுக்கு போகும்படி சொன்னா. அவர் சொல்லைக்கேட்டு படம் வரைந்தாலே போதுமென்று நான் நினைத்து உயிரியல் பிரிவுக்கு போயிருந் தால் என் பாடு திண்டாட்டமாயிருந்திருக்கும்.

அதிஷ்டவசமாக 1978இல் யாழ்ப்பாண வளாகத்தின் கட்டடங்கள் மீண்டும் கல்லூரியிடம் கையளிக்கப்பட்டு பழைய பொலிவுடன் கல்லூரி இயங்கத் தொடங்குகிறது. திருநெல்வேலி நூலகத்துக்கு கொண்டு செல்லப்பட்ட கல்லூரி நூலகத்தின் நூல்கள் திருப்பி வந்து சேர்ந்தன. முன்பு வேலி போட்டு தடுக்கப்பட்டிருந்த கட்டிடங்களுக்கு இப்போது சுதந்திரமாகப் போய் வருகிறோம்.

நான் கணித பிரிவுக்கு சென்றது 1979ம் ஆண்டு. இப்போது புதிய வகுப்பறைகள். அவையெல்லாம் 784 ம் இலக்க பஸ் செல்லும் வட்டுக்கோட்டை- பொன்னாலை சாலையோடு ஒட்டியிருந்த கட்டடத் தொகுதியில் நடந்தன. புதிய உயர் தர வகுப்பறையின் வெள்ளைச் சுவரில் எம் தலை மட்டத்தின் உயரத்தில் கறுப்புச் சாயம் பூசிய கனமான மரச் சட்டம் போட்ட கண்ணாடி யன்னல்கள் இருந்தன. யன்னலை திறந்து விட்டால் தெருவுக்கு அப்பாலுள்ள வயல் வெளியிலிருந்து பசிய நெற் பயிர்களைத் தழுவி வரும் காற்று குளு குளுவென்று முகத்திலடிக்கிறது.

வர். சென் தோமஸ் கல்லூரியில் ஆங்கிலத்திலேயே படிப்பித்துக்கொண்டிருந்தவர். அதனால் அவர் கொழும்புத் தமிழ், யாழ்ப்பாணத் தமிழுக்கு புலம்பெயர்ந்து கொண்டிந்ததை நாங்கள் கேட்டு எமக்குள் பேசும் போதெல்லாம் அதை மிமிக்கிரி செய்வோம். இது தெரிந்ததாலோ என்னவோ பிறகு அவர் சுத்த தமிழில் பேச முனைந்தது இன்னும் வேடிக்கையாகி விட்டது. உதாரணத்துக்கு 'Question Paperஐ எடுங்கள்' என்பதற்கு பதிலாக அவர் 'வினாத்தாளை எடுங்கள்' என்பார். அவரைப் போல கடமையுணர்வு மிக்க ஒருவரை பிறகு நான் கண்டதில்லை.

1980 மலர்ந்ததும் என் கல்லூரி வாழ்வும் பல திருப்புமுனைகள் கண்டது. ஒரு விபத்துப் போல நான் மாணவர் மன்றத் தலைவரானேன். இந்தப் பதவி எனக்குத் தரப்பட்டதில் அதிர்ச்சியடைந்த முதலாவது ஆள் நான்தான். இரண்டாவது ஆள் அதிபர் கதிர்காமர் ஆகவிருக்கவேண்டும். பொதுவாக இப்படியான பதவிகளுக்கு வருபவர்கள் பாடசாலை விளையாட்டுத்துறையில் பிரகாசித்திருக்க வேண்டும், அல்லது பல்



1977 இனக் கலவரத்தின் பின்னர் கொழும்பு சென் தோமஸ் கல்லூரியிலிருந்து யாழ்ப்பாணம் புலம்பெயர்ந்த ஆசிரியர் ஒருவர்தான் வெற்றிவேல் மாஸ்டர். 1980 உயர்தர வகுப்பில் பௌதீகமும், தூய கணிதமும் அவரே படிப்பித்தார். எங்களுக்கு வகுப்பாசிரியரும் அவர்தான். வெற்றிவேல் ஒரு திறமையான ஆசிரியர் என்பது ஒருபுறம். மறுபுறம் அவர் அதிகம் பேசாத

வேறு மாணவர் அமைப்புகளில் ஈடுபட்டிருந்திருக்க வேண்டும். இவை எதுவுமில்லாமல் தலைவராகினேன்.

சரி, இதற்கு இனி என்னைப் பழக்கப்படுத்திக்கொள்ள வேண்டும். இதில் முக்கியமானது Quadrangleஇலுள்ள திறந்த வெளி அரங்கில் நடைபெறும் பரிசளிப்பு விழா. தற்போது சிட்னியில் வசிக்கும் பேராசிரியர் இந்திரபாலா அம்முறை விழாவின்

பிரதம விருந்தினர். நான் அவ்விழாவில் ஆங்கிலத்தில் பேச வேண்டும். அது கல்லூரியின் மாற்ற முடியா வழக்கமொன்று. ஆங்கிலம் அல்லது தமிழ் மேடைப் பேச்சு என்ற பக்கமே தலை வைத்துப் படுக்காதவன் நான்.

பரிசளிப்பு விழா முடிந்து அன்று வீடு திரும்ப நள்ளிரவுக்கு கிட்ட ஆகிவிட்டது. இரவில் தனியே செல்லும் வயதை அடைந்து விட்டதால் அன்று வீட்டிலிருந்து சைக்கிள் கொண்டு வந்திருந் தேன். பஸ்சைப் பிடிக்க முடியாது என்று முன்னர் பட்ட அனு பத்திலிருந்து தெரிந்திருந்தது.



விழாவில் ஆங்கிலத்தில் பேசியதையே நினைத்துக்கொண்டு சைக்கிளை மிதித்தபடி சங்கரத்தை வெளியை தாண்டி வழுக்கையாறு வெளி காண வந்து விட்டபின்தான் சுற்றிலும் பார்த்தேன். இரண்டு வெளிச்சங்கள் நிதானமாக என்னை நோக்கி வந்தது போலிருந்தது. அவை வெளிச்சங்கள் இல்லை. இரண்டு நெருப்புகள். ஒன்று சங்கரத்தைச் சுடலையில் எரிந்து கொண்டிருந்தது, மற்றையது நவாலி பக்கமாவுள்ள சுடலை யில். அவற்றைக் கடந்து தான் போக வேண்டும். வேறு வழி யில்லை. பாவிகள்! ஒரு சுடலை போதாதென்று இரண்டு சுடலைகளை அந்தப்பெரு வெளியில் வைத்து விட்டார்களே என்று என் விதியை நொந்துகொண்டு சைக்கிளை மிதித்தேன்.

கழுத்தை அப்போது எதோ இறுக்கியது போலிருந்தது, வேறொன்றுமல்ல, நான் அணிந்திருந்த tieதான் என்பது சற்று தாமதமாகத்தான் என் புத்தியில் உறைத்தது. பரிசளிப்பு விழாவுக்காக நான் அணிந்திருந்தது முழுக்கை வெள்ளை சேர்ட்டும், வெள்ளை டிரைவுசரும், இதில் சப்பாத்து மட்டுமே கருப்பு- என் தலையும் இதில் சேரும்.

இப்போ என்னை கை குலுக்கி வரவேற்கப் போவது சங்கரத் தைப் பேயா அல்லது நவாலிப் பேயா என்பது தெரியவில்லை. அல்லது என் வெள்ளை உடுப்பைக் கண்டு விட்டு நானும் இன்னொரு பேய்தான் 'போ போ' என்று விட்டு விடுமா? சைக் கிள் பெடலை அழுத்தி மிதித்த போதும் வீசிய எதிர்க்காற்றில் அது ஸ்லோ மோஷனில்தான் போய்க்கொண்டிருந்தது. அந்த இரவின் ஒவ்வொரு கணமும் ஒவ்வொரு யுகமாக கழிய அந்த பெரு வெளியைக் கடந்தேன்.

இப்படியாகப் பரிசளிப்பு விழா என்ற திருவிழா முடிந்து பரீட் சைகளுக்கு அனைவரும் ஆயத்தம் பண்ணும் காலம் வந் தது. எங்கள் வகுப்புக்கு பக்கத்து வகுப்பொன்றுக்கு பாச்சா என்று பலரும் செல்லமாக அழைக்கும் பாலச்சந்திரன் மாஸ் டர் பௌதீகம் படிப்பிக்க வருவார். அதிஷ்டவசமாக அவரிடம் நான் படிக்கவில்லை என்றாலும் என் துரதிஷ்டம் அவருடைய வகுப்புக்குப் பக்கத்துக்கு maths வகுப்பில் நான் படித்ததும், அதைவிட அந்த maths வகுப்பில் நான் மொனிட்டர் ஆக இருந்ததும்தான். அன்று ஒருநாள் எங்கள் வகுப்பு மாண வரின் அட்டகாசம் கட்டுக் கடங்காமல் போய் நான் வாய டைத்து நின்ற வேளையில் ருத்ரமூர்த்தியாய் பாச்சா வாசலில் வந்து நின்றார்.

'ஆர் மொனிட்டர்? வெளியிலை வா' என்று கர்ச்சித்தார். நான் சிங்கத்திடம் போன முயல் போலத் தயங்கித் தயங்கிப் போனேன். எதிர்பாராது கண்ணிமைக்கும் நேரத்தில் என் கன்னத்தில் விழுந்த அறையினால் வகுப்பறையே மயான அமைதியடைந்து விட்டது.

இதை 40 வருடங்களுக்கு பின்னர் நியூசிலாந்திலிருந்து பதும நிதி அண்மையில் நினைவு படுத்தியபோதுதான் தெரிந்தது அந்த அறை எனக்கு மட்டும் விழவில்லை என்பது.

ஆனால் A/Lக்கு பிறகு கல்லூரியில் லண்டன் A/L படிக்கும் போது பாலச்சந்திரன் மாஸ்டரிடம் பௌதீகம் படிக்கப் போனேன். பழையதை அவரும், நானும் மறந்து போயிருந்தோம். அதை விட அவர் ஒரு திறமையான ஆசிரியர் என்பதையும் அப்போது தான் அறிந்து கொண்டேன். பிறகு யாழ். பல்கலைக்கழகத்தில் நான் படிக்கையில் அவர் மனைவி உபவேந்தர் பேராசிரியர் வித்தியானந்தனின் செயலாளராக பணிபுரிந்தார். அந்நாட்களி லேயே பாலச்சந்திரன் மாஸ்டரின் எதிர்பாராத இறப்பை அறிந்து மன வருத்தமடைந்தேன்.

வாழ்வோட்டத்தில் ஏராளமான மனிதர்களுடன், வெவ்வேறு கால கட்டங்களில் பழகிச் சென்றிருக்கிறோம். ஒவ்வொருவர் பற்றியும் ஒவ்வொரு ஆழமான மனப்பதிவு எமக்கு இருக்கி றது. ஒருவர் சம்பந்தப்பட்ட நிகழ்வினூடாக, அல்லது ஒருவரின் பிரத்தியேக குணவியல்பினூடாக அவரின் நினைவை மீட் டெடுக்கிறோம்.

இப்படி மனதின் ஆழத்தை தோண்டிப் பார்த்ததில் அங்கங்கே இந்த நிகழ்வுகளையும், அதனை நிகழ்த்தியவர்களையும் மண்ணை அகழ்ந்து கொண்டு செல்ல தடயங்களை காண் பது போல கண்டு பிடித்தேன். எனது நினைவாற்றலை சற்று தூசி தட்டி அவற்றை இங்கே உங்களுடன் பகிர்ந்து கொண் டேன்.

**- யோகானந்தன்**



# Jaffna College where hidden potentials are unleashed

Life in Jaffna College was all about peaks and valleys. I was one among those fortunate students who got the best out of the college.

Whenever I feel low or in a difficult phase, I walk through my memory lane of the school days and events, to get motivated and recharge myself.

Initially, I was known in the school for all the wrong reasons. Whenever any trouble crops up in school, the first question by the Principal Late Mr. Rajan Kadirgamar: "Was Thayalan involved?" Mostly, he was spot on as I would have been part of the issue. My mother was called to the Principal's office whenever he felt I had to be set right. Poor lady used to come to the school with her head down probably regretting to have given birth to me.

My troubles pushed the principal to come up with creative ideas to control me. I can still recall a couple of incidents that are still ingrained in me like fresh flowers.

- *I got caught in a trouble just two days prior to study holidays of the 10th exam. He said: "Thayalan, while all other students of your batch will be on study leave, you must come to school every day as usual and sit and study in the library". Librarian got an instruction that I had to sign my attendance. If any irregularities, librarian must inform to the Principal. It was like court punishments, that the accused must visit the nearby police station and sign in the morning and evening. I religiously followed the instructions.*
- *Few months later, I was involved in another incident; he lost all his patience and tolerance and summoned my mother. He told her, "As Principal, I have many important matters to handle than your son's problems. Hence, as a last chance I decided to appoint a guardian for him in the school and the guardian should monitor him". He gave me the choice of three Ratnam's – Late Mr. Anandaratnam, Late Mr. Selvaratnam and Mr. Kanagaratnam. I chose Anandaratnam master as he was closer to me and it was easy for me to deal with him. I think in the entire history of Jaffna College I would have been the only student who had a guardian to monitor me.*

Later I realized that Principal was aware of the loss of my father when I was in 10th and the struggles that my mother was going through. Possibly he would have thought he should help me to get back to my regular school life. Library punishment forced me to concentrate on my studies and as a result I passed my 10th exams with very good grades. Appointing a guardian was an embarrassment, therefore I control my mischief, if not stop all of them.

While I was contemplating how to overcome this situation, one late night, I offered a lift to my neighbour Mr. Jeyasothy (Selvasothy's brother), we call him Jayam Anna. During this cycle journey, he told me that he was terribly unhappy with the way I was leading my life. This piece of advice hit me hard and made me realize that I have lot more potential to live a better life. I took his advice very seriously and stopped all my antics and started being obedient.

My turning point at Jaffna college started from that night. I am always grateful to him for showing his concern that made a difference in my life. I am in regular touch with him and make sure to visit him on my trips to Sri Lanka.

I was like a futile ground but Jayam Anna made me an effective potent ground where I can get a better yield. Let me share few details of how my hidden potentials were unleashed, mostly by others.

## Dramas

I had always been a great fan of Dramas and admired lot of actors. But I never realized that there was an actor in me, until my classmate Vairakumar offered me a role in a Drama that we staged for our annual Brotherhood social. That debut acting opened up the potential in me to act several dramas in the school and in our village programs. Especially for dramas staged during Sivarathri night.

I still have vivid memory of auditions conducted by Dr. S. Jebanesan for one of the important dramas we staged at the school. He gave few sentences for main actors and based on their expressions and delivery of lines he chose the actors for respective roles. I was fortunate to get the male lead role and our classmate Chandrika did the female lead role. Even after 40 years, whenever I think about that drama it rejuvenates me. I am always thankful to Vairakumar for unleashing the hidden actor in me.

## Athletics

Usually a month or two before the sports meet students who participate in athletics start practicing after school hours. I never had any interest in athletics and never went to the grounds. But one afternoon when I was leaving the school our Hastings house captain Suthakaran (Sinnaiah Master's son) got me at the gate and took me to the grounds in spite of me being reluctant. He said "Thayalan you are tall and have long legs. You can be a very good athlete". Though not convinced I went to the grounds. He grouped us into age categories and made us run 100 meters race. Surprise! surprise! I was first in that group. He came running to me and said, "Thayalan I told you, you have great potential as an athlete, unleash it and make the best out of it."

Sutha unleashed my hidden potential as an athlete and gave me a NEW IDENTITY. I participated in all athletic meets of the school from that day onwards and won several prizes. My favourite events were 100 metres, 200 metres and hurdles.

Though I actively participated in Athletics one of my dreams was of becoming a champion of the group which was eluding to me, mainly because of the very talented athletes like Late Muraleetharan, Nithiraj, Sugaljan and Roy Thevathayalan. Finally, I was a joint champion with Rajan Ratnam when I was in Under 19 (Seniors) group. I still cherish that moment of glory. I had an opportunity to Captain school Athletic team.

## Academy dinner

In Jaffna college, one of the most important night for Advanced Level students is the annual academy dinner. Since it's a coeducation school the days before the dinner leads to lot of expectations among the students and at the dinner students enjoy the night with lots of energy, enthusiasm and excitement. Key attractions of the night were GINGER BEER and sumptuous dinner.



New committee headed by the President is elected for all three terms. I got elected as President for the term when academy dinner was scheduled to happen. The days were fast approaching to the dinner and we already had formed sub-committees for arrangements and food to plan and execute the event along with the main committee.

One afternoon, I was presiding regular academy meeting and at the end we reached the business session. The discussions focused on the upcoming dinner and when the discussion started about the Presidential address, I tasted a shock of my life. One of my friends raised an objection saying: "We don't want you to deliver Presidential address because your English and your pronunciation is not up to the mark." While I was trying to convince him that I would do my best, other students also joined hands with him and said if you speak, our college image will be spoiled in front of the chief guest and several guests attending from other schools.

Since I couldn't handle their collective objection, I turned to our Patron Anandaratnam master with a hope that he would support me. He took a long pause and said: "Thayalan, they have a point. I think they are right. Why don't you consider their request and give the opportunity to someone who can speak better English?" With this episode, I was embarrassed in front of my school mates.

I thought for a while and FIRMLY said you elected me as President knowing that we have the dinner this term and now it is my right as President to deliver the Presidential address and I am not giving up that right. At the end I prevailed.

I approached a few teachers to help me prepare and practice my English speech. Unfortunately, they couldn't get the bare minimum results from me and said it's impossible.

Finally, I requested Dr. S. Jebanesan to help me. He started working with me and at one stage he told me; "Thayalan, I don't think you will be able to deliver a decent English speech". Instead of abandoning me he tossed a wonderful suggestion and I worked on that.

At dinner, I was seated at the head table along with the Principal, the Chief guest and his spouse and presided the meeting. I started my speech in English and midway through the speech I told the audience: "In order to respect our mother tongue Tamil and respect our Chief Guest (Dr. Sivathamby) who is a Tamil professor, I would like to continue my speech in Tamil" and successfully delivered my speech. Principal, in his address, congratulated me for speaking well in both languages. I offered my heartfelt thanks to Dr. S. Jebanesan for his brilliant idea and unleashing the speaker in me in spite of severe challenges.

## Student Council President

I have always admired the student council Presidents and the counsellors for being elected to their respective positions. They are considered bright, accomplished and disciplined students with leadership qualities. I never had the courage to think about becoming one of them, because of my daunting past.

One evening, I was about to leave the grounds after Hockey practice. Dharman master stopped me and said: "Thayalan, I want to talk to you something important."

I said: "Please go-ahead sir, I am all yours."

He continued: "You have become one of a very prominent students in our school and you represent all the events that takes place in the school. A student like you deserve to be a counsellor and it will benefit both you and the school. Unfortunately, your past is overshadowing your present and that stands in your way from becoming a counsellor.

You still have a chance. We have one more student council election. If you can do some magic, to bring a changeover of your image, you stand a better chance to be a general counsellor."

At the end he said: "Thayalan, you should work hard to change your image in such a way that you would become an INEVITABLE candidate for the election."

His powerful motivating and inspiring words gave me a strong belief and confidence that I too can become a member of School council, the most responsible student body of the school which helps the administration in maintaining student discipline and organizing school functions.

My life's complete meaning, purpose and direction got changed on that evening. I mustered all my energy, enthusiasm and effort to work towards transforming me as a member of student council.

The day arrived; the Principal was on the podium waiting to announce the result of the student council President election. The result sheet was handed over to him. He was looking at the result for a while without any reaction. Deafening silence prevailed in the hall. He slowly lifted his head, looked at the students and teachers and said:

After a long time, we got a president elected in the first round of election that too with more than two third majority. The newly elected President is K. Thayalan. The entire auditorium erupted in claps. I slowly stood up, walked to the podium amidst thunderous applause. Principal came forward and shook my hand. That handshake was very tight and lasted for few seconds. Both of our eyes were looking at each other and I offered my humble thanks to him and his eyes spoke that he was proud of me. I delivered my acceptance speech and

thanked everyone for their role in making me the President and made a promise I would do my best to uphold the tradition of the school and betterment of students.

### Brought back the Glory of Cross Country

If my memory is correct, our school annual cross country was suspended for two years due to some external challenges. As a President, I wanted to bring back the cross country. I arranged for a meeting with the counsellors, House captains and athletic captains. I made them realize that as LEADERS, it's our responsibility to bring back Cross Country to school. They all stood with me. We then called for a meeting with Principal and few teachers including Anandaratnam master and Dharman master.

I told them our intention but they vehemently opposed our idea. At one-point Principal said, "our students' life will be in danger and I cannot allow that."

I replied to him:" Sir, we respect your concern, I am the student leader representing all students and my team is here. We do not want to deprive cross country from our students and we do not want the external elements to impact school activities." After a heated argument, principal gave us the permission and appreciated our courage and unity to enhance the dignity of the school.

We formed a strong team to provide security by manning teams at various points and a team with cycles were guarding the runners at various stages. I was following the race on my cycle and was the last to enter the school behind the last runner.

Principal was waited to see me and shook my hand to congratulate me and the team for the courage and meticulous planning in bringing back the glory of Cross Country.

I had a special bonding with Principal Rajan Kadirgamar. He was a father figure to me than a principal. He gave me full freedom to speak and argue with him on anything that I want to. He knew that whatever I bring up or stand-up for would definitely be for the betterment of the students and the school. He unleashed the courageous person in me. It was our blessing that we had him as our principal. May his soul rest in eternal peace.

I am always indebted to Jaffna College, the principal, teachers and fellow students for helping me to unleash my hidden potential that made me what I am today.

The leadership lessons that I learnt in Jaffna college was very helpful for me to reach key positions and lead teams in professional life. It also helped me grow as an effective leader in Toastmasters where I lead District 116 (Qatar) as it's District Director 2021-21 to WORLD No. 1 position out of 122 Districts in the world. We have around 2,500 members in Qatar. Toastmasters is a non-profit organization started almost 100 years ago in USA to help members improve their communication and leadership skills.

My mother who used to come to school only to hear out all the complaints about me later used to come to all the events with her head held high as President's mother. Thank god, at least I was able to change it.

Even after 40 years, nostalgic memory of Jaffna college life still rejuvenates me. I am sure most of you, old students of the college have the same feeling.

***K. Thayalan***



## IT ONLY FEELS...

like yesterday that we were using the desks as drums for our jam... Memories of school days still linger around despite the decades that have passed after.

I joined Jaffna college in grade 5 and ever since then I've always counted that as a blessing till date. If not for my alma mater I would not be here at this stage of my life. It paved the path to be successful in my career as a consultant physician. It sculpted me to be a man who can run a beautiful family with my wife and two blessed children.

I'm forever grateful to all the lessons which the school taught us outside the books.

Being a school Council member throughout, built a natural leader in me.

Annual sports-meet preparations not only brought together the sportsmen and sportswomen to limelight but every one of us too: to enjoy the essence of it, to learn to unite, to accept defeat and victory in the same spirit and most importantly to be a disciplined citizen one day and I can proudly say, we certainly are here today walking in the most prestigious path bringing justice to what I mentioned above and much more.

Last but not the least, maybe the best gift of school are my friends who I still cherish memories with. Words cannot describe the moments we had together. Cheers to all the good days of school ringing in all our minds to date.

**-Vickneswaran**



# அந்த நாள் ஞாபகங்கள்

யாழ்ப்பாணக் கல்லூரியில் ஆண்டு 3 முதல், ஆண்டு 13 வரை ஆரம்ப, இடைநிலை, உயர்கல்வி கற்கக் கூடிய வாய்ப்பு எனக்கு கிடைத்தது.

ஆரம்பப் பிரிவில் நவரத்தினம் மாஸ்ரர், ரூபி ரீச்சர் ஆகியோரின் கண்டிப்பையும், அர்ப்பணிப்பையும் மறக்க முடியாது.

இடைநிலைப்பிரிவில் மெக்கானிக்ஸ் கற்பித்த செல்வரத்தினம் மாஸ்ரர், மரவேலை கற்பித்த பொன்னுத்துரை மாஸ்ரர், களிமண் வேலையும், சித்திரமும் கற்பித்த அமிர்தநாதன் மாஸ்ரர், சுகாதாரம் கற்பித்த தற்பரானந்த மாஸ்ரர், ஆனந்தரட்ணம் மாஸ்ரர், ஆங்கிலம் கற்பித்த புறுடி மாஸ்ரர், சச்சிதானந்தம் மாஸ்ரர் ஆகியோரின் திறமையான கற்பித்தலால் உயர் நிலைக் கல்வியை எட்டினேன்.


உயர்நிலைக் கல்வியில் இந்திராணி ரீச்சரின் விலங்கியலும், தருமன் மாஸ்ரரின் தாவரவியலும், விஸ்வநாதன் மாஸ்ரரின் பௌதிகவியலும், தட்சணாமூர்த்தி, நிர்மலன் மாஸ்ரர்களின் இரசாயனவியலும் என்னை கல்வியில் மேலும் ஒரு படி உயர்த்தியது.

அக்கடமி டினரில் இரவிரவாக போட்ட கூத்துக்களும், கும்மாளங்களும் மறக்க முடியாது. எத்தனை குறும்புகள்!, எத்தனை குழப்படிகள்! எல்லாவற்றையும் எழுத்தில் வடிக்க முடியாது, வகுப்பறைச்சுவர்கள் தான் அறியும். சின்னத்தம்பியின் எலிப் பொறியையும், வெள்ளை ஆறுமுகத்தின் H2S வாயுவையும், சின்னையாவின் வில்லைகளையும், இராசையாவின் தாவரங்களையும் மறக்க முடியாது. ஆடிய ஆட்டம் என்ன!, ஓடிய ஓட்டம் என்ன!, இப்போது நினைவுகளால் மீண்டும் பின்னோக்கி ஓட முயற்சிக்கிறோம். அதை மறக்க முடியுமா?

கல்லூரி நினைவுகளை மீட்டு, மீண்டும் என்னைக் கல்லூரிக்கு அழைத்துச் சென்ற புலம்பெயர் நண்பர்களின் ஆக்கபூர்வமான இந்த சிந்தனைச் சிதறல்களின் வெளியீட்டை எண்ணி வியந்து நிற்கிறேன். உங்கள் உழைப்பிற்கும், முயற்சிக்கும் கிடைத்த வெகுமதியே இந்த நினைவூற்றின் தொகுப்பாகும். உங்கள் முயற்சியில் நாம் பெற்ற மகிழ்ச்சிக்கு அளவில்லை! இதன் எண்ணக் கருவை உருவாக்கிய, திரை மறைவில் உள்ள நண்பர்களை நன்றியோடு நினைக்கிறன்.

கல்லூரிக் கால ஞாபகங்கள் அழிவதில்லை! உயிர் உள்ள வரை தொடரும் நண்பர்களே!

**ந.சபாரத்தினசிங்கி**
உயிரியல் பிரிவு - 1980



# நாற்பதாண்டுகள் அயராப் பணி

- திரு. துரைரத்தினம் -

1. **நீங்கள் யாழ்ப்பாணக் கல்லூரியில் பணி புரிய விரும்பிய தன் காரணம் என்ன? உங்களுக்கு கல்லூரியை அறிமுகப் படுத்தியது யார்? இதை பற்றி சற்று சொல்லுங்கள்.**

எனது உறவினர் திரு. கந்தசாமி யாழ்ப்பாணக்கல்லூரியில் பணிபுரிந்துகொண்டிருந்தமையால் அவரின் வழிகாட்டலில் 13.05.1966இல் பணியில் இணைந்தேன். அதிபர்களான K. செல்லையா, S. V. பாலசிங்கம், இராஜன் கதிர்காமர், ஆயர் கலாநிதி ஜெபநேசன், திரு. G. இராஜநாயகம், வண. A. போல், திரு நோயல் விமலேந்திரன் ஆகிய ஏழு அதிபர்களின் கீழ் நாற்பது வருடங்கள் பணிபுரிந்தேன். கல்லூரிக்குள் நுழைந்தால் கவலைகள் மறந்து மனநிம்மதி கிடைத்தது. கல்லூரி அவ்வளவு இயற்கை அழகுடன் மரங்கள் நிறைந்த சோலையாக இருந்தது.

2. **நீங்கள் பணிபுரிய ஆரம்பித்தபோது யாழ்ப்பாணக் கல்லூரி எப்படி இருந்தது. குறிப்பாக அதிபர், ஆசிரியர், மாணவர்?**

ஒழுக்கம் கட்டுப்பாட்டுடன் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் இருந்தனர். அதிபருக்கு மதிப்பு இருந்தது .

இராஜன் கதிர்காமர் அவர்கள் நடந்து வரும் காலடி சத்தத்திலேயே பூரண அமைதி நிலவும்.

3. **நீங்கள் யாழ்ப்பாணக் கல்லூரியில் எவ்வகையான பணிகளை மேற்கொண்டீர்கள்?**

ஆரம்பத்தில் இடைநிலை வகுப்புகளிலும், பின்பு ஆரம்பப் பிரிவிலும் பணி செய்தேன். அலுவலகப் பணியாளராக அலுவலகம் தரும் விடயங்களை ஆசிரியர்கள், மாணவர்கள், ஆகியோருக்கு வழங்கும் பணிகளையும், மாணவர் உடல் நலக்குறைவின்போது அவர்களை வீட்டில் சேர்க்கும் பணிகளையும் செய்து வந்தேன்.

4. **நீங்கள் யாழ்ப்பாணக் கல்லூரியில் பணியாற்றியபோது நிகழ்ந்த இன்றும் நினைவுகூரும் ஒரு ஞாபகத்தை பகிர்ந்து கொள்வீர்களா?**

பாலமுருகன் என்னும் மாணவன் மூடிய கிணற்றின் இறைக்கும் துவாரத்தினூடு உள்ளே விழுந்தவுடன் மிகக் குறைந்தளவே நீந்தத் தெரிந்த நான் எதையும் யோசிக்காது கிணற்றில் குதித்து அம்மாணவனைக் காப்பாற்றியதை என்றும் மறக்க முடியாது.

5. **ஓய்வுபெற்ற பின்னர் கல்லூரியுடனான உங்கள் தொடர்புகள் எப்படி இருக்கின்றன?**

ஓய்வுபெற்ற பின் தொடர்புகள் இல்லை. மூன்று மாதங்களின் முன்பு போயிருந்தேன். பாரிய மரங்கள் சிலவற்றைக் காணவில்லை. பார்க்கும்போது கல்லூரி பற்றி கவலையாக இருந்தது.



# யாழ்ப்பாணக்கல்லூரி பழைய ஞாபகங்கள்

-பிரபா

ஆல மரங்களுடன்
அழகான மரக்கூடல்
ஆதவன் சுடரொளிகள்
அதன் ஊடாக பாயும்
கல்லூரியின் அழகோ
கண் கொள்ளா காட்சி
அதிபர் மாளிகை
அன்புடன் வரவேற்கும்

வணக்கம் சொல்லி
வகுப்பினில் வந்தமர்வோம்
அரட்டை ஆர்ப்பாட்டம்
ஆசிரியர் வரவோ எங்கும் நிசப்தம்
எப்படா மணியடிக்கும்
என மன மேங்கும்
மனதில் உள்ள துன்பங்கள்
மறந்து போகும்

ஒருவர் சாப்பாட்டை
ஒன்பது பேர் பகிர்ந்துண்போம்
தண்டனை வாங்கி நின்றாலும்
தனித்துவமாய் உணர்ந்தோம்
அழுவது கூட ஆனந்தமாய்
ஆறுதல் சொல்ல நண்பர்கள் இருந்ததால்
விழுவது கூட சுகமாய் இருந்தது
தூக்கி நிறுத்த தோழர்கள் இருந்ததால்

நாம் சிரித்த சிரிப்புக்கள்
தவித்த தவிப்புக்கள்
அடித்த அரட்டைகள்
கொண்டாடிய விழாக்கள்
இட்ட அடையாளங்கள் (சுமந்து)
அனாதைகளாய் நிற்கின்றன
நாம் அமர்ந்த மேசை கதிரைகள்

இல்ல விளையாட்டுகள் (மற்றும்)
இதர விளையாட்டுகள்
நண்பர்கள் நண்பிகள்
போட்டியுடன் கடந்த நாட்கள்
அன்போடு அக்கறை கொண்ட
ஆசான்கள் தாராளம்
அவர்களின் நினைவு பூபாளம்

வாரம் ஒரு நாள் விடுமுறையே
சிறகொடிந்த வண்ணத்துப் பூச்சியாய்
வெறுப்பை தந்தது
வாழ் நாள் முழுக்க விடுமுறையா
நெஞ்சு வெந்து நொந்தது
விட்டுச் சென்ற நினைவுகள் எல்லாம்
இதயத்தில் இதமாய் ஒலிக்க
இனி நாம் என்று சந்திப்போம்
எனும் எண்ணம் ஏக்கமாக .......

# JC-80 WhatsApp Group Members

**Austria**
- Narendramohan

**Australia**
- Godwin
- Gunashanhar
- Jeyaranjan
- Shanthi
- Swendrarajah
- Theivanayaki
- Urithirakumar
- Yogananthan

**Canada**
- Anpalagan
- Arulchelvan
- Chandravathani
- Chandrika
- Inthumathi
- Jeyaraj
- Lambotharan
- Naganathan
- Paramakanthan
- Sathiyendran
- Sivarani
- Yogeswaran

**India**
- Devanayagam

**France**
- Nithiraj
- Pathmasani
- Selvamalar
- W. Prabhakar
- Thillainadesan
- Vairakumar
- Yamuna

**GERMANY**
- Mohan

**New Zealand**
- Pathumanithi

**Sri Lanka**
- Jeyachandran
- Justin
- Kangatharan
- Kumuthini
- Manivasakar
- Muthulingam
- Menakadevi
- Sabaratnasinghi
- Sivamalar
- Somaskantha
- Sumangalarani
- Vanitharani
- Vigneswaran

**Qatar**
- Thayalan

**UAE**
- Devarajan

**UK**
- Amirtharaja
- Anandarajah
- Chithiradevi
- Gnanmbihai
- Giritharan
- Jeyamani
- Kadirraj
- Luhindran
- Premakumar
- Raveendran
- Raji Felicia
- Shyalinee
- Sivaseelan
- Sothinathan
- Sugaljan
- Sivakandapoo
- Vijayaluxmi

**USA**
- Kalyani

# College Song

*Come, Let us to our College give*
*The honour which is due;*
*Where'er we gather, while we live,*
*Our filial love renew*

## Chorus

*"Hurrah! Hurrah! For Jaffna College we cheer*
*Where'er we roam our College home*
*We'll ever hold most dear"*

*Here useful knowledge we may gain,*
*Here learn from day today,*
*How true wisdom we may obtain*
*To guide us through life's way.*

*We love her name, we'll guard her fame*
*While life and mem'ry last;*
*Our loyalty shall be the same*
*Where'er our lot be cast*

*The Light of Life is on her seal,*
*And may this College be,*
*A place where all her sons shall feel*
*That they the true Light see*

N.C.G.E 2nd BATCH

JAFFNA COLLEGE CEYLON

JESUS CHRIST THE LIGHT OF LIFE

1823 1872

80's ReUNION

# SPRING OF MEMORIES



யாழ்ப்பாணக் கல்லூரி மாணவர் (1968-1980) நினைவுத் தொகுப்பு

A COLLECTION OF CHERISHED MEMORIES - JAFFNA COLLEGE STUDENTS (1968 - 1980)